# பராந்தகன் மகள்



CPL 566002

கலைமாமணி

விக்கிரமன்

# பராந்தகன் மகள்

(வரலாற்றுப் புதினம்)

தமிழ்ப் பல்கலைக்கழகத்
தமிழன்னை விருது பெற்ற

கலைமாமணி விக்கிரமன்

5

CONNEMARA PUBLIC LIBRARY
-6 JAN 2009
CHENNAI-600 008

விக்கிரமன் பதிப்பகம்
எண் 3 (ப.எண் 2) ஜெயசங்கர் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை- 600 033.

G/04/819

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | : பராந்தகன் மகள் வரலாற்றுப் புதினம் |
| ஆசிரியர் | : கலைமாமணி விக்கிரமன் |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : முதற்பதிப்பு, டிசம்பர் 2002 |
| நூல் அளவு | : டெமி 1 X 8 |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 188 |
| விலை | : ரூ. 45.00 |
| லேசர் அமைப்பு | : அழகர் கிராஃபிக்ஸ், சென்னை-50. |
| மேலட்டை ஓவியம் | : மணியம் செல்வன் |
| அச்சிட்டவர் | : இளங்கோ அச்சகம், சென்னை-14. |
| வெளியிட்டோர் | : விக்கிரமன் பதிப்பகம் சென்னை- 600 033. |


566002
894.8113
VIK

# முன்னுரை

பரிவாதினி, உதய சந்திரன், நந்திபுரத்து நாயகி, காஞ்சி சுந்தரி போன்ற மகத்தான நூல்களுக்குப் பிறகு கங்காபுரிக் காவலன் நாவலை எழுதினேன். பராந்தகன் மகள் கங்காபுரிக் காவலனுக்கும் முன்னால் எழுதப்பட்டது. 'நந்திபுரத்து நாயகி' என்ற மகத்தான தொடரை (1959-64) எழுதியபிறகு, உடனே 'பராந்தகன் மகளை' எழுதி விட்டேன். வரலாற்றுப் புதினம் படிக்கும் அன்பர்களுக்கு நாற்பது ஆண்டுகள் கழித்தே நூல் வடிவம் அளிக்கும்படி நேரிட்டு விட்டது. நடை, கற்பனை எல்லாம் என் முப்பத்தைந்தாவது வயது முதிர்ச்சியைத்தான் புலப்படுத்தும் என்றாலும் வரலாறு பழைமையானதுதானே!

பொன் வேய்ந்த பராந்தகனிடம் எனக்கு அளவு கடந்த மதிப்பு. வரலாறு - பெரும் பகுதி, கற்பனை சிறிதளவு கலந்ததுதான் வரலாற்றுப் புதினம். தமிழகத்தைப் பொற்காலமாக்கிய மூவேந்தர்களைப் பற்றி அறிய நாம் மறந்து விட்டோம். வரலாற்றுக் கதை என்றால் ஏதோ, நமக்குப் புரியாது என்று சொல்பவர்களும் உண்டு.

நேற்றைய சமூகம் இன்றைய வரலாறு. அதிகம் வரலாறு அறியாத வாசகர்களைக் குழப்பாமல் தெளிவுபடுத்திச் சில குறிப்புகளைத் தருகிறேன்.

தஞ்சையை வென்று, பிற்காலச் சோழர்களின் பரம்பரையைத் தோற்றுவித்தவர் விஜயாலய சோழன் (கி.பி. 846-881).

அவருடைய திருக்குமாரன் ஆதித்த சோழன் (871-907). அவருக்கு இரு புதல்வர்கள். மூத்தவரே பராந்தக சோழன். பரகேசரி என்ற பட்டப்பெயர் அவருக்கு உண்டு. 907-953 வரை அரசாண்டவர்.

பரகேசரி, இராசகேசரி என்று மாறி மாறிப் புனைந்து கொண்ட பட்டங்களுள் பராந்தகன், பரகேசரி என்ற பட்டத்துடன் அரியணை ஏறினார்.

அவருக்கு இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சய சோழன், உத்தமசீலி என்ற நான்கு புதல்வர்கள். வீரமாதேவி, அனுபமா என்ற இரண்டு மகள்கள்.

இவ்வளவு போதும் இந்தக் கதைக்கு. பராந்தகசோழர், இராசாதித்தன், வீரமாதேவி, அனுபமா, இராட்டிரகூட வேந்தன் கோவிந்தன் ஆகியோர் முக்கியமானவர்கள். சோழ நாட்டிற்கு மிகவும் நம்பிக்கையாகத் தொண்டாற்றியவர்கள் பழுவேட்டரையர் மரபினர். பழுவூரையும் சுற்றுப்புறப் பகுதிகளையும் ஆண்டு வந்த குறுநில மன்னர். இந்தப் புதினத்தில் அவர்கள் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். வரலாற்றில் வெள்ளங் குமரனைப் பற்றிய குறிப்பு வருகிறது. இராசாதித்தனுக்கு உற்ற நண்பராக இருந்தவர். மற்றும் வரலாற்றில் இடம் பெற்ற கொடும்பாளூரார் பூதுகன், அமோக வர்ஷன் போன்ற பாத்திரங்களும் கதைக்குத் துணையாக இருக்கிறார்கள். சமூகப் புதினத்தில், தன் மகள் மீது அதிகப் பாசம் கொண்ட தந்தையைப் பார்க்கலாம். வரலாறு கடந்த காலச் சமூகம் என்பதற்கு இந்தப் புதினத்து மாமன்னர் தன் மகள் மீது கொண்ட அளவு கடந்த பாச உணர்வே சான்று.

இந்த நாவலைப் படித்து ஆதரவு தர வேண்டியது உங்கள் பொறுப்பு.

***விக்கிரமன்***



# பராந்தகன் மகள்

## 1

உலகம் உவப்ப வலம் வரும் கதிரவன் கடலின் கீழ்க்கோடி எல்லையிலே மெல்ல மெல்ல எழுந்து கொண்டிருந்தான். மண் எனும் நங்கை நல்லாளின் முகத்தை மூடியிருந்த மென்துகில் மெல்லத் தளர்ந்தது. வானத் திரையிலே எழுஞாயிறு என்னும் ஓவியனால் செங்கோடுகள் தீட்டப்பட்டன. தணலில் தகிக்கும் பொற்கட்டியென வட்டச் செங்கோளமாகக் கதிரவன் மெல்லக் காட்சி தந்தான். இருள் எனும் பகைவன் அஞ்சி அகன்றான்.

வெண்நுரை கக்கிக் கரையின் மீது வந்து மோதும் அலைகளின் அரவணைப்பில் மிதந்து வந்த கலங்களின் உருவம் கரும்புள்ளி போன்றிருந்தது தெளிவாகத் தெரியலாயின. உருப்பெற்று புத்தொளியில் பாய்விரித்த மரக்கலங்கள் இப்போது பளிச்செனப் புலப்பட்டன. வரிசை வரிசையாக அவை வந்து கொண்டிருப்பது கரையிலுள்ளோர் கண்களுக்குத் தெரிந்தன. அலைகடலின் பேரிரைச்சலுக்கு எதிரொலிபோல் கரையில் குழுமியிருந்த மக்கள் கூட்டத்தின் ஆரவாரம் எழுந்தது.

நாகைப்பட்டினம் கடற்கரையிலே நின்று கொண்டிருந்த மக்களின் உற்சாகம் மிகுந்த வாழ்த்தொலி எட்டுத் திசையும் பரவியிருக்க வேண்டும். காற்று அந்தக் குரலோசையை எங்கும் கொண்டு சென்றிருக்க வேண்டும்.

''அதோ தெரிகிறதே அதுதான் மன்னர் வரும் கலம்'' என்று உயரமான மேடைமீது நின்றிருந்த ஒருவர் மற்றவருக்குச் சுட்டிக் காட்டினார். அவர் காட்டிய திசையிலே பல மரக்கலங்கள் வந்து கொண்டிருந்தன. அவற்றுள் கம்பீரமாகப் பெரும் மரக்கலம் ஒன்று விரைந்து வந்து கொண்டிருந்தது. அந்தக் கலத்திலே புலிக்கொடி அசைந்தாடிக் கொண்டிருந்தது. விரிந்திருந்த பாயிலே பொறிக்கப்பட்ட பாயும் புலி தான் அந்தக் கலத்தை

விரைந்து செலுத்துவதுபோல் தோன்றியது. அந்தக் கலத்தின் மேல் தளத்திலே இருவர் நின்று கொண்டிருந்தனர். இருவரின் தோற்றமும் கம்பீரமாக இருந்தன. வெற்றிப் பெருமிதம் இருவர் முகங்களிலும் கூத்தாடின. தங்கள் திருநாட்டின் மண்ணைக் கண்டவுடனேயே அவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர்.

பரந்த தோளும் உயர்ந்த உருவமும் முறுக்கிவிட்ட மீசையும் கொண்டு தலையில் மகுடம் பளபளவென்று மின்ன வாளின் பிடிமீது தன் கரத்தை வைத்துக் கொண்டு நிற்கிறாரே அவர்தான் பரகேசரி பராந்தக சோழ தேவர்.

அப்பொழுது சோழ நாட்டில் பரகேசரி, இராசபரகேசரி எனும் பட்டத்தைப் பெயருக்கு முன்னால் புனைந்து கொள்வார்கள். பலங்குன்றிக் குறுநில மன்னர்களாகப் பழம்பெரும் புகழ் மங்கிக் கிடந்த சோழ நாட்டின் பெருமையை நிலைநாட்டிய விஜயாலயர் பரகேசரி எனும் பட்டப் பெயரைச் சூட்டிக் கொண்டார். அவர் மகன் ஆதித்தன் இராசகேசரி என்ற பெயரைப் பூண்டு கொண்டார். அவருடைய திருக் குமாரர் பராந்தக சோழ தேவர் பரகேசரி எனப் பட்டம் பூண்டார்.

பரகேசரி பராந்தக சோழர் கண்களிலே வெற்றிப் பெருமிதம் மின்னியது. மார்பிலும் தோளிலும் அணிந்திருந்த இரும்புக் கவசத்தையும் மீறித் தோள்கள் துள்ளின; அவர் எதையோ சொல்ல விரும்பியதையும், உற்சாகமும் பெருமையும் சூழ்ந்து அவற்றை வெளிவர வொட்டாமல் தடுக்கின்றன என்பதையும் அருகே நின்று கொண்டிருந்த பழுவேட்டரையர் கண்டரன் அமுதனார் எளிதில் புரிந்து கொண்டார்.

கண்டரன் அமுதன் பழுவூரின் சிற்றரசர். எனினும் சோழ நாட்டிற்கு அடங்கியவர். சோழ நாட்டிற்கு உதவுவதற்கு எந்தக் கணமும் படைகளுடன் ஆயத்தமாக இருப்பவர். பராந்தகனின் பால் மிக்க அன்பு கொண்டவர். பாண்டியரோடு நடத்திய போரில் பல போர்க்களங்களில் அவரோடு உடன்நின்று போரிட்டு வெற்றிக்கொடி நாட்டியவர். பராந்தகன் உள்ளத்தை அவர் புரிந்து வைத்திருந்தார். பராந்தகனும் பழுவேட்டரையரை உயர் நண்பராக மதித்து வந்தார்.



''கரையை இன்னும் சிறிது நேரத்தில் அணுகி விடுவோம்'' என்றார் பழுவேட்டரையர்.

''ஆம்; நாட்டை விட்டுப் புறப்பட்டு இருபது நாள்களுக்கு மேலாகவில்லை. ஆனால் இரு நூறாண்டுகள் இந்த நாட்டைப் பிரிந்திருந்தது போன்ற உணர்ச்சி'' என்றார் பராந்தகர்.

'பராந்தக சோழ தேவர் சிறு குழந்தையைப் போலாகி விட்டார்; வீடு திரும்புவதற்கு ஆவலேற்பட்டுவிட்டது'- என்று அவருகே இருந்தவர்கள் எண்ணியிருப்பர். அவருக்கு இப்போதெல்லாம் பழையாறையை விட்டு அதிக நாள்கள் வெளியே சென்றிருக்க எண்ணம் ஏற்படுவதில்லை. அவர் எப்போதும் வருங் காலத்தையே எண்ணி ஏதோ சிந்தனை செய்வதிலேயே கழித்தார்.

சிங்கள வேந்தனாகிய உதயன் சோழப் படையிடம் தோற்றோடி இலங்கையின் தென் கீழ்ப்பகுதியாகிய ரோகண நாட்டிற்கு ஓடி ஒளிந்து விட்டான். ரோகண நாட்டிலேயே தங்கியிருந்து இன்னும் சில நாள்கள் முனைந்து போரிட்டிருந்தால் அந்த மன்னரை உயிருடன் சிறை பிடித்திருக்கலாம். சிங்களப் படைகள் சரணாகதியடைந்தவுடனே பராந்தகன் போரை நிறுத்தி விட்டு புலிக்கொடியை நாட்டிவிட்டு வெற்றிச் சங்கம் ஊதினார். திரும்ப வேண்டும் எனும் எண்ணம் அவருக்கெழுந்தது.

ஈழத்தில் கிடைத்த பெரு வெற்றிப் புகழைச் சுமந்து கொண்டு தரை மார்க்கமாக வரவேண்டும் என்று பழுவேட்டரையர் எண்ணினார். ஆனால் பராந்தகன் மனத்திலே வேகம் சிறகு கட்டிப் பறந்தது. வந்த கலங்களிலேயே திரும்பிவிட விரும்பினார். அதனால் விரைந்து திரும்பி விட முடியும் என்ற எண்ணம்.

நாகப்பட்டினத்துக் கடற்கரை கண்ணுக்குத் தெரிந்ததும் பராந்தகன் முகத்தில் புதுப்பொலிவு பிறந்தது. ஒருவேளை கடற்கரைக்கே வீரமா தேவி வந்திருப்பாளோ என்றெண்ணும் போது அவர் மனத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

பராந்தகனுக்கு நான்கு குமாரர்கள். இரு பெண்கள். அவர்களுள் வீரமாதேவியின் மீது அன்பு மிக வைத்திருந்தார்.

தாய் வயிற்றில் அவள் இருக்கும்போது பராந்தக சோழ தேவர் தாமே தலைமை தாங்கி மதுரை நோக்கிப் படையெடுத்துச் சென்றார். பாண்டியப் படைகள் புறமுதுகிட்டோடி, வெற்றிச் செய்தி செவியில் வீழ்ந்தபோது குழந்தை பிறந்த வேளைதான் பாண்டிய நாட்டை வென்று மதுரையிலேயே அமர்ந்து முடி சூடிக் கொள்ள முடிந்தது என்ற நம்பிக்கை அவருக்குத் திடமாக ஏற்பட்டது. வெற்றிக்கு அறிகுறியாக என்றுமே தன் செவிகளில் வீரத்தின் பெயர் ஒலித்துக் கொண்டிருக்க தன் நாவில் என்றும் வீரப் பெயர் நடமாடிக் கொண்டிருக்க வீரமாதேவி என்று குழந்தைக்குப் பெயரிட்டார்.

'வீரமாதேவி' பெயருக்கேற்ப அஞ்சா நெஞ்சினள். தந்தையின் அஞ்சாமை உணர்ச்சியும் தாயின் கம்பீரமான தோற்றமும் கொண்டவள். அவளைப் பெற்ற சில ஆண்டுகளில் அவள் தாய் இறந்தாள்.

வீரமாதேவியின் தாய் கோக்கிழான் அடிகள் பட்டத்தரசி. அவள் சேர நாட்டு மகள். அழகு ததும்பும் வடிவத்தினள். வீரம் நிறைந்த கணவனுக்குப் பக்திச் சுவையை ஊட்டும் நற்குணத்தவள். தாயை உருவத்திலும் ஆற்றலிலும் கொண்டிருந்தாலும், தாயிடமில்லாத பிடிவாதமும் யாரையும் மதிக்காத குணமும் எங்கிருந்தோ வீரமாதேவியிடம் சேர்ந்திருந்தன. தந்தையின் அளவு கடந்த அன்பு உடன் சேர வீரமாதேவி அதிகாரம் பெற்ற அரசி போன்றே விளங்கலானாள்.

நாகப்பட்டினத்துத் துறைமுகத்தில் மரக்கலங்கள் அன்று அதிகம் நிற்கவில்லை. கடந்த பல திங்களாக கலங்கள் எல்லாவற்றையும் சேகரித்து ஈழத்துப் படையெடுப்புக்குப் பயன்படுத்திக் கொண்டார், பராந்தக தேவர். அவை போதாதென்று பெரும் பெரும் கலங்களைக் கட்டுவித்தார். அக் கலங்களிலே பல நாள்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் சேமித்திருக்க வழி செய்தார். போரிடத் தேவையான ஆயுதங்களைச் சேர்த்தார். தரை மூலமாகச் செல்லாமல் கலங்களிலே ஆயிரக்கணக்கான வீரர்களைக் கொண்டு செல்லத் தேவைப்பட்ட கலங்களை வணிகர்களிடமிருந்து கோரிப் பெற்றார். அதனால் நாகப்பட்டினத் துறையில் ஓரிரு வேற்று



நாட்டுக் கலங்களைத் தவிர வேறு கலங்கள் இல்லை. இப்போது வரிசை வரிசையாகப் பாய் விரித்து வரும் கலங்களைக் காணக் காண மக்களுடைய ஆரவாரம் வானைப் பிளந்தது.

வீரமாதேவி சிறு பெண் போல் கைகொட்டிக் குதித்து மகிழ்ந்தாள். அவள் முத்துப் பற்கள் அணிவகுத்து மனத்தின் மகிழ்ச்சியைப் புலப்படுத்தின. அவள் குதித்தபோது தலையிலே சூடியிருந்த புதுமலர்ச் சரங்கள் அவிழ்ந்து சரக்கொன்றை போல் தொங்கின. கை வளையல்கள் குலுங்கின. கழுத்திலே பூண்டிருந்த முத்து மாலை அவள் மார்பகத்தோடு ரகசியம் பேசிப் பேசி நகைத்தன.

அருகே இருந்தவர்கள் விழிகள் வீரமாதேவியையே நோக்கின. அவள் சகோதரன் அரிஞ்சயன் மட்டும் வீரமாதேவியின் அடக்க மற்ற தன்மையை விரும்பாதவனாய்ப் பல்லைக் கடித்துக் கொண்டான். மெல்ல அவள் காதருகே விழும்படி, "இதென்ன கூத்துமேடை என்று நினைத்துக் கொண்டாயோ கூத்தாட?" என்றான். வீரமாதேவி சட்டென அவன் பக்கம் திரும்பிக் கண்களை அகல விரித்துச் சுற்றிலும் பலர் இருக்கிறார்கள் என்ற எண்ணமும் இல்லாமல், "ஆமாம்; கூத்து மேடைதான். அதோ பார் நீலவானத்துத் திரையை விலக்கிக் கொண்டு புலிக்கொடி துள்ளக் கலங்கள் வருவதை. அதிலே தந்தை வருகிறார். அவரைப் பார்க்காது கண்கள் பூத்துப் போய்விட்டன.... தந்தை வெற்றிமாலை சூடி வருகிறார். ஈழத்தை வென்றுவரும் மாமன்னரை வரவேற்க ஓராயிரம் மடந்தையர் ஆடலாமே, பாடலாமே. என் அண்ணன் இராசாதித்தன் இருந்திருந்தால் மாபெரும் வரவேற்புக்கு ஏற்பாடு செய்திருப்பான்... உனக்குப் பாட்டு கூத்து என்றால் பிடிக்காது" என்று பளிச்சென்று கூறி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். பேச்சை வளர்த்த அரிஞ்சயன் விரும்பவில்லை.

'வீரமாதேவி கூறுவது போல் சிறந்த வரவேற்புக்கு ஏற்பாடு செய்திருக்கலாம். நாகையையே திருவிழாக்கோலம் கொள்ளச் செய்திருக்கலாம். அவள் சொல்வது போல் இராசாதித்தன் இங்கு இருந்தால் கோலாகலமாகச் செய்திருப்பானோ?' அரிஞ்சயன் எண்ணம் விரிந்தது.

பராந்தக சோழரின் தலைப்பிள்ளை இராசாதித்தன், தன் பாட்டனார் ஆதித்த சோழரைப் போன்று பெரும் வீரன். ஈழத்தின் மீது பராந்தகன் படையுடன் சென்றபோது திருமுனைப்பாடி நாட்டினின்று முக்கியச் செய்தி வந்ததால் இராசாதித்தன் பெண்ணையாற்றங்கரைக்குச் சென்றிருந்தான். 'அவன் இருந்திருந்தால் வெற்றி விழாவைச் சிறக்கச் செய்திருப்பான். அதை இந்தப் போதில் வீரமாதேவி குறிப்பாகக் கூறுவானேன்? என்னதான் அந்த அண்ணன் மீது அளவு கடந்த அன்பு அவளுக்கு இருந்தாலும் மற்றவர் எதிரே குறை கூற வேண்டாம் அல்லவா? வீரமாதேவிக்குத் தன்னைக் கண்டால் எப்போதும் அலட்சியந்தான். அரிஞ்சயன் பெருமூச்சு விட்டான்.

வெற்றி முரசு முழங்கியது. தாரை தப்பட்டைகள் ஒலித்தன. வாழ்த்தொலி வானைப் பிளந்தது. ''பண்டித வத்சலன் வாழ்க! குஞ்சரமல்லன் வாழ்க! சங்கிராம ராகவன் வாழ்க'' என்று வாழ்த்தொலி திரைகடலையும் மிஞ்சியது. கீழே விரிக்கப்பட்ட பட்டுத் துணியிலே போர்ப் பூமியை மிதித்த பாதங்கள் பட கம்பீரமாக நடந்து வந்து கொண்டிருந்த பராந்தகனை நோக்கிக் குதித்தோடினாள் வீரமாதேவி. அவர் எதிர்பார்த்தது போல் வீரமாதேவி கடற்கரைக்கே வரவேற்க வந்திருந்தது அவர் மகிழ்ச்சிக்குக் கரை காணாது செய்தது. தன் மகளை அவர் ஒரு கணம் உற்று நோக்கினார். சில நாள்களுக்குள்ளே வீரமாதேவி அடையாளம் தெரியாது வளர்ந்து விட்டது போல் தோன்றியது மன்னருக்கு. குதூகலத்துடன் ஓடிவரும் மகளை இருகை நீட்டி வரவேற்றுத் தழுவிக் கொண்டார். ''ஏன் அப்பா இவ்வளவு நாள்கள்?'' என்று சிறு குழந்தைபோல் முகத்தைப் பராந்தகனின் பரந்த மார்பில் புதைத்துப் புரட்டிய வண்ணம் கொஞ்சினாள் வீரமாதேவி.

''ஈழ மன்னனைத் தேடிப் பிடிக்க வேண்டாமா கண்ணே?''

''அவனைப் பிடித்து இழுத்து வந்தீர்களா?''

''இல்லை மகளே! உன் நினைவு வந்து விட்டது. ரோகணக் காட்டுக்குள்ளே ஓடி ஒளிந்து விட்டானம்மா. அவனைத் தேடிப் பிடித்து வருமளவுக்கு எனக்குப் பொறுமையில்லை.''

''கப்பல்களிலே என்னப்பா கொண்டு வந்திருக்கிறீர்கள்?



முன்பு ஏராளமாகப் பொன்னும் வெள்ளியும் வைரமும் கோமேதகமும் கொண்டு வந்தீர்களே... இந்த முறை?''

''அங்கிருந்து ஏதும் கொண்டு வரவில்லையம்மா! ஈழ அரசனை இனித் தலையெடுக்க விடாமல் செய்தேனே அந்தப் புகழுடன்தான் வந்தேன்.''

''பாண்டிய குமாரனுடைய மகுடமும், வாளும் கொண்டு வருவதாகச் சொன்னீர்களே!''

''ஆமாம் அம்மா! அவற்றை அந்தப் பயந்தாங்கொள்ளி இராசசிம்மன் எங்கே ஒளித்து வைத்திருக்கிறான் என்றே தெரியவில்லை.''

''பாண்டிய குமாரனையாவது கண்டுபிடித்தீர்களா?''

''அவன் கிடைக்கவில்லை, ஈழம் முழுமையும் தேடி விட்டேன். உன்தாய் கூறியதுபோல் அவன் அகப்பட்டிருந்தால் கையுடன் விலங்கிட்டுக் கொண்டு வந்திருப்பேன்.''

''கொண்டு வந்து....''

''தண்டனை கொடுத்திருப்பேன்...''

''தண்டனையா?''

''ஆமாம்; ஆயுள் தண்டனை! அந்த மாவீரனுக்கு உன்னை மணம் செய்து கொடுத்திருப்பேன். அதுவே அவனுக்கு ஆயுள் தண்டனை அல்லவா?'' என்று கூறி நகைத்தார் மன்னர்.

''போங்களப்பா! எப்போதும் உங்களுக்கு என் திருமணத்தைப் பற்றித்தான் பேச்சு. போயும் போயும் அந்தக் கோழைக்கா நான் மாலை சூட வேண்டும்? அயல்நாட்டிற்குப் போய் வந்தும் அது மறந்து போகவில்லையா?'' என்று சிணுங்கினாள் வீரமாதேவி.

அருகே நின்றிருந்த பழுவேட்டரையர் கண்டரன் அமுதனாருக்கு அந்த இடத்தில் நடந்த அந்தப் பேச்சு பிடிக்கவில்லையென்பதை அவர் முகம் கூறிற்று.

''வீரமாதேவி! மன்னரை இங்கேயே நிறுத்திவிட்டாயே? அவருக்கு ஏராளமான பணிகள் காத்திருக்கின்றன'' என்று கூறி

மன்னன் பக்கம் திரும்பி, ''இன்றே நாம் பழையாறை போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்று முடிவு செய்தோம். நினைவிருக்கிறதா?'' என்று பழுவேட்டரையர் கேட்டார்.

பராந்தகன் அப்போதுதான் தன் நிலை அறிந்து, ''ஆமாம் ஆமாம்; மறந்தேவிட்டேன்'' என்று கூறி தன் மகளைப் பார்த்து ''குழந்தாய்! நீ ரதத்தில் ஏறி வந்துவிடு. நாங்கள் அவசரமாகப் போகிறோம்'' என்றார். அருகே நின்ற அரிஞ்சயனை நோக்கி, ''அரிஞ்சயா! தங்கையை நீ அழைத்து வருகிறாயா?'' என்றார்.

தன்னைப் பற்றி ஏதும் விசாரிக்காமல் தந்தை புறப்படுவது அவனுக்கு வேதனையளித்தது. போர்க்களத்திலே வீரதீரச் செயல்களைப் புலப்படுத்தத் துடிப்பவனுக்கு வெறும் அரண்மனை வாசம் வெறுப்பை அளித்தது. தந்தையிடம் கூறிவிட்டு கங்க நாட்டை நோக்கிச் செல்லத் திட்டமிட்டிருந்த அவன் நலன் ஏதும் கேட்காமல் அவர் போகிறாரே...

தந்தைக்கு எப்போதும் தன் மீது அன்பும் ஆதரவும் குறைவுதான் என்ற குறை அவனுக்கு உண்டு. பட்டத்து அரசியின் வயிற்றில் தான் பிறக்கவில்லையே என்ற ஏக்கமும் உண்டு. என்றாலும் அவற்றை வெளியில் புலப்படுத்திக் கொள்ளத்தான் அவனுக்குத் துணிவில்லை. பராந்தகரின் எதிரே எல்லாருக்கும் நடுக்கம்தான்.

குதிரை மீதமர்ந்த பராந்தகர் மீண்டும் ஒருமுறை மகளைத் திரும்பிப் பார்த்தார். ''நடுவில் எங்கும் தங்காமல் நேரே பழையாறைக்கு வந்துவிடு'' என்றார். அதைக் கண்டு பழுவேட்டரையர் சிரித்தார். ''என்ன இருந்தாலும் இவ்வளவு பாசம் கூடாது. அரசே! நாளைக்கு அவள் மணம் புரிந்து வேறு நாட்டிற்குப் போய்விட்டால் மகளைப் பார்க்காமல் எப்படி இருப்பீர்களோ?'' என்றார்.

பராந்தக சோழதேவர் பெருமூச்சு விட்டார்.



## 2

காஞ்சியினின்று தஞ்சைக்குச் செல்லும் சாலையிலே பெண்ணையாற்றைக் கடந்து குறுக்கு வழியாகக் குதிரை மீது வீரனொருவன் விரைந்து சென்று கொண்டிருந்தான். மாந்தளிர் மேனி. அரும்பு மீசை. தலையிலே அடர்த்தியாக வளர்ந்து தோளிலே தவழும் கேசம். இடையிலே வாள். நெடுந் தொலைவு பயணப்பட்டு வந்ததால் உடலெங்கும் புழுதி. வீரத் திருமுகங் கூட, களைப்பால் வாடியிருந்தது. பொழுது சாய்வதற்குள் அடுத்துள்ள சிற்றூரை அடைந்தால் வேறு குதிரை பிடித்துக் கொண்டு பொழுது புலரா முன்னர் தஞ்சையை அடைந்து விடலாம் என்ற எண்ணத்தில் அவன் விரைந்து கொண்டிருந்தான். களைப்பும் பசியும் அவனைச் சூழ்ந்திருந்தாலும் கவலையின்றி அவன் குதிரையை விரட்டிக் கொண்டு சென்றான். குதிரையின் வாயில் நுரை தள்ளியது; அது தடுமாறியது.

உறுதி வாய்ந்த நெஞ்சினனான அந்த வீர இளைஞன் குதிரையினின்று கீழே குதித்தான். குதிரையை அருகேயுள்ள மரத்தில் கட்டினான். அந்தச் சாலையில் கூப்பிடு தூரத்திற்கு ஆள நடமாட்டமே காணோம். அவன் நா வறண்டிருந்தது. அருகே இருந்த தடாகத்தைக் கண்டவுடன் அவன் ஆவல் துள்ளியது. மெல்ல நடந்து அந்தக் குளத்தருகே சென்றான். ஒரு வாய் தண்ணீரைக் குடித்து முகத்தையும் நீரிலே நனைத்தான். ஆ! அந்தச் சுகமே சுகம்! களைப்பு பறந்து விட்டது. மரத்தில் கட்டப்பட்டிருந்த குதிரையை அவிழ்த்து நடத்தியவாறு புறப்பட்டான். மரங்களடர்ந்த இடம் வந்தவுடனே யாரோ தொடர்ந்து வரும் காலடி ஓசை அவன் செவிகளில் கேட்டது. அவன் திரும்பிப் பார்ப்பதற்குள் தடதடவெனப் பலர் ஓடிவரும் அரவம் மிக அருகே கேட்டது. கண் மூடித் திறப்பதற்குள் வாளின் கூரியமுனை அவனை நாற்புறமும் சூழ்ந்தது.

அவன் திகைத்தான். ஆனால் நொடிப் பொழுதிலே தன் உடைவாளை உருவிச் சுழற்றினான். 'கிணங், கிணங்' என்ற ஒலி எழுந்தது. நான்கு பேரை அவன் ஒருவனே திணறடித்தான். அவனிடம் ஆக்ரோஷம் பிறந்தது. இருவரின் கத்திகள் மோதின.

ஒருவருடைய தோளிலிருந்து செங்குருதி பீறிட்டுப் பாய்ந்தது. மற்றொருவன் மார்பைப் பதம் பார்க்கும் நிலையில் அவனுடைய கூரிய வாள் நீண்டது.

''வெள்ளங்குமரா போதும், போதும் நிறுத்து'' என்று கூறிக் கொண்டே மரங்களின் மறைவினின்று இளவரசன் இராசாதித்தன் விரைந்து வந்தான்.

''ஆ! நீங்களா?'' என்று கூறித் திகைத்தான் வெள்ளங்குமரன்.

''ஆமாம்; நானேதான்'' என்று கூறி வெள்ளங்குமரனின் தோள்களைத் தட்டிக் கொடுத்து ''குமரா! திடீரென எதிர்ப்பு வந்தாலும் ஒருவனே பலரை எதிர்த்து நிற்கும் திறமை உனக்கிருப்பதை அறிந்தேன்'' என்றான் இராசாதித்தன்.

''எல்லாம் உங்களிடம் கற்றுக் கொண்ட வித்தைதான் இளவரசே!'' என்றான் வெள்ளங்குமரன். இராசாதித்தன் நகைத்தவாறு, ''என்னிடமா? இல்லை இல்லை... உன்னிடம் நான் கற்க வேண்டியவை பல இருக்கின்றன. பெரிய வீரன் என்ற பெயர்தான் எனக்கு. முழுமையாக போர்க்களத்தில் புகுந்து எதிரிகளின் உடலிலே பளபளக்கும் வாளைப் பதம் பார்த்து தலையைச் சீவிப் பந்தாடி, ரத்தச் சேற்றிலே நடந்து செல்ல ஆசை. கற்ற வித்தை எல்லாம் மறந்து விடுமோ என்ற பயங்கூட ஏற்படுகிறது. அப்படி மறந்து போனால் நீ எனக்குக் கற்றுக் கொடுப்பாய் அல்லவா?'' என்றான் இராசாதித்தன் பலத்த சிரிப்புடன்.

''இளவரசே! என்னைப் பரிகாசமா செய்கிறீர்கள்?''

''பரிகாசம் இல்லை குமரா, பாராட்டு! உன்னைப் போன்று நான்கு மாவீரர்கள் இருந்துவிட்டால் போதும்; சோழநாட்டு விரோதிகள் கதிகலங்கிவிடுவர். அது போகட்டும். போன காரியம் என்னவாயிற்று? சோழ நாட்டுப் பகைவர்கள் எங்கும் நடமாடும்போது இப்படி நீ அலட்சியமாகக் குதிரை மீதேறி வரலாமா? உன்னை விரோதிகள் படைசூழ்ந்து கொண்டால்? அதைப் புலப்படுத்தவே இப்போது ஒரு நாடகமாடினேன்?''

''ஹி!'' என்று ஒருவித அலட்சியக் குரல் கொடுத்த வெள்ளங்குமரன். ''என்னை நூறு பேர்தான் சூழட்டுமே! நான்



வில்லவர் பரம்பரையைச் சேர்ந்தவன். ஒரே வீச்சில் ஐவர் தலை உருளும். நீங்கள் சற்றுத் தாமதமாக வந்திருந்தால் என்னை எதிர்த்த இந்த நால்வரும் இதற்குள் வீர சுவர்க்கம் அடைந்திருப்பர்!'' என்றான்.

பிறகு வேடிக்கைப் பேச்சை விட்டு விட்டு வெள்ளங்குமரன் தான் சென்று வந்த செய்தியைக் கூறலானான்.

வெள்ளங்குமரன் சேர நாட்டு மாவீரன். மலைநாட்டிற்கே உரித்தான மேனியழகும் உடல் வலிமையும் கொண்டவன். சின்னஞ்சிறு வயதிலேயே அவன் பெற்றோரை இழந்தான். சிறுவயதிலேயே அநாதை ஆகிவிட்ட அவன் சேர நாட்டில் படைத் தலைவர் ஒருவர் வீட்டில் வளர்ந்து வந்தான். அப்பருவம் முதலே வாள் வீச்சையும், அம்பெய்தலையும், ஈட்டி எறிதலையும் கண்டான். கண் கண்டதைக் கை செய்தது. காலம் மெல்ல மறைந்தது. குமரனுக்கு அந்த நாட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. வயிறாரச் சோறு கிடைக்கா நிலையில் கொங்கு நாட்டுப் படையில் சேர்ந்தான். பிறகு அங்கிருந்து சோழ நாடு வந்து சேர்ந்தான். இராசாதித்தனைச் சந்தித்த முதல் சந்திப்பே வேடிக்கையானது.

'சோழ நாட்டிற்குச் சென்று இராசாதித்தனைச் சந்தித்தால் எப்படியும் உனக்குத் தக்கபணி கிடைக்கும்' என்று கங்க நாட்டு விக்கியண்ணன் கூறி ஓலையொன்றைக் கொடுத்தான். குமரன் அதை எடுத்துக் கொண்டு காஞ்சி வழியே தஞ்சையை அடையப் பயணம் புறப்பட்டான். வெளிநாடுகளுக்கு அவன் போவது அதுவே முதல் முறை. அச்சம் ஏதுமறியாப் பருவத்தினனான குமரன் நம்பிக்கை ஒன்றையே துணையாகக் கொண்டு புறப்பட்டான்.

பல நாள்கள் பயணம் செய்து பல இடங்களிலே வழியைக் கேட்டு அறிந்து கொண்டு திருமுனைப்பாடி நாட்டுத் திருநாவலூரை வந்தடைந்தான். அன்று போல்தான் அவன் குதிரையைத் தட்டிவிட்டுப் பொழுது சாய்வதற்குள் ஊருக்குள் செல்ல முற்பட்டபோது எதிரே குதிரை மீது பல வீரர்கள் வந்தனர். மரியாதைக்காக ஒதுங்கிச் செல்ல முற்பட்ட அவனை நோக்கியே அவர்கள் வருவது தெரிந்தது. வலப்புறத்தினின்று குமரன்

இடப்புறம் மாறியபோது அவர்களும் அப்படியே செய்தனர். குமரனுக்குக் கோபம் பிறந்தது. சரேலென்று வாளை உருவிய வண்ணம் குதிரையை இருகரங்களாலும் தட்டிவிட்டு விரைந்தான். அந்தக் குதிரை வீரர்கள் இரண்டாகப் பிரிந்து கொண்டனர். அவர்களைத் தாக்குவதற்குள் குமரன் கண் இமைக்கும் நேரத்தில் குதிரை மீதிருந்து கீழே சாய்ந்தான். முனையில் கொக்கி போன்று வளைந்த ஈட்டியொன்றால் அவனது முதுகுப் புறத்தில் வீசி அவனை அவர்கள் இழுத்துக் கீழே வீழ்த்தியிருந்தது அப்போதுதான் தெரிந்தது.

குமரனுக்கு ஆத்திரமும், அவமான உணர்ச்சியும் பின்னின. எழுந்திருக்க முயன்ற அவன் மார்பின் நேரே ஈட்டியொன்று பளபளத்து நின்றது.

''கையிலுள்ள கத்தியைக் கீழே போடு'' என்று குதிரை மீதிருந்தவன் கர்ஜித்தான்.

''முடியாது....நீங்கள் யார்? சுத்த வீரராக இருப்பின் நேருக்கு நேர் சண்டையிட முன்வாருங்கள். முதுகிலே தாக்குவது வீரமன்று'' என்று குமரன் முழங்கினான்.

குதிரை மீதிருந்தவன் நகைத்தான். மெல்ல ஈட்டியை நகர்த்தினான். அதுதான் தருணமென்று குமரன் ஈட்டியைப் பற்றிப் பலமாக இழுக்கவே குதிரை மீதிருந்தவன் தலைகுப்புற வீழ்ந்தான். அருகே இருந்தவர்கள் ஏக காலத்தில் 'ஹாஹா' என்று கூவினர். அனைவரும் ஒரே சமயத்தில் குமரனைச் சூழ்ந்து கொண்டனர். மிகத் திறமை வாய்ந்த அந்த வீரர்களின் தாக்குதலைக் குமரன் ஒருவனால் மட்டும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

அந்தப் போரில் குதிரை மீதிருந்து கீழே வீழ்ந்தவன் எழுந்து மற்றவர்களைச் சைகை காட்டி நிறுத்துமாறு கூறி குமரனின் அருகே வந்து ''தம்பி! நீ யார்?'' என்று கேட்டான்.

''நான் யாராயிருந்தால் என்ன? நீங்கள்யார் என்று முதலில் கூறுங்கள். வழிப்பறிக் கொள்ளையர் போல் ஒருவனை நால்வர் தாக்கும் நீங்கள்யார் என்று கூறுங்கள்...'' என்று குமரன் ஆத்திரத்துடன் பேசினான்.



''தம்பிக்குக் கத்தி வீசத் தெரியாவிடினும் கத்திப் பேசத் தெரிகிறது. ரொம்பவும் கோபம் வருகிறது'' என்றான் வீரர்களுள் ஒருவன்.

''நீங்கள் தடுத்திராவிடில் இவனை என்ன செய்திருப்பேன் தெரியுமா?'' என்று குமரனை நெருங்கினான் மற்றொருவன். அப்படிக் கூறியவன் பக்கம் திரும்பித் தன் இடது முஷ்டியால் ஒரு தள்ளு தள்ள முற்பட்டான். அப்போது குதிரை மீதிருந்து கீழே வீழ்ந்தவன் மெல்ல எழுந்து குமரனைத் தடுத்து ''தம்பி! இப்போது வேண்டாம் துவந்த யுத்தம். உன் பலத்தைப் பரீட்சித்தார்கள் இவர்கள். உன் பெயரைத்தான் சொல்லேன். நீ எங்கிருந்து வருகிறாய்? ரொம்பவும் பொல்லாதவனாக இருப்பாய் போலிருக்கிறதே'' என்றான். குறும்புச் சிரிப்பு இதழ்களில் தவழ.

''ஆமாம். நான் பொல்லாதவனுக்குப் பொல்லாதவன். நல்லவனுக்கு நல்லவன். என் பெயரைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டால் சொல்லியிருக்க மாட்டேனா? அதற்குப் பலப் பரீட்சை பார்த்திருக்க வேண்டுமா?'' என்றான் குமரன்.

''ஆமாம் தம்பி! நீ இருக்கும் இந்தப் பூமியில் இப்போது பலப்பரீட்சை பார்க்கத்தான் வேண்டியிருக்கிறது. வேற்று நாட்டு ஒற்றர்களின் நடமாட்டம் இங்கு அதிமாகிவிட்டது. அதனால்தான் ஒவ்வொருவரையும் நாங்கள் கண்காணிக்க வேண்டியிருக்கிறது.''

''ஆமாம், ஆமாம் ஒற்றர்கள் அதிகம் பேர் சோழ நாட்டில் ஊடுருவியிருப்பதாக நானும் கேள்விப்பட்டேன். விக்கி அண்ணனார் செய்தி கூறி அனுப்பும்போதே அவர் என்னை எச்சரித்திருக்கிறார்...''

''ஓகோ! விக்கி அண்ணன் அனுப்பினாரா? கங்க நாட்டவனா நீ? நாங்கள் சந்தேகப்பட்டது சரியாகி விட்டது... உன்னைத் தடுத்து நிறுத்தியதும் சரிதான். விக்கி அண்ணன் என்ன செய்தி சொல்லியனுப்பினார்?''

''உமக்கு அது தெரிய வேண்டியதில்லை. சோழ நாட்டு இளவரசருக்குத்தான் அவர் ஓலை கொடுத்திருக்கிறாரேயன்றி உங்களைப் போன்ற வழிப்பறிக்காரர்களுக்கன்று...''

''நாங்களும் சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள்தாம் தம்பி! ஓலையை இப்படிக் கொடு.''

''சோழ நாட்டவர்கள் பண்புமிக்கவர்கள் என்று கேள்விப் பட்டேனே... எனக்குக் கிடைத்த வரவேற்பைப் பார்த்தால் என் கருத்தை மாற்றிக் கொள்ளத்தான் நேர்கிறது. உங்கள் பெயர்களைக் கூறுங்கள். நான் இளவரசரைச் சந்தித்தவுடன் உங்கள் நடவடிக்கைகளைக் கூறுகிறேன்...''

அங்கிருந்தவர்கள் குபீரெனச் சிரித்தனர். அவர்கள் எதற்காக நகைக்கிறார்கள் என்று குமரனுக்குத் தெரியவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தான். வீரர்களில் ஒருவன் குமரனின் தோள்களைத் தட்டி, ''உன் எதிரே இருக்கிறாரே அவர்தானப்பா இளவரசர். அவரிடம் கொடு'' என்றான்.

குமரன் திடுக்கிட்டான். எதிரே நின்ற இளவரசர் இராசாதித்தன் புன்முறுவல் புரிந்தான். அங்கிருந்தவர்களுக்குச் சைகை செய்துவிட்டு இராசாதித்தன் குதிரை மீதேறி விரைந்தான். பாடி இறங்கியிருந்த இடத்தில் இளவரசர்க்கு உரிய உடையுடன் இராசாதித்தன் அமர்ந்திருந்தபோதுதான் குமரனுக்கு உண்மை விளங்கியது. அச்சமுடன் நடுநடுங்கியிருந்த குமரனை இராசாதித்தன் அணைத்துக் கொண்டான்.

இராசாதித்தனுக்கு வெள்ளங்குமரனைக் கண்டவுடன் பிடித்துவிட்டது. அவனுடைய தங்கநிற மேனியைக் கண் கொட்டாமல் பார்ப்பான். அகன்ற நெற்றியையும் திரண்ட தோள்களையும் மீண்டும் மீண்டும் நோக்குவான். இளமையின் ஆட்சி பூரணமாக வெள்ளங்குமரனிடம் நிறைந்திருந்தது. இராசாதித்தன் வயதுதான் வெள்ளங்குமரனுக்கும் இருக்கும். எனினும் இராசாதித்தன் இளவரசன். பெரும் சோழநாட்டை அடுத்து ஆளப்போகும் தகுதி பெற்றவன். வெள்ளங்குமரன் சாதாரணப் படைவீரன்தானே!

முதன் முதலில் அறிமுகமானபோது ஏற்பட்ட நிகழ்ச்சி போன்றே மீண்டும் இப்போது நடைபெற்றது. தன்னிடமிருந்து பல வித்தைகளைக் கற்க வேண்டும் என இராசாதித்தன் தெரிவித்ததைக் கேட்க வெள்ளங்குமரனுக்கு உடல் புல்லரித்தது.



இராசாதித்தன் தன்னைப் புகழ்கிறாரா அல்லது கேலி செய்கிறாரா!

'சென்ற காரியம் என்னவாகியது?' என்று இராசாதித்தன் வினவவும் வெள்ளங்குமரன் யாவற்றிற்கும் தொண்டையைக் கனைத்துக் கொண்டு விடை பகன்றான்.

கங்கநாட்டில் ஏற்பட்டுள்ள உள்நாட்டுக் குழப்பத்தைப் பற்றிய செய்தியை வெள்ளங்குமரன் தெரிவித்தான். வைதும்பர்கள் எக்காரணம் பற்றியோ படை திரட்டுவதையும் கூறினான்... அவர்களின் படைபலம் எவ்வளவு இருக்குமென்று வினவினான் இராசாதித்தன். வெள்ளங்குமரன் தான் கண்டவற்றைத் தெரிவித்து என்னதான் அவர்கள் ஒன்று சேர்ந்தாலும் நமது படை எதிரே நிற்க இயலாது என்பதையும் தெரிவித்துக் கொண்டான்.

''வாளுக்கும் வேலுக்கும் இப்போது வேலை இருக்கிறது என்று சொல்லு'' என்றான் இராசாதித்தன்.

''ஆம்; உங்கள் தந்தை அந்தப் பெருமையையும் நாமடைய விடுவாரோ மாட்டாரோ, வாள்வீச்சே மறந்துவிடும் போலிருக்கிறதே'' என்றான் வெள்ளங்குமரன்.

''ஆமாம், குந்தள நாட்டினின்று ஏதாவது சேதி கிடைத்ததா?'' என்று வினவினான் இராசாதித்தன், எதையோ மறந்துவிட்டது நினைவுக்கு வந்தது போன்று. ''ஆமாம், ஆமாம் இராட்டிரகூட நாட்டு இளவரசன் கோவிந்தன் தெற்கே பல ஊர்களைக் கண்டு களிக்க வருகிறானாம்'' என்றான். வெள்ளங்குமரன் அறிந்து வந்த வேற்றுநாட்டுச் செய்திகளைக் குறித்துச் சிந்தித்தவாறிருந்த இராசாதித்தன், ''ஈழத்தினின்று தந்தை எப்போது வருவார் என்று தெரியவில்லை. வந்தவுடன் அவருடன் கலந்தாலோசித்து வட எல்லைக் காவலுக்காகப் பெரும்படை திரட்ட வேண்டியதுதான்'' என்றான். பிறகு ஏதோ எண்ணியவனாக, 'ஆமாம். தன் நாட்டை விட்டு கோவிந்தன் எதற்காகத் தென்பகுதி ஊர்களைக் காண வருகிறார்?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

இராட்டிரகூட நாட்டில் அப்போது நடைபெற்று வரும் உள்நாட்டுக் குழப்பங்கள் இராசாதித்தனை எட்டவில்லை.

அவனுடைய பாட்டனார் ஆதித்த சோழர், சோழ நாட்டிற்குப் புகழும் பெருமையும் சேர்ப்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்தார். அதற்காகவே இராட்டிரகூட நாட்டு மன்னர் கிருஷ்ணனின் மகள் இளங்கோப்பிச்சியை மணந்தார். இளங்கோப்பிச்சியின் வயிற்றில் பிறந்தவர்தான் பராந்தகன். கிருஷ்ணனுக்குப்பிறகு அவன் மகன் இந்திரன் பட்டத்துக்கு வந்தார். அவரது மகனே கோவிந்தன். சோழ நாட்டிற்கு உறவு முறைத் தொடர்பினரான இரட்டர்களிடம் இராசாதித்தனுக்குப் பரிவும் பாசமும் இருந்ததில் வியப்பில்லை.

இராசாதித்தன் சிறிது நேரம் யோசித்தான். பிறகு வெள்ளங்குமரனைப் பார்த்து ''நீ மிகவும் களைப்புற்று வந்திருக்கிறாய். இன்றிரவு இளைப்பாறி நாளைக்குப் புறப்படலாமே'' என்றான்.

''இல்லை இல்லை. எனக்குக் களைப்பே இல்லை. திடீரென முரட்டுத்தனமாகத் தாக்க வந்தவர்களுடன் சண்டையிட்ட போதே களைப்பு பறந்துவிட்டது. உடனே புறப்படுவோம்'' என்றான் வெள்ளங்குமரன்.

''ஓகோ! எனக்கு மறந்துவிட்டதே. அங்கே இந்த வீரனுக்கு இரண்டு வேல்விழிகளன்றோ காத்திருக்கின்றனர். பலநாள்கள் பிரிந்திருந்ததால் சோகமுற்றிருக்கும் விழிகளுக்கு ஆதரவுதர வேண்டும். அதை மறந்தேன். உடனே புறப்படுவோம்'' என்று நகைத்தவாறு கூறினான் இராசாதித்தன்.

தன் மற்றொரு சகோதரி அநுபமாவிடம் வெள்ளங்குமரன் தன் இதயத்தைப் பறிகொடுத்து விட்டான் என்பதை இராசாதித்தன் அறிவான். 'அவர்கள் காதல் வாழ்க, வளர்க' என்று இதய பூர்வமாக வாழ்த்தினான் இராசாதித்தன். தான் சோழநாட்டு இளவரசன் என்றும் அவன் சாதாரண வீரன் என்றும் பாகுபாடின்றி உள்ளத்தால் இணைந்த அந்த இளம் வீரர் இருவரும் குதிரை மீதேறித் தஞ்சையை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர்.

⁂



## 3

பழையாறை நகரத்துப் பழங்கால மாளிகையின் அருகே இருந்த அழகிய நந்தவனம் அன்று புதுப்பொலிவுடன் விளங்கியது. இருவாட்சியும், மல்லிகையும் அதிசயித்தன. செண்பகமும், சாமந்தியும் வியந்தன. முல்லையும் குவளையும் திகைத்தன. அத்தனை கலகலப்பும், சிரிப்பும், கும்மாளமும் கூத்தும் அந்தப் பூங்காவில் நடந்து அந்த மலர்கள் கண்டதேயில்லை. செடி கொடிகள் பார்த்ததேயில்லை. அடர்ந்து வளர்ந்த மரங்கள் அறிந்ததில்லை. மரக்கிளைகளில் வந்து உட்காருவதும் உடனே ஏதோ மிகப் பெரிய வேலை இருப்பது போல் பறந்து செல்லும் புள்ளினங்களுக்குத் தங்களைவிடக் குதூகலமாயிருப்பவர்களைத் தெரியாது. அமைதியாக இருக்கும் அந்த நந்தவனத்தில் வளரும் மான்கள் தாம் அவ்வப்போது துள்ளி ஓடும். சிறுசிறு பெண் முயல்கள் குடுகுடுவென ஓடும். தன்னிச்சையாகத் திரியும் மஞ்ஞையும் தோகையும் அழகு நடை போடும். இன்று அவைகூட வெட்கி ஒதுங்கி நின்றுவிட்டன.

மானினம் தங்களுக்குப் போட்டியாக வந்துவிட்டவர்களைக் கண்டு தங்கள் மருண்ட விழியால் நோக்கின. மயிலினங்கள் தங்கள் தலையைச் சாய்த்துப் பார்த்தன. கீதமிசைக்கும் குயில்கள் கூவாது மிதந்துவரும் இனிய ஒலியில் அமிழ்ந்தன. மழலை பேசும் கிளிகள் தங்கள் சிவந்த மூக்கை இப்படியும் அப்படியும் ஆட்டி அங்கிருந்து வரும் கனிமொழியைக் கேட்டு ரசித்தன.

பேழையிலுள்ள முத்துப் பளிங்குக்கல் தரையில் உருள்வது போன்ற ஓசை ஒரு சமயம் அங்கே எழும். தங்க நாணயங்கள் உருண்டோடுவது போன்ற ஒலி ஒருபோது உண்டாகும். சில சமயம் அங்கே ஓர் ஆட்சியே நடக்கிறதோ என்று ஐயம் உண்டாகும். அல்லி அரசி மீண்டும் உயிர்பெற்று வந்து சபை கூட்டியிருக்கிறாளோ எனத் தோன்றும்.

வீரமாதேவி செயற்கை மேடை ஒன்றிலே அமர்ந்திருந்தாள். அவள் தலையிலே கொடிகளாலும் மலர்களாலும் ஆன கிரீடம் போல் உருவாக்கப்பட்ட ஒன்றை அணிந்திருந்தாள். ஒரு பாங்கி கட்டியங் கூறினாள். குவளை மலர்க்கொத்தை ஒரு தோழி பறித்து வெண்சாமரம் வீசுவதுபோல் வீசியவாறு அருகே நின்றிருந்தாள்.

அவள் பாதத்தடியில் ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். கீழே பல பெண்கள் அமர்ந்திருந்தனர். அங்கே வீணையும், மத்தளமும், தாளமும் இருந்தன.

தோழிப் பெண் ஒருத்தி அருகே இருந்த மரத்தின் மறைவினின்றும் யானையைப் போன்று நடந்து வந்தாள். வீரமாதேவியின் அருகில் அமர்ந்திருந்தவள் அவளை நோக்கி "நீ எந்த நாட்டுத் தூதுவன்?" என்று கேட்டாள். அவள் வாயைக் கையால் மூடி மிகவும் மரியாதையான குரலில், "நான் அங்க தேசத்துத் தூதன். எங்கள் அரசர் தன் குமரனுக்குப் பெண் கேட்டு என்னைத் தூதனுப்பினார்" என்றாள்.

"உங்கள் அரசகுமாரர் உன்னைப் போல் யானை மாதிரி நடப்பாரோ?" - வீரமாதேவி கேட்டாள். எல்லாரும் கொல்லென்று நகைத்தனர்.

"ஆமாம், அரசி!"

"அப்படியெனில் இங்கு ஏன் வந்தாய்? காட்டிற்குப் போ!" என்றாள் வீரமாதேவி. மீண்டும் அனைவரும் அந்த நந்தவனமே அதிருமாறு நகைத்தனர்.

"அடுத்து நீ யார்?" என்ற குரல்.

"நான் கலிங்க நாட்டு அரசனின் தூதுவன். சோழ நாட்டு அரசகுமாரியைப் பெண் கேட்க வந்தேன்."

"ஓகோ, அப்படியா! உங்கள் அரசகுமாரன் அங்க அடையாளங்களை வர்ணிக்க முடியுமா?"

"அவர் பேரழகர். வஜ்ராயுதம் போன்ற பல். கேடயம் போன்ற மூக்கு. ஈட்டி போன்ற விழி..."

"இரு இரு. நான் பூர்த்தி செய்கிறேன். உலக்கை போன்ற கால்கள்... தேருருளை போன்ற கைகள்... இல்லையா? அப்படியென்றால் எங்காவது யுத்தகளத்திற்குப் போகச் சொல்லேன்".

மீண்டும் அனைவரும் நகைத்தனர். ஒருத்தி டொய் டொய்ங் என வீணையின் நரம்புகளை மீட்டினாள். ஒருத்தி மத்தளத்தை 'டண்டண்' என்று தட்டினாள்.



"நீ யார் நாணிக் கோணி வருகிறாய்?"

"நான் கோசலத்தினின்று வருகிறேன்?"

"உங்கள் அரசர் அர்ஜுனன் பரம்பரையோ?"

"ஆமாம் அரசி!"

"அப்படியா? தவறி இங்கு வந்துவிட்டாய்... அரசகுமாரிக் கல்லவா நாங்கள் பெண் தேடுகிறோம்!"

மீண்டும் கைகொட்டிச் சிரிப்பு.

"அரசகுமாரி! எங்கள் நாட்டரசர் மிகவும் நல்லவர். சீட்புலி நாட்டரசர்."

"ஐயா! எங்கள் அரசகுமாரியும் பெண் புலியாச்சே. எங்காவது பூனையைத் தேடுவதுதானே!"

மீண்டும் 'ஓஹோஹோ' என்ற சிரிப்பு. அப்போது மற்றொரு சேடியொருத்தி கையிலே சுருட்டப்பட்ட துணியொன்றை எடுத்துக் கொண்டு

"இளவரசிக் கேற்ற இளவரசர்
இதோ கொண்டு வந்தேன்
தளதளவென்ற எழிலழகு
தன்னிகரற்ற மன்மதனாம்" (இள)

என்று பாடி ஆடிக் கொண்டு வந்தாள்.

"நீ எந்த நாட்டுத் தூதுவன்? என்ன பாட்டு. என்ன ஆட்டம் கையிலே என்ன காணிக்கையோ?"

"ஆமாம் இளவரசி! தங்கள் பாதங்களிலே எப்போதும் வீழ்ந்து கிடக்கக்கூடிய அழகரசன் ஒருவரின் சித்திரத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இவர் வில்லில் விஜயர். அழகில் மன்மதர்... செல்வத்தில் குபேரன்..."

"போதும் வர்ணனை. படத்தைக் காட்டு."

தோழி திரைச் சீலையில் எழுதப்பட்ட வர்ணப் படத்தைக் காட்டினாள். அதில் அற்புதமான ஆணழகனின் சித்திரமொன்று வரையப்பட்டிருந்தது.

வீரமாதேவி அந்த ஓவியத்தைச் சற்று நேரம் கண்கொட்டாமல் பார்த்தாள். பிறகு அதைக் கொண்டு வந்தவளை நோக்கி இதுவரையில் நடத்தி வந்தது வேடிக்கை நாடகம் என்பதையும் மறந்து தோழி கோதையைப் பார்த்து ''அடி! இந்தச் சித்திரத்தில் இருப்பவர் யாரடி? இதை யார் எழுதியது?'' என்று பரபரப்புடன் கேட்டாள். வீரமாதேவியிடம் திடீரென இதற்கு முன் இல்லாத ஆவல் நிறைந்திருந்தது.

''தேவி! அதெல்லாம் நான் சொல்ல மாட்டேன். மாறனை நிகர்த்த வடிவழகன் மனத்துக்குப் பிடித்து விட்டாரா? தேனின் வாய்மொழி தேவியே! உம் இதயத் தூது செல்ல இதோ காத்திருக்கிறேன்!''

''கோதை! பாட்டு பிறகு இருக்கட்டும். இதென்ன கற்பனை வடிவமா? உண்மையிலே அரசகுமாரன் ஒருவனின் வடிவமா? இதை எழுதியவர் யார்?'' என்று வீரமாதேவி ஆவலுடன் கேட்டாள்.

அன்று நந்தவனத்திலே சுயம்வர நாடகம் நடைபெற்றது. ஒவ்வொரு நாட்டு அரசகுமாரர் போல் நடித்துப் பேசி அவர்களைக் கேலி செய்து அந்த இடத்தையே சிரிப்பாலும், குதூகலத்தாலும், பேச்சாலும் மூழ்கடித்துக் கொண்டிருந்தனர். அந்த நாடகத்தின் ஒவ்வோர் அம்சத்திலும் ஐம்பத்திரண்டு நாட்டு அரச குமாரர்களைப் பற்றியும் வர்ணித்த பிறகுதான் கோதை எனும் தோழி அந்த ஓவியத்தை எடுத்து வந்திருந்தவரைக் காட்டினாள். வீரமாதேவிக்கு அந்தச் சித்திரம் மனத்தைக் கவர்ந்தது. ஆனால் உடனே அதைப் புலப்படுத்த விரும்பாமல் ''கோதை! இதை யாரடி வரைந்தார்கள்?'' என்று கேட்டாள்.

வீரமாதேவியின் மனத்தைக் கோதை புரிந்து கொண்டாள். ''தேவி! எனக்கு இந்த ஓவியத்திலுள்ளவர் யார் என்று தெரியாது. ஆனால் இதைக் கொண்டு வந்தவரைத் தெரியும். மன்மதனைப் போல் அழகிற் சிறந்தவரைக் கண்டேன். இதை வாங்கி வந்தேன்'' என்றாள்.

உண்மையில் கோதைக்கு அந்தச் சித்திரத்திலுள்ள அரசகுமாரன் யார் என்று தெரியாது. குந்தள நாட்டினின்று இராமேச்வரம் யாத்திரை போவதற்காகப் பத்து பன்னிரண்டு பேர் அடங்கிய குழுவினர் வந்திருந்தனர். அவர்கள் ஒவ்வொரு



திருத்தலமாகத் தரிசித்துக் கொண்டே நந்திபுரம் நகரத்துக்கு வந்திருந்தனர். அருகிலுள்ள பழையாறையைக் காண விரும்பினர். அவர்களுள் ஒருவரிடம்தான் அந்தச் சித்திரம் இருந்தது. அவர்களிடமிருந்துதான் கோதை அந்தச் சித்திரத்தைப் பெற்றுவந்தாள்.

தங்கள் அரச குமாரியிடம் காட்டிவிட்டு வருவதாகக் கூறி அதைக் கோதை வாங்கி வந்தாள். கொடுக்கும்போதே அவர்களுள் ஒருவர் கூறினார், ''அந்தச் சித்திரத்திலுள்ளதை விட நேரே பார்க்கும்போது அவர் மிக அழகாக இருப்பார்'' என்று.

கோதை நகைத்தாள். ''எங்கள் அரசகுமாரிக்குச் சித்திரங்கள் என்றால் மிகவும் ஆசை. அதனால்தான் இதை வாங்கிப் போகிறேன். உடனே திரும்பவும் கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன். இந்தச் சித்திரம் ஒருவேளை எங்கள் அரசகுமாரிக்குப் பிடித்திருந்தால் எவ்வளவு விலை வேண்டுமானாலும் கொடுத்து வாங்கி விடுவோம்'' என்றாள்.

அவர்கள் சிரித்தனர். ''விலையா? அவ்வளவு எளிதில் விலை கொடுத்து வாங்க முடியாதே...'' என்றனர்.

''ஏன் அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? எங்கள் அரசகுமாரியைப் பற்றி உங்களுக்குத் தெரியாது. சோழநாட்டுச் செல்வத்தைப் பற்றியும் நீங்கள் கேள்விப்படவில்லை என்று தெரிகிறது. ஈழத்தை வென்றவர், பாண்டியன் சுரம் இறக்கியவர். குஞ்சரமல்லர், இராமபிரானைப் போன்று பலசாலி. கங்கர்களும், இராட்டிரகூடர்களும் அவர் அடி பணிந்து நிற்கிறார்கள்...''

''கடைசியாகக் கூறியதை மட்டும் நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம். இரட்டர்களாகிய நாங்கள் உங்கள் அடி பணியவில்லை. எங்கள் அரசமாதேவி இளங்கோ பிச்சியைச் சோழ மன்னர் ஆதித்தர் மணம் புரிந்து எங்கள் நாட்டுடன் சந்து செய்து கொண்டது உனக்குத் தெரியாதா?'' என்று அவர்கள் கூறவும் கோதை செய்வதறியாது திகைத்து ''அது எப்படியோ போகட்டும். எங்கள் நாட்டுச் செல்வம் இந்தச் சித்திரம் வாங்குவதற்கு இடம் தராது என்கிறீர்களா? இந்தச் சித்திரத்தையும் வாங்குவோம். இந்தச் சித்திரத்திலுள்ளவரையும் வாங்குவோம்'' என்றாள்.

''ஓகோ!அப்படியா?''

''இதில் உள்ளவர் யார் என்று கூறுங்கள். இங்கிருந்து ரதத்தை அனுப்பி அழைத்து வரச் சொல்கிறோம்...''

''முதலில் இந்த ஓவியத்தைக் கொண்டு போய் அரசகுமாரிக்குக் காண்பித்து வா... பிறகு சொல்கிறோம்'' என்றனர் அவர்கள்.

அந்த யாத்திரிகர் எண்ணம் நிறைவேறியது. சோழ நாட்டு அரசகுமாரியின் கவனத்துக்கு அந்தச் சித்திரத்தை எப்படியாவது கொண்டு வந்துவிட வேண்டுமென்று விரும்பினார். அதன்படி நிறைவேறியது. வீரமாதேவி அந்த யாத்திரிகரை வரவழைத்தாள். யாத்திரிகருடன் நரைத்த தலையும் தாடியும் மீசையுமாக குடுகுடு கிழவரொருவர் வந்தார்.

அவரை ஏற இறங்க ஒரு முறை பார்த்தாள் வீரமாதேவி. அவளுக்குச் சிரிப்புப் பொங்கியது. பருத்த உடலும், தடித்த உருவமும், குழி விழுந்த கண்ணும் கொண்ட அந்த யாத்திரிகரிடமா இத்தகைய அழகிய சித்திரம்? சிறிதுநேரம் பேசாமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள் வீரமாதேவி. கண்களிலே ஓர் அலட்சியம், உதட்டிலே கேலிச் சிரிப்பு மெல்லப் பொங்கியது.

''தேவி! என்னை அழைத்த காரணம் என்னவோ?'' என்று கைகட்டி வாய் புதைத்துக் கேட்டார் அந்த யாத்திரிகர்.

கோதை மறுமொழி புகன்றாள். ''தாங்கள் கொண்டு வந்த சித்திரத்தைப் பற்றி தங்களுக்குத் தெரிந்ததைக் கூறுங்கள்.''

வீரமாதேவியே இப்போது பேசினாள்: ''என் அருமைக் கோதை! அதி சௌந்தர்ய வடிவினரான ஆளைத்தான் அழைத்து வந்திருக்கிறாய். நல்லவேளை! இவர்தான் குந்தளநாட்டு அரசரென்று சொல்லாமல் போனாயே. பிரம்மதேவன் இவர் உருவத்தை இடக் கரத்தால் செய்திருப்பார் என நினைக்கிறேன்.''

எல்லாத் தோழிகளும் கலீரென நகைத்தனர். யாத்திரிகர் கேலிப்பேச்சைப் புரிந்து கொண்டாலும் அவர் வருத்தப்பட வில்லை. தானும் சேர்ந்து சிரித்து, 'ஆமாம் தாயே! என்னைக் கூட



ஒருநாட்டு அரசகுமாரி மணக்கிறேன் என்று ஆசைப்பட்டாள். நான் தான் மறுத்துவிட்டேன்'' என்றார். தோழிகளுக்கு இந்த நகைச்சுவை மிகவும் பிடித்திருந்தது.

அருகே இருந்த கிழவர் தள்ளாடும் குரலில் ''இவர் என்னவோ சொல்லப் போய்விட்டாரே. என்னைக் கூட ஐந்து தேசக் கட்டழகிகள் மாலையிடப் போட்டியிட்டனர். நான்தான் மறுத்து விட்டேன்'' என்றார்.

மீண்டும் அந்த நந்தவனமே அதிரும்படியான சிரிப்பொலி. வீரமாதேவிக்குக் கோபம் தாங்கவில்லை. அதட்டும் குரலில் ''போதும் சிரிப்பு. நான் கேட்ட கேள்விக்கு விடையைக் காணோம். இந்தச் சித்திரத்தைப் பற்றிக் கூறுகிறீர்களா அல்லது உங்கள் தலையை வெட்டி கோட்டை வாயிலில் கட்டச் சொல்லட்டுமா?'' என்று கர்ஜித்தாள்.

''அதைச் செய்துவிடுங்கள். நாங்கள் தலையில்லாமல் திரும்பி ஊருக்குப் போய் உங்களைப் பற்றி எங்கள் அரசரிடம் வர்ணிக்கிறோம். அவர் பயந்து போய் தலை வாங்கும் சிந்தாமணி வேண்டாமென்று வங்க நாட்டு அரசகுமாரியையே மணந்து கொள்வார். உத்தரவிடுங்கள் அரசகுமாரி!'' என்று பருத்த உடலுடன் கூடியவர் கூறினார். கோதை வீண் வார்த்தையை வளர்த்த விரும்பாமல் ''அதில்லை பெரியவர்களே! நீங்கள் கொண்டு வந்த ஓவியத்திலுள்ளவரைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததைக் கூறுங்கள். எங்கள் இளவரசிக்கு அந்த ஓவியத்திலுள்ளவரை மிகப் பிடித்து விட்டது.''

''உஷ்! கோதை! உனக்கு வாய் அதிகமாகி விட்டது'' என்று பொய்க்கோபம் கொண்டாள் வீரமாதேவி.

''பிடித்துவிட்டதா? மிகமிகப் பிடித்துவிட்டதா? அப்படி என்றால் திருமணம் நடந்தது போல்தான்!'' என்றார் யாத்ரிகர்.

''நான் சொன்னால் சொன்னதுதான். உங்களைப் போன்ற அழகிய அரசகுமாரியை அடைய எங்கள் நாட்டவர் முன் பிறவியில் தவம் செய்திருக்க வேண்டும். ஆனால் தலைவெட்டித் தண்டனை மட்டும் எங்கள் நாட்டில் யாருக்கும் கொடுத்து விடாதீர்கள்'' என்றார் நரைமுடி முதியவர்.

அப்போது இவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டவாறு பராந்தக சோழரும், பழுவேட்டரையரும் வந்தனர். கலகல வென்றிருந்த அந்த இடத்தில் சட்டென அமைதி நிலவியது. பராந்தகரின் கம்பீரத் தோற்றத்தினின்று யாத்ரிகரும், முதியவரும் மரியாதை தெரிவித்து ஒதுங்கி நின்றனர்.

''நீங்கள் யார்? நந்தவனத்தில் உங்களுக்கு என்ன வேலை'' என்று பராந்தகர் அதட்டினார்.

''உங்கள் மகள்தான் இங்கே சிறு ராஜ்ய பாரமே நடத்துகிறாளே அவள் ஆக்ஞையின் மேல் வந்திருப்பர். ஒற்றர்களாயிருப்பர்'' என்றார் பழுவேட்டரையர். வீரமாதேவி சினத்துடன் பழுவேட்டரையர் பக்கம் திரும்பி, ''பாட்டா! நீங்கள் சற்றுச் சும்மாயிருங்கள். இவர்களை நான்தான் வரவழைத்தேன்'' என்றாள்.

அதற்குள் முதியவர் அரசரை நோக்கி ''நாங்கள் இராட்டிரகூட நாட்டைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொரு திருத்தலமாகத் தரிசித்துச் செல்கிறோம். சிதம்பரத்துக்கு வந்திருந்தோம். ஆகா! அந்தக் கோயில் விமானங்கள் சூரிய வெளிச்சத்தில் எப்படி ஜ்வலிக்கின்றன! உங்கள் புகழை அவை பாடுகின்றன. அதற்குப்பிறகு சமுத்திரத்தையல்லவா உள்நாட்டில் நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். அந்த ஏரிக் கரையில் நின்று இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருக்கிறது''. என்று கிழவர் போல் நடுங்கும் குரலில் கூறினார்.

அவருடைய புகழ்ச்சி கேட்டு பராந்தகர் உள்ளம் மகிழ்ந்தார். பழுவேட்டரையருக்கு அந்தப் புகழ்ச்சி பிடிக்கவில்லை.





## 4

மான்யகேட நகரினின்று வந்த யாத்ரிகர்களுக்குப் புண்யத் தலங்களைக் காண்பது நோக்கமன்று. அவர்கள் யாத்ரிகர்களும் அல்லர். சோழநாட்டு இளவரசி வீரமாதேவியின் வனப்பு இராட்டிரகூட நாட்டிலும் பரவியிருந்தது. அப்போதுதான் பட்டமேறியிருந்த கோவிந்த தேவனுடைய செவிகளிலும் அந்தச் செய்தி விழுந்தது. அதைக் கூறியவன் இராமபட்டன்தான். இராமபட்டன் கோவிந்தனின் அந்தரங்க ஆள். அவனது தோற்றம் அருவருப்பு மிகுந்ததாக இருந்தாலும் சாமர்த்தியமாகக் காரியத்தை முடிப்பதில் கெட்டிக்காரன். கோவிந்தன் மனம் மகிழ்விக்க ஆடல்பாடல் அழகிகளை அழைத்து வருவதில் நிபுணன். ஊர் சுற்றி வரச் சொல்லும்போதோ, உலவச் செல்லும்போதோ கோவிந்தன் கண்களில் வடிவான பெண் யாராவது பட்டுவிட்டால் போதும். இராமபட்டன் அதை முடித்துத் தருவதற்குத் தயங்கமாட்டான். மேற்கே காபூல் வரை ஆட்களை அனுப்பி உயர்ந்தவகைக் கனிரசம் கொண்டுவரச் செய்து கோவிந்தன் உள்ளம் மகிழ்விக்கக் கொடுப்பான். இதற்கு அரசாங்க ஆட்கள், பணம், பலம், எல்லாம் பயன்பட்டன.

மங்கையருடன் இன்ப லீலைகள் புரிவதற்குப் பொறுப்பாளி கோவிந்தனோ இராமபட்டனோ மட்டுமல்லர். கோவிந்தனுடைய அழகிய தோற்றம்தான் மிகமிகப் பொறுப்பு. எலுமிச்சை நிற மேனியன் என்று சொல்லலாமா? உருக்கிய தங்கநிற மேனியன் என்று சொல்லலாமா? காமம் சிந்தும் விழிகள். சிவந்த உதடு. நீண்ட நாசி. உயர்ந்த நெற்றி. அழகிய பெண்களை வர்ணிப்பதற்கேற்ற வர்ணனைகள் அனைத்தையும் கோவிந்தனின் இனிய தோற்றத்துக்கும் கூறலாம். ஒரு சமயம் பார்க்கும்போது பெண்ணின் வடிவினனாகத் தோன்றுவான். மற்றொரு சமயம் பார்க்கும்போது வீரம் நிறைந்த பெண்மையின் சாயல் கொண்ட ஆணழகனாகக் காட்சியளிப்பான். ஒருமுறை காண்போர் அவனை மற்றொரு முறை ஏறெடுத்துப் பாராமல் செல்ல மாட்டார்கள். அந்தப்புரத்திலே கோவிந்தன் வரும்போது ஒரு பரபரப்பு ஏற்படும். பாங்கிகளின் உடலில்கூட ஒரு சிலிர்ப்பு நேரும். அவர்களும் பெண்கள்தாமே!

பாட்டும் கூத்தும் நடுஇரவு வரை நடக்கும். அந்த மண்டபத்திற்கு யாரும் வர அனுமதியில்லை. மது மயக்கத்திலே தன்னை மறந்து கிடக்கும் ஆரணங்குகளும், காமபோதையால் இன்னது பேசுகிறோமென்று தெரியாது பிதற்றும் பொற் கொடிகளுமாக மண்டபம் கேளிக்கைக் கூடமாக இருக்கும். அழகிகளின் நடுவே கோவிந்தன் மன்மதன்போல் விளங்குவான். விதவிதமான ஒளிவிளக்குகள் அவனுடைய வைர வைடூரிய ஆபரணங்களின் மீது பட்டுப் பளபளக்கும். அவனது மஞ்சள் மேனியின் அழகை ஆரத் தழுவுவது போன்று அங்கு வீழ்ந்து கிடக்கும் அணங்குகள் நெருங்குவர். கோவிந்தன் அவர்களுள் ஒருத்தியை அழைத்துக் கொண்டு சென்று விடுவான். பொழுது புலர்ந்து வெகுநேரம் கழித்துத்தான் அந்தக் கேளிக்கை மண்டபத்தில் உள்ளவர்களுக்கு விழிப்பே ஏற்படும்.

கோவிந்தனுடைய இந்தப் போக்கை அனைவரும் அறிவர். கண்டித்துக் கூற எவருக்கும் துணிவில்லை. முதல் அமைச்சருக்கும் கூட கோவிந்தனின் சொந்த விஷயத்தில் தலையிடத் துணிவில்லை. கோவிந்தனின் வளர்ப்புத் தாயிடம் சிலர் முறையிட்டனர். வளர்ப்புத் தாயின் பேச்சுக்குக் கோவிந்தன் செவிசாய்ப்பான். கோவிந்தனுடைய வளர்ப்புத்தாய் ''என் மகன் குணக்கேடனாக அமைய அவன் அழகுதான் காரணம். இயற்கையை எப்படி வெல்ல முடியும்?'' என்று எண்ணி வருந்துவாள்.

என்றாலும், தன் மகன் மன்னனாக முடி சூடிக் கொண்ட பிறகு கேளிக்கைகளில் மூழ்கிக் கிடப்பதைத் தடுக்கவே விரும்பினாள். அவனுடன் சரி சமமாக அரியணையில் அமரவும் வாழ்க்கை நடத்தவும் மங்கை நல்லாள் ஒருத்தியை திருமணம் செய்து வைத்துவிட்டால் மகன் குணம் மாறும் என எண்ணினாள். கோவிந்தனுடன் சரிசமமாக அரியணையிலமரத் தகுந்த அரசகுமாரியைச் சீக்கிரம் மணம் முடிக்கவே பெரியவர்களும் விரும்பினர். இராமபட்டன் இதைக் கோவிந்தனிடம் கூறியபோது கோவிந்தன் முகம் மாறியது. என் பெரிய தேசத்து ராஜகுமாரி என்று எந்தக் குரூபியையாவது கொண்டு சேர்த்து விடுவார்கள். போதாத காலம்'' என்று கோவிந்தன் வேதனைப்பட்டான்.



இராமபட்டன் சொன்னான்: ''கவலைப்படாதீர்கள் அரசே! இன்றே நான் பல நாடுகளைச் சுற்றுவேன். அழகில் சிறந்த அரசகுமாரி இருக்குமிடம் அறிந்து வருவேன். பிறகு உங்கள் ஆசைப்படி எல்லாம் நடக்கும்.''

அதன்படி இராமபட்டன் பல நாடுகளுக்குச் செல்வதாகக் கூறிவிட்டு வெளியூர் ஒன்றிற்குச் சென்று நிம்மதியாகச் சில நாள்களைக் கழித்தான். அவனுக்குச் சோழ அரசகுமாரியைப் பற்றித் தெரியும். சோழ நாட்டு வளப்பமும் அவனறிவான். இன்னும் பல காரணங்களுக்காக சோழ நாட்டு அரசகுமாரியைக் கோவிந்தனுக்கு முடித்துவிட வேண்டும் என்று துடித்தான்.

பல நாடுகளைச் சுற்றி அலைந்து களைப்பாக வருபவன் போல் ஒருநாள் இராமபட்டன் மன்னன் கோவிந்தனிடம் வந்து சேர்ந்தான்.

கோவிந்தன் ஆவல் மிகுதியால் கேட்டான். ''என்ன உமது திக்விஜயத்தால் பலன் ஏற்பட்டதா?''

''அவ்வளவு எளிதன்று. என்றாலும் கடலில் குளித்து முத்தை எடுத்து விட்டேன்!''

''முத்தா?''

''ஆமாம் ஆணிமுத்து. அதன் ஒளி மிகப் பிரமாதம்.''

''எங்கே இருக்கிறது?''

''சொல்கிறேன். அவசரப்பட்டால் முடியுமா? அந்த முத்து உங்கள் மார்பைத்தான் தழுவ வேண்டும். அந்த முத்தை நீங்கள்தான் அணியவேண்டும்.''

''இராமா! சுற்றி வளர்த்தாமல் சட்டென்று கூறு. எங்கே போனாய்? எந்த நாட்டு அரசகுமாரி?'' என்று பரபரப்புடன் கேட்டான் கோவிந்தன்.

இராமபட்டன் தான் போகாத கதையைப் போனதாகக் காதும் மூக்கும் வைத்துப் பிரயாண சங்கடங்களைப் பெரிதும் வளர்த்துக் கூறி சோழ நாட்டில் மிக அழகிய அரசகுமாரி ஒருத்தியைத் தான் கண்டதைத் தெரிவித்தான்.

''அப்படியென்றால் இன்றே புறப்பட்டுப் போய் அந்த அழகியை நான் பார்க்க வேண்டும்.''

''இன்றா?''

''ஆம்; இப்போதே''

''நாட்டை விட்டு நாடு செல்வது அவ்வளவு எளிதன்று அரசே! நீங்கள் அவசரப்பட்டு முடிவு செய்யாதீர்கள். இங்கிருந்து தூதர்களை அனுப்புவோம். சோழ மன்னர் பராந்தகரைப் பெண் கேட்போம். உங்களுக்குச் செய்தி தெரியுமா? உங்கள் பாட்டியார் சோழநாட்டு அரசியாக விளங்கியவர் என்பது உங்களுக்குத் தெரியுமா? அதனால் உங்கள் தூதரைப் பராந்தகர் மிகவும் உயர்ந்த முறையில் வரவேற்பார். செய்தி அறிந்து மகிழ்வார். மணநாள் குறிக்கப்படும். பெண் பார்க்குமாறு அழைப்பு வரும். பிறகு நாம் மிகவும் ஆடம்பர முறையில் செல்வோம்.''

''முடியாது. உடனே தான் புறப்பட வேண்டும். சோழநாடு எனக்கு அயல்நாடன்று. என் பாட்டியின் முறையைக் கொண்டே நான் செல்வேன். மன்னர் என்ற முறையில் செல்ல வேண்டாம். பராந்தக மன்னரின் உறவினர் என்ற முறையில் செல்வோம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்'' என்று கண்டிப்பாக உத்தரவிட்டான் கோவிந்தன்.

முதல் அமைச்சருக்கு இச் செய்தி தெரிந்தது. படையின் துணையில்லாமல் செல்வது அவ்வளவு நல்லதன்று என அமைச்சர் கூறினார். படையுடன் சென்றால் பராந்தகருக்குச் சந்தேகம் வளரலாம் என்றும் தம் மற்றோர் ஐயப்பாட்டைத் தெரிவித்தார் மற்றோர் அமைச்சர்.

''மாறு வேடத்தில் செல்கிறேன். என்னுடன் பத்து பேர் வந்தால் போதும். தேசாந்திரிகள்போல் போகலாம்'' என்றான் கோவிந்தன். அதன்படியே கோவிந்தனும், இராமபட்டனும் மற்றும் பத்து போர்வீரர்களும் மாறுவேடமணிந்து சோழ நாடு நோக்கிப் புறப்பட்டனர். கோவிந்தன் முதியவரைப் போன்று உரு மாறியவுடன் அவனை அடையாளம் காண எவராலும் முடியவில்லை.

பிறகு பழையாறையில் வீரமாதேவியை கண்டு நரைமுடியினர் வடிவில் பேசியபோது திடீரென அந்த இடத்தக்குப் பராந்தகர்



வந்துவிடவே மேலும் அங்கே அதிகம் தங்க விரும்பவில்லை கோவிந்தன்.

ஆனால் மெல்ல அந்த இடத்திலிருந்து செல்ல முற்பட்ட நரை முடியினரையும், இராமபட்டரையும் கண்ட பராந்தகர் தடுத்து நிறுத்தினார்.

⁂

## 5

முதலில் பராந்தகர் சற்று அதிகாரத்துடனேயே அவர்களைப் பார்த்துக் கேட்டார்.

''இங்கே பெண்களைத் தவிர மற்ற எவரும் வரக்கூடாது என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று பராந்தகர் கேட்டவுடன் இராமபட்டர் நடுநடுங்கிப் போனார். பராந்தக சோழரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாரேயன்றி இராமபட்டர் பார்த்ததில்லை. கண்டவர்கள் நடுநடுங்கும் கம்பீரத்தோற்றம் போர்க்களங்களிலே பட்ட புண்களால் ஏற்பட்ட வடு நிறைந்த முகம். அந்த முகத்திலே உள்ள கருணை சிறிதளவையும் போக்கும் பயங்கர மீசை. ஒளிவீசும் மகுடம். முதிய வயதினராயினும் தளர்ச்சி குன்றா உடற்கட்டு.

முதியவர் உருவில் திகழ்ந்த கோவிந்தன் மட்டும் பராந்தகருக்கு அஞ்சவில்லை.

''சோழநாட்டில் இத்தகைய விசித்திரச்சட்டம் இருக்குமென்று எங்களுக்குத் தெரியாது'' என்றார் முதியவர் நடுங்கும் குரலில்.

ஆனால் பராந்தகரின் கழுகுக்கண்கள் அவனையே உற்று நோக்கின.

''தேசந்தோறும் விஜயம் செய்பவர்கள் அந்தந்த நாட்டு வழக்கங்களைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். தெரிந்து கொள்ளாவிடில் அதனால் வரும் பலன்களை அனுபவிக்க வேண்டும்...'' பராந்தகர் மெல்லத்தான் பேசினார்.

வியப்பாகத்தான் இருந்தது. ஆனால் அவர் கண்கள் எதையோ துழாவின.

''பலன்களை அனுபவிக்கச் சித்தமாயிருக்கிறோம். நாங்கள் கொண்டு வந்து கொடுத்த சித்திரத்தைக் கொடுத்து விடுங்கள். நாங்கள் போய்விடுகிறோம்...'' என்ற முதியவரின் குரல் கேட்டுக் கடகடவென்று சிரித்த பராந்தகர் ''சித்திரமா? ஏது... எதற்காகக் கொண்டு வந்தீர்கள்?'' என்றார்.

''எங்கள் நாட்டு அரசரின் படம். இளவரசியின் தோழி கேட்டு வாங்கி வந்தான்...''

''எந்த நாட்டு அரசர்?''

''வடக்கே மிகவும் பலம் பொருந்திய குந்தளநாட்டினின்று வருகிறோம். இதோ இவன் இராமபட்டன். அரசரின் அந்தரங்க மானவர்...''

''ஓகோ! குந்தளநாடு... இராட்டிரகூடர்கள் நாடா? இப்போது அங்கே ஆட்சி முறை எப்படி இருக்கிறது?'' என்று கேட்ட பராந்தகர் சட்டெனப் பேச்சை மாற்றி ''உங்கள் அரசர் படம் எழுதிப் பார்க்குமளவுக்கு அவ்வளவு அழகரா?'' என்றார்.

இப்போது இராமபட்டருக்குச் சற்று துணிவு பிறந்து விட்டது. ''அந்தப் படம் அழகாயில்லாவிடில் உங்கள் குமாரத்தி எங்களை வரவழைத்திருப்பார்களா? எங்களை ஆயிரம் கேள்விகள் கேட்டிருப்பார்களா?'' என்றார்.

பராந்தகர் எதிரே இதுபோல் துணிவுடன் பேசியவர்கள் எவருமிலர். எதிரே நிற்கவே அஞ்சுவர். இராட்டிரகூட நாட்டினின்று வந்த இவர்களுக்கு இவ்வளவு துணிவென்றால் அந்த நாட்டு அரசருக்கு எவ்வளவு துணிவிருக்கும்?... பராந்தகர் மெல்ல நகைத்துக் கொண்டார்.

''ஆமாம்... உங்கள் அரசர் சித்திரத்தை எடுத்துக் கொண்டு பட்டுத் துணி விற்பதுபோல நாடுநாடாகச் சுற்றுகிறீர்களே, உங்கள் அரசருக்கு யாரும் பெண் கொடுக்க மாட்டேன் என்கிறார்களா?'' என்றார் சோழ மன்னர். அவருக்கு நகைச்சுவை உணர்ச்சியே அன்று மேலோங்கியிருந்தது.



''அரசன் என்று சொல்லாதீர்கள்... மாமன்னர் என்று சொல்லுங்கள்... மாமன்னரின் அழகுக்காகவே எத்தனையோ நாட்டு இளவரசிகள் மணக்கச் சித்தமாயிருக்கிறார்கள்... ஆனால் சோழ இளவரசரின் அழகுக்கு அவர்கள் இணையாக மாட்டார்கள். சுயம்வரமா நடத்த முடியும்? அதனாலே எங்கள் அரசரின் திரு உருவத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டோம்'' என்று இராமபட்டர் தைரியமாகவே பேசினார்.

பராந்தகர் 'ஹோஹோ' என்று நகைத்தார். ''திருமணத் திக்விஜயத்துக்குப் புறப்பட்டு விட்டீர்களா? உங்கள் மன்னர் வயதில் சிறியவர். அதனால்தான் இந்தச் சித்திரத்தைக் கொடுத்தனுப்பியிருக்கிறார். பெண் கேட்க வேண்டுமென்றால் அதற்கு முறையிருக்கிறதே. இப்படி அந்தப்புரத்தில் வந்து மணப்பெண்ணிடமே 'பெண் பேசுவது' சரியன்று என்று உங்கள் மன்னரிடம் சொல்லுங்கள்...'' என்றார்.

''நாங்கள் பெண் கேட்கவில்லையே... சோழ நாட்டு இளவரசியன்றோ எங்கள் அரசரின் அழகில் மயங்கிவிட்டாள்! தலைக்கனம் பிடித்த இளவரசி என்று திக்கெட்டும் கூறுகிறது; அழகுக்குத் தலை வணங்கி விட்டாள் என்றால்...'' இராமபட்டர் உற்சாகமாகப் பேசிக் கொண்டே போனார்; கிழவர் வடிவிலிருந்த கோவிந்தன் அவர் காலை மிதித்து 'நாங்கள் வேண்டுமானால் எங்கள் மன்னரிடம் சென்று சோழ நாட்டு இளவரசி சித்திரத்தைப் பார்த்தவுடன் மயங்கிவிட்டாள். உங்கள் மீது பிரியம் ஏற்பட்டது. ஆனால் அவள் தந்தை மிகவும் கோபிக்கிறார்' என்று சொல்லி விடுகிறோம்'' என்றதும் பராந்தகர் தொண்டையைக் கனைத்து ''அதெல்லாம் ஒன்றுமில்லை... பலகாத தூரம் கடந்து வந்த உங்களை இப்படி நிற்க வைத்ததே நியாயமன்று. உங்களைத் திரும்பவும் நாடு திரும்பி மன்னரிடம் வருத்தப்படவிடுவோமா? உங்கள் அரசர் அந்நியரா? என் தாய் உங்கள் நாட்டு இளவரசிதானே? உங்கள் நாட்டின்மீது எனக்கு என்றும் மதிப்பு உண்டு. இப்படித் தோட்டத்தில் நின்று பேசிக் கொண்டிருக்க வேண்டாம். மாளிகைக்கு வாருங்கள்; உங்கள் மன்னருக்கு ஓலை எழுதித் தருகிறேன். எடுத்துச் சென்று கொடுங்கள்...'' என்று கூறி பராந்தகர் மறுமொழிக்குக் காத்திராமலே புறப்பட்டு விட்டார்.

இராமபட்டரும் கோவிந்தனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். தாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு விரைந்தனர்.

***

பராந்தகரின் கட்டளைப்படி தக்க மரியாதைகளுடன் இராம பட்டரையும் அவருடன் வந்தவர்களையும் மாளிகைக்கு அழைத்துச் சென்றனர் சோழநாட்டுப் பணியாட்கள். முதியவர் வடிவிலிருந்த கோவிந்தன் மட்டும் வராமல் விடுதியிலேயே இருந்துவிட்டான்.

தங்களை எதிர்கொண்டழைக்க மன்னரே வருவார் என்று இராமபட்டர் எதிர்பார்க்கவில்லை. பராந்தகரும் முதியவர் எங்கே என்று மறக்காமல் கேட்டார்.

''உங்களுடன் வந்த பெரியவரை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. தும்பைப் பூவைப்போன்ற முடி. பேச்சிலே உள்ள நடுக்கம் நடையில் இல்லை. மான்யகேடநகரம் எங்கே? பழையாறை எங்கே! இவ்வளவு தூரம் எப்படி வந்தார்? அவருக்கு நாட்டு வளப்பம் நன்றாகத் தெரியுமல்லவா? அவரிடம் நான்சில வற்றைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்'' என்றார்.

இராமபட்டர் திருதிருவென்று விழித்தார். அவர் என்ன சொல்வார்? முதியவர்தான் மன்னர் கோவிந்தன் என்பதை எப்படிச் சொல்லுவார்? இராமபட்டர் திருதிருவென விழிப்பதை ஓரக் கண்ணால் கவனிக்கத் தவறவில்லை பராந்தகர்.

திடீரென அவர் இராமபட்டரை நோக்கிக் கடுமையான குரலில் ''உங்கள் மேல் எனக்கு முதலிலிருந்தே சந்தேகம். நீங்கள் ஒற்றர்கள். உங்களுக்கு உரிய இடம் இந்த மாளிகையன்று. பாதாளச் சிறைதான். ஒற்றர்களுக்கு எங்கள் நாட்டில் என்ன தண்டனை தெரியுமா? யானையின் காலால் இடறச் செய்வதுதான். டேய் யாரங்கே? இவர்களை இழுத்துப் போங்கள். வேடம் போட்டாலும் சரிவரப் போட வேண்டும். தெரியாவிடில் எங்கள் நாட்டு ஒற்றர் படைகளிடம் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் இராட்டிரகூட நாட்டு ஒற்றர்கள் என்பதை நான் முன்பே தெரிந்து கொண்டுவிட்டேன். எங்கே அந்தப் போலிக் கிழவர்? அவரையும் இழுத்து வாருங்கள்...'' என்று கர்ஜித்தார்.

இராமபட்டர் நடுநடுங்கிவிட்டார். தங்கள் மன்னரைச் சிறை பிடித்து விடுவார்களோ என்ற பயத்தில் அவருடன் அருகே இருந்தவர்களுள் ஒருவர் ''சோழ சக்கரவர்த்திகளே! அவர் ஒற்றர் அல்லர். எங்கள் நாட்டு அரசர்தான் அப்படி கிழவர் வடிவத்தில்



இருக்கிறார். அவரை அவமானப்படும்படியாக எதும் செய்து விடாதீர்கள்'' என்றான்.

பராந்தகர் திடுக்கிட்டார். 'இராட்டிரகூட நாட்டு அரசர். கிழவர் வேடத்திலா? அவர் தோற்றத்தைக் கண்டுதானே வீரமாதேவி மயங்கி விட்டாள்?'- பராந்தகருக்கு ஒரு நொடி எதும் புரியவில்லை. பிறகு தனக்குத் தெரியாமல் நடந்து விட்டது என்பதைப் புலப்படுத்திக் கொள்ளாமல் கோபத்தை மாற்றிக் கடகடவென நகைத்து ''அப்படிச் சொல்லுங்கள். உங்கள் வாயாலேயே வரவழைக்க விரும்பினேன். வெற்றி பெற்றேன். எங்கே உங்கள் அரசர்? என்ன காரியம் செய்தீர்கள்? உங்கள் அரசரைத் தக்க முறையில் வரவேற்கவிடாமல் இப்படி மாறுவேடம் பூண்டு வருமாறு நீங்கள் யோசனை கூறியது சரியா? ஒரு கணம் தவறியிருந்தால் உங்கள் அரசரையும் சிறையில் தள்ளியிருப்போம். சோழ நாட்டிற்கும் இராட்டிரகூட நாட்டிற்கும் பகை ஏற்படக் காரணமாயிருந்திருப்பீர்கள் போல இருக்கிறதே...'' என்று பராந்தகர் கூறினார்.

இராமபட்டருக்குச் சற்றுத் தைரியம் பிறந்தது.

''அதெல்லாம் நடக்காது அரசே! எங்கள் மன்னர் விரும்பித்தான் இந்த மாறு வேடத்தில் வந்தார். அப்படி வந்திராவிடில் உங்கள் மகளின் அழகை நேரே பார்த்து அவரால் ரசித்திருக்க முடியுமா?'' என்றார்.

பராந்தகருக்குச் சீற்றம் பொங்கியது. எனினும் அதை அடக்கிக் கொண்டு ''அடடா... இன்னுமா இராட்டிரகூட மாமன்னரை மாறு வேடத்திலேயே இருக்க விடுவது? தக்க மரியாதையுடன் அழைத்துவர ஏற்பாடு செய்கிறேன்'' என்றார்.

அவர் விருப்பப்படியே கோவிந்தன் தங்கியிருந்த இடம் நோக்கி மங்கள வாத்தியங்களுடன் அரசாங்க உயர்நிலை அதிகாரிகள் சென்றனர். பட்டத்து யானை சென்றது. விருதுக் கொடிகளுடனும், மேள வாத்யத்துடனும் வரவேற்கப் பெருங்கூட்டமே சென்றது.

''வருக வருக இரட்டர் நாட்டு மன்னரே, வருக வருக! குந்தளநாட்டுத் தலைவரே, வருக வருக! பராந்தக மாமன்னரைப் பெற்றெடுத்த தாயின் பிறந்த நாட்டு அரசரே, வருக வருக!'' என்ற வரவேற்பு கோஷம் வானைப் பிளந்தது.

## 6

**வீரமாதேவிக்கு** அன்று எதிலும் கவனம் செல்லவில்லை. எந்தத் தோழியையும் அருகே நெருங்க வேண்டாம் என்று கூறிவிட்டாள். அவள் மனம் இதுவரை காணாத வேதனையை அடைந்தது. 'தந்தை என்றுமே சுடுசொல் கூறாதவர் இன்று கூறிவிட்டார். அதையும் வேற்று நாட்டினின்று வந்தவர்கள் எதிரே கோபங் கொண்டு விட்டார். நந்தவனத்தில் அப்படி கூத்தடிப்பது அவருக்குப் பிடிக்கவில்லையாம். நாம் என்ன அப்படிச் செய்து விட்டோம்? வேடிக்கையாக நாடகமாடினோம். அந்த வேடிக்கையால்தானே அந்த ஓவியத்தைக் காண நேர்ந்தது. ஆகா; என்ன சுந்தரவடிவம்! ஓவியனின் கற்பனையாக ஒருவேளை இருக்கலாம். கற்பனையிலே சிறந்த வடிவத்துடன் கூடிய மன்மத வடிவத்தவர் ஒருவர் இருக்கிறார் என்று யாத்ரிகர்கள் கூறுகிறார்களே. விவரம் முழுமையும் அறியும் முன்னர் தந்தை இடையிலே புகுந்து குழப்பி விட்டாரே! அவர் என்ன செய்வார், பாவம்! பழுவேட்டரையரின் சொல் அவருக்கு இதுபோன்ற கோபத்தை அளிக்கிறது' என்று எண்ணியவளாய் வீரமாதேவி மஞ்சத்தில் சாய்ந்து கொண்டிருந்தாள். துடிக்கும் உதடுகள் இதய வேதனையைப் பிரதிபலித்தன.

நந்தவனத்தில் அயல்நாட்டவர்களுடன் விவாதித்துக் கொண்டிருந்தது பழுவேட்டரையருக்குப் பிடிக்கவில்லைதான். தன் மகளைப் போகச் சொன்ன பராந்தகர் குரலில் கோபம் இருந்தது உண்மைதான். ஆனால் ஒரு வார்த்தை கூட சுடுசொல் வரவில்லையே! அதுவே வீரமாதேவிக்குப் பொறுக்கவில்லை. தன் தோழியை அழைத்து அந்த யாத்ரிகர்கள் தங்கியிருக்குமிடம் சென்று விவரம் கேட்டு வருமாறு அனுப்பினாள். ஆனால் அவள் சென்று பார்த்தபோது அந்த இடத்தில் முதல் நாள் இரவில் இருந்த அந்த முதியவரோ கறுப்பாகவும் குட்டையாகவும் இருந்த அவருடன் வந்தவரோ காணப்படவில்லை. அருகேயிருந்தவர்களைக் கேட்டதில் அவர்கள் முதல்நாள் இரவே புறப்பட்டுப் போய்விட்டனர் என்று கூறினர். வீரமாதேவி இதைக் கேட்டதும் வேதனையடைந்தாள். வேதனையும், சீற்றமும் சேர, யாரையும் பார்க்கவும் பேசவும் அவளுக்குப் பிடிக்கவில்லை. இராசாதித்தன்



அப்போது அங்கே வந்தான். அவனுடன் வெள்ளங்குமரனும் வந்தான். வெள்ளங்குமரன் இதுவரை வீரமாதேவியைக் கண்டதில்லை. வீரமாதேவியின் வனப்பும், வாளிப்பான தோற்றமும் அவனைக் கவர்ந்தன. அவனால் அவளைப் பார்க்க முடியவில்லை. பார்க்காமல் இருக்கவும் முடியவில்லை.

''இப்பொழுது நான் யாரையும் பார்க்க விரும்பவில்லை'' என்று வீரமாதேவி கோபக் குரலில் கூவினாள் திரும்பிப் பாராமல். பிறகு திரும்பிப் பார்த்தவள் தன் சகோதரனுடன் மற்றொரு கட்டிளங் காளையும் நிற்பதைக் கண்டாள். அவளுடைய கோபம் குறைந்தது. ஒரு முறை திரும்பிக் கொடுமை நிறைந்த விழிகளுடன் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டாள்.

இராசாதித்தன் இதழ்க் கடையில் புன்னகை புரண்டது. ''குமரா! இவள்தான் என் சகோதரி இளவரசி வீரமாதேவி. என் தந்தைக்கு இவள் மேல் உயிர். இப்படி முகத்தைத் திருப்பிக் கொள்கிறாளே என நினைக்காதே இன்று என்னவோ இவளுக்குக் கோபம்!'' என்று இராசாதித்தன் கூறினான்.

''ஆமாம் ஆமாம். உயிர்; உங்களிடம்தான் சொன்னார். உயிராயிருப்பவர் பழுவேட்டரையர் பேச்சைக் கேட்டுக் கொண்டு என்னைக் கோபித்தாராக்கும்?''

''உன்னையா கோபித்தார்? பழுவேட்டரையர் பேச்சைக் கேட்டா? பழுவேட்டரையர் தவறாக ஒன்றும் சொல்லியிருக்க மாட்டாரே!''

''ஆமாம் ஆமாம்; நீங்கள் எப்போதும் பழுவேட்டரையருக்குப் பரிந்து பேசுவீர்கள். இல்லாவிட்டால் அவர் தன் மகளை உனக்கு மணம் முடித்துக் கொடுக்க மாட்டாரே!'' என்று வீரமாதேவி சிணுங்கினாள்.

இராசாதித்தன் 'ஹோஹோ' என்று நகைத்தான். ''வீரமாதேவி! ரொம்பவும் சாமர்த்தியமாகப் பேசுகிறாயே. அதுசரி, பழுவேட்டரையர் என்ன சொல்லிக் கொடுத்து விட்டார்? தன் மகனை உனக்கு மணம் புரிவிக்க மாட்டேன் என்று உன் தந்தையிடம் சொல்லி விட்டாரா?''

''ஆமாம்; ஆமாம். அவர் தன் மகனை எனக்குக் கல்யாணம் செய்து கொடுக்க மாட்டேன் என்று கூறிவிட்டார். நான் இவ்வளவு நாள் பழுவூர் அரசகுமாரனை எண்ணித்தானே வாடிக் கொண்டிருந்தேன். ஆந்தை விழியும் முரட்டு மீசையும் கொண்ட மன்மதன் எனக்குக் கிடைக்கவில்லையே என ஏங்கினேன் இல்லையா? எப்போதிருந்து அண்ணா இவ்வளவு புத்திசாலித்தனமாகப் பேசக் கற்றுக் கொண்டுவிட்டீர்கள்?''

''பழுவூர் அரசகுமாரன் மீதுதான் உனக்கு ஆசை இல்லை. பாண்டிய குமாரனிடமுமா? தோற்றுப்போன அந்தப் பாண்டிய மன்னன் தன் வீர மகனைக் கொடுத்து அடிபணியச் சித்தமாயிருக்கிறான்..''

''கோழைகளையும், பயந்தாங் கொள்ளிகளையும் மணந்து கொள்ள வீரமாதேவி இனி மறு பிறப்பெடுக்க வேண்டும். ஏனண்ணா என் வாயைக் கிளறுகிறீர்கள்? கருணைகூர்ந்து என்னைச் சும்மா விட்டுவிட்டுப் போய் விடுங்கள். என் மனமே சரியாயில்லை'' என்று கூறி வீரமாதேவி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

இராசாதித்தன் வெள்ளங்குமரன் பக்கம் திரும்பி ''வா, குமரா! போகலாம். என் தங்கையின் மனசு சரியில்லையாம். சரியாயிருக்கும் நாளில் அவளுடைய பொல்லாத மனசு எல்லாரையும் கொல்லும். அரண்மனைச் சோதிடரைக் கேட்டுக் கொண்டு வந்து அவள் மனமும் குணமும் நன்றாயிருக்கும் சமயமாக வந்து சந்திப்போம்'' என்று கூறிப் புறப்பட எத்தனித்தான்.

குமரனுக்கு இராசாதித்தனுடைய பேச்சினால் ஏற்பட்ட சிரிப்பு தாங்கவில்லை. அவன் சிரிப்பொலி கேட்டு வீரமாதேவி சட்டெனத் திரும்பிப் பார்த்தாள். அந்தப் பார்வையில் அவமதிப்பு மிகுந்திருந்தாலும் குமரனின் விழியில் தேங்கியிருந்த கனிவுடன் அவற்றால் போட்டியிட இயலவில்லை.

இராசாதித்தன் குமரனுடன் பேசியவாறு சொன்னான். ''குமரா! வீரமாதேவியின் மீது என் தந்தை தன் அன்பு முழுவதையும் கொட்டி வைத்திருக்கிறார். அவள் ஒரு சொல் கூறிவிட்டால்



அதை அவர் மீறமாட்டார். அவள் கண் கலங்குவதைக் காணச் சகியார். அவளது திருமணத்தைப் பற்றித்தான் அவருக்கு இப்போது கவலையெல்லாம். துடுக்குத்தனம் நிறைந்த தன் மகளுக்கு ஏற்ற மணாளன் அமைய வேண்டுமென அவர் தினமும் தில்லை அம்பலவாணரைப் பிரார்த்தித்து வருகிறார்.''

''தில்லை அம்பலவாணர் என்ன செய்வார்? அவருடைய குமாரர்களில் ஒருவருக்கு இரு மனைவி. மற்றவர் பிரம்மசாரி. தொப்பையும் தொந்தியுமாய் இருக்கும் அவரை வேண்டுமானால் மணம் செய்து வைக்கலாம். தக்க அரசகுமாரனைத் தேடி மணம் முடிப்பது உன் தந்தையின் இஷ்டம்தானே?''

''எனினும் மகள் விருப்பத்துக்கு மதிப்பளிப்பவர். அவள் தாயற்றவள். என்னையும் அவளையும் விட்டுவிட்டு அருமைத்தாய் இறந்தபிறகு என் தந்தை தாயின் அன்பையும் சேர்த்து மகள் மீது பொழிந்து விட்டார்.''

''அப்போது - அநுபமாதேவி - அவள் உங்களுடைய சொந்தத் தங்கையல்லவா?''

''சொந்தத் தங்கையாக இல்லாவிடில் என்ன? தந்தை இருவருக்கும் ஒருவர்தாமே? நானும் என் இளவல் கண்டராதித்தரும் அநுபமாவும் அரிஞ்சயனும் ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்களைப் போலத் தான் வளர்கிறோம். இப்போது மட்டுமென்ன! உன்னுடன் சேர்த்தால் ஐந்து பேராகிறோம்.''

''ஆகா இளவரசே! உங்கள் அன்புச் சொற்களால் என்னை மிகமிக உயர்த்தி விடுகிறீர்கள். அவ்வளவுக்கு நான் தகுதியுடையவனா? எங்கோ பிறந்த நான். எங்கோ வளர்ந்து இங்கே வாழ வந்துவிட்டேன். என் பிறப்பைப் பற்றி எனக்கே தெரியாத போது என்னை உங்களுடன் சமதையாக வைத்து எண்ணலாமா?''

''குமரா! என்னபேச்சு இது? பிறப்பில் ஏற்றத் தாழ்வு ஏது? மனத்தால் ஒன்றுபட்டபின் பண்பால் ஒன்றுபட்ட பின் அந்தஸ்து எங்கே வந்து பிரிந்து விடுகிறது?''

''இளவரசே! என்னென்னவோ பேசுகிறீர்கள். நீங்கள் அரசர்; நான் அடிமை.''

''இல்லை நீ என் தோழன்''

''அன்பு இதயத்தால் நான் தோழனாயிருக்கலாம் என்றாலும் அரசகுடும்பத்தோடு நான் சரிசமமாய் இருக்க முடியுமா?''

''முடியும். உனக்கென்ன கவலை? உன்னையும் நான் அரச குடும்பத்தவருள் ஒருவனாக்கினால்? குமரா! உன்னைக் கண்டது முதல் எனக்கொரு பாசம் உள்ளத்தில் பீரிடுகிறது. அதை என்னால் விவரிக்க முடியவில்லை. முன்னொரு காலத்தில் நீயும் நானும் அக்காவும், தங்கையுமாகருந்திருப்போம். பிறிதொரு காலத்தில் அண்ணனும், தம்பியுமாயிருந்திருப்போம். அதற்குப்பிறகு ஒரு யுகத்தில் ஆருயிர்க் கணவனும் இனிய மனைவியுமாயிருந்திருப்போம். அந்தப் பந்தபாசம் இந்தப் பிறவியிலும் தொடர்கிறது. அதனாலேதான் 'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாங்கிழமை தரும்' எனும் அறிவுச் சொல்படி உன்னைப் பார்த்தவுடன் நான் களிப்படைந்தேன். இதயத்தில் தோன்றிய அந்த உணர்ச்சியை ஆசை என்பேனா? பாசம் என்பேனா? அன்பு என்பேனா? நட்பு என்பேனா? நண்பா! இப்பொழுது முதல் உயர்வு தாழ்வு மனப்பான்மையை விடு. நீ என் உயிர் நண்பன். உயர் நண்பன். நான் இளவரசன். நீயும் இளவரசன்தான். இதோ இளவரசருக்கான மகுடத்தை உன் தலையில் சூட்டுகிறேன். உனக்குத் தகுந்த நாடுவேண்டும். அந்த நாடு எது என்று சொல். அதன் இளவரசராய் உன்னை நியமிக்கிறேன். பின்னர் அரசராகவே ஆகிவிடலாம்'' என்றான். வெள்ளங்குமரன் கண்களில் நீர் தளும்பியது.

❋





## 7

தில்லைச் சிற்றம்பலத்துக்கு மேற்கே வீரநாராயணப் பெரும் ஏரி கடல் போன்று காட்சியளித்தது. பெரு மழை பெய்து சில நாள்களுக்கு முன்னர்தான் நின்றிருந்தபடியால் அந்தப் பேரேரி தளும்பி நிறைந்து நின்றது. மதுரையும், ஈழமும் சென்று மகத்தான வெற்றி பல சூடிய பராந்தக மாமன்னர் ஏரிக்கரையிலே நின்று கண்ணுக்கெட்டிய தொலைவு வரை தெரியும் நீர்ப்பரப்பைக் கண்டு மகிழ்ந்த வண்ணம் இருந்தார். இராஜசிம்ம பாண்டியனை வென்று மதுரை மாநகரில் முடிசூடியபோதுகூட அவர் இவ்வளவு மகிழ்ச்சி கொள்ள வில்லை. ஈழத்து மன்னர் நான்காம் உதயனைப் படுதோல்வி யடையச் செய்தபோதுகூட அவர் இத்தகைய மகிழ்ச்சியுற வில்லை. கரை காண முடியா அளவுக்கு விரிந்திருந்த அந்த ஏரியையும், அதனின்று மதகுகளின் வழியே 'ஹோ' என்ற பேரொலியுடன் பாய்ந்து வாய்க்கால் வழியோடும் நீரையும் பார்க்கும்போது பராந்தகன் மனத்திலே பெருமை கூத்தாடியது. அந்த ஏரியை அவர் அமைக்காதிருந்தால் திருமுனைப்பாடி நாடும் நடு நாடும் பெரும் பஞ்சத்தாலன்றோ வாடியிருக்கும்? இயற்கைத் தாய் அளிக்கும் மழை நீரைத் தேக்கி நிறுத்தி இருப்பதைப் பார்க்கும்போது நீர்நிலையும் தன் தோள் வலிமைக்கு அடங்கிவிட்டதென்று பராந்தகன் இறும்பூதெய்தி யதில் வியப்பில்லை.

அவருடன் நின்று கொண்டிருந்த பழுவேட்டரையர் கண்டரன் அமுதனார் மனத்திலே, அலைமோதும் நீர் நிலையைக் கண்டு பெருமை கூத்தாடவில்லை. அதற்கு மாறாக சீற்றம் அலைமோதியது. சோழநாட்டை விரிவுபடுத்தி காளத்தி முதல் கன்னியாகுமரி வரை விரிந்து பரவச் செய்ததில் பராந்தகனுடன் தோளோடு தோள் நின்றவர் பழுவூர்ச்சிற்றரசர் கண்டரன் அமுதனாராவர். அவர் சோழ நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு கொண்டவர். அவருடைய சகோதரியைத்தான் பராந்தகன் மணந்திருந்தார். அரிஞ்சயன் என்ற மகனையும் அவள் பெற்றெடுத்தாள். சோழநாட்டு அரசியலில் பெண் பழுவேட்டரையர் அதிக அக்கறை கொள்ளக்

கொடுத்ததும் காரணமானது. பராந்தகனும் பழுவேட்டரையரைக் கலக்காமல் எந்தச் செயலையும் செய்ததில்லை. ஆனால், வீரமாதேவியின் திருமண விஷயத்தில் மட்டும் அவர் பழுவேட்டரையரின் கருத்தைக் கேட்கவில்லை.

பெரும் சக்ரவர்த்தியின் உயிருக்குயிரான மகள் என்பதனால் வீரமாதேவி அஞ்சா நெஞ்சுடன் வளர்ந்து வந்தாள். விழி இரண்டிலும் பிறரை மதிக்காத அலட்சிய பாவம்; உதட்டிலே நெளியும் குறும்புத்தனம், அழகுத் தேவதையின் கடைக்கண் படிந்திருந்ததால் பருவத்தின் பூரண எழிலுடன் கூடிய வடிவம். வீரமாதேவி வரும்போது எவரும் ஒரு முறைக்கு இருமுறை திரும்பிப் பாராதிரார். அவள் அழகு எங்கும் பேசப்பட்டது. பல நாட்டு மன்னர்கள் அவளைத் தங்கள் நாட்டு இளவரசியாக ஆக்கிக் கொள்ளப் போட்டியிட்டனர். வீரமாதேவி ஒருவரையும் இலட்சியம் செய்யவில்லை. கொடும்பாளூர் மன்னர் தன் மகனுக்கு வீரமாதேவியைத் திருமணம் புரிந்து கொள்ள ஆசை கொண்டார். திருக்கோயிலூர் மலையமான் தூதனுப்பினார். பராந்தகனுக்கோ பிருதிவீபதியின் மகனுக்கு மணம் முடித்துவிட வேண்டும் எனும் எண்ணம்.

மகள் விருப்பத்தை ஒருநாள் மெல்லக் கேட்டார் பராந்தகன். பகைவர் அஞ்சும்படியான வலிமை படைத்த அவர் தன் மகளை அதட்டிக் கேட்க முடியவில்லை. அவரது இயற்கை யான குணம் சற்றுக் கடுமையான சொல்லை உதிர்க்க முன் வந்தாலும் மன்னர் மகன், இளவரசன் இராசாதித்தன் தந்தை யைத் தடுத்து விடுவான். தங்கையின்மீது இராசாதித்தனுக்கு அளவற்ற அன்பு. அவள் மனத்திற்கேற்றவனை மணந்து கொள்ளட்டும் எனத் தந்தையிடம் கூறிவிட்டான்.

மன்னரின் இந்தப் போக்கு பழுவேட்டரையருக்குப் பிடிக்கவில்லை. மன்னரிடம் கேட்கவும் அவருக்குச் சிறிது அச்சம்தான். என்றாலும் தன் கருத்து வேற்றுமையைக் கூறிவிட வேண்டும் எனத் துடித்துக் கொண்டிருந்தார்.

வீரநாராயண ஏரிக்கரையில் பராந்தகன் துள்ளும் இதயத்துடன் இருந்தபோது பழுவேட்டரையர் தன் கருத்தைத் தெரிவிக்க விரும்பினார். அதற்கு வாய்ப்பும் ஏற்பட்டது.



''வீரமாதேவி இந்தக் கடல் போன்ற ஏரியைப் பார்த்தால் மிகவும் களிப்படைவாள். படகில் ஏறிப் பவனி வரவேண்டும் என்று துடிப்பாள்'' என்று பராந்தகன் பழுவேட்டரையரைப் பார்த்துக் கூறினார். பழுவேட்டரையர் மறுமொழி கூறவில்லை. மௌனமாயிருந்தார். பிறகு தொண்டையைக் கனைத்தவாறு; ''ஏன் இளவரசி உங்களுடன் வரவில்லை?'' என்று கேட்டார்.

''அவள் போக்கே புரியவில்லை பழுவேட்டரையரே! எந்த நாட்டு அரசகுமாரனையும் மதிக்கமாட்டாள். இராட்டிரகூட நாட்டு இளவரசன் தஞ்சைக்கு வந்தவுடன் அவனுடன் கலகலப்பாகப் பேசுகிறாள்! இளவரசனுடன் உறையூருக்குச் சென்றிருக்கிறாள். என்னுடன் வருவதைவிட அவளுக்கு உறையூர் செல்வது முக்கியமாகி விட்டது'' என்று பராந்தகன் இரு கைகளையும் விரித்துப் பேசி நகைத்தார்.

பழுவேட்டரையருக்கு அவர் சிரித்தது பிடிக்க வில்லை. தன் வெறுப்பைத் தெரிவிக்க வேண்டி ''அரசே! எனக்கென்னவோ இளவரசியின் போக்கு பிடிக்கவில்லை. இப்படிக் கூறுவதற்கு என்னைப் பொறுத்தருளுங்கள். வேற்று நாட்டு இளவரசனுடன் இளவரசி செல்வது சரியா என்பதை நீங்கள் யோசிக்க வேண்டும்'' என்றார்.

பராந்தகன் திடுக்கிட்டார். சட்டெனப் பழுவேட்டரையர் பக்கம் திரும்பி ''என்ன சொன்னீர்கள் பழுவேட்டரையரே! வேற்று நாட்டு இளவரசன் என்றா கூறினீர்கள்? இராட்டிரகூடம் நமக்கு அண்டை நாடாயிருக்கலாம்; அவர்களுடன் நமக்குச் சண்டை, பூசல் ஏதும் இல்லை. இன்னமும் கேட்டால் என் தாய் பிறந்தநாடு. என் தாய் இராட்டிரகூட மகள்தானே?'' என்றார்.

பழுவேட்டரையர் விடவில்லை. ''இருக்கலாம்; பேரரசரான சோழர் தொடர்பு வேண்டும் என்று உங்கள் தந்தைக்கு இராட்டிரகூட மன்னர் பெண் கொடுத்துச் சம்பந்தம் புரிந்து கொண்டார். நம் நிலை அவ்விதமன்று. கொடும்பாளூராரும், திருக்கோயிலூராரும் உங்கள் மகளை விரும்பிக் கேட்கும்போது நாம் அலட்சியப்படுத்துவது சரியன்று'' என்றார்.

பராந்தகர் உடனே ஏதும் பேசவில்லை. பழுவேட்டரையருக்கு இளவரசியின் திருமண விஷயமாகக் கடும் கருத்து வேற்றுமை

இருப்பதை உணர்ந்தார்; அதை அறிந்தவர்போல் புலப்படுத்திக் கொள்ளாமல் ''பழுவேட்டரையரே! நீங்கள் கூறுவது சரிதான்; வீரமாதேவியின் திருமண விஷயத்தில் நான் தலையிட விரும்பவில்லை...'' என்று கூற முயன்றவரைப் பழுவேட்டரையர் தடுத்து ''அப்படிக் கூறாதீர்கள்; இளவரசியின் திருமணம் சோழ நாட்டின் பெருமையைப் பொறுத்தது. இளவரசி சாதாரணக் குடிமகன் ஒருவனை மணக்கத் துணிந்தாலும் நீங்கள் சம்மதித்து விடுவீர்களா?'' என்றார்.

பராந்தகன் இதுவரை அடக்கி வைத்திருந்த சீற்றம் கட்டவிழ்ந்தது. ''பழுவேட்டரையரே! போர்க்களத்தில் நீர் வல்லவராக இருக்கலாம்; ஆனால் இந்த விஷயத்தில் உம் கருத்தை நான் ஏற்க முடியாது. முன்காலத்தில் அரசகுமாரியின் திருமணம் சுயம்வரமாகவே நடக்கும் என்பதை மறந்தீரோ? என் மகள் ஒருகாலும் தவறு செய்ய மாட்டாள்'' என்றார்.

மன்னரின் கடுமையான குரல் பழுவேட்டரையரின் ஆத்திரத்தை அதிகம் கிளப்பியது. இதுவரை அவர் எவருக்கும் அஞ்சியதில்லை. அஞ்சவேண்டிய அவசியமும் அவருக்கு நேரவில்லை. வீரர்களான சேரர்களின் கிளை மரபினர் பழுவூர்க் குறுநில மன்னர்கள். அவர்கள் உதவியைத்தான் சோழர்கள் என்றென்றும் பெற்றிருந்தனரேயன்றி அவர்கள் மாற்றாருக்குப் பணிந்திருந்ததே இல்லை. பராந்தகனது கடுங்குரலுக்குப் பழுவேட்டரையர் அஞ்சிவிடவில்லை. ''உங்கள் மகளது விருப்பப்படியே நடக்க வேண்டும் எனின் நீங்கள் பல குறுநில மன்னர்களை விரோதித்துக் கொள்ளுமாறு நேரும்.''

''பழுவேட்டரையரே! பயமுறுத்துகிறீர்.''

''இல்லை, நடக்கவிருப்பதைத்தான் கூறுகிறேன்...''

''வருங்காலம் விவரிக்கும் சோதிடரோ நீங்கள்? எனக்குத் தெரியும் என் மகள் நலம்.''

''மகள் நலம் மட்டுமன்று, மக்கள் நலமும் கலந்திருக்கிறது.''

''மகள் விருப்பத்தை மற்றவருக்காக மாற்ற முடியாது...'' பராந்தகன் கடுங்கோபத்துடன் பேசினார். பழுவேட்டரையர்



பேச்சைத் தொடர்ந்து கேட்க விரும்பாதவர் போல் அந்த இடத்திலிருந்து விரைந்தார் பராந்தகன். சற்றுத் தள்ளி நின்று உஷ்ணமான பேச்சு நடப்பதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களும் விரைந்து பின் தொடர, பராந்தகன் குதிரை மீதேறினார். பழுவேட்டரையரின் சீற்றம் மிகப் பொல்லாது என்பது அங்கிருப்பவர்களுக்குத் தெரியும். எனினும் மன்னரின் சொந்த விஷயத்தில் பழுவேட்டரையர் தலையிடுவது சரியன்று என்றே எல்லாரும் அபிப்பிராயப்பட்டனர். ஆனால் பழுவேட்டரையர் தான் கொண்ட எண்ணத்தை அவ்வளவு எளிதில் விட்டு விடுபவரல்லர். அதனால் ஏது வரினும் அஞ்சமாட்டார்.

பழுவேட்டரையர் ஒரு கணம் மௌனமாய் நின்றார். பராந்தகரின் போக்கு அவருக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. அவரும் சிறிது நேரத்தில் அங்கிருந்து புறப்பட்டார். வழக்கம்போல் தஞ்சைக்குச் செல்லாமல் நேரே பழுவூரை நோக்கிச் சென்றார்.

வீரநாராயணப் பேரேரியில் தண்ணீர் மோதிக் கொண்டு நின்றது.

*



## 8

வீரமாதேவி கலகலவென்று நகைத்தாள். இராட்டிரகூட இளவரசன் கோவிந்த தேவனும் நகைக்க முயன்றான். அவனால் இயலவில்லை. வீரமாதேவியின் சாதுர்யமான பேச்சிலும், கேள்வியில் மறைந்திருந்த பொருள்களிலும் கோவிந்தன் மயங்கிவிட்டான். அவனை மயக்கியது அவளுடைய பேச்சா அல்லது அவளுடைய அழகா என்று அவனுக்கே தெரியவில்லை. கோவிந்தனை வீரமாதேவியின் விழிகள் எங்கும் செல்ல முடியாமல் கட்டுப்படுத்திவிட்டன. ஆடவர் என்றால் அலட்சியப் படுத்தி எவருக்கும் அஞ்சாத நெஞ்சமுடைய நங்கையான வீரமாதேவியின் வாயும் அதேபோல் அடைபட்டது. அவள் இமைகள் சதா படபடத்தன. சொற்கள் பலமுறை அவள் இதயத்திலிருந்து இதழ்கள் வரை வந்து நின்று விட்டனவேயன்றி சொல் வரவில்லை. அவளுடைய திடீர் மாறுதல் தோழிகளையே வியக்க வைத்தது. வீரமாதேவியின் உயிருக்குயிரான தோழி கோதை புரிந்து கொண்டாள். அவள் மெல்லப் பேச்சுக் கொடுத்தாள். அவள் இதயத்தில் மறைந்திருப்பதை வெளியே வரவைக்க முயன்றாள்.

''அரண்மனை வைத்தியருக்குச் சொல்லி அனுப்பி யிருக்கிறேன்'' என்றாள் தோழி கோதை. வீரமாதேவி திடுக்கிட்டாள்.

''என்னடி யாருக்கு உடல்நிலை சரியில்லை?''

''எல்லாம் உங்களுக்குத்தான். சில நாள்களாக பெருமூச்சு விடுகிறீர்கள். கண் இமைகள் பட படக்கின்றன. மௌனமாகக் காலங் கழிக்கிறீர்கள். கலத்திலிட்ட உணவு வகைகள் அப்படியே இருக்கின்றன. இவையெல்லாம் மறைந்திருக்கும் நோயின் அறிகுறி தேவி! அதனால்தான் வைத்தியருக்கு ஆளனுப்பினேன். அவர் வந்துவிடுவார் மூலிகையுடன் செந்தூரத்துடன்'' என்று கூறிவிட்டு வீரமாதேவியை உற்று நோக்கினாள்.

வீரமாதேவி படபடப்புடன் ''கோதை என்னடி காரியம் செய்தாய்? எனக்கு நோய் என்று யாரடி சொன்னது? நீயாக ஏன் இப்படியெல்லாம் செய்கிறாய்? வைத்தியர் வந்து ஒன்றுமில்லை



என்று கண்டுபிடித்துவிடுவாரே?'' என்று அவள் தோளை மெல்லக் கிள்ளினாள்.

கோதை மெல்ல நகைத்து ''சரி உடல் நோய் இல்லை; பின் ஏன் இப்படி இருக்கிறீர்கள்? என்னிடமும் சொல்லாமல் அப்படிப் புதைத்து வைக்கிறீர்கள்? வேற்றுநாட்டு இளவரசன் வந்திருக்கும்போது கலகலப்பாக இராமல் இப்படி இருக்கலாமா?'' என்று எண்ணத்தை அறிய விதை விதைத்தாள்.

வீரமாதேவியின் முகம் சட்டென மாறியது. ''விருந்தினர் வந்திருக்கும்போது கலகலப்பாக இராமல்...'' என்ற சொல் அவள் மனத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்தியது. கோதை பொல்லாதவள், அவள் இதய ஆழத்தில் இருப்பதைப் புரிந்து கொண்டிருப்பாளே? வீரமாதேவி கோதையின் முகத்தருகே தன் முகத்தைக் கொண்டு சென்று அவள் தோள் இரண்டையும் பிடித்துக் கொண்டு ''அடி கள்ளி, ஏதோ புரிந்து கொண்டவள்போல் பேசுகிறாயே! முதலில் நீ நினைப்பதைச் சொல்லடி. பிறகு நான் கூறுகிறேன்'' என்று அதட்டுவதுபோல் கேட்டாள்.

இளவரசியின் அழுத்தமான பிடிப்பை விலக்கியவாறு ''தேவி! நான் நினைப்பதைக் கூறினால் நீங்கள் உங்கள் இதயத்திலிருப்பதைக் கூறிவிடுவீர்களா? அப்படியென்றால் அதற்கு முன்னர் என்னிடம் சொல்லவேண்டாம் என்பது தானே உங்கள் எண்ணம்?'' என்று வருத்தப்படுவதுபோல் பேசினாள்.

''அதெல்லாம் இல்லையடி. எனக்கு மனத்தில் எவ்வித எண்ணமும் இல்லை; நோயும் இல்லை. ஆனால் ஏதோ வேதனை எனக்கு இப்போது தோன்றியுள்ளது. என் இதயத்தை என்னமோ செய்கிறது. அடிக்கடி வியர்க்கிறது...''

''ஓகோ, அந்த நோய் பிடித்துக் கொண்டதா?'' என்று கூறி கலகலவென நகைத்தாள் கோதை.

''எந்த நோய்?''

''அதுதான் காதல் நோய்... உங்களையும் பீடித்துவிட்டதா? எந்த நாட்டு இளவரசரும் அடையாத பெரும்பேற்றை அடைந்த பாக்கியசாலி எவரோ?'' என்று கேட்டு சற்று யோசனை செய்பவள்போல் நடித்து ''எவராய் இருக்கலாம்? நம்

அரண்மனைக்குப் புதிதாக வந்தவர்கள் எவர்? சேர நாட்டிலிருந்து கட்டிளங் காளையாக மாவீரரொருவர் வந்துள்ளாரே வெள்ளங் குமரன்? அவர்தான் இளவரசருடன் அவ்வப்போது அரண்மனைக்கு வருகிறார். அவர் உங்களைவிட இளையவர் ஆச்சே.... பிறகு... ஓகோ... இராட்டிரகூட நாட்டு இளவரசரா? இருக்கும் இருக்கும். அவர்தான் அரசருடன் எப்போதும் இருக்கிறார். அரசர் அவருக்குச் செய்யும் உபசரணைபோல் வேறெவருக்கும் செய்ததில்லை... தேவி! அவர்தானே உங்களுக்கு வேதனை அளித்தவர்?'' என்று கேட்டாள்.

வீரமாதேவி ஒன்றும் பேசவில்லை. பிறகு தோழியை அணைத்தவாறு, ''கோதை! என் இதயத்தை எளிதில் புரிந்துகொண்ட நீ உயிர்த் தோழி என்பதை நிலைநாட்டி விட்டாய். எந்த நாட்டு இளவரசரையும் கண்டுதிகைக்காத என் உள்ளம் இப்போது ஏனோ மாறுதல் கண்டது.''

''நியாயமிருக்கிறது தேவி! அவர் பெரும் சாம்ராஜ்ய இளவரசர்...''

''இருக்கலாம்... அதைவிடப் பெரும் சாம்ராஜ்யத்தவர்கள் நம் நாட்டுக்கு வரவில்லையா?''

''பெரும் வீரர்...''

''எத்தனையோ மாவீரர்களைப் பற்றித் தந்தை கூறவில்லையா?''

''அவர் அழகர்...''

வீரமாதேவி பெருமூச்சு விட்டாள். தோழியே பேசட்டும் என மௌனமாயிருந்தாள்.

''அழகின் வடிவம் என்று பெண்களைத்தான் கவிஞர்கள் வர்ணிப்பதுண்டு. ஆண்களிடம் உள்ள அணிகலன் வீரம் என்று கூறுவார்கள்... ஆனால் இளவரசர் கோவிந்த தேவர் அழகின் வடிவம். அவரது சிவந்த மேனி; அந்த மேனியில் உங்களைக் கண்டதால் ஏற்பட்ட பளபளப்பு. மெல்லிய மீசை; அதிலே ததும்பும் வீரம், நீண்ட நாசி. அது முகத்தழகை அதிகப்படுத்துகிறதே... தேவி! நான் சொல்வது சரிதானே? ஓர் ஆடவனை இப்படிப் பெண் வர்ணிப்பது முறையன்று என எண்ணுகிறீர்களா?'' என்று கோதை சற்று நிறுத்தினாள்.



ஆனால் வீரமாதேவி கண்களை மூடியவாறு தோழியின் வர்ணனையை ரசித்துக் கொண்டிருந்தாள். அவள் கூறும் ஒவ்வொரு சொல்லும் கருப்பஞ்சாறாக இனித்தது. கோவிந்த தேவரின் முழுவடிவத்தை இதயத்தில் தீட்டிய வாறிருந்தாள்.

''தேவி! பல இளவரசர்களது கண்களை நான் கண்டிருக்கிறேன். ஆனால் கோவிந்த தேவரின் கண்களின் வனப்பைப்போல் நான் கண்டதில்லை. அந்தக் கண்களின் ஒளியை நான் புகழ்வேனா? அதில் ததும்பும் அழகை எடுத்தியம்புவேனா? தேவி! அவரது கண்கள் தாம் உங்களைச் சிறைப்படுத்தி விட்டன. அப்படித்தானே?'' என்று கேட்டாள்.

கோவிந்த தேவரின் மாறன் போன்ற எழிலுருவம் வீரமாதேவியைக் கவர்ந்துவிட்டது. ஓரிரு நாள்கள் வெட்கமெனும் பனித்திரை அவளை மறைத்தது. ஆனால் காதல் வேகமெ்னும் கதிரொளி திரையை விலக்கியது. கோதையின் உதவியுடன் இளவரசரைச் சந்தித்தாள்.



9

கோவிந்த தேவனும் இரட்ட நாட்டில் பல பேரழகிகளைக் கண்டிருக்கிறான்; சோழ நாட்டுத் தாமரை அவனை மயக்கிவிட்டது போல் மங்கையர் எவரும் மயக்கவில்லை. மலர்ந்த அந்த மலரில் தேனுண்ட வண்டினைப் போல் அவன் மனம் வட்டமிடத் தொடங்கியது. தஞ்சையில் சில நாள்கள் இருந்துவிட்டு மதுரைக்கும், வஞ்சிக்கும் போக எண்ணிய அவன் மதுரைக்குச் செல்லும் நினைவையே மறந்தான். வீரமாதேவியின் இனிய மொழி அவனை மயக்கியது. சாதுர்யமான சொற்கள் மயக்கின. கேலியும் குதூகலமும் கொண்ட அவளுடன் பேசிக் கொண்டே பொழுதைக் கழிப்பதில் அவன் இன்பங் கண்டான். உறையூருக்குச் செல்ல அவன் விருப்பம் தெரிவித்தபோது வீரமாதேவியும் உடன் வருவாள் என அவன் எண்ணவில்லை.

அகண்ட காவிரியின் வனப்பு அவனைக் கவர்ந்தது. காவிரியைவிட இன்னும் பெரிய நதிகளை அவன் கண்டிருக்கிறான். எனினும் காவிரியைப் போன்ற வனப்புமிக்க நதியை அவன் கண்டதில்லை. கதிரவனின் இனிய கதிர்கள் காவிரி நீரில் பிரதிபலித்து, பொன்மயமாக்கி அவன் கண்களைக் கூச வைத்தன.

''தேவி! உன் தங்க ஆபரணங்களா இப்படிப் பிரதிபலிக்கின்றன?'' என்று கூசிய கண்களைத் திறக்க இயலாதவனாகக் கேட்டான் கோவிந்தன். வீரமாதேவி நகைத்தாள். தோழிகளும் கலகலவென நகைத்தனர். வீரமாதேவி குனிந்து ஓடும் நீரைக் கையிலெடுத்து இளவரசனின் முகத்தில் வீசியபடி ''உங்களைப் போன்ற வீரர்கள் கண்களையும் கூசுமாறு எங்கள் காவிரித் தாய் செய்வதால் அவளைப் பொன்னி என்று பெருமையுடன் அழைக்கிறோம்'' என்று கூறினாள்.

''பொன்னி பொன்னி'' என்று கோவிந்தன் உதடுகள் முணுமுணுத்தன. பொன்னியின் இரு கரைகளிலும் அந்தத் தாயின் அரவணைப்பில் செழித்திருந்த பயிர்க் குழந்தைகளையும் கனி குலுங்கும் மரமெனும் கன்னியரையும் கண்டு கோவிந்தன் ஆனந்தமடைந்தான்.



வீரமாதேவியுடன் உறையூரில் நந்தவனத்தில் அமர்ந்து தனியே உரையாடிக் கொண்டிருந்தபோது வீரமாதேவி தங்கள் நாட்டின் பெருமைகளைப் பற்றியே பெரிதும் பேசினாள். தங்கள் மூதாதையரான கரிகால் பெருவளத்தானைப் பற்றியும் தூங்கெயில் எறிந்த சேட் சென்னியைப் பற்றியும் அவள் இளவரசனுக்கு எடுத்துக் கூறினாள். காவிரித்தாய் கடலரசனுடன் சேரும் இடத்தில் அமைந்திருந்த பூம்புகார் நகரைப் பற்றிப் பெருமையாகக் கூறினாள். காவிரியின் பெருமையைப் பற்றிக் கூறப்படும் பாடல்களை எடுத்துரைத்தாள்.

கோவிந்தன் வீரமாதேவியை மெல்ல அணைத்தவாறு, ''தேவி! உன் சொற்களின் இனிமை என்னைத் தடுமாற வைத்துவிட்டது. சிறிது நேரத்திற்கு முன்பு ஏதோ ஒரு பாடலை முணுமுணுத்தாயே அதைக் கேட்டவுடன் உனக்குப் பாடவரும் என்பதைத் தெரிந்து கொண்டேன். இசை என்றால் எனக்கு உயிர்; ஒருபாட்டுப் பாடு கண்ணின் மணியே!'' என்று கொஞ்சினான்.

மாமரத்தினின்று அப்போதுதான் குயில் ஒன்று குக்கூ என்று கூவியது. வீரமாதேவி அதைச் சுட்டிக் காட்டி, ''நானும் பாடி குயில் எதிரே என் கடுங்குரலைக் காட்டிக் கொள்ளவா?'' என்றாள். கோவிந்தனின் இறுக்கம் அதிகமாகியது. ''இல்லை இல்லை. அதைப் பழிக்கப் போகிறாய்...''என்றான்.

அவனிடமிருந்து மெல்ல விடுவித்துக் கொண்டாள். அவளை நாணம் சூழ்ந்து கொண்டது. என்றாலும் தன் உயிரின் உடைமையாளர் கேட்கும்போது தான் கற்றிருந்ததை அந்தச் சமயம் வெளிப்படுத்தாமல் இருக்க முடியுமா? இளவரசன் ஆசையை நிறைவேற்றா திருக்க முடியுமா? குரலை மெல்லச் சரி செய்து கொண்டு அவள் பாடினாள்.

*''திங்கள் மாலை வெண் குடையான்,*

*சென்னி செங்கோல் அது ஓச்சிக்,*

*கங்கை தன்னைப் புணர்ந்தாலும்,*

*புலவாய் வாழி! காவேரி!*

*கங்கை தன்னைப் புணர்ந்தாலும்*

*புலவாது ஒழிதல், கயற் கண்ணாய்!*

*மங்கை மாதர் பெருங் கற்பு என்று*

*அறிந்தேன் வாழி! காவேரி!''*

பண்ணொடு கலந்த தமிழின் இன்பத்தாலும், வீரமாதேவியின் இன்குரலாலும் கோவிந்தன் தன்னையே மறந்தான். பாடல் நின்றவுடன் சுயநிலை அடைந்தான். கைதட்டி அவளைப் பாராட்டி ''நன்று! இது போன்ற இசை அமுதத்தை நான் சுவைத்ததே இல்லை... இந்தப் பாடலின் பொருள் அறிந்தால் இன்னும் அனுபவிப்பேன்'' என்றான்.

''ஹூம்... பாடலையே அனுபவித்துக் கொண்டு என்னை மறந்து விடுவீர்களல்லவா?''

''பேதையே உன்னை மறப்பதா?''

''ஆமாம்; நான் பேதைதான். சோழநாட்டுப் பெண்களே பேதைதானே? அப்படி என்னை மறந்து காவிய நாயகியைக் காதலித்தாலும் நான் கோபித்துப் பிணங்க மாட்டேன்.. நான் பாடிய பாடல் மாபெரும் காவியத்திலிருக்கிறது. எங்கள் நாட்டிலே வெகு காலத்திற்கு முன்பு கண்ணகி என்ற கற்புக்கரசி வாழ்ந்து வந்தாள். அவள் புரட்சிப் பெண். அவள் கணவன் கோவலன் மாதவி எனும் மங்கைமேல் ஆசை கொண்டான். கண்ணகி அதனால் வருத்தமடைந்து கணவனை வெறுக்கவில்லை. பிறகு மாதவியிடம் மன வேற்றுமை கொண்டு திரும்பி வந்தபோது அவனை அன்புடன் வரவேற்றாள். தன் குடும்பம் மீண்டும் சிறப்புடன் வாழ, தன்னிடமிருந்த ஒரே ஒரு நகையையும் கொடுத்தாள். அப்படிப்பட்ட உயர்தரமான பெண்களைக் கொண்ட நாடு எங்கள் சோழநாடு. அந்தக் கண்ணகி பிறந்த சோழ நாட்டிலே பாயும் காவிரித்தாய் என்ன செய்வாளாம் தெரியுமா? சோழ மன்னன் கங்கை எனும் பெண்ணின் மீது காதல் கொண்டு அந்த நாடுவரை தன் நாட்டை விரிவுபடுத்தினாலும் காவிரி கோபிக்க மாட்டாளாம். பெண்ணின் சிறப்பைப் பேசுகிறது அந்தப் பாட்டு. அதுபோல் நீங்களும் என்னை மறந்து காவிய நாயகி மீது காதல் கொண்டாலும் நான் மனம் மாற மாட்டேன் அன்பே!'' என்றாள். அவள் துவண்டு அவன் மீது சாய்ந்தாள்.



CPL 566002

''ஆம்; ஆம்; என் சகோதரி அப்படியெல்லாம் மனம் மாறக் கூடியவளல்லள்'' என்று கூறிக் கொண்டே செடி கொடிகளை விலக்கிக் கொண்டு வீரமாதேவியின் சகோதரன் இராசாதித்தன் சிரித்த முகத்துடன் வந்தான். அவனைத் தொடர்ந்து வெள்ளங்குமரனும் வந்தான்.

566002

''இளவரசரே! என்னைப் பொறுத்தருளுங்கள். உங்கள் தனிமையை நான் குலைத்து விட்டேனா? இந்த நந்தவனத்தில் என் சகோதரியின் குரல் கேட்டது. அவள் இவ்வளவு இனிமையாகப் பாடுவாள் என்பது எனக்கே தெரியாது. அந்தப் பாடலை அனுபவித்தேன். எங்கள் நாட்டுப் பெருமையை நினைக்கும்போது என் உடல் சிலிர்த்தது. இளவரசே! என் சகோதரி மிக நல்லவள். அவள் மனம் நோக யாராவது செய்தால் நாங்கள் பொல்லாதவர்களாயிருப்போம்'' என்று கூறி, கடகடவென நகைத்தான்.

பிறகு வெள்ளங்குமரன் பக்கம் திரும்பி, ''என் சகோதரிகளில் இவள்தான் பொல்லாதவள். இவள் தங்கை அனுபமா மிக நல்லவள் தெரியுமா?'' என்று கூறி மீண்டும் நகைத்தான்.

அவன் அங்கிருந்து வெள்ளங்குமரனுடன் செல்லும்போது வெள்ளங்குமரன் கேட்டான், ''அரசே! [illegible]ரையும் மதியா[illegible] தங்கை இளவரசி இவ்வளவு தூரம் மாறிவிட்டாளே என்ன காரணமாயிருக்கும்?'' என்று.

894.8113 VIK

''ஆமாம்; ஆமாம். நல்ல வேளையாக மாறினாள். எனக்கு ஒரே கவலையாக இருந்தது. என் அருமைச் சகோதரி இப்படியே அலட்சிய மனப்பான்மையுடன் வாழ்ந்துவிட்டால் அகம்பாவக்காரி என்று எவரும் மணக்கத் துணியமாட்டாரே. பின்னர் கன்னியாகவே அவள் காலங்கழித்துவிட்டால் என் இதயம் வெடித்து விடும். குமரா! இனி எனக்கு எந்தக் கவலையுமில்லை. இளைய தங்கையைப் பற்றியும் கவலையே இல்லை...'' என்று வெள்ளங்குமரனை நோக்கியவாறு கண் சிமிட்டினான் இராசாதித்தன்.

வெள்ளங்குமரனை நாணம் சூழ்ந்து கொண்டது. இளவரசரின் தூய உள்ளங் கண்டு வியந்தான் அவன். சகோதரியின் மேல் அவர் கொண்டிருக்கும் அன்பு கண்டு வியந்தான் அவன்.

CONNEMARA PUBLIC
-6 ... 2004

வீரமாதேவி, கோவிந்த தேவன் மீது கொண்டுள்ள அன்பு எல்லாருக்கும் தெரிந்தது. குறிப்பாக மன்னர் பராந்தகன் அறிந்தார். அவருக்கு மகிழ்ச்சியே. கடைசியாகத் தன் மகளுக்கு அன்பு மலர்ந்ததே என்று களிப்படைந்தார். வீரமாதேவியின் காதலில் தொல்லையும், சங்கடமும் ஏதும் ஏற்படவில்லை. மனப்பூர்வமாக மகளுடைய திருமணத்தை ஆதரித்தார் மன்னர். மகள் தக்கவரை மணத்திற்குத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள் என்பதுடன் மற்றொரு பெரும் காரணமும் அவர் மனத்தே இருந்தது. வடக்கே விரிந்து பரந்திருந்த நாடு இராட்டிரகூட நாடு. மான்ய கேட நகரில் செங்கோலோச்சிய மன்னர்கள் சோழர்களின் நட்பினராக இருந்தனர். அந்தத் தொடர்பைப் பராந்தகன் வலுப்படுத்த விரும்பினார். இப்போதும் மணவினைத் தொடர்பினால் இரட்டர்களின் நட்பு இன்னும் அதிகப்படும். பலவிதங்களில் பார்த்தாலும் தன் மகளுக்குக் கோவிந்தன் ஏற்றவனே என முடிவு செய்தார்.

இந்தச் செய்தியைப் பராந்தகர் வெளியிட்ட போது பழுவேட்டரையருக்குப் பிடிக்கவில்லை என்பது தெரிந்தது. தன் மகனிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்தார்.

''தந்தையே! உங்கள் முடிவு எனக்கு முழுச் சம்மதமே. வீரமாதேவியின் விருப்பத்திற்கு நீங்கள் எங்கே குறுக்கே நின்றுவிடுவீர்களோ என்று அஞ்சியிருந்தேன். வீரமாதேவியின் நலவாழ்வு நம் நல்வாழ்வன்றோ? திருமணத்திற்கு நாள் குறிப்பிடுங்கள். மிகக் கோலாகலமாக நந்திபுரத்தில் திருமணத்தை நடத்துவோம்'' என்று உற்சாகத்துடன் கூறினான்.

பராந்தகன் மெல்லச் சிரித்தார். தன் மகனை நோக்கி ''இராசாதித்தா! உன் தங்கை மீது உனக்குக் கொள்ளை ஆசை. அதனால் அவள் விருப்பத்தை உடனே ஆதரிக்கிறாய். அந்தத் திருமணத்தால் நாட்டிற்கு நல்லது ஏற்படுமா என்பதை யோசித்தாயா?'' என்று கேட்டார்.

தந்தை எப்போதும் இப்படிக் கேட்கமாட்டார். பிறர் கருத்தை நூறு முறை கேட்டுத்தான் முடிவு செய்ய வேண்டும் எனும் கட்டாயம் அவருக்கில்லை. அவர் இவ்வாறு கேட்பதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும். ''தந்தையே! தங்கையின் திருமணத்தால் நாட்டிற்கு ஏன் தீங்கு ஏற்படப் போகிறது? நீங்கள் கேட்பது புரிய வில்லையே? யாராவது தடை கூறினார்களா?'' என்று கவலையுடன் கேட்டான்.



''உனக்குத் தெரியாததன்று; வீரமாதேவியைப் பெண் கேட்டுப் பல நாட்டரசர்கள் தூதனுப்பினார்கள். மற்றும் சோழ நாட்டுச் சிற்றரசர்கள், இந்த நாட்டின் நல்வாழ்வை விரும்புபவர்களில் சிலரும் பெண் கேட்டார்கள்...''

''ஆமாம்; கொடும்பாளூரார் கேட்டார். பழுவேட்டரையரும் சில யோசனைகள் கூறினார்கள். அதற்கு நாம் என்ன செய்வோம்? என் தங்கை அவர்களை விரும்பவில்லையே...''

''சரி; இவர்களை நாம் விரோதித்துக் கொள்ளலாமா?''

''நாம் ஏன் விரோதம் கொள்கிறோம்? நாமா தடையாய் நின்றோம்? வீரமாதேவியின் குணந்தான் எல்லாருக்கும் தெரிந்ததாயிற்றே. அவள் மனத்திற்கொவ்வாத இடத்தில் நாம் பலவந்தமாகத் திருமணம் செய்து கொடுப்பதால், பிறகு ஏற்படும் தொல்லைகளால் மட்டும் விரோதம் வராதா? தந்தையே! நீங்கள் இவற்றைப் பற்றியெல்லாம் மனத்தில் கவலை கொள்ள மாட்டீர்களே! இப்போது மட்டும் நீங்கள் சிந்திப்பதன் காரணம் எனக்குப் புரியவில்லை. யார் எதிர்த்தாலும் நமக்குக் கவலையில்லை. என் கையிலுள்ள வாள் இருக்கும் வரை எவருக்கு நாம் அஞ்சவேண்டும்?...''

மகனுடைய உணர்ச்சி நிறைந்த சொற்கள் பராந்தகனது சிறிதளவு சந்தேகத்தையும் நீக்கின.

''மகனே! நமக்கேன் அச்சம்? நான் யாரை நம்பி இந்தச் சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தி வருகிறேன்? உன் தம்பி கண்டராதித்தனுக்கு நாட்டாசை இல்லை.... உன் எண்ணம் என்னவென்று அறியவே கேட்டேன். ஆனால் பழுவேட்டரையர் சொல்லையும் நான் மதிக்க வேண்டும். எத்தனை போர்க் களங்களில் அவர் தன் உயிரையும் துரும்பென மதித்து வீரப் போர் நிகழ்த்தியிருக்கிறார்? அதனால்...''

''தஞ்சையிலே பழுவேட்டரையர் என்ன செய்கிறார்? நம் வீரமாதேவியின் நல்வாழ்வு அவருக்குப் பிடிக்கவில்லையா?''

''அடடா! அப்படி ஒருகாலும் அவர் நினைக்க மாட்டார். நானும் அப்படிச் சொல்லவில்லை...''

''பின் ஏன் அவர் இராட்டிரகூட நாட்டோடு சம்பந்தங் கொள்வதை விரும்பவில்லை?''

''கொடும்பாளூரார் எதிர்ப்பார் என்கிறார்.''

''விந்தையாயிருக்கிறது. கொடும்பாளூரார் பழுவூராருக்கு அவ்வளவு பிடித்தமான வரல்லரே...''

''இருக்கலாம்....''

''தந்தையே! பழுவேட்டரையரிடம் கூறி அவர் மனத்தை மாற்றுவோம்... அவர் ஒப்புக்கொள்ளாவிடில் நஷ்டம் நமக்கன்று...''

இராசாதித்தன் பிடிவாதமாக இரட்ட நாட்டு இளவரசனுக்கு மணம்புரிந்து கொடுப்பதை ஆதரிக்கிறான் என்பதைப் பராந்தகன் புரிந்து கொண்டார்.

கோவிந்த தேவனும் இவ்வளவு எளிதில் தன் காதல் கைகூடும் என்றெண்ணவில்லை. சோழ நாட்டிளவரசியின் மீது ஆசை கொண்டதால் வரும் இடர்கள் அனைத்தையும் ஏற்கவேண்டி நேரும் என்றுதான் எண்ணியிருந்தான். வீரமாதேவியின் அழகுத் திருமுகத்தை இதயத்தில் பதித்தவாறு தன் நாட்டிற்குத் திரும்பிச் செல்லலாம்; காலமும் இறையருளும் கூட்டுவித்தால் தனக்கு சோழநாட்டிளவரசி கிடைப்பாள் என்றுதான் எண்ணினான்.

பராந்தக மன்னனிடம் விடை பெற்றுக் கொள்ளச் சென்றபோது அவர் கூறிய வார்த்தைகள் அவனைத் திடுக்கிட வைத்தன. இந்தச் சோழ மன்னர்கள் மிகப் பொல்லாதவர் களாயிருக்க வேண்டும்; இல்லாவிடில் இப்படி அதிசயிக்கத் தக்க வார்த்தைகளைக் கூறுவாரா பராந்தகர்? தன்னைச் சோதனை செய்கிறாரா? உண்மையாகத்தான் கூறுகிறாரா?

கோவிந்த தேவன் உண்மையிலேயே வியப்படைந்தான். இவ்வளவு எளிதில் வீரமாதேவி கிடைத்து விடுவாள் என அவன் எண்ணவில்லை. திருமணத்திற்கு அரண்மனைச் சோதிடர்கள்



நாள் பார்க்கிறார்களாம். தன் பயணத்தைத் தள்ளி வைக்க வேண்டியது தான். இப்படியும் அற்புதம் நேரும் என்று அவன் மான்யகேடத்தினின்று புறப்படும்போது அறிந்திருக்க வில்லையே!

பழுவேட்டரையர் மனத்தாங்கலுடன் சென்றாரேயன்றி பழுவூரில் அதிக நாள்கள் தங்கவில்லை. சோழநாட்டுடன் விரோத மனப்பான்மை கொண்டு அவர் யாருக்காக வாழ வேண்டும்? பழுவேட்டரையர் வந்தவுடன் பராந்தகனுக்குப் பெரும் நிம்மதி ஏற்பட்டது.

சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள். புன்சிரிப்பு மிளிர, பராந்தகனே முதலில் பேச்சைத் தொடங்கினார்: ''நல்ல சமயத்தில் வந்தீர்கள் பழுவேட்டரையரே!'' என்று வரவேற்றார். மன்னருக்கு மனத்தில் ஏதும் வருத்தம் இல்லையென்பதைப் புரிந்து கொண்டார் பழுவேட்டரையர்.

''பழுவேட்டரையரே! சோதிடர்கள் நாள் குறித்து விட்டனர். எல்லாம் நீங்கள் முன்நின்று நடத்த வேண்டும்...'' என்று பராந்தகன் கூறினார். மகளுடைய திருமணம் நன்கு நடக்க வேண்டுமே... பராந்தகன் இப்படி எப்போதும் பிறர் கருத்தை எண்ணி எண்ணிச் செயல் புரிந்ததில்லை. ஈழத்தை வென்றபோதும் மதுரையைக் கொண்டபோதும் சீட்புலியை ஜெயித்தபோதும் அவர் இவ்வளவு தூரம் திட்டமிட்டுப் பிறர் யோசனையை எதிர்பார்த்து நடக்கவில்லை.

''வீரமாதேவியின் மனத்தை மாற்ற முடியவில்லை. பழுவேட்டரையரே! அவள் எண்ணத்தினின்று மீறி நாம் ஏதாவது செய்தால் அவள் வாழ்விலே துன்பம்தான் மிஞ்சியிருக்கும்....'' என்றார் பராந்தகர்.

பழுவேட்டரையர் திருமண விஷயமாக ஏதும் கூற விரும்பவில்லை. இனி பராந்தகன் மனத்தையோ, அவர் மகள் மனத்தையோ மாற்ற முடியாது என்று அவர் அறிவார். இந்தத் திருமண விஷயத்தில் ஒன்று பராந்தகருடன் விரோதம் கொள்ள வேண்டும்; அல்லது அவர் கருத்தை ஆதரிக்க வேண்டும். பராந்தகருடன் விரோதித்து என்ன பயன்?

பழுவேட்டரையர் மௌனமாயிருந்தார். "என்ன பழுவேட்டரையரே! மௌனமாகி விட்டீர்கள். உங்களுக்கு இந்தத் திருமணத்தில் பூரண சம்மதமில்லை என்பதை நானறிவேன். உங்களுக்கு இராட்டிரகூட நாட்டு இளவரசன் கோவிந்தனைத் தெரியாது. மிக நல்லவர். வீரமாதேவியின் மனத்துக்கும் ஏற்றவர். அது மட்டுமன்று; வடபுலத்தில் நமக்கு உற்ற நண்பர் வேண்டாமா? இராஜ தந்திர ரீதியாகவும் இந்தத் திருமணம் நமக்கு நல்லதைத்தான் கொடுக்கும்..."

பழுவேட்டரையர் எழுந்து நின்று கொண்டார். மன்னரது கரங்களைப் பிடித்துக் கொண்டு "அரசே! ஏரிக்கரையில் ஏதாவது நான் உங்கள் மனம் புண்படும்படி பேசியிருந்தால் பொறுத்தருளுங்கள். நான் ஏது கூறினும் சோழ நாட்டு நன்மைக்காகவே கூறுவேன். திருமண ஏற்பாடுகள் நடக்கட்டும். எங்கும் கேட்டறியாத அளவுக்கு விமரிசையாக நடக்கட்டும். அதற்கு ஆகவேண்டியவற்றை நானே முன்நின்று செய்கிறேன்" என்று கூறி விடை பெற்றுக் கொண்டார்.

பழுவேட்டரையர் மனமாற்றம் பராந்தகனுக்கு ஆச்சரியமாயிருந்தது. ஆனால், பழுவேட்டரையர் மனத்திலே எழுந்த சீற்றத்தை மிகவும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டன்றோ இந்தத் திருமண நிகழ்ச்சிக்குச் சம்மதித்திருக்கிறார் என்பதை ...வர் எவ்வாறு அறிவார்?





## 10

சோழ நாடே அதிசயிக்கத் தக்க வண்ணம் அரச குடும்பத் திருமணம் நடைபெற்றது. கோவிந்தனது வடிவழகில் மயங்கியவர்கள் வீரமாதேவியின் அதிர்ஷ்டத்தைப் போற்றினர். இராசாதித்தனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. வீரன் வெள்ளங்குமரனும், பழுவேட்டரையரும் மற்றும் சோழர்களின் உற்ற நண்பர்கள் அனைவரும் திருமண வைபவத்தை வெற்றிகரமாக நடத்தினர்.

திருமண வைபவம் முடிந்தவுடன் பெரும் கடலலை ஓய்ந்தது போன்றிருந்தது. மக்கள் மனத்தில் அந்தக் குதூகல நாள் நினைவு அழியாதிருந்தது.

கோவிந்தன் தன் நாட்டைவிட்டுப் புறப்பட்டுப் பல மாதங்களாகி விட்டபடியால் நாடு திரும்ப எண்ணங் கொண்டான். அவனுடன் வீரமாதேவியும் புறப்பட்டாள். வைர வைடூரியங்களையும், நவரத்தின ஆபரணங்களையும், பட்டாடைகளையும் பரிசுப் பொருளாகச் சுமந்து யானைகள் அவர்களுடன் சென்றன. வீரமாதேவிக்கு உதவியாக பணிப் பெண் குழாம் சென்றது. கோதையும் இணை பிரியாது உடன் சென்றாள்.

வீரமாதேவிக்குத் தஞ்சையை விட்டுப் பிரிய வேண்டுமே என்கிறபோது கலக்கந்தான் உண்டாகிய்து. அருமைத் தந்தையையும் தாயையும் எப்படிப்பிரிவது? பிறந்ததிலிருந்து பிரியாத பொன்னி வளநாட்டை எப்படிப் பிரிவது என்று கண்கலங்கினாள். இந்தத் திருமணம் எனும் மலர்க்கொடி ஒருபுறம் பிணைக்கிறது; மறுபுறம் பிரிக்கிறது.

அருமைத் தந்தையை வணங்கி விடை பெற்றபோது அவள் தன் இதய வருத்தத்தை வெளியே புலப்படுத்திக் கொள்ளவில்லை. இராசாதித்தன் அருகே நின்று கொண் டிருந்தான்.

இராசாதித்தன் சகோதரிபால் மிக்க அன்பு கொண்டவன். வீரமாதேவி அண்ணனிடம் விடை பெற வரும்போது,

கலங்கியறியா அவன் கண்கள் கலங்கின. எனினும் தன் கண்களைத் துடைத்தவாறு தன் மைத்துனனை நோக்கி ''ஐயா, எங்கள் குலச் செல்வியை உங்களிடம் ஒப்படைக்கிறோம். அவள் கண் கலங்கினால் அதை நான் ஒரு நொடியும் சகிக்கமாட்டேன். பூவினும் மிருதுவான இதயம் படைத்தவள் என் தங்கை'' என்று நெஞ்சு தழுதழுக்கக் கூறினான். வீரமாதேவியும் கோவிந்தனும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். அந்தப் பார்வையில் எவ்வளவோ அர்த்தங்கள் பொதிந்து கிடந்தன. 'உன் கண் கலங்குவதா?' என்று கோவிந்தன் விழிகள் பேசின. 'உங்கள் அன்பும், அன்பின் உறைவிடமான அழகும் என்னை ஏன் கலங்க வைக்கப் போகின்றன?' என்று வீரமாதேவியின் விழிகள் வினவின.

வீரமாதேவி அரசகுரு தேவவிரதரை வணங்கி விடை பெறும்போது ''விரைவில் நீ சோழநாடு திரும்பி வருவாய்'' என்று ஆசி கூறினார். அங்கிருந்தவர்கள் குருவின் ஆசி கேட்டுத் திடுக்கிட்டனர். ஆனால் இராசாதித்தனோ ''ஆமாம்; இளவரசனைப் பெற்றெடுக்க இங்கு வந்துதானே ஆகவேண்டும்?'' என்று சட்டென விளக்கம் கூறவே எல்லாரும் மகிழ்ந்தனர்.

''ஆமாம்; ஆமாம். மாமன் கொட்டத்தை அடக்க வருவான் மருமகன்'' என்று பழுவேட்டரையர் மிக அதிசயமாக நகைச்சுவை உதிர்த்தார். எல்லாரும் நகைத்தனர்.

பழுவேட்டரையரை வீரமாதேவி வணங்கிய போது அவர் வாய் திறந்து ஆசி கூறவில்லை; ஆனால் அவர் மனத்துக்குள்ளேயே அவள் நல் வாழ்வுக்கு வேண்டினார்.

வீரமாதேவியும், கோவிந்தனும் ஏறி அமர்ந்தவுடன் ரதம் புறப்பட்டது. புழுதிப் படலம் மறையும்வரை அங்கு நின்றவர் எவரும் நகரவில்லை.

பழுவேட்டரையர் அந்த மண்டபமே அதிருமாறு குறுக்கும் நெடுக்கும் நடந்தார். அப்படி அவர் நடக்கிறார் என்றால் அவர் உள்ளத்தில் கோப எரிமலை குமுறிக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம். கோபம் வெளிப்படாதபோது அதன் வேகத்தைத் தானே



தாங்கவேண்டிய நிலையில் அவரது உடல் வருந்தும். எதிரே தென்படும் பொருள்கள் தவிடுபொடியாகும். வரும் எவரும் சொல்லால் தாக்கப்படுவர்; கோபத்துக்கு இரை கிடைக்கும் வரையில் அவர் தணியமாட்டார். அமைதி அடைய மாட்டார்.

வீரமாதேவியின் திருமணம் முடிவடைந்த வுடனேயே பழுவூரை வந்தடைந்தார் பழுவேட்டரையர். பராந்தகர் தன் பிடிவாதத்தில் வெற்றி கண்டுவிட்டார் என்ற ஆத்திரம் அவர் எதிரே வந்து நின்று பயங்கரமாகச் சிரித்தது.

பழுவேட்டரையர் மகன் சேந்தன் அமுதன் தந்தை வந்துவிட்டார் என்ற செய்தி அறிந்தவுடன் மாளிகைக்கு விரைந்து வந்தான். வீரமாதேவி அவனைப்பற்றி மிகத் தத்ரூபமாக எப்போதும் வர்ணிப்பாள். அடர்ந்த தலைமயிர்; சீப்புக்கும் அடங்காத முரட்டுத்தனத்தால் அதில் சடை சேர்ந்திருந்தது. தலைப்பாகை சடையை மறைத்தாலும் தோள் வரையில் தொங்கும் அவற்றின் நிறத்தை மாற்றமுடியாது.

கேசத்தைப் போல் அடர்ந்த மீசை. உள்ளத்திலே ததும்பி நிற்கும் முரட்டுத் தனம் முகத்திலே பிரதிபலித்தது. சிரிக்கும்போது தெரிந்த முன் இரு பற்களும் கேடயம் போல் தோன்றின. திரண்ட தோளும் மார்பும் வீர இலட்சணமாக இருந்தாலும் வீரமாதேவியின் கண்களுக்கு ஏனோ அவலட்சணமாகவே காட்சியளித்தன.

தன் மகனை வீரமாதேவி விரும்பவில்லை என்பது பழுவேட்டரையருக்குத் தெரியும். வீரனுக்கு அழகு தேவையில்லை; அதேபோல் பெண்களுக்கு அழகு வீரனை மணப்பதுதான். சோழநாட்டில் வீரம்தான் முதன்மையாக நிற்பது வழக்கம். விஜயாலய சோழரை அழகர் என்று கூறமுடியாது. முகத்தில் போரிலே பெற்ற புண்களால் ஏற்பட்ட வடுக்கள்! தந்தையாகப் பார்த்து இவனை மணக்க வேண்டும் என்றால் பெண் மணந்து கொள்ள வேண்டியதுதான். பெண்ணின் கருத்துக்கு அங்கே இடமேது?- ஆனால் பராந்தகன் போக்கு விசித்திரமாக இருந்தது. மகள் விருப்பத்தைக் கேட்டுத்தான் நடக்க வேண்டுமாம். மகள்-மகள் என்று உயிரையே விட்டுவிடுகிறாரே. அவர் உயிரே மகளால் போய்விடுமோ?

பழுவேட்டரையர் மனத்தில் பல்வேறு எண்ணங்கள். எண்ணமெல்லாம் சீறிச்சீறிப் பாய்ந்தன. அவர் நடையைத் துரிதப்படுத்தின. பூமி அதிர்ந்தது; மேலே அணிந்திருந்த அங்கி நழுவியது. கண்கள் சிவந்து கோபத்தீயை உமிழ்ந்தன. சோழ சாம்ராஜ்யத்தையே அழித்து விடுவது போன்ற கோபம் பொங்கி வந்தபோது அவர் ஒரே மகன் எதிரே வந்துநின்றான்.

தஞ்சையில் நடந்த அரச குடும்பத்துத் திருமணத்துக்குத் தன்னையும் தந்தை அழைத்துச் செல்லவில்லை எனும் ஆத்திரம் அவனுக்கு இருந்தது; ஆத்திரத்தைத் தந்தையிடம் புலப்படுத்த விரும்பினான். தந்தையிடம் பொய்க் கோபத்தைப் புலப்படுத்தி அவரது வாஞ்சையான வார்த்தைகளைப் பெற வேண்டும் என்பது அவன் எண்ணம். போர்க்களத்திலே விந்தை பலசெய்தாலும் தந்தையின் எதிரே அவன் செல்லக் குழந்தை. கொஞ்சலும் கெஞ்சலும் மிஞ்சி நிற்கும். இன்றும் அதைப் போன்ற எண்ணத்தில்தான் வந்தான்.

''கலியாணத்திலே விருந்து ரொம்பப் பலமாமே'' என்று தொடங்கினான் சேந்தன்.

'ஹூம்' என்ற உறுமல் மட்டுமே வந்தது.

''எங்கே அப்படியே விருந்தில் மயங்கி இருந்துவிடுவீர்களோ என்று நினைத்தேன்'' என்றான் அசட்டுச் சிரிப்புடன்.

பழுவேட்டரையர் ஒரு கணம் நின்று திரும்பி விழுங்கி விடுபவர்போல் பார்த்தார்.

''ஏனப்பா என்னை அழைக்கவில்லை?''

''எதற்காக?''

''எதற்காகவா? எதற்கு எல்லாரையும் அழைப்பார்கள்? உங்களை எதற்கு அழைத்தார்கள்?'' இப்படிக் கேட்டு விட்டுச் சிணுங்கினான் பழுவேட்டரையர் மகன்.

பழுவேட்டரையர் சீற்றம் ஒருகணத்தில் மறைந்தது. மகனின் அறியாமையை எண்ணி வேதனைப்பட்டார். 'இருபது வயதுக் கட்டிளங்காளை, புஜபலம் மிக்கவன்- ஆனால் இன்றளவும் குழந்தைபோல் மனப்பான்மையுடையவனாயிருக்கிறானே...



இவனை அழைக்கவில்லையாம், இவனை!' என்று தானே ஒருமுறை கூறிக் கொண்டார்.

''என்னை அவர்கள் அழைக்கவில்லை என்றுதானே சொல்கிறீர்கள்? அழைக்கா விட்டால் போகிறார்கள். சோழநாட்டு அரசுரிமையே எனக்கு வந்துவிடப் போவதாகச் சொன்னீர்கள். அதுதான் இல்லையென்றால் திருமண வைபவத்திலாவது நான் கலந்து கொண்டிருக்கலாம்... எத்தனையோ தேசத்து ராஜ குமாரர்கள் கலந்து கொண்டார்களாம்... அவர்கள் வீரமாதேவியின் கொள்ளை அழகைப் பாராட்டிக் கொண்டே நம் ஊர் வழியாகத்தான் சென்றார்கள்.... ஏனப்பா நான் இராஜகுமார னல்லனா? நம் நாடு சுதந்தர அரசு இல்லையா?''

தன் மகனின் குரலில் வெளிப்பட்ட வேதனையைக் கண்டார் பழுவேட்டரையர். மீண்டும் அவருக்கு ஆத்திரம் பொங்கியது.

''ஆமாமடா! உனக்காகத்தான் பராந்தகன் மகள் தவமிருந்தாள். நீ கிடைக்காததால் அவள் வேற்று நாட்டு அரசகுமாரனை மணந்தாள். நீ வரவில்லையே என்று அங்குள்ளவர்கள் எல்லாரும் வருத்தப்பட்டனர்'' என்று கோபத்திலும் நகைச்சுவை உணர்ச்சி மேலிடக் கூறினார். பிறகு உரத்த குரலில் ''அடே! இனி சோழநாட்டையும் சோழ மகளையும் நீ மறந்துவிட வேண்டும். அவளைப் பற்றிய பேச்சே எடுக்கக்கூடாது''எனவும் ''ஏனப்பா?'' என்று அவன் கேட்டான்.

''என் மகன் என்று நீ பிறந்தாயே. யுத்த பூமியில் மட்டும் இருக்கத்தான் நீ ஏற்றவன். உன்னைப்பற்றி வீரமாதேவி கேலி செய்வது சரியாகத்தானிருக்கிறது...''

''என்னைக் கேலி செய்கிறாளா?.. என்னவென்று சொல்கிறாள்...?''

''சேந்தா! அதைப்பற்றிய பேச்சே இனி வேண்டாம். உனக்குப் பெண் தர எத்தனையோ நாட்டரசர்கள் காத்திருக்கிறார்கள். நான் நினைத்தது வேறு நடந்தது வேறு. அதிர்ஷ்ட மற்றவன் நீ...''

''அதிர்ஷ்டம்- தந்தையே! அதிர்ஷ்டம் என்பதை நீங்களும் நம்புகிறீர்களா? அதிர்ஷ்டம் நம் கரத்திலே இருக்கிறது. அரிசிலாங்றங்கரைப் போர்க் களத்திலே நீங்கள் வாளெடுத்துச்

சுழற்றியிராவிடில் கையகல சோழநாடு கடல் போல் பரந்திருக்குமா? போதும்போதும் அந்த அதிர்ஷ்டத்தை நம் கரத்தில் ஏற்றுக் கொள்வோம்...''

''சோழ நாட்டிற்கு உதவி செய்ய நாம் அப்போது திடீரென வந்து குதித்தோமே அதுவே அதிர்ஷ்டம். இப்போது பராந்தகர் இரட்டர்கள் உறவை நாடிச் செல்கிறார். அது அவர்கள் அதிர்ஷ்டம்...நீ ஏமாந்து போனாயே அது உன் அதிர்ஷ்டம்..''

''அப்படி இன்னொரு முறை சொல்லாதீர்கள் தந்தையே! சோழ அரசகுமாரியை மணக்க நானா துடித்தேன்? தஞ்சைக்குப் போய்த் திரும்பி வரும்போது ஒவ்வொரு முறையும் நீங்கள்தாமே அவள் அழகை வர்ணிப்பீர்கள். அவளை நான் மணந்து கொண்டால் ஏற்படப் போகும் சௌகரியங்களை அடிக்கடி கூறி வந்தீர்கள்...''

''ஆமாம் ஆமாம். நான்தான் கூறினேன். அழகு நிறைந்தவள் அவள் என்பதற்காகவா அவளை நீ மணக்க வேண்டும் என்று கூறினேன்? அரச காரியங்களுக்காக அவ்வாறு தெரிவித்தேன். சோழ நாட்டின்மீது எனக்கிருக்கும் மதிப்பும் மரியாதையும் என்னை அவ்வாறு திட்டமிடச் செய்தன. சோழ அரசகுமாரியை நீ மணப்பதால் சோழ நாட்டின் அரசராக நீ ஆகிவிடுவாய் என்று நான் எண்ணவில்லை. மணவினைத் தொடர்பால் நம் அன்பும் மரியாதையும் மேலும் மேலும் பெருகும் என நினைத்தேன். பராந்தகருக்கு அது பிடிக்கவில்லை போலும்..''

''உங்கள் கருத்தை மதிக்காத அந்த இடத்தில் நமக்கென்ன வேலை? இனி நீங்கள் அந்தப் பக்கமே செல்ல வேண்டாம். ஆண்டு தோறும் திறையனுப்புவதை நிறுத்திவிடுவோம். மூலபலப் படையில் இருக்கும் நம் ஊர் வீரர்களைத் திரும்பவும் இங்கே அழைத்துக் கொள்வோம்...''

''ஹூம். பராந்தகர் என்ன செய்வார்? தன் மகளின் விருப்பம் என்னவோ அதன்படி அவர் நடக்கிறார். வீரமாதேவிக்கு உன்னைக் கண்டால் பிடிக்கவில்லை..''

பராந்தகர் இவ்வாறு கூறி நிறுத்தியவுடன் அங்கே சற்று நேரம் மௌனம் நிலவியது. பழுவேட்டரையர் மகனுக்குக் கோபம் உச்ச நிலையை அடைந்தது.



''தந்தையே! இவற்றையெல்லாம் அறிந்தும் நீங்கள் அமைதியாக இருந்தீர்களே, அதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது. பெண் ஒருத்தியின் பேச்சைக் கேட்டு மாமன்னர் செயல் புரிகிறார் என்றால் அவர் நட்பே நமக்கு வேண்டாம். இந்தக் கணத்திலிருந்து என் வாள் சோழ குலத்துக்கு ஆதரவாகப் பயன்படாது, இது உறுதி. நான் மலைநாட்டிற்கும், கங்க நாட்டிற்கும் சுற்றுப்பயணம் செய்யச் செல்கிறேன். நீங்கள் வழக்கம்போல் தஞ்சையிலிருந்து சோழர்குல வெற்றிக்குப் பாடுபட்டு வாருங்கள்...'' என்று கூறிவிட்டுத் திரும்பியும் பாராமல் அங்கிருந்து வேகமாகச் சென்றுவிட்டான்.

பழுவேட்டரையர் கோபம் பறந்துவிட்டது. தன் மகனின் சாதுரியக் குறைவைப் பற்றிய அவரது தவறான எண்ணமும் மறைந்தது. மகன் ஒரு கணத்தில் செய்து சென்ற சபதத்தைக் குறித்த சிந்தனையிலாழ்ந்தார்.

மகன் கோபமுற்றுச் சென்றபிறகு பழுவேட்டரையர் அமைதியாக அமர்ந்து சிந்தித்தார். அவன் கோபங்கொண்டு சென்றதற்கு தானே பெருமளவு காரணம் என்ற முடிவுக்கு வந்தார். சோழநாட்டின் மீது எப்போதும் போல் அன்பு பாராட்டுவதா அல்லது விரோத மனப்பான்மையுடன் இருப்பதா எனும் சிந்தனைக் குழப்பத்தில் அவர் மனம் தத்தளித்தது.

தம் மகளுக்கு மணம் முடித்த விஷயத்தில் பராந்தக மாமன்னர் செய்தது தவறு என்ற முடிவுக்கு வந்தார். வீரமாதேவியின் அகம் பாவமும், பராந்தகனின் அலட்சியமும் அவர் எதிரே எப்போது தோன்றினாலும் ஆத்திரத்தை விளைவித்தது.

கோபம் சற்று நீங்கினவராய் அவர் மாளிகையின் வெளியே வந்தபோது அங்கே சென்னிவளவன் கைகட்டி அடக்கமாக நின்று கொண்டிருப்பதைக் கண்டார். அவன் பழுவேட்டரையருக்கு அந்தரங்கமான சேவகன். பழுவேட்டரையர் தம் மகனுடன் பேசிக் கொண்டிருந்தபோதே சென்னிவளவன் வந்துவிட்டான். தந்தையும் மகனும் பேசிக் கொண்டிருந்தபோது இடையே அவன் நுழைய விரும்பவில்லை. பழுவேட்டரையர் மகன் சபதமிட்டுச் சென்றபோதுகூட அவனைத் தடுத்து நிறுத்தச் சென்னிவளவன் விரும்பினான். ஆனால் தூணோடு தூண் நின்றவன் ஏதோ சிந்தித்தவாறே இருந்து விட்டான்.

சென்னிவளவன் ஏதோ சிந்தித்தவாறு கைகட்டி நிற்பதைப் பார்த்த பழுவேட்டரையர் தொண்டையைக் கனைத்தார். பழுவேட்டரையர் வெளியே வந்துவிட்டதறிந்து திடுக்கிட்ட சென்னிப் பேரரையன் வணங்கி நின்றான்.

''சென்னி வளவா! உன்னைப் பார்த்துப் பல நாள்களாகிவிட்டன என நினைக்கிறேன். அப்படித்தானே?'' என்று அவனுடன் பேச்சுக் கொடுத்து அவனது சுகசௌக்யங்களை விசாரித்தார்.

சென்னி வளவன் தன் நலனைப் பற்றிச் சுருக்கமாகக் கூறிவிட்டு, தான் சென்று வந்த இடங்களைப் பற்றிக் கூறினான்.

சென்னி வளவன் மாறு வேடத்தில் மேலைக் கங்கநாட்டில் இதுவரையில் உலவிவந்தான். மேலைக் கங்கநாட்டில் பெரும் கலகம் ஏற்பட்டு விக்கியண்ணன் இறந்துவிட்ட செய்தியையும் பூதூகன் அரியணையைக் கைப்பற்றிக் கொண்டு விட்டான் எனும் செய்தியையும் வளவன் பழுவேட்டரையரிடம் தெரிவிக்கவும் பழுவேட்டரையர் ஒருகணம் ஏதும் பேசாமல் நின்று விட்டார்.

''விக்கியண்ணன் இறந்து விட்டானா?'' என்று பழுவேட்டரையர் வியப்பும் அதே போதில் திடுக்கிடும் உணர்ச்சியும் நிறைந்தவராய்க் கேட்டார். விக்கியண்ணன் சோழ நாட்டின் தோழன். அவன் தந்தை பிருதிவிபதியைப் போன்று போர்க்களத்தில் தோளோடு தோள்கொடுத்து வெற்றிக்கு உதவியவன்.

அந்தப் பழைய சம்பவத்தைப் பழுவேட்டரையர் ஒரு கணம் நினைத்துக் கொண்டார். 'ஹூம்' என்ற பெருமூச்சு அவரிடமிருந்து வந்தது.

''சோழ நாட்டிற்கு எலும்பையும் தோலையும் தராதவர்களே எவருமிலர் வளவா!'' என்று தலையை ஆட்டியவாறு கூறிய பழுவேட்டரையர் ''வளவா! விக்கியண்ணன் இறந்துவிட்டான் என்றவுடனே என்னுடலில் ஒருவித ஆட்டம் ஏற்படுகிறது. அவனைப் பார்த்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்றாலும் இந்த இளம் வயதிலேயே எத்தகைய வீரச் செயல்களைச் செய்திருக்கிறான் தெரியுமா?''என்றார்.



''ஆமாம் ஆமாம்; நீங்கள் முன்னரே சொல்லியிருக்கிறீர்கள்... 'செம்பியன் தமிழவேள்' எனும்பட்டப் பெயரை மன்னர் ஆதித்த கரிகாலர் அளித்தார் என்றும் சொல்லியிருக்கிறீர்கள்...''

''ஆதித்த கரிகாலருக்கு அந்தக் காலத்தில் உடன் இருந்து போர்க்களத்தில் உதவி செய்தவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம் வளவா! விக்கியண்ணனுக்கு எத்தகைய கௌரவம் அளிக்கப்பட்டது தெரியுமா? பாராட்டுப் பட்டம் வழங்கினர். தவிசும், சாமரையும், சிவிகையும், திமிலையும் அளித்துப் போற்றினர். அந்த விக்கியண்ணன் இறந்துவிட்டான்'' இதைச் சொல்லும்போது அவரது நெஞ்சு வேதனையால் விம்மியது.

விக்கியண்ணன் கொல்லப்பட்டதோடு கூட பிருதிவி பதியை வயதான காலத்தில் பூதூகன் சிறையிலிட்டு விட்டான் என்ற செய்தி பழுவேட்டரையரை மேலும் திடுக்கிடச் செய்தது.

இரண்டாம் பூதூகனின் எண்ணம் வென்றது. விக்கியண்ணனைக் கொன்று பிருதிவிபதியைச் சிறைபிடித்துக் கங்கநாட்டில் சோழர்களின் நண்பர்களை ஒழித்து விடவேண்டும் எனும் அவன் திட்டம் பலித்தது.

பழுவேட்டரையர் வேதனையை வெளிக்குக் காட்டாமல் ''சரி..சரி... இந்தத் துயரச் செய்தியைத் தவிர வேறேதாவது தகவல் கொண்டு வந்திருக்கிறாயா?''என்று சாதாரணமாக ஏதோ கேட்பதுபோல் கேட்டார்.

வளவன் திடுக்கிட்டான். இதைவிட இன்னும் செய்தி வேறு வேண்டுமா? மேற்கிலும் சோழ நாட்டிற்குப் பெரும் பகை மேகம் திரளும் இந்தச் செய்தியைத் தவிர வேறு வேண்டுமா? வளவன் வியப்புடன் பழுவேட்டரையரை நோக்கினான்.

''ஆமாம்...ஆமாம்... வேறேதாவது செய்தி இருந்தால் சொல்லு. பிருதிவிபதி சிறையில் நன்றாக வாடட்டும். பூதூகன் குதித்துக் கும்மாளமிடட்டும். பூதூகனுக்கு மகளிருக்கிறாளா?...'' பழுவேட்டரையர் இப்படிக் கேட்கவும் வியப்புடன் நோக்கிய வளவன், எதற்கு எனும் கேள்விக் குறியை எழுப்பினான்.

''என் மகன் சேந்தனுக்கு மணம் புரிந்து வைக்கத்தான். நீ ஆச்சர்யப்படுவாய் அல்லவா? நன்றாக ஆச்சர்யப்படு. நன்றிகெட்ட சோழ நாட்டிற்கு உதவி செய்வதைவிட விரோதியுடன் கைகோத்து உலவலாமே''என்றார்.

சென்னிவளவன் நொடியில் புரிந்து கொண்டுவிட்டான். சோழ குமாரியைத் தன் மகனுக்கு மணம் புரிந்து வைக்க முடியவில்லை எனும் ஆத்திரத்தில் பழுவேட்டரையர் அவ்வாறு பேசுகிறார் என்பது அவனுக்குத் தெரிந்துவிட்டது.

''தலைக்காட்டிலும்சரி, கங்கநாட்டிலும் சரி வீரமாதேவியின் விவாகத்தைப் பற்றித்தான் பேச்சு. இராட்டிரகூடர்களுடன் நட்பைப் பலப்படுத்திக் கொள்ளப் பராந்தக மாமன்னர் செய்த இந்தச் செயல் பூதுகனைக் கூடத் தூக்கி வாரிப் போட்டு விட்டது...'' என்று வளவன் பேசுவதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் பழுவேட்டரையர் ''அங்கு கூடப் பேசிக் கொள்கிறார்களா? நன்றாகப் பேசிக் கொள்ளட்டும். பெண்ணின் விருப்பப்படி ஆடும் சக்கரவர்த்தியின் செயலைப்பற்றி நன்றாகப் பேசிச் சிரிக்கட்டும்''என்றார்.

பிறகு ஏதோ யோசனையில் இங்கும் அங்கும் உலவியவர் வேகமாகச் செல்லத் தொடங்கினார். வளவனும் பின் தொடர்ந்தான். ''வளவா! நீ போய் இளைப்பாறு. பூதுகன் பட்டம் ஏறினாலென்ன, குந்தள அரசன் கலியாணம் செய்து கொண்டாலென்ன? இனி நமக்கு அவற்றைப் பற்றிக் கவலையில்லை..'' என்று உரத்த குரலில் கூறிவிட்டு நடந்த பழுவேட்டரையரை ஒரு குரல் நிற்கவைத்தது.

''அதெப்படி முடியும் பழுவேட்டரையரே! பூதுகன் பட்டம் ஏறியதை அவ்வளவு எளிதில் விட்டுவிட முடியுமா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் பாம்புணிக் கூற்றத்தைச் சேர்ந்த அரசுருடையாரான தீரன் சென்னிப் பேரரையர்.

அவர் பழுவூருக்கு எங்கே வந்தார் என்று திகைத்து ஒருகணம் நின்றார் பழுவேட்டரையர்.

⁂



## 11

தீரர் சென்னிப் பேரரையருக்கும் பழுவேட்டரையரின் வயது இருக்கலாம். பழுவேட்டரையரும், சென்னிப்பேரரையரும் வெள்ளூர்ப் போரில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரிவுப் படைகளுக்குத் தலைமை வகித்தனர்.

வெள்ளூர்ப் போர்க்களம் பராந்தகனுக்குப் பெரும் புகழை அளித்தது. இராசசிம்ம பாண்டியன் அந்தப் போர்க்களத்தில்தான் தோல்வியுற்றான். வெள்ளூர்ப் போர்க்களம் பேய் நடமாடும் மண்ணாக விளங்கியது. ஆயிரம் பதினாயிரம் யானைகளும் குதிரைகளும் அந்தப் போர்க்களத்தில் உயிரிழந்தன. இராசசிம்மனுக்கு உதவுவதற்காக ஈழத்து மன்னன் சக்க சேனாபதியின் தலைமையில் ஏராளமான படைவீரர்களை அனுப்பியிருந்தான். சக்க சேனாபதியின் தோற்றமும், அவனது இடி முழக்கம் போன்ற குரலும் மாற்றாரைக் கதிகலங்க வைத்தன. குற்றுயிருடன் கிடந்த ஈழத்துப் படைவீரர்களின் மரண ஓலத்தைக் கேட்ட, ரத்த வெள்ளத்தில் மாண்டு கிடந்த பாண்டிய வீரர்களின் கதியைக் கண்ட சக்க சேனாதிபதி அஞ்சிப் பின் வாங்கினான். ஈழப்படைகள் செத்தோம் பிழைத்தோம் என ஓடின. இராசசிம்மனும் போர்க்களம் விட்டு ஓடி ஒளிந்தான். போர்க்களத்தின் நடுவிலேயே பராந்தகர் பழுவேட்டரையரையும் சென்னிப் பேரரையனையும் புகழ்ந்து பாராட்டினார். மதுரை நகரில் முடிசூட்டு விழா நடைபெற்றபோது பழுவேட்டரையருக்கும், சென்னிப் பேரரையனுக்கும் பரிசுகள் வழங்கிப் புகழ்ந்த வார்த்தைகள் இருவர் இதயத்திலும் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அதன்பிறகு அவர்களுக்குச் சோழநாட்டின் மீது மதிப்பும் மரியாதையும் அதிகமாயின.

இவை நடந்து பதினெட்டாண்டுகள் கழிந்து விட்டன என்றாலும் வெள்ளூர்ப் போர்க்களத்திலே தொடங்கிய சோழநாட்டுத் தொண்டு நாளுக்கு நாள் அதிகமாகியே வந்தது. பழுவேட்டரையர் சென்னிப்பேரரையனைப் பல முறை சந்தித்திருக்கிறார். என்றாலும் மேலுக்குத்தான் ஒருவருக் கொருவர் அன்புடன் பேசிக் கொள்வார்களேயன்றி உள்ளத்தில்

பொறாமைதான். 'தீரன் சென்னிப் பேரரையன்' எனும் பட்டம் பழுவேட்டரையருக்கு ஆத்திரத்தை விளைவித்தது. அதேபோன்று பழுவேட்டரையருக்குத் தஞ்சையில் ஏற்பட்ட செல்வாக்கும் அவர் தனாதிகாரியாக மாறியதும், கோட்டைக் காவல் பொறுப்பு அவரிடம் ஒப்புவிக்கப்பட்டதும் சென்னிப் பேரரையருக்கு எரிச்சலை யூட்டின. அதைத் தவிர சோழ நாட்டுக் குறுநில மன்னர்களுக்கு இல்லாத தனிமதிப்பு பழுவூராருக்கு அளிக்கப்படுவது பொறாமையை வளர்த்தது. சென்னியூரார் இதயத்திலுள்ள இந்த எண்ணத்தை வெளியே ஒருபோதும் புலப் படுத்திக் கொண்டதே இல்லை. பழுவேட்ட ரையரும் அப்படியே. சந்தித்துப் பழகும்போது இருவரும் சோழநாட்டின் வளர்ச்சியைப் பற்றிப் பேசுவர். சோழ நாட்டின் விரோதிகளை அழிக்கத் திட்டம் தீட்டுவர். தஞ்சையிலே நடைபெற்ற திருமண வைபவத்திலே பழுவேட்டரையரும், சென்னிப் பேரரையரும் போட்டி போட்டுத் தொண்டாற்றியபோது இருவரும் ஏதும் பேசிக் கொள்ளவில்லை. ஒரே ஒருமுறை சென்னிப் பேரரையர் பழுவேட்டரையரைப் பார்த்துக் கேட்டார்: ''வீரமாதேவியின் பிடிவாதம் கோவிந்தனைப் பார்த்தவுடன் மாறிவிட்டது போலிருக்கிறதே... பிடிவாதம் மறைவது நியயாம்தானே! கோவிந்தனின் அழகே அழகு... எனக்குப் பெண் இருந்தால் நான் எப்படியாவது கோவிந்தனை மணம் புரியுமாறு செய்திருப்பேன்'' என்றார்.

பழுவேட்டரையர் ஏதோ சொல்ல வாயெடுத்தார். அடக்கிக் கொண்டார். சுடச்சுட ஏதாவது சொல்ல வேண்டும் எனும் துடிப்பு அவருக்கிருந்தது. திருமணச் சந்தடியில் வாய்ப்பு நேரவில்லை. இப்போது அவரே தேடிவந்து விட்டார். அவரை வம்புக்கிழுக்கலாம்; இதுவரையில் உள்ளத்தில் மறைத்து வைத்திருந்த கோபத்தையும் பொறாமையையும் கொட்டலாம். அவருடன் விரோதித்துக் கொண்டுவிட்டால் இனி என்ன நேர்ந்து விடப் போகிறது?

''சென்னிப்பேரரையரே! வர வேண்டும் வரவேண்டும். ஹூம்... வெறும் சென்னிப் பேரரையர் என்று கூறிவிட்டேனா? பொறுத் தருளுங்கள் 'அரசுருடையார் வீரர் சென்னிப் பேரரையர்' என்று சொல்ல வேண்டுமல்லவா?'' என்று வரவேற்றார் பழுவேட்டரையர்.



பழுவேட்டரையர் சற்றுக் குதர்க்கமாகப் பேசத் தொடங்கி விட்டார் என்பதைச் சென்னிப் பேரரையர் உணர்ந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல், ''என்ன சோழநாட்டுத் தனாதிகாரி அவர்களே! திடீரென்று உங்களுக்கு என்ன நேர்ந்துவிட்டது? கலியாண வேலை களில் மிதமிஞ்சி ஈடுபட்ட களைப்பு தங்களை வெறுப்புடன் பேசச் சொல்கிறதோ?'' என்றார். பழுவேட்டரை யரால் மௌனமாயிருக்கவும் முடியவில்லை, அதேபோது சென்னிப் பேரரையருக்குத் தக்க மறுமொழி கூறாமலிருக்கவும் இயலவில்லை. அவரிடமிருந்து உறுமல் ஒன்று வெளிப்பட்டது.

''தீரரே! நீர் இப்படியும் பேசுவீர்; இன்னமும் பேசுவீர். ஏனென்றால் நீங்கள் மாமன்னர் பராந்தகரால் பாராட்டப் பெற்றவரல்லரோ?'' என்று பழுவேட்டரையர் சென்னிப் பேரரையரின் முகத்தைப் பார்த்தவாறு பேசினார்.

சென்னிப் பேரரையர் கடகடவென்று சிரித்தார். ''பழுவேட்டரையரே! நன்றாகச் சொன்னீர். உங்களுக்கு இருக்கும் செல்வாக்கை விடவா எனக்கு மன்னரிடம் ஏற்பட்டுவிட்டது? ஏதோ பட்டமும், விருதும் கொடுத்து விட்டதோடு நான் திருப்தியடைந்து விடுவேன் என்று எண்ணிவிட்டார் மன்னர். உங்களுக்கு அப்படியல்லவே! நீங்கள் சோழ நாட்டுத் தனாதிகாரி. படைகள் உங்கள் கரத்தில். உங்கள் எண்ணத்துக்கு விரோதமாக நீங்கள் இட்ட கோட்டைக் கூட மன்னர் தாண்ட மாட்டாரே? அப்படியிருக்கும்போது நான் பட்டம் பெற்றதைப் பிரமாதப் படுத்துகிறீர். வேண்டுமானால் உங்களுக்கும் அதிதீரப் பராக்கிரமப் பழுவூர் பேரரசர் என்று பாராட்டி விருது வழங்குமாறு அரசரைக் கேட்டுக் கொள்கிறேன்...'' என்று கூறினார். பழுவேட்ட ரையர், சென்னிப் பேரரையர் நகைத்தது போல் நகைத்தார். ''யாருக்கு வேண்டும் பேரும் புகழும்? உழைத்தது போதும் இந்த நாட்டுக்கு. நன்றியற்றவர்கள்; நீங்கள் என்ன சொன்னீர்கள்? பராந்தகர் நான் இட்ட கோட்டைத் தாண்ட மாட்டார் என்றா பொறமைப்படுகிறீர்? அதற்கும் காலம் வந்து விட்டதய்யா... பராந்தகர் தன் விருப்பப்படி செயலாற்ற முனைந்து விட்டார். இப்போது நடைபெற்ற இளவரசியின் திருமணம் அவர் விருப்பப்படியே நடைபெற்றதுதானே?''

*

## 12

''இளவரசியின் திருமணத்தை அவர் முடிவு செய்யாமல் வேறு யார் முடிவு செய்வதாம்?''

''ஓகோ! சென்னிப் பேரரையரே! நீர் பராந்தகர் கட்சியில்தான் பேசுவீர். அந்தத் திருமணம் பராந்தகரும் முடிவு செய்ததில்லை தெரியுமா... இளவரசியே முடிவு செய்தது.''

''அதுவும் சரிதான். சுயம்வரம் என்பதன் பொருள் என்ன தெரியுமா?''

''சென்னிப் பேரரையரே! உம்மிடம் நான் விவாதம் செய்யும் மன நிலையிலில்லை. வேறு ஏதாவது பேசுவதென்றால் பேசுவோம்''.

''பழுவேட்டரையரே! உங்கள் மனநிலை சரியில்லை என்பதை நான் புரிந்து கொண்டேன். திருமண விஷயத்தில் உங்களுக்குக் கசப்புவரக் காரணமே இல்லையே''

''ஏனில்லை? இளவரசிக்கு ஏற்ற மணாளன் இங்கில்லையா? கொடும்பாளூரார் மகன் இல்லையா?''

பழுவேட்டரையர் இவ்வாறு கூறியது கேட்டுச் சென்னிப் பேரரையர் 'ஹோ ஹோ' என்று நகைத்தார்.

''பழுவேட்டரையரே! எல்லாம் விசித்திரமாய் இருக்கிறது. கொடும்பாளூரார் மகனுக்கு மணம் முடிப்பதில் உங்களுக்கென்ன அவ்வளவு அக்கறை? அவனைக் கண்டாலே உங்களுக்குப் பிடிக்காதே!''

''சென்னிப் பேரரையரே! நீர் என்னுடன் விதண்டாவாதம் செய்து சண்டை போட வந்திருக்கிறீரா? நான் சொல்வதற்கெல்லாம் மறுத்துப் பேசி என்னைச் சீண்டிப் பார்க்கவா வந்தீர்? இளவரசியின் திருமணத்தால் ஏற்பட்ட பெரும் விளைவு உமக்குத் தெரியுமா தெரியாதா?..'' என்று பழுவேட்டரையர் உரத்த குரலில் பேசவும் சென்னிப் பேரரையர் மெல்ல நகைத்து, ''கோபம் தணியுங்கள், கோபம் தணியுங்கள்.



உங்களுடன் வாதிடவோ, போரிடவோ நான் வரவில்லை. வேறுசில பேசவந்தேன். நீங்கள் தானே திருமணம் குறித்துப் பேசத் தொடங்கினீர்கள்? இளவரசியின் திருமணம் குறித்து நான் வாதிட விரும்பவில்லை. நான் வந்த நோக்கத்தைச் சொல்கிறேன்''என்றார்.

பழுவேட்டரையரின் சீற்றம் சற்றுத் தணிந்தது. ''உங்களை நிற்க வைத்தே பேசி விட்டேன்... இப்படி வாருங்கள்; அமர்ந்து பேசுவோம்''என்று கூறி அருகேயிருந்த கொடி வீட்டிற்கு அழைத்துச் சென்றார். கொடிவீட்டின் நடுவே இருந்த மேடையில் இருவரும் அமர்ந்தனர்.

பழுவேட்டரையர் தனக்கேற்பட்ட மனக் கசப்பிற்கான காரணத்தைச் சிறிது சிறிதாக விளக்கினார். குரலும் மெல்ல எழுந்தது. அது மெல்ல ஆத்திரமாக வளர்ந்தது. தீயை உமிழ்ந்தது. தீராத பகையைக் கக்கியது.

''பராந்தக மாமன்னர் எனக்கு உரிய மதிப்புக் கொடுத்து வந்தார் என்பது வெளிக்கு உண்மைதான். ஆனால் அது ஒருசமயம் விஸ்வரூபமெடுத்தது. தன் மகள் பேச்சைக் கேட்டு என்னை அலட்சியம் செய்திருக்கிறார். என் மகனைக் குரூபி என்று இளவரசி வர்ணித்திருக்கிறாரய்யா. அதற்கெல்லாம் நான் கவலை கொண்டதேயில்லை. சிறு குழந்தைப் பேச்சு என்று தள்ளி விட்டேன். இராட்டிரகூட மன்னன் மாறு வேடத்தில் சோழ நாட்டில் வந்து சுற்றியிருக்கிறான்''.

''ஐயோ..''

''பழையாறைத் தோட்டத்தில்கூட இளவரசியையும் மாறுவேடத்தில் சந்தித்துப் பாட்டும் கூத்தும் கும்மாளமுமிட்டிருக்கிறான்.''

''நம் ஒற்றர் படைகள் என்ன செய்தன?''

''ஒற்றர் படைகள் கண்ணிலும் மண்ணைத் தூவி விட்டனர் அவர்கள். ஆனால் நான் முதல் பார்வையிலேயே வேற்று நாட்டு ஒற்றன் என்று மன்னரிடம் எச்சரித்தேன்.''

''ஏற்கவில்லையா?''

''ஏற்காததோடு அவர் மகள் சொன்னாளாம் அது தன் சொந்த விஷயமென்று; அதைக் கேட்டுச் சும்மாயிருந்தார்.''

''ஹூம்...''

''பிறகு சில நாள்கள் கழித்துத் திருமண ஏற்பாடு நடைபெற்றது. நான் என் கருத்து வேற்றுமையைக் கண்டிப்பாகக் கூறினேன். பாண்டிய இளவரசனுக்காவது, அல்லது கொடும்பாளூர் இளவரசனுக்காவது மணம் புரிந்து வைக்கலாமென்று தெரிவித்தேன்.''

''ஆம், ஆம்; பாண்டியகுமாரனுக்கு மணம் முடித்திருந்தால் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் இருந்து வந்த தீராப் பகையை எளிதில் தீர்த்திருக்கலாமே.''

''அதுதான் இல்லையென்றாலும் கொடும்பா ளூராருக்கு மன மகிழ்ச்சி அளிக்குமாறு அவர் மகனுக்கு மணம் பேசியிருக்கலாம். என்மேல் கொடும்பாளூராருக்கு உள்ள தீராத கோபத்தைத் தீர்த்திருக்கலாம்.''

''ஏன் உங்கள் மகன் சேந்தனுக்குத்தான் என்ன... உங்களுக்காக மன்னர் இதைக்கூடச் செய்யக் கூடாதா.''

சென்னிப் பேரரையர் இதைக் கூறியதும் பழுவேட்டரையர் ஆத்திரத்துக்கு மேலும் தூபமிட்டது போலாகியது. 'ஹூம்' என்று பழுவேட்டரையர் சீறினார். ''என் மகனுக்கு நல்ல வேளையாக அந்தக் கர்வக்காரியை மருமகளாக்கிக் கொள்ளாமல் இருந்தேன். தான் மிக அழகி என்று அவளுக்குக் கர்வம். இனி அதைப்பற்றி ஏதும் பேசாதீர்கள். எனக்கும் சோழநாட்டிற்கும் உள்ள உறவு இந்த அழகியின் திருமணத்தால் அற்றுப்போய் விட்டது'' என்று கர்ஜித்தார்.

சென்னிப் பேரரையர் நகைத்தார். ''பழுவேட்டரையரே! நாலுபேர் ஒப்புக் கொள்ள முடியாத காரணம் இது. நாம் ஆயிரம் சொன்னாலும் மன்னருக்குத் தன் விருப்பப்படி நடக்க உரிமையில்லையா? தன் மகளை அவள் விருப்பப்படி மணம் புரிந்து கொடுத்ததில் தவறென்ன உள்ளது? நான் உங்கள் கருத்தை ஏற்க மாட்டேன். நீங்கள் ஏதோ வேறுகாரணங்கள் சொல்லப் போகிறீர்கள் என்று இவ்வளவு நேரம் அமர்ந்து



கேட்டுக் கொண்டிருந்தேன். நான் வந்தது அதற்காகவன்று. பிருதிவீபதியை நாம் சிறையிலிருந்து மீட்கவேண்டாமா? அதைப் பற்றி உங்கள் கருத்தைக் கேட்கவே வந்தேன்.''

பழுவேட்டரையரின் மீசை துடித்தது. சென்னிப் பேரரையரை விழுங்கி விடுபவர் போல் பார்த்துவிட்டு ''ஹ! உட்கார்ந்து கேட்கப் பிரியமில்லையென்றால் நான் வற்புறுத்த மாட்டேன். அதே போன்று என் விருப்பப்படி செய்ய எனக்கும் உரிமையுண்டு. பிருதிவீபதி சிறையில் வாடட்டுமே! சோழ நாட்டிற்குத் தன் எலும்பையும் கொடுத்து உழைத்த பிருதிவீபதி கடைசியாக உயிரையுங் கொடுக்கட்டுமே! சென்னிப் பேரரையரே! இனி ஏதும் என்னிடம் சோழ நாட்டைப் பற்றிப் பேச வேண்டாம். வேறேதாவது சொந்த விஷயமாகப் பேசுவோம். பிரியமில்லாவிடில் நாம் எப்போதும் போல் நண்பர்களாகவே பிரிவோம்'' என்று கூறி விருட்டென்று எழுந்தார்.

சென்னிப் பேரரையர் எழுந்திராமல் உட்கார்ந்தவாறே இடிபோன்று நகைத்து ''பழுவேட்டரையரே! நீர் மட்டும் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்று எண்ணிக் கொண்டு விட்டீர்? ஹஹ்ஹஹ்ஹா...பழுவூரும் சோழ நாட்டின் ஒரு பகுதியே என்பதை மறந்து விட்டீரா? தஞ்சைக்கு ஆண்டுதோறும் பரிசாகப் பொன்னும், மணியும், தான்யமும் கொண்டு சென்று மாமன்னருக்குக் காணிக்கையாக்கி வருவதை மறந்து விட்டீரா?...'' என்று கூறும்போதே பழுவேட்டரையர் ஆத்திரம் மிகுந்தவராய் மீசை துடிக்க வார்த்தைகள் சிதற, உடல்பதற ''என்ன சொன்னீர்? பழுவூர் சோழ நாட்டிற்கு அடிமையா? எங்களுக்குத் தனிக் கொடி உண்டு. தனிச் சின்னம் உண்டு. உங்கள் அறியாமைக்கு வருந்துகிறேன். மதிப்பும் மரியாதையும் தெரிவிக்கக் காணிக்கை அளிக்கிறோமேயன்றி, அது கப்பம் அன்று. நான் அடிமையல்லன், பேரையரே! அடிமையல்லன். ஒரு காலத்தில் பல்லவ சாம்ராஜ்யத்திற்குச் சோழர்கள் காணிக்கையளித்துக் கப்பஞ் செலுத்தி வந்தனர். சமயம் வருவதை எதிர்பார்த்திருந்தனர். அதுபோன்று பழுவூருக்கும் வேளை வரும். அந்த வேளை இதோ வந்து கொண்டி ருக்கிறது'' என்று கூறவும் சென்னிப் பேரரையரும் கண் சிவக்க எழுந்து பழுவேட்டரையரை உற்று நோக்கி ''சோழநாட்டு விரோதிகளிடம்

உறவாட நான் என்றும் விரும்புவதில்லை. வருகிறேன். இறையருள் நல்ல முறையில் கூட்டுவித்தால் சந்திப்போம்'' என்று கூறிவிட்டு வேகமாகச் சென்றுவிட்டார்.

இவர்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவன் தலையை அசைத்தவாறு சற்று நேரம் இருந்துவிட்டு சென்னிப் பேரரையர் சென்ற பிறகு பழுவேட்டரையரை நோக்கி வந்தான். அவன் மேலைக் கங்க நாட்டிலிருந்து வந்த ஒற்றன்.

⁂

## 13

அநுபமாவின் விழிகள் தரையை நோக்கின. அப்போது வெள்ளங்குமரன் அவளைப் பார்த்தான். அவள் மெல்ல அவனைக் கடைக் கண்ணால் பார்த்தபோது அநுபமா தரையில் கால்விரல்களால் கோலமிட்டிருந்ததை வெள்ளங்குமரன் கண்டான். எவ்வளவு நேரம் மௌனமாயிருக்க முடியும்? ஒருவருமற்ற அந்த நேரத்தை இருவரும் தேர்ந்தெடுத்துத் தஞ்சை நந்தவனத்தில் சந்தித்தனர். வெட்கத்திற்கு வேளை தெரியாது. அது திடீரென வந்து குதித்து விடுகிறது. வீரன் வெள்ளங்குமரனுக்குப் பேச்சு வரவில்லை. ஆனால் பேசாமல் இருக்கவா அங்கு வந்தான்?

வீரமாதேவியின் திருமண வைபவத்தின் போது அநுபமாவுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு வெள்ளங் குமரனுக்குக் கிடைத்தது. தன் சகோதரியுடன் வெள்ளங்குமரன் பேசிக் கொண்டிருக்கும் வேளையில் இராசாதித்தன் வந்துவிட்டால், தான் வந்த சுவடு தெரியாமல் திரும்பி விடுவான். பிறகு அநுபமாவைச் சந்தித்தால் கேட்பான், ''வெள்ளங்குமரன் உன்னிடம் தன் வீரப் பிரதாபங்களை விளக்கிக் கூறுகிறானா? அவன் சொல்லாமலேயே நான் சொல்கிறேன் அநுபமா! அவன் கெட்டிக்காரன், வீரன், அழகன்கூட. இல்லையா? உன் அக்கா வீரமாதேவிக்குத்தான் அழகான கணவன் கிடைத்துவிட்டான் என்று நினைக்க வேண்டாம்; உனக்கும்தான் கிடைக்கப் போகிறான்... என்ன நான் சொல்வது?''என்று.



அநுபமாவின் முகம் நாணத்தால் சிவந்து விடும். இராசாதித்தன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தானா?

''ஆம், அநுபமா எல்லாவற்றையும் நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். அது என்ன அவன் நூறு வார்த்தை பேசினால் நீ ஒன்று பேசுகிறாய். வீரமாதேவியின் குணத்துக்கு நேர் விரோதமாயிருக்கிறாயே'' என்றான் இரசாதித்தன்.

''அந்த ஒரு வார்த்தை பேசுவதற்கே அண்ணன் கோபிக்கிறார்...'' என்று அநுபமா சொல்லலாமோ கூடாதோ என்று மெல்லக் கூறினாள்.

திடுக்கிட்ட குரலில் இராசாதித்தன், ''யார் கோபிக்கிறார்கள்? அரிஞ்சயனா? அவனுக்கு என்ன வந்துவிட்டது? நீ பேசினால் என்னவாம்?'' என்று கேட்டான்.

''நான் தனியே அவரைச் சந்திப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. பேசுவதும் பிடிக்கவேயில்லை.''

''ஒகோ! விசித்திரமாயிருக்கிறது அவன் போக்கு... அவனுக்கு ஏனோ நல்லதே பிடிப்பதில்லை..''

''இல்லை அண்ணா! வேறெதற்கும் அவர் என்னைக் கண்டித்ததில்லை. சேரநாட்டு வீரருடன் நான் பேசுவதற்குத்தான் அவர் கோபிக்கிறார்..''

''சேரநாட்டு வீரனா? வெள்ளங்குமரன் சேரநாட்டு வீரனாக வந்தான். சோழநாட்டவனாக மாறிவிட்டான்...''

''சாதாரண வீரன் தொடர்பு கூடாது'' என்று கூறுகிறார்.

''வெள்ளங்குமரன் சாதாரண வீரனா? அநுபமா! அவன் சோழநாட்டுத் துணைத் தளபதி: அவனை நான் விரைவில் ஏதேனும் ஒரு நாட்டின் இளவரசராக்கி விடுவேன்... உண்மைக் காதலுக்கு ஏற்றத் தாழ்வு ஒரு தடையா? அநுபமா! நீ சொல்லு. உனக்கு உண்மையிலேயே அவன் மீது அன்பு இருக்கிறதா இல்லையா?'' இராசாதித்தன் இப்படிக் கேட்டவுடன் அநுபமா நாணம் மேலிட்டவளாய் அங்கிருந்து ஓடிவிட்டாள்.

அன்று நந்தவனத்தில் சந்தித்து வெகு நேரம் இருவரும் மௌனமாகவே இருந்தபிறகு வெள்ளங்குமரனே கேட்டான்;

"இளவரசி! உங்களை ஒன்று கேட்கவேண்டும் என்று சில நாள்களாக எண்ணிக் கொண்டிருக்கிறேன்.."

"கேளுங்களேன்..."- உதடு துடிக்க அநுபமா சொன்னாள்.

"சாதாரணப் படை வீரனான என் மீது உனக்கு அன்பு இருக்கிறதா?"

"இதைக் கேட்கவா சில நாள்கள் யோசித்தீர்கள்? நீங்கள் சாதாரணப் படைவீரர் இல்லையாம். சோழ நாட்டின் துணைத் தளபதியாம். இளவரசராக ஆகப் போகிறீர்களாம்..."

"யார், இராசாதித்தர் சொல்லிவிட்டாரா? என்னிடம் பேசிக் கொண்டிருந்ததை உன்னிடம் சொல்லி விட்டாரா?"

"என்னிடம் சொன்னவற்றை உங்களிடம் சொல்லி விட்டாரா?"

"உன்னிடம் என்ன சொன்னார்?"

"நீங்கள் இளவரசராகப் போகிறீர்களாம்.."

"இளவரசரானால்தான் என்மீது அன்பு நீடிக்குமா?"

"இளவரசர் அரிஞ்சயருக்குப் பிடிக்காவிடில்?"

"அவர் மனம் நொந்து போகச் செய்ய வேண்டாம்..."

"உங்களிடம் எல்லாவற்றையும் சொல்லி விட்டாரா?"

"அதனால் மனங்கலங்கவில்லை. நான் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவன். சோழநாடு எனக்கு அடைக்கலம் அளித்தது. என் திறமையால் இளவரசர் இராசாதித்தரின் அன்பைப் பெற்றேன். உன்னைச் சந்தித்திருக்காவிடில் எந்தவிதச் சலனமும் மனத்தில் ஏற்பட்டிருக்காது. என்னால் சகோதரர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்படுமானால் நான் மீண்டும் மலைநாட்டிற்கே போய் விடத் தயாராயிருக்கிறேன்..."

அநுபமா திடுக்கிட்டாள். அவள் கண்கள் கலங்கின. அவள் இதயத்தில் எண்ணங்கள் இன்னும் ஒரு நிலைக்கு வரவில்லை. வெள்ளங்குமரனின் வடிவழகு அவளைக் கவர்ந்தது.



அவனுடைய அடக்கம் மதிப்பை அளித்தது. இராசாதித்தன் வார்த்தைகள் தெம்பை அளித்தன. ஆனால் அரிஞ்சயன் கண்டிப்பு அவள் உள்ளத்தைக் கலக்கிற்று.

"வேண்டாம், வேண்டாம். நீங்கள் மலைநாட்டிற்கு ஏன் போகவேண்டும்? நான் அரிஞ்சய அண்ணனின் மனத்தை மாற்றப் பாடுபடுகிறேன்" என்றாள்.

"இளவரசி! வேண்டாம் வேண்டாம். நீங்கள் ஒன்றுமே இளவரசர் அரிஞ்சயரிடம் கூறவேண்டாம். இறைவனருள் எப்படியோ அப்படியே நடக்கும்" என்றான்.

"ஆமாம். இறைவனருள் எப்படியோ அப்படித்தான் நடக்கும்" என்று கூறிக் கொண்டே வந்தான் இளவரசன் கண்டராதித்தன். நெற்றியிலே பளிச்சென்று துலங்கும் வெண்ணீறு. அதன் அழகை அதிகப்படுத்தும் குங்குமப் பொட்டு. மஞ்சள் நிறப் பட்டாடை. மேலே மெல்லிய நீலநிற வஸ்திரம். முத்துமாலை புரண்டசைய வேண்டிய கழுத்திலே உருத்திராட்ச மாலை. உடைவாளைச் சுமந்திருக்க வேண்டிய கரத்தில் பூக்குடலை.

அநுபமாவும், வெள்ளங்குமரனும் திடுக்கிட்டுத் திரும்பினர். பராந்தகசோழரின் மூன்றாவது குமரன் கண்டராதித்தன் இருவாட்சியையும், கொன்றையையும் பறித்துப் பூக்குடலையில் போட்டுக் கொண்டு வந்து கொண்டிருந்தான். உதடுகள் 'சிவசிவ' என்று முணுமுணுத்தவாறிருந்தன. தங்கை அநுபமா வின் மீது அவனுக்கு அன்பு அதிகம். அநுபமா வின் குரல் நந்தவனத்தில் கேட்கவும் மலர் கொய்ய வந்தவன் அங்கு வந்தான். வெள்ளங் குமரனும் அநுபமாவும் பேசிக் கொண்டிருக்கும் கடைசிச் சொல் மட்டுமே அவர் செவிகளில் வீழ்ந்தன.

கண்டராதித்தன் அரண்மனையில் அதிகமாக தங்கியிருந்து நாட்டு அதிகாரிகளுடன் பேசி ஆட்சி முறை விஷயங்களில் கவனம் செலுத்த மாட்டான். சிறுவயதிலிருந்தே அவன் எண்ணம் பழந்தமிழ் இலக்கியங்களைப் படிப்பதிலேயே சென்றது. பழையாறையில் இருந்த சைவப் பெரியாரின் மடத்திற்குச் செல்லும் போதெல்லாம் சைவ சமயத்தின் உயர்வைப் பற்றியும் சிவபிரானின் அருளைப் பற்றியும் அவர்

செய்யும் உபதேசத்தைக் கேட்பான். சிவபெருமானைப் போற்றிப் பாடும் பாடல்கள் கணீரென்று ஒலிக்கும். அந்தப் பாடல்களின் கருத்தையும், பாடல்களின் பொருளையும் கேட்கக் கேட்கக் கண்டராதித்தன் உள்ளம் நெகிழும். 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' எனும் பாடலைக் கேட்கும்போது கண்டராதித்தன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகும். சைவ மடத்திற்குச் செல்வதும் சிவபெருமான் பெருமையைக் கேட்பதும் தேவாரப் பதிகங்களைப் பாடுவதுமாக அவன் காலங்கழிக்கலானான்.

பராந்தகனுக்குத் தன் மகன் போக்கு முதலில் வியப்பை அளித்தது. பஞ்சணை மஞ்சத்தில் உறங்காது தரையில் பருத்தித் துணி விரித்து உறங்குவதும், ஆடம்பரப் பொருள்மீது நாட்டங் கொள்ளாமலிருப்பதும் மன்னர்க்கு வியப்பு அளித்தாலும் நாளடைவில் தன் மகன் போக்கு அவருக்குப் புரிந்துவிட்டது. சோழ அரச குலத்தில் ஒரு சிவநேசச் செல்வன் பிறந்து விட்டான் எனும் திருப்தியுடன் இருந்தார்.

அநுபமாவும், வெள்ளங்குமரனும் பேசிக் கொண்டிருந்தவற்றுள் குறிப்பாக கடைசி வார்த்தைகள்தாம் கண்டராதித்தன் செவியில் வீழ்ந்தன. அசரீரி போல் 'இறைவனருள் எப்படியோ அப்படித்தான் நடக்கும்' என்று கூறியும் விட்டான். ஆனால், பிறகு தன் சகோதரியின் உள்ளக் கிடக்கையை அறிந்த பிறகுதான் முதலில் மனித அருள் வேண்டும் என்பதைக் கண்டராதித்தன் உணர்ந்தான்.

வெள்ளங்குமரனுடன் அதிகப் பழக்கமும் கண்டராதித்தனுக்கு இல்லை. சேரநாட்டி னின்று வந்திருக்கும் இளவீரன் ஒருவன் சோழப் படையில் 'அரும்பெருஞ் செயல்கள்' செய் திருக்கிறான் என்பதைத்தான் உணர்ந்திருந் தான். இப்போது நேருக்கு நேர் கண்டபிறகு வெள்ளங்குமரனைப்பற்றி விசாரிக்காமலிருக்க முடியுமா? வெள்ளங்குமரனுடைய பிறப்பிடம் பற்றியெல்லாம் விசாரித்துவிட்டு சேர அரசராக வாழ்ந்து சிவபக்தியிலே சிந்தை முழுமையும் செலுத்திய சேரமான் பெருமாள் நாயனாரைப் பற்றியும் அவர் பூசித்த கோயிலைப் பற்றியும் விசாரித்தான். பிறகு சேரநாட்டுத் சிவத் தலங்களைப் பற்றி ஆவலுடன் கேட்டறிந்தான். மேற்குக் கடற்கரை ஓரமாக



உள்ள திருவஞ்சைக்களம் எனும் நகரத்தைப் பற்றியும் அங்கிருந்து கலமேறிச் சென்றால் பல காதத் தொலைவிலுள்ள நாடொன்றில் உள்ளதாகக் கூறப்படும் பெரும் சிவாலயத்தைப் பற்றியும் அவனுக்குத் தெரியுமா என்றும் கேட்கத் தொடங்கினான். அநுபமாவுக்கு அங்கே இருப்பே கொள்ளவில்லை. அமைதியாகச் சந்தித்து அவருடன் அளவளாவும் நேரத்தில் 'சிவப்பழம்' வந்து வேறு ஏதேதோ பேசுகிறதே என்று கோபங் கொண்டு "அண்ணா! பூசைக்கு நேரமாக வில்லையா? பேசத் தொடங்கிவிட்டால் உங்களுக்கு நேரம் போவதே தெரியாதே" என்று கண்களில் குறும்பு ததும்ப வெள்ளங் குமரனையும் ஒரு முறை பார்த்துக் கொண்டு கேட்டாள்.

வெள்ளங்குமரன் மெல்ல நகைத்தான். கண்டராதித்தன் தன் சகோதரியின் பக்கம் திரும்பி "ஆமாம் ஆமாம் நேரம்தான் ஆகிறது. பூசைக் காலம் தாண்டிவிடுமோ என்ற அச்சமும் ஏற்படுகிறது. என்றாலும் நந்தவனத்தில் உன் குரல் கேட்டது. அதனால் வந்தேன். சேரநாட்டு வீரரை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. அநுபமா, நீ அவரிடம் என்ன பேசிக் கொண்டிருந்தாய்? இங்கே தனித்துப் பேசுவதைப் பார்த்தால் உன் மனத்தில் புதைந்திருக்கும் ரகசியம் ஏதோ ஒன்றைக் கூறுவதற்கு நீ துடிக்கிறாய் என்பது தெரிகிறது. என்னால் ஆகக்கூடியது ஏதாவதிருந்தால் சொல் தங்காய்!" என்று கண்டராதித்தன் கேட்டான்.

கண்டராதித்தன் வெள்ளை உள்ளத்தவன். தன் உள்ளத்தைப் போல் பிறர் உள்ளம் மதிப்பவன். தன் சகோதரி நந்தவனத்தில் நின்று கொண்டிருக்கும் நிலையைக் கண்டவுடனேயே பளிச்சென்று புரிந்து கொண்டுவிட்டான். அநுபமாவின் முகத்தில் மகிழ்ச்சியும் இல்லாதிருக்கவே தன் சகோதரியை வினவினான்;

"அநுபமா! என்னிடம் சொல்ல வேண்டியதைச் சொல்லேன். நான் உனக்கு உதவ மாட்டேனா? சேரநாட்டு வீரர்மீது உனக்கு ஏற்பட்டுள்ள அன்பு எனக்குத் தெரியாதா?" என்று கூறவும் அநுபமா திடுக்கிட்டாள். அவள் முகம் நாணத்தால் சிவந்தது. அவள் தலை குனிந்தாள். வெள்ளங்குமரனைக் கடைக் கண்ணால் நோக்கினாள்.

கண்டராதித்தன் மேலும் தொடர்ந்து ''தெரியும் அநுபமா! உன் மனம் எனக்குப் புரியாதா? சேரநாட்டு வீரரின் திறமை குறைவானதா? அழகுதான் குறைவா? சோழ நாட்டிற்கு இத்தகையவர் பிணைப்பு கிடைக்க வேண்டாமா? உன் சகோதரி குந்தள நாட்டிற்குப் போய் விட்டாள். நீ சேர நாட்டிற்குப் போய் விடு. நான் சேரநாட்டிற்கு வரும்போது உன் மாளிகையில் தங்கலாமல்லவா?'' என்றான்.

அநுபமா மெல்ல நகைத்தாள். ''உன்னுடைய கற்பனை எல்லையற்றது. வர்ணிக்கச் சொன்னாலும் இன்றைக்கெல்லாம் வர்ணிப்பாய். ஆனால் அண்ணா! என் விருப்பத்தை நிறைவேற்றத்தான் ஒருவருமில்லை'' என்று கூறினாள். கண்டராதித்தன் திடுக்கிட்டு ''என்ன அப்படிக் கூறிவிட்டாய் அநுபமா? இதோ நான் இருக்கிறேன். யார் உன் எண்ணத்தைத் தடுப்பவர்? மன்னருக்குப் பிரியமில்லையா சொல்லு. இப்போதே தந்தையிடம் சென்று உனக்காகப் பேசுகிறேன். என் வார்த்தைக்கு மன்னர் மிகுந்த மதிப்பு வைப்பார்'' என்று கூறினான்.

அநுபமாவுக்குக் கண்டராதித்தன் வார்த்தைகள் தெம்பை அளித்தன. தன் மனத்தை அவரிடம் தெரிவிக்கலாம் என்றே எண்ணி ஏதோ கூற முற்படவும் வெள்ளங்குமரன் சட்டென, ''இளவரசி! அப்படியெல்லாம் நீ சொல்லக் கூடாது. நான் சற்று முன்னர் உன்னை வேண்டியது என்ன?'' என்று கூறவும் கண்டராதித்தன் அவன் பக்கம் திரும்பி ''அவள் சொல்லட்டுமே நான் அதன்படி செய்யக் காத்திருக்கிறேன்''என்றான்.

''தந்தைக்கு என் உள்ளத்திலுள்ளவை தெரியா. அரிஞ்சய அண்ணனுக்குத்தான் என் செய்கை பிடிக்கவில்லை'' என்று கூறினாள்.

''இவ்வளவுதானே? நானே அரிஞ்சயனிடம் கூறுகிறேன். உங்கள் திருமணத்துக்கு நாள் குறிக்க வேண்டியதுதான் பாக்கி. சரிதானே? நேரமாகிறது நான் வருகிறேன்'' என்று கூறி அங்கிருந்து சென்றான் கண்டராதித்தன்.

வெள்ளங்குமரனும் அநுபமாவும் திகைப்பு மேலிட்டவர்களாய் ஒருவரையொருவர் பார்த்தவாறு நின்றனர்.



## 14

திருமணம் முடிந்து சோழ நாட்டை விட்டுப் பிரியும்போது ஏற்பட்ட துக்கம் வீரமாதேவிக்குப் பல நாள்கள் இருந்தது. பல இடங்களில் கோவிந்தனும் வீரமாதேவியும் வழிப்பயணக் களைப்பு நீங்க மலையடிவாரத்திலும் ஆற்றங்கரையிலும் சுனையோரத்திலும் இளைப்பாறும்போது அவள் சோகத்தைக் கோவிந்தன் தன் சிருங்கார ரசத் திறமையால் மாற்ற முயல்வான். வீரமாதேவியின் சோகம் சற்று மாறும். தன் தோழி கோதையுடனே பேசிக் கொண்டிருக்க வேண்டும் போல் தோன்றும். கோவிந்தன் ஒரு கணமேனும் அவளைத் தனியே பிரிந்தால்தானே!

இராட்டிரகூட நாட்டின் தலைநகரான மான்ய கேடத்திற்குத் தங்கள் வருகையைத் தெரிவிக்க இராமபட்டனும், மற்றவர்களும் முன்னரே சென்றுவிட்டனர். அவர்கள் வரும்போது தலை நகரம் விழாக்கோலம் பூண்டு விளங்குமாறு ஏற்பாடு செய்ய அவர்கள் விரைந்திருந்தனர். ஆனால் மான்யகேடத்து மக்கள் கோவிந்தன் திருமணச் செய்தியை உற்சாகத்துடன் ஏற்கவில்லை.

கோவிந்தனால் மாசுபடுத்தப்பட்ட மாதங்கி எனும் மங்கையின் உள்ளம் இந்தச் செய்தி கேட்டவுடன் பொங்கியது. அவள் உடனே தன் சகோதரன் வசிக்கும் இடத்திற்கு வந்தாள். தன் தங்கைக்கு நேர்ந்த துன்பச் சம்பவம் அவன் அறிவான். மாதங்கி ஒரு காட்டு மலர். நகரின் வெளிப்புறத்தே அவள் பெற்றோருடன் வாழ்ந்து வந்தாள்.

இரண்டு மூன்று பசுக்களை ஓட்டிக் கொண்டு மலையடிவாரத்தருகிலுள்ள புல் வெளியில் அவற்றை மேயவிட்டு அவை மேயும் நேரத்தில் காய்ந்த சுள்ளிகளைச் சேகரித்துக் கொண்டு வெயில் உச்சிக்கு வரும்போது கையில் கொண்டு வந்திருக்கும் சோற்று மூட்டையை அவிழ்த்து உண்டுவிட்டுச் சற்று இளைப்பாறி வெயில் மலைவாயில் விழத் தொடங்கியவுடன் பசுக்களைத் திரும்பவும் ஓட்டிக் கொண்டு வீடு திரும்புவது அவள் வழக்கம். அவள் பெற்றோர்க்குப் பிறந்த நான்கு குழந்தைகளுள் அவள் நடுவில் பெண். தாயின் வடிவை அவள் அப்படியே கொண்டிருந்தாள். இன்னும் ஒரு படி

மேலாகக்கூட படைக்கும் கடவுள் அவளிடம் எழிலைத் தூவி விட்டிருந்தான். நகரத்திற்குள்ளே அவள் இருந்திருந்தால் அந்த இரையைக் கொத்தப் பல பருந்துகள் போட்டி போட்டிருக்கும்.

அந்த எழில் மகள் ஒரு சமயம் மன்னன் கோவிந்தனின் விழிகளில் தென்பட்டு விட்டாள். மாதங்கி நண்பகல் உணவை உண்டு மரத்தடியில் மெல்லக் கண் துயின்று கொண்டிருந்தாள். கழுத்தில் மணிகட்டிய பசுக்கள் நிழலில் நின்று அசை போட்டுக் கொண்டிருந்தன. குயில் ஒன்று மரக்கிளையில் அமர்ந்து பாடலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருந்தது.

அருகிலுள்ள காட்டில் வேட்டையாடிப் பரிவாரங்களுடன் வந்த கோவிந்தன் அவர்களைப் பிரிந்து விட்டான். அவர்களைத் தேடி அலைந்து களைத்துப் போய், கடைசியாக மாதங்கி படுத்திருக்கும் வழியே வந்தான். அவன் களைப்பு பறந்து விட்டது. கண் இமைகள் மூடியிருக்க மாதங்கி படுத்திருந்த நிலை அவனைக் கவர்ந்தது. அவளுடைய இளமையின் சின்னங்கள் அவன் விழிகளுக்கு விருந்தாயின.

அவளருகே மண்டியிட்டு அவன் அமர்ந்தான். அவள் விடும் மெல்லிய மூச்சும், அதனால் அசைந்து தணியும் தோள்களும் கொடிபோல் துவண்ட கரங்களும், அந்தத் தனியிடத்தே எவரும் வரமாட்டார்கள் என்ற துணிவினால் அவள் படுத்துறங்கும் நிலையும் கோவிந்தனைப் பரபரப்படையச் செய்தன.

சாமுத்ரிகா இலட்சணத்துக்கு இம்மியும் குறையா அழகுத் தேவதைகளுடன் அரண்மனையில் அவன் கும்மாளமிட்டிருக் கிறன். கூடிக் களித்திருக்கிறான். ஆனால் இதோ மரத்தடியில் கண் துயில்கிறாளே இவளைப் போன்ற அழகுப் பிம்பத்தை அவன் கண்டதில்லை. வன தேவதையோ அவள்? சந்தனமரத்தில் படரவேண்டிய முல்லைக்கொடி கொழுகொம்பு இன்றித் தரையில் படர்கிறதோ?

கோவிந்தன் அவள் அருகே எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தானோ தெரியாது. மாதங்கி திடீரென கண்விழித்துத் தன் மிக அருகே அமர்ந்திருக்கும் கோவிந்தனைக் கண்டு திடுக்கிட்டாள். வேற்று மனிதர் வாடையே அறியாத மாதங்கியின்



உடல், தன் மிக அருகே அமர்ந்திருப்பவரைக் கண்டவுடன் துடித்து நடுங்கியது. திடுக்கிட்டு எழ முற்பட்டவளின் கரத்தைப் பிடித்து கோவிந்தன் நிறுத்தினான். கோவிந்தனின் தங்கநிற மேனியும், கண்டவர் மயங்கும் தோற்றமும் ஒரு கணம் மாதங்கியின் உள்ளத்தில் பெரும் சலனத்தை ஏற்படுத்தின. சீறியெழுந்து அவனை யாரெனக் கேட்கும் வேகம் பறந்தது. அதேபோது அவனையே பார்த்துக் கொண்டு இருக்க வேண்டும் எனும் தாபமும் எழுந்தது.

அவள் இதுவரை இராட்டிரகூட நாட்டு இளவரசரைக் கண்டதில்லை. மான்யகேட நகரின் சந்தடியும் அவளுக்குத் தெரியாது. ஆடவனின் ஸ்பரிசம் இன்னதென அறியாதவள். ஆனால் சில நாள்களாக அவள் உறக்கத்தின் இடையே விழித்துக் கொண்டு திடுக்கிட்டெழுவாள். அழகிய பொன்பீடமொன்றில் அவளும் தேவபுருடன் ஒருவனும் வீற்றிருப்பது போலவும், அவன் அவளை அணைத்து வேடிக்கைக் கதைகள் கூறுவதுபோலவும் கனவு காண்பாள். கனவு அவளுக்கு இனித்தது. கனவு கலைந்தவுடன் அவள் உடல் நடுங்குவாள். கனவிலே கண்ட ஆடவன் தொட்ட இடங்களை அவள் மீண்டும் தொட்டு மகிழ்வாள். அஞ்சவும் செய்வாள். விழிகளிலே துக்கத்தின் சாயையாக நீர் ததும்பும். நெஞ்சு விம்மும். யாரிடமாவது சொல்லி இதய பாரத்தைத் தீர்க்கத் துடிப்பாள். யாரிடம் சொல்வது? அவளது அன்புக்குப் பாத்திரமான பசுவிடம் சொல்லித்தான் இதயபாரத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அவள் தன் ஆசைப் பசுவை அருகழைத்தாள். அது அன்புடன் அவளைப் பார்த்துத் தலையை ஆட்டியது. அவளுக்கு நெஞ்சிலிருந்து சொற்கள் வரவில்லை. அதன் கழுத்தை ஆசையுடன் தடவவும் முற்படாமல் மௌனமாகவே இருந்துவிட்டாள். தூக்கம் கண்ணைச் சுழற்றியது. மரத்தடியில் கையைத் தலையணையாக வைத்து உறங்கினாள். அப்போதுதான் கோவிந்தன் அவள் அழகை ரசித்தான்.

கோவிந்தனின் முகத்தை இமைக்காமல் பார்த்தாள் மாதங்கி. ஹூ என்று கூச்சலிட வேண்டும்போல் தோன்றியது. ஏனோ குரல் வெளிவர மறுத்தது. அங்கிருந்து ஓடிவிட வேண்டும்போல் தோன்றியது. கோவிந்தன் அவள் வலக் கரத்தை அழுத்தமாகப்பிடித்துக் கொண்டிருந்தானே...

''பயப்படுகிறாயா?''- கோவிந்தனே மெல்ல அவள் காதில் மட்டும் விழுவதுபோல் கேட்டான். அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. கோவிந்தனின் முகவடிவத்தை இன்றைக் கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் என்ற எண்ணம் துளிர்த்தது. பலவித மனக்குழப்பங்கள் ஒரே காலத்தில் எழுந்து அவளைத் திகைக்க வைத்தன. அவள் மௌனமும் திகைப்பும் கோவிந்தனுக்கு அநுகூலமாயின.

''ஏன் பயப்படுகிறாய்? நான் உன்னை விழுங்கிவிடுவேனா?'' என்று மெல்ல நகைத்தவாறு கேட்ட கோவிந்தன், அவள் கரத்தைப் பிடித்ததிலிருந்து மாறி, மெல்ல அவள் தோளைப் பற்றிக் கொண்டான். அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

''என்னை விட்டுவிடுங்கள்'' என்று ஒரே ஒரு வார்த்தை பேசிவிட்டு அவன் பிடியிலிருந்து திமிறிக் கொண்டு ஓடினாள். சற்றுத் தொலைவு சென்று நின்று ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் ஓடினாள். கோவிந்தன் அவள் சென்ற திசையையே நோக்கியவாறு நின்று கொண்டிருந்தான்.

மறுநாள் கோவிந்தனின் கண்கள் அவனையறியமால் அந்த இடத்துக்கே இழுத்தன. அதே மரத்தடி. என்ன ஆச்சர்யம்! மாதங்கியும் அங்கே இலையொன்றைக் கிள்ளியவாறு உட்கார்ந்திருந்தாள். தொலைவில் பசுக்கள் மேய்ந்து கொண்டிருந்தன. கோவிந்தன் வந்ததும் அவனைப்பார்த்தும் பார்க்காததுபோல் முகத்தை அவள் திருப்பிக் கொண்டாள். கோவிந்தன் அருகே வந்தமர்ந்து மண்டியிட்டு அவள் முகத்தைத் தன் பக்கம் மெல்லத் திருப்பி 'பெண்ணே! ரொம்ப நேரமாகக் காத்திருக்கிறாயா?'' என்று கேட்டான்.

அவள் அவன் கரங்களை மெல்லத் தளளினாள். நேற்றிருந்த அச்சமும் நாணமும் இன்று அவளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

''ஆமாம்; காத்திருக்கிறேன். அதனால் உங்களுக்கு என்ன?''

''இல்லை.. நான் வருவதற்குத் தாமதமாகி விட்டது''

''ஆகட்டுமே, அதனால் என்ன?''

''நேற்றே நீ கோபித்துக் கொண்டு ஓடினாயே!''



''ஆமாம். ஓடினேன்''

''எங்கே இன்று வராமல் போய்விடுவாயோ என்று பயந்தேன்...''

''நான் ஏன் வராமல் போகிறேன்? இது நான் தினமும் வரும் இடம்...''

''இனி நானும் வரும் இடம்தானே?''

''ஏன் நீங்களும் மாடு மேய்க்கப் போகிறீர்களா?''

''உனக்காக மாடும் மாய்ப்பேன். இந்தக் காட்டிலும் தங்குவேன்...''

''காடா..காடென்றால்...''

''உனக்குக் காடென்றால் தெரியாதா? இது காடு. இங்கிருந்து சிறிது தூரம் சென்றால் ஊர். பெரிய மாளிகை. அகன்ற வீதிகள். மன்னர் இருப்பார்...''

''ஓகோ! எனக்குக்கூட நகரத்திற்குள் ஒரு முறை வரவேண்டும் எனும் ஆவல்..''

''உன்னை அழைத்துப் போகத்தானே நான் இங்கே வந்திருக்கிறேன்...''

கோவிந்தன் இப்படிச் சொன்னவுடன் மாதங்கி திடுக்கிட்டாள். இதற்குள் கோவிந்தன் அவளை மெல்லத் தன் மடிமீது கிடத்தியிருந்தான். மாதங்கி கோவிந்தன் வார்த்தையைக் கேட்டுத் திடுக்கிட்டவுடன் தன் நிலையை அறிந்து கோவிந்தனைக் கோபத்துடன் பார்த்து ''என்னை அழைத்துப் போக. நீங்கள் யார்?'' என்று கூறி அவன் பிடியிலிருந்து பலவந்தமாக விடுவித்துக் கொண்டு முதல் நாளைப் போல் எழுந்து விரைந்து ஓடினாள்.

''போகாதே போகாதே... நான் சொல்வதைக் கேள்'' என்று கூவிக்கொண்டே சிறிது தூரம் கோவிந்தன் ஓடினான். மான் குட்டிபோல் துள்ளி ஓடியவள் சென்ற திசையையே அவனால் கண்டுபிடிக்க இயலவில்லை.

கோவிந்தன் சோர்ந்து போய் நின்றான். தாபம் அவனைத் தடுத்தது. கிடைத்த புறாவை நழுவ விட்டு விட்டோமே எனும் வருத்தத்தில் தள்ளாடித் தள்ளாடி நடந்து காட்டு எல்லையில் நிறுத்தி வைத்திருந்த குதிரை மீதேறி அதை மெல்லத் தட்டிவிட்டு அரண்மனையை நோக்கிச் செலுத்தினான். மாதங்கியின் உருவம் அவன் கண்முன் வந்து நின்றது. அந்தப்புரத்து அழகிகள் அவனைக் கவரவில்லை. இசையும் நாட்டியமும் வெறுத்தன. பால் பருகப்படாமல் ஆடை படிந்து கிடந்தது. பழங்களை ஈ மொய்த்தது. மாதங்கியின் தோற்றம் எதிரில் வந்து நிற்பது போன்ற பிரமை. மலரினும் மிருதுவான மாதங்கியின் அங்கங்களைத் தொட்டு உணர்வது போன்ற நினைவு. உடல் சாய்ந்தது. அந்தரங்க ஆளான இராமபட்டனுடன் கூட கோவிந்தனால் பேச முடியவில்லை. விடியும் நேரத்தில் கோவிந்தன் நன்றாக உறங்கி விட்டான். அவன் விழித்தெழுந்த போது புது உற்சாகம் அவன் உடலில் பொலிந்தது. அவன் திடமான முடிவொன்றுக்கு வந்திருந்தான்.

*

## 15

கண்ணாடியின் முன் நின்று கோவிந்தன் தன் தோற்றத்தை ஒருமுறை பார்த்துக் கொண்டான். பிறகு இராமபட்டனை மெல்ல அழைத்து அவனிடம் நடந்தவற்றைக் கூறி எப்படியாவது மாதங்கியை அழைத்து வந்து விடவேண்டுமென்று தெரிவித்தான். இராமபட்டன் சற்று யோசித்தான். பிறகு, ''அரசே! காட்டுப் பெண்ணுக்காக இவ்வளவு கஷ்டப்படலாமா?'' என்று கேட்டான். கோவிந்தன் கடகடவென்று சிரித்து ''பைத்தியக்காரா! காட்டுப் பெண்ணா அவள்? போய்ப் பார். அந்தக் காட்டுமலர் சாந்தி வீசி ஜ்வலிப்பதை. குறுக்கே பேசாமல் அந்தக் குமரியை உடனே இங்கே கொண்டு வர ஏற்பாடு செய்...'' என்று கட்டளையிட்டான்.

இராமபட்டன் அங்கிருந்து சில வீரர்களை அழைத்துக் கொண்டு அவர்களுக்கு மாட்டு வியாபாரியைப் போல் உடையை அணிவித்துக் கோவிந்தன் கூறிய இடத்தை வந்தடைந்தான்.



முதல் நாள் மாதங்கி, கோவிந்தன் பிடியினின்று தப்பி ஓடினாளேயன்றி, பிறகு தான் செய்ததை எண்ணி வருத்தப் பட்டுக் கொண்டாள். மீண்டும் அந்தப் புதிய மனிதரைச் சந்திக்க வேண்டும் என்னும் ஆவல் ஏற்பட்டது. வழக்கம்போல் பசுக்களை ஓட்டிக் கொண்டு புறப்பட்டபோது அவள் சகோதரர்கள் அவளைப் பார்த்து ''மாதங்கி! நாங்கள் பட்டணத்திற்குப் போகிறோம். நீ பொழுது சாயும் முன் வந்துவிடு. நாங்கள் வருவதற்கு நேரமாகும்'' எனறு கூறினர். இராமபட்டனும் உடனிருந்தவர்களும் இதை மறைந்திருந்து கேட்டுக் கொண்டிருந்தனர். மாதங்கியின் சகோதரர்கள் சென்ற பிறகு மாதங்கி காட்டிற்குச் சென்றபோது மறைந்து அவளைப் பின் தொடர்ந்தனர். பசுக்கள் தங்கள் கழுத்துமணிகளை அசைத்துக் கொண்டு மேயச் சென்றவுடன் நாள்தோறும் தான் உட்கார்ந்து கொள்ளும் இடத்திலேயே சென்று மாதங்கி உட்கார்ந்து கொண்டாள். அவள் உள்ளத்து வேதனை முகத்தில் நன்றாகப் பிரதிபலித்தது. நாள் தோறும் கோவிந்தன் அந்த நேரத்திற்குத்தானே வருவான்? அதனால் அவள் அவனை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாளோ?

சிறிது நேரம் கழித்து இராமபட்டனும் மற்றவர்களும் காடு மலையெல்லாம் ஏறி மிகவும் சிரமப்பட்டு வருவது போன்று களைப்புப் பெருமூச்சு வாங்குபவர்கள் போல் நடித்து அவள் எதிரே வந்து நின்றனர்.

மாதங்கி சிறிது நேரம் வரை அவர்களைக் காணாதது போலவே இருந்தாள். உண்மையில் அவள் பார்வைக்கு அவர்கள் உருவம் தெரியவில்லை. அவள் சிந்தனைக் கடலில் ஆழ்ந்திருந்தாள்.

இராமபட்டன் தொண்டையைக் கனைத்துக் கொண்டான். மாதங்கி விழிப்புற்றவளாய் ஏறிட்டுப் பார்த்தாள். யார்-யாரோ புதியவர்கள் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு எழுந்துநின்றாள்.

இராமபட்டன் மிக அமைதியான குரலில் ''அம்மா குழந்தாய்! இந்தப் பக்கம் ஏழெட்டுப் பசுக்கள் சென்றதைப் பார்த்தாயா? அதை மேய்த்துக் கொண்டு இளம் வாலிபன் ஒருவனும் சென்றதைக் கண்டாயா?'' என்று கேட்டான்.

மாதங்கி வியப்புடன் இராமபட்டனை நோக்கினாள். 'ஏழெட்டுப் பசுக்கள். இளம் வாலிபன்!' அவள் உதடுகள்

முணுமுணுத்தன. 'ஒரு வேளை அவரைத்தான் இவர்கள் சொல்கிறார்களோ?'-மாதங்கி அறிய விரும்பினாள். ஆவல் கொண்டாள்.

''பசுக்களா?-மேய்த்துக் கொண்டு இளம் வாலிபரா?''என்று கேட்டாள்.

''ஆமாம், குழந்தாய்! நாள்தோறும் இந்தக் காட்டிற்குத்தான் வருகிறான். நேற்றுப் புறப்பட்டவன் இன்று வரை திரும்பவில்லை. பசுக்களும் திரும்பவில்லை. உனக்குத் தெரியுமா என்று கேட்டேன்... ''என்றான் இராமபட்டன். உடன் வந்தவர்கள் தெரியாது என்பதுபோல் பக்கவாட்டில் தலையை அசைத்தார்கள். மாதங்கி சற்று யோசித்தாள். தன் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளக் கருதி ''அப்படி யாரும் இதுவரை வந்ததில்லையே...என்னைத் தவிர இங்கு யாரும் வர மாட்டார்களே'' என்றாள். இராமபட்டன் மெல்ல நகைத்து, ''குழந்தாய்! குழந்தாய்! மிகவும் கெட்டிக்காரி நீ. உன்னைத்தான் தினமும் சந்திப்பதாக அவன் கூறுகிறான். நீ முகங்கொடுத்தே பேசுவதில்லையாம். இங்கு நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் சொல்லுகிறானே. அவன் மிகுந்த ரோசக்காரன். நேற்று அவன் வீடு திரும்பாததை நினைத்தவுடன் உன்னிடம் கோபித்துக் கொண்டு ஒரு வேளை கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டிருப்பானோ என்றுதான் பயப்படுகிறோம்...'' என்று கூறவும் மாதங்கி நடுங்கினாள்.

''ஐயா, ஐயா! என்னிடம் அவர் ஏதும் கோபங் கொள்ளவில்லை. ஐயா! அவர் ரொம்பவும் துணிச்சலுடையவர். நேற்று நான்... '' என்று சொல்ல முற்பட்டவள் நாணத்தால் தலை குனிந்து ''இன்று இந்த இடத்திற்கு நான் வந்ததே அவரைக் காண்பதற்கு. அவர் வருவதற்காகவே நான் காத்திருக்கிறேன்... கிணற்றில் விழுந்திருப்பாரோ என்கிறீர்களா? ஐயோ! எனக்குப் பயமாயிருக்கிறதே... வாருங்கள் அவரைத் தேடுவோம். இந்தக் காட்டின் எல்லையில் ஒரு பெரிய துரவு இருக்கிறது...'' என்று கூறியவுடனேயே அவள் சொல் தழுதழுத்தது. இராமபட்டன் பரபரப்பு மிகுந்தவனாகப் புலப்படுத்திக் கொண்டு ''வா, வா... உடனே போய்ப் பார்க்க வேண்டும். இதற்குள் அவன்



உடல் நீரிலே மிதக்கிறதோ என்னவோ....''என்று பதறியவாறு அழைத்தான்.

வெளுத்ததைப் பால் என்றெண்ணும் மாதங்கி இராமபட்டன் நடிப்பை நம்பி விட்டாள். மேடு, புதர் ஆகியவற்றைக் கடந்து பாறைகளில் ஏறி இறங்கிக் குறுக்கு வழியாக அவர்களை அழைத்து வந்து பெரும் கிணற்றருகே வந்து சேர்ந்தாள். மாதங்கியின் ஆர்வம், அவள் கிணற்றடிக்கு வேகமாக ஓடியதினின்று தெரிந்தது.

மாதங்கி கிணற்றினுள் குனிந்து நோக்கினாள். இராமபட்டன் சைகை செய்தான். அருகே இருந்தவர்கள் நொடியில் அவள் முகத்தைத் துணியைப்போட்டு மூடினார்கள். மாதங்கி துவண்டாள். திமிறினாள்.

அவள் கண் விழித்தபோது அமைதி நிறைந்த விசாலமான அறை ஒன்றில் பஞ்சணை மெத்தையில் தான் கிடத்தப்பட்டிருப்பதை அறிந்தாள். ஒரு கணம் அவளுக்கு ஏதும் புரியவில்லை. வைக்கோலும் புல்லும் நிறைந்த இடத்தில் அவள் படுத்திருந்தாள். அதைவிட இதில் ஒரு தனியான இன்பம் ஏற்படுகிறதே. அந்த இடம் முழுமையும் மணத்தால் நிறைந்திருந்தது. காட்டிலே தன்னிச்சையாக வளரும் மலர்களின் சுகந்தம் தவிர வேறறியாத அவளுக்கு அங்கே பரவியிருந்த மணம் ஒருவிதக் கலக்கத்தை ஏற்படுத்தியது.

'நாம் எப்படி வந்தோம் இங்கே?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டு மெல்ல மஞ்சத்தைவிட்டு எழுந்து சுற்றும் முற்றும் பார்த்தாள். அறைக் கதவைத் திறந்து கொண்டு பாங்கி ஒருத்தி தட்டிலே பாலும் பழமும் கொண்டு வந்தாள். புன்முறுவலுடன் அதை மாதங்கியிடம் நீட்டினாள். மாதங்கி அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்துவிட்டுப் பயம் பிடித்தவள் போல் பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

''மாதங்கி! பழம் இருக்கிறது. பாலும் இருக்கிறது. உனக்குப் பசியாயிருக்குமே...'' என்றாள்.

அவள் பேச்சும் பார்வையும் மாதங்கிக்குப் பிடிக்கவில்லை. ''என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டாள்.

பாங்கி மெல்ல நகைத்து ''உன் பெயர், ஊர் எல்லாம் எனக்குத் தெரியும். பாலைப் பருகியவுடன் உனக்குப் பட்டாடை கொடுக்குமாறு மன்னர் உத்தரவு...'' என்றாள்.

மன்னன் உத்தரவு என்ற சொல்லைக்கேட்டு மாதங்கி திடுக்கிட்டாள். மன்னர்-இது மன்னருக்குச் சொந்தமான இடமா? பாங்கியிடம் கோபமாகப் பேசிப் பயனில்லை என்பதை அவள் புரிந்து கொண்டாள். மிகவும் குழைந்த குரலில் ''மன்னரா... இது மன்னருக்குச் சொந்தமானதா?'' என்று கேட்டாள்.

''முதலில் நான் சொன்னதைச் செய் மாதங்கி! பிறகு நான் எல்லாவற்றையும் சொல்கிறேன்'' என்றாள். அவளுடைய விருப்பத்துக்கும் வேண்டுகோளுக்குமிணங்க, பாலும் பழமும் உண்டுவிட்டு ''நான் கேட்டதைச் சொல்லவில்லையே'' என்று மாதங்கி வற்புறுத்தினாள்.

''ஆமாம்.. மாதங்கி! இந்த மாளிகை, மாளிகைத் தோட்டம்... அழகிய ஆபரணங்கள்... எல்லாம் மன்னருக்குச் சொந்தம்... நீ - நான் எல்லாரும் மன்னருக்குச் சொந்தம். என்னைவிட உனக்குத்தான் சொந்தமதிகம்'' என்று பாங்கி கூறவும் மாதங்கி ஒன்றும் புரியாமல் திகைத்தாள்.

மாதங்கி நீராடிப் புத்தாடை அணிந்து அதே அறைக்கு வந்து ஒன்றும் புரியாதவளாய் மீண்டும் பாங்கியின் வரவை எதிர்பார்த்துத் திகைத்து நின்றாள். யாரோ வரும் காலடி ஓசை கேட்டது. ஆவலுடன் ஓடிச் சென்று கதவருகே நின்றாள். கோவிந்தன் வந்து கொண்டிருந்தான். பளபளக்கும் ஆடைகள்; ஜ்வலிக்கும் ஆபரணங்கள்; கம்பீரத் தோற்றம். அவர்தான் மன்னர் என்று மாதங்கிக்குப் புரியவில்லை. யாரை எதிர்பார்த்துக் காட்டில் அவள் ஏங்கியிருந்தாளோ அவரே வருகிறார். புத்தாடை ஆபரணங்களுடன் அழகுமிகக் காட்சியளிக்கிறார். ஆனால் அவர் ஏன் இங்கு வருகிறார்? அவருக்கும் இந்த மாளிகைக்கும் என்ன சம்பந்தம்? அவளுக்கு ஏதும் புரியவில்லை.

கோவிந்தன் முகத்தில் புன்முறுவல் மிளிர்ந்தது. மாதங்கியை ஒரு முறை உற்று நோக்கியவாறு மஞ்சத்தில் சென்று அமர்ந்தான். மாதங்கி அவன் பின்னே தொடர்ந்து வந்து ஏதோ கேட்க வாயெடுத்தாள்.



''மாதங்கி! வந்து விட்டாயா? என்னைத் தேடி வருவாய் என்று எனக்குத் தெரியும்...'' என்று கோவிந்தன் மெல்ல அவளை நெருங்கியபடியே கேட்டான். பிறகு ''காட்டில் ஒருவித வனப்புடன் விளங்குகிறாய். அதையும் விட பதின்மடங்கு அழகுடன் இங்கு திகழ்கிறாய் மாதங்கி! மஞ்சள் நிறப் பட்டாடை உன் மாந்தளிர் மேனிக்கு எடுப்பாக இருக்கிறது..'' என்றான், அவள் கரங்களை மெல்லப்பிடித்து.

மாதங்கி சட்டென்று விலகிக் கொண்டு ''அதெல்லாம் சரி.. நான் எப்படி இங்கு வந்தேன்? என்னை என் சகோதரர்கள் தேடுவார்களே. என்னை மீண்டும் என் வீட்டிலே சேர்ப்பித்து விடுங்கள்'' என்று பதறினாள். பிறகு ''நீங்கள் இங்கே எப்படி வந்தீர்கள்? உங்களைத் தேடி உங்கள் வீட்டிலிருந்து வந்தார்களே! கிணற்றிலே விழுந்திருப்பீர்கள் என்று பயந்து போய்க் கிணற்றை நோக்கி ஓடினோம்... பிறகு என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது'' என்றாள். சிறிது நேரம் கழித்து ''நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்? நல்லவேளையாக வந்தீர்கள். நீங்கள் வந்திராவிடில் நான் பயத்தாலேயே இறந்திருப்பேன். என்னை உடனே அழைத்துப் போய் என் வீட்டில் விட்டுவிடுங்கள்'' என்றாள்.

மாதங்கியின் முகத்தில் தோன்றிய பயத்தைக் கண்டு கோவிந்தன் பதற்றப்படாமல் சிரித்து ''உன்னை எங்கே அழைத்துப் போவது மாதங்கி? இது உன் வீடு, உன் மாளிகை...'' என்று அவள் கன்னத்தை இலேசாக வருடினான்.



## 16

மாதங்கி அவன் கரத்தை விலக்கவில்லை. ''இது என் வீடா? மன்னரின் மாளிகை என்கிறார்கள். என் வீடு என்கிறீர்களே.. மன்னரைப் போல் உடை அணிந்து விட்டால் உங்கள் மனமே மாறிவிடுகிறதே, இதை என் வீடு என்கிறீர்கள். வேடிக்கை வேண்டாம். நாம் இப்போதே போய்விடுவோம். நான் நேற்று உங்களைக் கோபமாகப் பேசியதால் நீங்கள் வீட்டிற்கே போகவில்லையாம். உயிரை மாய்த்துக் கொண்டிருப்பீர்களோ என்று உங்கள் வீட்டிலுள்ளவர்கள் பயப்படுகிறார்கள். வாருங்கள் போய்விடுவோம். உங்கள் மேல் எனக்குக் கோபம் இல்லை. வருத்தமும் இல்லை. உங்களைக் காண வேண்டும் என்று நான் எப்படித் துடித்தேன் தெரியுமா?'' என்று அச்சமும், அவசரமும் நிறைந்த குரலில் பேசினாள்.

கோவிந்தன் அமைதியாக அவளைப் பார்த்து ''மாதங்கி!'' என்றழைத்தான்.

''ஹூம்...'' என்று மெல்லக் குரல் கொடுத்தாள். இப்போது அவள் கோவிந்தனின் மார்பில் தன் கழுத்தைப் புதைத்திருந்தாள்.

''காட்டிலே நீ மிகவும் கோபக்காரியாக இருக்கிறாய். நாட்டுக்கு வந்தவுடன் நயமாகப் பேசுகிறாய். அதனால் நாம் இங்கேயே இருந்து விடுவோம்...''

''அப்படியில்லை...நான் கோபமாகப் பேச மாட்டேன். இந்த மாளிகையில் வாழ்வதைவிட அங்கே மண் குடிசையில் வசிப்பதே எனக்குப் பிடிக்கும். வாருங்கள் போய்விடுவோம். காட்டிலே அந்தப்பாறை மீது அமர்ந்து பேசுவோம்.''

''என்மேல் உனக்கு அன்பு ஏற்படுமா?''

கோவிந்தன் இப்படிக் கேட்டதும் மாதங்கி அவன் முகத்தை ஏறிட்டுப்பார்த்து உதடு துடிக்க ''எப்போதோ சொல்லிவிட்டேன். உங்கள்மீது எனக்கு முதல் சந்திப்பிலேயே அன்பு ஏற்பட்டு விட்டது. பெண்களிடமிருந்து இந்தச் சொல்லை நீங்கள் வெளிப்படையாக எதிர்பார்க்க முடியுமா? நாம் காட்டிற்கே



போய்விடுவோம். அங்கே குடிசை கட்டிக்கொண்டு குதூகலமாயிருப்போம்...'' என்றாள்.

அங்கே சிறிதுநேரம் மௌனம் நிலவியது. இந்த மௌனம், அமைதி, இவர்களை இந்த மண்ணுலகைவிட்டு மகிழ்ச்சிகரமான உலகிற்கு எல்லாம் அழைத்துச் சென்றது. தனக்கேற்பட்ட புது அனுபவத்தை அவ்வளவு எளிதில் இழந்துவிட மாதங்கி விரும்பவில்லை. கண்ணை மூடிக் கொண்டு அதே நினைவை மனத்திலிருந்து அழியவிடாமல் நிறுத்த முயன்று கொண்டிருந்தாள். எவ்வளவு நேரம் அவள் அப்படி இருந்தாளோ தெரியாது. கண் விழித்தபோது அங்கே கோவிந்தனைக் காணாது திகைத்தாள்.

மஞ்சத்திலிருந்து கீழே குதித்து மாதங்கி அந்த அறையின் வெளியே ஓடிச்சென்று கோவிந்தனைப் பற்றி அறியத் துடித்தாள்.

ஆனால் இயலவில்லை. அறைக்கதவு வெளியே தாளிடப்பட்டிருந்தது. பொழுது ஏறிக் கொண்டே வந்தது. அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. கட்டுப்பாடின்றி சுதந்தரமாகத் திரிந்த அவள் மாளிகைக்குள் அடைபட்டிருப்பதால் மிகவும் வேதனையடைந்தாள். உடலிலே பட்டாடை, அது கசங்கியிருந்தது. கழுத்திலே முத்து மாலை. சற்றுமுன்னர் கோவிந்தனின் அணைப்பால் அறுந்திருந்தது. செயற்கையான வாசனைத் தைலங்கள் அவள் மேனியில் தடவப்பட்டிருந்தன. அவள் அதை வெறுத்தாள். சாத்தப்பட்டிருந்த கதவைப் படபடவென்று தட்டினாள். கண்களிலே ஒருவித சோர்வு, பசி, கோபம், ஏமாற்றம் எல்லாம் சேர அவள் கதவை மிகவும் பலமாகத் தட்டினாள். கதவு திறந்தது; காலையிலே வந்த பாங்கியே வந்து நின்றாள்.

''மாதங்கி! அழைத்தீர்களா?'' என்று கேட்டாள்.

மாதங்கிக்குக் கோபம் கோபமாக வந்தது. 'அழைத்தீர்களா?' என்று கேட்கிறாள். மெல்லக் கேட்கிறாள். ஆனால் அதிலே மரியாதை. அவளைச் சுட்டெரிப்பவள் போல் பார்த்து ''ஆம் கூப்பிட்டேன்'' என்று ஆத்திரத்துடன் சொன்னாள்.

''என்ன வேண்டும்.. சொல்லுங்கள், உடனே தருகிறேன்...''

''சற்று முன்பு ஒருவர் இங்கே வந்துவிட்டுச் சென்றார். மீண்டும் அவர் எப்போது வருவார்? அவரை நான் உடனே பார்க்க வேண்டும்.''

''ஒருவர் வந்துவிட்டுப் போனாரா? இந்த நாட்டின் மாமன்னரைப் போய் 'ஒருவர்' என்கிறாயே... அவர் எப்போது இங்கு வருவார் என்று சொல்ல முடியாது. திடீரென்று வருவார்...''

இதைக் கேட்டவுடன் மாதங்கி திகைத்தாள். 'என் மனத்தை இந்த நாட்டு அரசரிடமா பறி கொடுத்தேன்?' இதை நினைக்கும்போது களிப்பால் கூத்தாடுவதா அல்லது ஏமாற்றத்தால் அழுவதா என்று அவளுக்குப் புரியவில்லை. பாங்கி கூறியது உண்மைதானா?

''நீ கூறியது உண்மையா?'' மாதங்கி கண்களில் நீர் தளும்பக் கேட்டாள்.

''உண்மை, உண்மை, உண்மை. சற்று முன்பு இங்கே வந்தவர் இந்த நாட்டு மாமன்னர் கோவிந்தன். உன்னை இங்கே அழைத்து வந்து அற்புதமான மாளிகையில் அமர்த்தியதும் மாமன்னர்தான். மாதங்கி! நீ ஏன் அழுகிறாய்? உனக்கு வேண்டிய சௌகரியங்களைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிறார். ஒருவிதக் குறைவு மில்லாமல் நான் கவனித்துக் கொள்கிறேன். உனக்கு என்ன வேண்டும் சொல்'' என்று பாங்கி தேனொழுகும் வார்த்தைகளால் கேட்டாள்.

மாதங்கியிடமிருது விசும்பல் ஒலி மட்டுமே வந்து கொண்டிருந்தது. தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு இதய பாரம் தணியும் வரை விம்மினாள். பிறகு எழுந்து பாங்கி இருக்கிறாளா என்று பார்த்தாள். அப்போதும் பாங்கி அங்கேதான் நின்றிருந்தாள். தட்டு நிறைய சுவையான உணவை சூடகக் கொண்டு வைத்துக் கொண்டு நின்றிருந்தாள்.

மாதங்கி அவளருகே வந்து ''எனக்கு ஓர் உதவி செய்வாயா?'' என்று கேட்டாள்.

''வேண்டியதைச் செய்யத்தானே நான் காத்திருக்கிறேன்? இதோ உணவு கொண்டு வந்திருக்கிறேன். பசி மிஞ்சிவிடும் முன்பு புசித்துவிடு. பிறகு பேசலாம்...'' என்றாள் பாங்கி.



''நான் கேட்டதை நிறைவேற்றுவதாயிருந்தால்...''

''இந்தத் தட்டைக் காலி செய்வதாக இருந்தால்...''

மாதங்கியும் பாங்கியும் சிறிது நேரம் போட்டி போட்டுக் கொண்டு விவாதித்தனர். கொண்டு வந்த உணவை உண்டபிறகுதான் தான் வாக்குறுதி தரமுடியும் என்று பாங்கி கூறிவிட்டாள். அவள் குரலில் பரிவிருந்ததால் மாதங்கி சம்மதித்தாள். இயற்கையாகவே இருந்த பசியும் சேரவே அவள் ஆவலுடன் தட்டிலிருந்தவற்றைத் தீர்த்துவிட்டு ''நான் கேட்டதை நிறைவேற்றுவாயா?'' என்று கேட்டாள்.

''உம்.. சொல்.. செய்கிறேன்..''

''நான் இங்கிருந்து என் வீட்டிற்குப் போய்விட வழி சொல்...''

''ஐயோ... அதுமட்டும் என்னால் முடியாது. என்னை நம்பி என் குழந்தைகள் நாலு பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் தாயாக இல்லாமல் செய்துவிட உன் உத்தேசமா? இப்படித்தான் சென்ற வருடம் தப்புமாறு வைத்துவிட்டாள் ஒரு பணிப்பெண். அவளுக்கு என்ன தண்டனை கிடைத்தது தெரியுமா? அவள் தலை வேறு உடல் வேறாக ஆக்கப்பட்டது. அதுபோல் என்னையும்...''

பாங்கி இவ்வாறு கூறியவுடன் மாதங்கி திடுக்கிட்டாள். 'பாங்கியின் தலைவேறு உடல் வேறு துண்டிக்கப்படும் என்பதற்காகவன்று. இந்த நாட்டு மன்னர் வேறொரு பெண்ணைச் சென்ற வருடம் இங்கே கொண்டு வைத்திருந்தாராமே! ஐயோ, நான் மனத்தைப் பறிகொடுத்தவர் இந்த நாட்டு மன்னரா? இருக்காது. அவர் ஒரு சாதாரண ஏழை. பாங்கி பொய் சொல்கிறாள்'.

''மாதங்கி! நான் சொல்வதைப் போல் கேள். உனக்கு எந்தவிதக் குறையும் வராது. இந்த மாளிகையில் இராணிபோல் வாழலாம். உன் அழகில் மன்னர் மயங்கி விட்டார். உனக்கும் அவரைப் பிடித்திருக்கிறது. பிறகென்ன குறை? ஏன் இங்கிருந்து போய்விடத் துடிக்கிறாய்?'' என்றாள் பாங்கி.

மாதங்கி சீறினாள். ''உன்னிடம் உபதேசம் கேட்கவில்லை. என் மனத்தைக் கவர்ந்தவர் மன்னர் அல்லர். அவரும்

எங்களைப் போன்று பசுக்களை மேய்க்கும் ஆயர்குலத்தவர். அவருக்கு என்னைத்தவிர மற்ற பெண் மீது அன்பு ஏற்படாது. நீ ஏதோ மோசம் செய்யப் பார்க்கிறாய். நீ இங்கிருந்து போய்விடு... போ...போ..'' எனக் கூவினாள். தயங்கிநின்ற அவள் மீது கைக்கு அகப்பட்ட பாத்திரத்தை எடுத்து வீசினாள். பாங்கி தப்பினாள். மெல்ல நகைத்தவாறு அங்கிருந்து போய்விட்டாள்.

இரவு வெகுநேரம் கழித்து கோவிந்தன் மாதங்கி இருக்கும் அறைக் கதவைத் தட்டினான். விளக்கும் ஏற்றவிடாது பலகணியின் வழியே வானத்தில் மின்னும் நட்சத்திரங்களைப் பார்த்தவாறு சோகமே உருவாக அமர்ந்திருந்த மாதங்கி கதவு தட்டப்படும் ஓசை கேட்டு எழுந்து சென்று திறக்காமல் மௌனமாக இருந்தாள். கதவு வெகுநேரம் தட்டப்பட்டது. பிறகு அந்த ஓசையும் இல்லை. சிறிது நேரம் கழித்து அவள் அருகே யாரோ நிற்கும் உணர்ச்சி ஏற்பட்டது. மாதங்கி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

மாளிகையின் சுவரில் படர்ந்திருந்த கொடியொன்றைப் பிடித்து ஏறி பலகணி யொன்றின் வழியே உள்ளே நுழைந்தான் கோவிந்தன். மாதங்கியின் அருகே சென்று அவளுடைய மூங்கில் போன்ற தோள்களை மெல்லத் தொட்டான். அவள் சற்றும் எதிர்பாராத விதமாக அவளைத் தூக்கிக் கொண்டு போய் மஞ்சத்தில் கிடத்தினான்.

''எவ்வளவு நேரமாக நான் கதவைத் தட்டுகிறேன்? ஏன் திறக்கவில்லை? அதற்குள் என்ன கோபம்?'' என்று கோவிந்தன் கொஞ்சினான்.

அவன் பிடியிலிருந்து விடுபடத் திமிறித் தன் கைகளால் கோவிந்தனைத் தள்ளியும் கால்களைப் பஞ்சு மெத்தையில் உதைத்துக் கொண்டும் மாதங்கி தன் பலத்தை உபயோகித்தாலும் கோவிந்தனின் பிடியிலிருந்து அவளால் நழுவ முடியவில்லை.

மங்கிய நிலவின் குளிர்கிரணங்கள் அவள் முகத்தில் மெல்லத் தடவின. கோவிந்தனின் விரல்கள் அவள் அங்கங்களில் நர்த்தனமிட்டு அவள் உடலில் சீற்றத்தால் எழுந்திருந்த வெம்மையைத் தணிக்க முயன்றன.



''என்னை விட்டு விடுங்கள்...'' மாதங்கி சிணுங்கினாள். அவனிடமிருந்து நழுவ முயன்றாள்.

''ஏன்..?'' கோவிந்தன் கேட்டவாறே தன் பிடியைப் பலப்படுத்தினான்.

''என்னை ஏமாற்றிவிட்டீர்கள்...''

''இல்லையே... உன்னை ஏன் ஏமாற்ற வேண்டும்?''

''இந்த நாட்டு மன்னரும் நீங்களும் ஒருவர்தாமா?''

''ஏன் உனக்கு மன்னரைக் கண்டால் பிடிக்காதா?''

''நான் சாதாரண கிராமப் பெண். எனக்கு மன்னருடன் என்ன பேச்சு வேண்டியிருக்கிறது?''

''கிராமப் பெண் விலையுயர்ந்த பட்டாடை அணிவாளா? முத்துமாலை பூணுவாளா?''

கோவிந்தன் இப்படிக் கேட்டவுடன் மாதங்கி திடுக்கிட்டுத் தன் நிலை உணர்ந்தாள். அவள் விழிகள் கோவிந்தனை ஏக்கத்துடன் பார்த்தன.

''ஆமாம் மாதங்கி! காலையிலே உனக்குக் கோபம் இல்லை. இப்போது ஏன் மாறிவிட்டாய்? வானத்தில் காயும் சந்திரனைக் கண்டால் உனக்குப் பிடிக்கவில்லையா? அல்லது என்னைக் கண்டால் பிடிக்கவில்லையா?''

''நான் கேட்டதற்கு மறுமொழி கூறவில்லையே... நீங்கள்தான் இந்த நாட்டு மன்னரா?''

''ஆமாம் என்றால் என்னை வெறுத்து விடுவாயா?''

மாதங்கியால் வாய்திறக்க முடியவில்லை. தன் முகத்தின் நேர் எதிரே இருந்த கோவிந்தனின் முக வடிவழகில் மயங்கிக் கிடந்தாள். அந்த விழிகளில்தான் எத்தனை கவர்ச்சி! முதன் முதலில் அந்த விழிகளைத்தானே சந்தித்தோம். அந்த விழிகளிலே என்ன சக்தியிருந்ததோ.. கண் கிடக்கட்டும். அந்த உதடுகள்- ஆகா, அவை திறந்து அந்த வெண் முத்தைப் போன்ற பற்களைத் தெரியப்படுத்தும்போது அந்த உதட்டுக்குள் சிரிப்பு

மறைந்திருக்கிறதா? அந்த உதடுகள் தேனில் தோய்த்து எடுக்கப் பட்டனவா? அதனால்தான் சொற்கள் வெளிவரும்போது சுவை நிறைந்து திகழ்கின்றனவா? சொற்கள் மட்டும்தானா சுவையுடன் இருக்கின்றன? மாதங்கியைத் திடீரென நாணம் சூழ்ந்தது.

''மாதங்கி! பேசமாட்டேன் என்கிறாயே.. நான் திடீரென மன்னராகிவிட்டால் என்னை வெறுத்து விடுவாயா?''

கோவிந்தனின் இந்தக் கேள்விக்கு மறுமொழி கூறுமுன்பு மாதங்கி அவன் பிடியிலிருந்து பலவந்தமாக விடுபட்டு ''என்னைப் பேச விட்டால்தானே?'' என்று துவள்வதுபோல் கூறிவிட்டு ''நான்முதலில் கேட்டேனே, அதற்கு விடை கூறவில்லையே'' என்றாள்.

''என்ன கேட்டாய்?''

''என்ன கேட்டேனா? இந்த நாட்டு மன்னரும் நீங்களும் ஒருவர்தானா?''

கோவிந்தன் மாதங்கியைத் தாவிப் பிடித்து அணைத்து ''கண்ணே, மாதங்கி! உனக்கு மன்னர் என்றால் வெறுப்பா? மன்னர் உன்னை இந்த நாட்டு மகிமைமிக்க மங்கையாக்குவார். நீ கட்டாந்தரையில் படுக்க வேண்டாம். கம்பும் களியும் உண்ண வேண்டாம். கிழிந்த ஆடை உடுத்த வேண்டாம்.. பஞ்சணை மெத்தையிலே இதோ இப்போது இருக்கிறாயே இதுபோல் எப்போதும் இருக்கலாம். உன் பாதங்கள் பளிங்குத் தரையன்றி வேறு தரையில் நடக்கவே வேண்டாம். மாதங்கி! இவற்றையெல்லாம் மன்னர் தருவார் மாதங்கி!''

''அதெல்லாம் சரி... மன்னன் ஆயிரம் தரட்டும்.. உங்களைப்போல அன்பைத் தரமுடியுமா?''- மாதங்கி கொஞ்சினாள்.

''ஏன் தரமுடியாது? மாதங்கி! நான்தான் மன்னன். மன்னனே நான்... இப்போது சொல், என்னை வெறுத்து விடுவாயா?'' கோவிந்தன் அவள் உதடுகளை மெல்லத் தட்டினான்.

மாதங்கி திகைத்தாள். மன்னர்... மன்னர்... அவளால் ஏதும் பேசமுடியவில்லை. அதற்குமேல் அங்கே பேசுவதற்கே வாய்ப்பு



ஏற்படவில்லை. கோவிந்தனும், மாதங்கியும் புதுஉலகிற்குப் படகில் சென்றனர். இரவும் மதியும் மெல்லமெல்ல ஓடிக்கொண்டே இருந்தன.

*

## 17

மாதங்கியைக் காணாத அவள் சகோதரர்கள் தேடாத இடம் பாக்கியில்லை. மாதங்கி, மாதங்கி, என்று அவர்கள் இட்ட குரல் காடு, மலையெல்லாம் பரவி எதிரொலித்தது. குளம் குட்டை, தோப்பு, துரவு, ஏரி, மலை, காடு, மேடு என்று அவர்கள் மாதங்கியைத் தேடித் தேடி அலைந்தனர். அன்ன ஆகாரமின்றி அவர்கள் உடல் இளைத்தது. அழுது முகம் வீங்கியது. அலைந்து அலைந்து கால்கள் கடுத்தன. கூவிக் கூவி நெஞ்சு வறண்டது.

மான்ய கேட நகரத்தின் கோட்டை வாயிலைக் கடந்து அவர்கள் மாதங்கியைத் தேட வந்தனர். மாதங்கியைத் தேடிப் புறப்பட்டாலும் தாம் வளர்த்த பசுக்கூட்டத்தை மறந்து விடவில்லை. அவற்றையும் ஓட்டிக் கொண்டு வந்தனர். அவர்களுக்கு ஓர் எண்ணம், மாதங்கி நகரத்தைக் காண வேண்டும் எனும் ஆசையில் ஒருவேளை வந்துவிட்டாளோ என்று. அதனால் மான்யகேட நகரின் ஒவ்வொரு சந்து, வீதி, சாலை என்று மாதங்கியைத் தேடி அலைந்தனர். இளம் பெண் யாராவது சென்றால் மாதங்கியோ என்று ஓடிச் சென்று பார்த்தனர்.

வீதியிலே பண்டம் விற்றுச் செல்வோரைக் கண்டால் ''ஐயா! என் தங்கை மாதங்கியைக் கண்டீர்களா'' என்று கேட்டனர். சிலர் திகைப்பர் சிலர் விழிப்பர்; சிலர் சிரிப்பர். சிலர் அனுதாபப்படுவர். ''மாதங்கியா? அதோ கீழண்டை வீதியில் மேலண்டை வீட்டின் தென்னண்டை குடிசையில் கேளுங்கள்'' என்பர், சிலர்.

''மாதங்கி இருக்கிறாளா?'' என்று சகோதரர்கள் ஓடிச் சென்று வினவுவர்.

''மாதங்கியா? சற்று இருங்கள். வெளியே போயிருக்கிறாள் வந்துவிடுவாள்'' என்று விடை கிடைக்கும்.

ஆவலுடன் சென்ற உயிர் மீண்டதுபோல காத்திருப்பர். அதோ மாதங்கி!

கன்னங்கரிய உருவுடன் மலை அசைவது போல் ஓர் உருவம் அசைந்து வரும்.

''இதோ மாதங்கி!''

அதே பெயருள்ள வேறு யாரையோ காட்டுவர்.

''சே!'' என்று வெறுப்பில் திரும்புவர் சகோதரர்கள்.

காலதேவன் நாள்களை விழுங்கி விரைந்தான்.

***

கிணிங் கிணிங் என்று கழுத்தின் மணியொலிக்க, பசுக்களை ஓட்டிச் சாலையின் வழியே மாதங்கியின் சகோதரர்கள் சுற்றி வரும்போது ஒருநாள் மாலை திடீரென அவர்கள் பசு 'அம்மா' என்று குரல் கொடுத்தது. தலை அசைத்தது. சகோதரர்கள் வியந்தனர். பின்னர் விரைந்து பசு பார்த்த திசையில் சென்றனர். மரத்தடியில் ஒரு பெண் சோர்ந்து படுத்திருந்தாள்.

மங்கிய ஒளியில் அவள் மாதங்கி என்பது தெரிந்து விட்டது. பட்டாடையன்றோ அவள் உடலை அலங்கரித்திருக்கிறது! பாசி மணிக்குப் பதில் முத்துப் பதக்கம் அன்றோ கழுத்தை அணி செய்கிறது. ஆனால் செழுமையின் சின்னமாகத் திகழ்ந்த அவள் உடல் ஏன் சோர்வுற்றுக் காணப்படுகிறது?

'மாதங்கி!' என்று அவர்கள் ஒரே போதில் கூவினர். அவளை அப்படியே தூக்கி அனைவருமாகத் தங்கள் மடியில் கிடத்தினர். பசு, அம்மா என்று குரல் கொடுத்தது. கிணிங் கிணிங் என்று கழுத்து மணிகள் குலுங்கின.

மாதங்கி கண் விழித்தாள். அவள் உடல் நடுக்கத்தால் தூக்கிப் போட்டது.

''நான் எங்கே இருக்கிறேன்?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள் மாதங்கி.



''மாதங்கி! என் கண்ணே இதோ பார்! நாங்கள் தான்.... சங்கன், ரங்கன், மங்கன், திம்மன்...'' எனறு அவள் சகோதரர்கள் ஒரே குரலில் கூவினர். மாதங்கியின் களைப்பு சிறிது சிறிதாக மறைந்தது. தன் சகோதரர்களையும் தான் வளர்த்த பசுக்களையும் கண்டவுடன் அவளுக்குச் சொந்தவீட்டில் இருப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

ரங்கன் அவசர அவசரமாக ஒரு குவளையில் பால் கறந்து கொடுத்தான். சங்கன் மாவைப் பிசைந்து தேனில் குழைத்துக் கொண்டான். மங்கன் அவள் தலையைக் கோதிவிட்டான். திம்மன் மட்டும் கோபக்காரன். அவளுக்கு நேர்ந்தவற்றை உடனே கூறுமாறு வற்புறுத்தினான்.

மாதங்கி களைப்பு நீங்கியவுடன் மிகவும் பரபரப்புடன் ''அண்ணா! போய்விடுவோம். போய் விடுவோம். இங்கிருந்து போய் விடுவோம்'' என்று கூறி விரைந்து எழுந்தாள். அவளுடைய சகோதரர்கள் எவ்வளவோ கேட்டும் அவள் உடனே மறுமொழி கூறவில்லை. ''ஆபத்திலிருந்து விடுபட வேண்டுமானால் உடனே நம் வீட்டிற்குப் போய்விட வேண்டும்'' என்று மாதங்கி வற்புறுத்தினாள். அவளுடைய முகத்தில் தோன்றிய மாறுதலையும், அவள் பேச்சில் ஏற்பட்ட படபடப்பையும் கண்ட அவள் சகோதரர்கள் மறுபேச்சுப் பேசாமல் அவளை அழைத்துக் கொண்டு நகரத்தின் வெளிப்புறத்தே யிருந்த வீட்டை நோக்கி விரைந்தனர்.

வீடு சென்ற பிறகு கூட மாதங்கிக்குப் பிரமை நீங்கவில்லை. ஏதாவது ஓசை கேட்டால் மன்னரின் ஆட்கள் தாம் வருகின்றனரோ என்று அஞ்சுவாள். அவளிடமிருந்து களிப்பும், குதூகலமும் எங்கோ ஓடிப் பறந்து விட்டன. வீட்டிலே தங்காமல் எப்போதும் வெளியே சுற்றிக் கொண்டிருக்கும் அவள் அதற்கு நேர்மாறாக குடிலுக்குள்ளேயே அடைந்து கிடந்தாள். அதற்குக் காரணம் இல்லாமலில்லை.

கோவிந்தன் அரவணைப்பில் மூழ்கிக் கிடந்த மாதங்கிக்குத் தன் மனத்தைக் கவர்ந்தவனே அந்த நாட்டு மன்னன் என்பது தெரிந்து விட்டது. மன்னர்-மன்னர் மனத்தில் ஏறி அமரும்

CONNEMARA PUBLIC L
6

பாக்கியம் பெற்றுவிட்டோம் எனும் களிப்பில் அவள் மாளிகையைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டாள்.

ஆனால் குறிப்பிட்ட இடத்தைத் தாண்டிச் செல்ல அவளுக்கு அனுமதி கிடைக்கவில்லை. இயற்கையிலேயே துடுக்குத்தனம் மிகுந்த அவள் தன்னைத் தடுத்தவர்களை நோக்கிச் சீறினாள்.

''வீணே இங்கே கூவாதே தாயே! உன் இடத்தை விட்டு நீ வரக்கூடாது...'' எனறு கூறிவிட்டனர் வேலைக்காரர்கள்.

மாதங்கிக்குக் கோபம் தாங்க முடியவில்லை. ''நான் யார் தெரியுமா? மன்னர் வரட்டும். உங்களைத் தொலைத்து விடுகிறேன்'' என்று கூவினாள். பயந்து போவதற்குப் பதிலாக அவர்கள் களுக்கென்று நகைத்தனர். அவள் பேச்சை லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. மேலும் அங்கே அவமானப்பட விரும்பாமல் மாதங்கி சோர்ந்த உள்ளத்துடன் தன் இருப்பிடத்திற்கு வந்து விட்டாள். மன்னனின் மாளிகை என்பது பயங்கரமான இடம் என்று அவள் எண்ணியது உண்மையாகிவிட்டது.

வேளைக்கு உணவு வந்தது. அவள் நீராட வாசனை நீர் கிடைத்தது. பட்டாடைகள் கிடைத்தன. அவற்றைக் கொண்டு வருபவர்கள் அவளைப் பரிதாபமாகப் பார்த்துச் சென்றனர். ஒருத்தி மட்டும் சற்று நேரம் அங்கே தங்கியிருப்பாள். மாதங்கியின் கதையை அவள் அறிந்து கொள்ள ஆசைப்பட்டதால் அவளுடன் பேச்சுக் கொடுத்தாள்.

மாதங்கி கேட்டறிந்தவை மிகவும் பயங்கரமாயிருந்தன. மன்னர் கோவிந்தன் பெண் மோகங் கொண்டவன் என்றும், அழகிய பெண்களை எங்கே பார்த்தாலும் தூக்கி வந்து அவள் அழகைப் பலிகொண்டு விடுவான் என்றும் அவள் அறிந்ததும் நடுங்கினாள். அப்படி இருக்காது என்று சமாதானப் படுத்திக் கொண்டாள். கோவிந்தனிடம் எப்படிக் கேட்பது? அன்று சந்திக்கும்போது கோவிந்தனிடம் கேட்டே விட்டாள். கோவிந்தன் நகைத்தான். மழுப்பினான். ஏதோ இன்ப வார்த்தைகள் கூறிவிட்டுச் சென்று விட்டான்.



மறுநாளிலிருந்து மாதங்கிக்குக் காவல் கெடுபிடி அதிகமாகியது. அவள் இருப்பிடத்தை விட்டு எங்கும் செல்ல முடியாது தடை ஏற்பட்டது. நாள்தோறும் வந்து கொண்டிருந்த கோவிந்தன் அந்த இடத்திற்கு வாரம் ஒருமுறை வருவது என்பதாகியது. மாதங்கிக்குச் சிறைவாசம் போன்ற அந்த இடம் பிடிக்கவில்லை. அங்கிருந்து சென்று விட வேண்டும் எனும் துடிப்பு ஏற்பட்டது.

அன்றிரவு இரண்டாம் ஜாமத்தின் போது மாதங்கி தூங்கிவிட்ட பிறகு கோவிந்தன் மெல்ல வந்து அவள் கன்னத்தைத் தொட்டான். மாதங்கியின் முகம் அந்த நிலவொளியிலும் நன்றாகத் தெரிந்தது. பலகணியின் திரைச் சீலையை அகற்றி குளிர்ந்த கிரணங்கள் நன்றாகப் படுமாறு செய்தான். மாதங்கி அவனையே விழுங்கிவிடுபவள் போல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய் மாதங்கி? இந்த நிலையிலும் அழகு கொப்பளிக்கிறது!'' என்று கோவிந்தன் அவள் கரங்களை மெல்லப் பிடித்துத் தன் அருகே வரச் செய்தான்.

''இவ்வளவு நாள்களாக ஏன் வரவில்லையாம்? எனக்கு இங்கே இருப்பதற்குப் பயமாக இருக்கிறது'' என்று மாதங்கி சிணுங்கினாள்.

''பயமா? இந்த மாளிகையில் உனக்கு பயம் ஏன்? கோவிந்தனின் அரண்மனைக்குள் யார் நுழைந்து விட முடியும்?''

''ஹூம்... அப்படிச் சொல்லுங்கள். நீங்கள் மன்னர் என்பதை ஒப்புக்கொண்டு விட்டீரல்லவா?''

''ஆம், அதனாலென்ன.... மன்னனின் மனத்துக்கினியவள் நீ...''

''அதுசரி ஏன் இவ்வளவு நாள்களாக உங்களைக் காணோம்...''

''மன்னருக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கும்.''

கோவிந்தன் இப்படிக் கூறியவுடன் மாதங்கி திடுக்கிட்டாள்.

''அப்படியென்றால் என்னை என் வீட்டிற்கே கொண்டு விட்டு விடுங்கள். என்னை எதற்காக அழைத்து வந்தீர்கள்? ஒரு பாவமும் அறியாமல் பசுக்களை மேய்த்து, பறவைகளைப் பார்த்து அமைதியாக இருந்த எனக்கு இதென்ன தண்டனையா?''

''இவ்வளவு நாள் அந்தத் தண்டனை இனித்திருக்கிறது. இப்போது கசந்துவிட்டதா?''

''நான் என் அந்தஸ்தை மீறிய இடத்துக்கு வந்திருப்பேன் என்று எண்ணவில்லை''

''உயர்ந்த இடத்துத் தொடர்பு பிடிக்காதா?''

''வேண்டாம்... வேண்டாம்... மாளிகைப் பெண்களோடு பெண்களாக வாழ்வதைவிடக் காட்டில் மரத்தோடு மரமாக வாழ்வேன்...''

''பட்டாடையும் அரசபோகமும் வேண்டாமா?''

''பட்டாடை-அது என்ன உள்ளத்துக்குத் தெம்பு அளிக்கிறதா? வெறும் உடலழகை வளர்க்கும் அதை நான் வெறுக்கிறேன்...''

''ஏன் இப்படிப் பேசுகிறாய், மாதங்கி? உன் உடம்புக்கு என்ன வந்துவிட்டது?''

''உடம்புக்கு ஒன்றுமில்லை. உள்ளத்திற்குத்தான். என்னை என் வீட்டிற்கே கொண்டு போய் விட்டுவிட மாட்டீர்களா?''

மாதங்கி கண்ணீர் விட்டாள். அவள் அழுவது கூட கோவிந்தனுக்குத் தனிவித ரசனையாக இருந்தது. அவள் கண்களைத் துடைத்து ''அசடே! இதுபோன்ற சுக வாழ்வுக்கு ஏங்கியிருப்பவர்கள் ஏராளம், ஏராளம். அவர்களுக்குக் கிடைக்காத பாக்யம் உனக்குக் கிடைத்திருக்கும்போது நீ ஏன் வெறுக்கிறாய்? உனக்கு இங்கே என்ன குறை? என்னைப் பிடிக்கவில்லை என்றால் உடனே உன்னை அழைத்துப்போய் உன் வீட்டிலேயே விட்டு விடுகிறேன்'' என்று கூறி அவள் தாடையை மெதுவாகத் தட்டினான். மாதங்கியால் ஏதும் பேசமுடியவில்லை. பேசவிடவில்லை கோவிந்தன். ஆனால் மாதங்கி தன் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருந்த ஒன்றை



மட்டும் சல்லாபத்தின் இடையே கேட்டாள். ''அரசே! என்னைத் தவிர வேறொருத்தி மீதும் உங்களுக்கு ஆசையில்லையே'' என்று.

கோவிந்தன் சிரித்துவிட்டு இல்லையென்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான். மாதங்கி துவண்டாள். விழியைத் துயில் அணைத்தது. கோவிந்தன் மெல்ல நகர்ந்து சென்று விட்டான். அவன் சென்று வெகு நேரம் கழித்து மாதங்கி விழித்துக் கொண்டாள். கோவிந்தனைத் தன் அருகே காணாததை அறிந்து திடுக்கிட்டாள். அவன் கூறிய யாவும் உண்மையென்று நினைத்த அவள் கோவிந்தன் நடுநிசியில் எங்கே சென்றிருப்பான் என்பதைப் பற்றி யோசிக்கலானாள்.

தூக்கம் கலைந்துவிட்டது. எங்கும் அமைதி நிலவியது. வெளியே மெல்லச் சென்றாள். கதவு திறந்துதானிருந்தது. மெல்ல காலடி வைத்துச் சென்றாள். தோட்டத்துச் செடிகளில் மலர் பூத்து கம்மென்ற மணம் வீசியது. இங்குமங்கும் பார்த்தவாறு மரநிழலின் ஓரமாகவே சென்றாள்.

வளைந்து வளைந்து நந்தவனத் தோட்டத்தின் எல்லைக்கு அது சென்றது. வானத்தின் மேல் திசையில் சந்தனக் கிண்ணம் போல் மங்கிக் காணப்பட்டது நிலா. எங்கிருந்தோ நகைக்கும் ஒலி. சிணுங்கும் சப்தம். வீணையின் நரம்பை யாரோ மீட்டுவது போன்ற நாதம். பாதச் சதங்கைகள் தாளம் தவறி ஒலிப்பது போன்ற ஓசை.

கொடிகள் பல படர்ந்து அடர்ந்திருந்த அழகிய மண்டபத்திலிருந்துதான் இவ்வித ஒலிகள் மிதந்து வந்தன. மாதங்கி காதுகொடுத்துக் கேட்டாள். பெண்கள் பலர் நகைக்கும் ஒலி. மாதங்கி அந்த இடத்துக்கு அருகே சென்றாள். அசைந்தாடும் திரைச்சீலை வழியே மெல்ல எட்டிப் பார்த்தாள்.

கோவிந்தன் நடுவே படுத்திருக்கிறான். சுற்றிலும் பெண்கள் முறையற்று அமர்ந்து வீணையும், மத்தளமும் குழலும் தழுவிப் பாதி மயக்கமுற்ற நிலையில் காண்கின்றனர்.

சே! மாதங்கி பார்வையைத் திருப்பிக் கொண்டாள். அவள் உடல் நடுங்கியது. அங்கே ஏன் வந்தோம் என்று தோன்றிவிட்டது. 'மீண்டும் இருந்த இடத்திற்கே போய் விடுவோம்- இருந்த இடத்திற்கா- ஒரு நாளும் மாட்டேன். அங்கே மீண்டும் மன்னர் வருவார். மற்ற பெண்களைத் தொட்ட கரத்தாலே என்னைத் தொடுவார். மாட்டேன்... முடியாது முடியாது....'-மாதங்கி திடமான முடிவுக்கு வந்தவளாய் அங்கிருந்து ஓடினாள். ஓடினாள். நந்தவனத்தின் வெகு தொலைவில் அதன் பின்பக்க எல்லை முடிவடையும் இடத்தில் திறந்திருந்த கதவு வழியாக வெளியேறினாள்.

தட்டுத்தடுமாறி அலைந்து திரிந்து ஊரின் ஓரத்தே மரத்தடியில் இருந்தபோதுதான் அவளுடைய சகோதரர்கள் அவளை வீட்டிற்கு அழைத்து வந்தனர். வீடு வந்து பல நாள்கள் வரை மாதங்கி திக்பிரமை பிடித்தவள் போல் தோன்றினாள். விவரம் அறிந்த பிறகுதான் அவள் சகோதரர்கள் சீறியெழுந்தனர். என்ன பயன்? அரசரை என்ன செய்ய முடியும்?

அவர்கள் மான்யகேட நகரத்துக்கு வந்து விசாரிக்க நினைக்கும்முன்பே கோவிந்தன் சோழ நாட்டிற்குச் சென்று விட்டாரே. ஆனால் அவன் வீரமாதேவியை மணந்து வருவதற்குள் நிலை மிக மாறியிருந்தது.

மாதங்கி தன்னிடத்தே ஏதோ மாறுதலை உணர்ந்தாள். அவளால் முன்போல் உற்சாகமாக இருக்க முடியவில்லை. சோர்வு அவள் உள்ளத்தோடு நில்லாமல் உடலிலும் நிறைந்தது. தன்னுள் ஏதோ ஒரு மாறுதலை உணர்ந்தாள். மாதங்கியின் வயிற்றில் கோவிந்தனின் மறுமதிப்பு வளர்ந்து கொண்டிருந்தது.

இதை அறிந்த மாதங்கியின் சகோதரர்கள் வேதனையுற்றனர். மாளிகைக்கு விரைந்தனர். நீதி கேட்டுப் பலரிடம் முறையிட்டனர்; பலனில்லை. ஆனால் தன் சகோதரர்கள் சோர்ந்த முகத்துடன் வந்ததைக் கண்ட அவள் வேதனை யடைந்தாள்.

"அவரைச் சந்தித்தீர்களா?" என்று கேட்டாள். அவர்கள் என்ன சொல்வர்? மாதங்கி வற்புறுத்திக் கேட்டபிறகு அவர்கள் உண்மையைக் கூறிவிட்டனர். மன்னர் கோவிந்தன் சோழ நாட்டு



அரசகுமாரியை மணந்து கொண்டு விட்ட செய்தி கிடைத்திருக்கிறது எனும் விவரத்தைக் கூறினர்.

மாதங்கி இடிந்து விட்டாள். அவளுக்கு இந்த உலகத்தில் வாழவே பிடிக்கவில்லை. மௌனமாக யோசித்தவாறு இரு தினங்களைக் கழித் தாள். மூன்றாவது நாள் அவளை அந்த இடத்தில் காணவில்லை. மீண்டும் வேதனையுற்றுத் தேடிய அவள் சகோதரர்கள் அவளது சடலம் மாளிகைத் தடாகத்தில் மிதந்து கொண்டிருப்பதைக் கேட்டு அதிர்ச்சியடைந்தனர். அந்தச் செய்தி காட்டுத் தீ போல் நகரெங்கும் பரவியது. கோவிந்தனின் பசிக்கு இரையான பேதையின் முடிவு குறித்து அனைவரும் வருந்தினர். கோவிந்தனின் மோகாந்தகாரத்தை எண்ணிச் சீறினர். சபித்தனர். ஆங்காங்கே கூடிப் பேசிக் குமுறினர். என்ன பயன்?

கோவிந்தன் அந்தப் போதில் சோழநாட்டில் வீரமாதேவியுடனன்றோ இருந்தான்? இங்கே இது போன்ற துயரச் சம்பவமும் அங்கே இருந்த மகிழ்ச்சிகரமான மணமான சம்பவமும் மக்கள் மனத்தில் கோவிந்தன்மீது அதிருப்தியை வளர்த்தன. மக்கள் இத்தகைய மனநிலையில் இருக்கையில் திருமண கோலத்துடன் வீரமாதேவியை அழைத்துக் கொண்டு நகரில் நுழையும் கோவிந்தனுக்கு வரவேற்பு அளிக்க எவர் துணிவர்?

தோரணங்களை இராமபட்டனும்; அரசு ஊழியர்களுமே கட்டவேண்டி நேர்ந்தது. ஆங்காங்கே இராமபட்டனுக்கு எதிர்ப்பே நிறைந்திருந்தது.



## 18

மேலைக்கங்க நாட்டு ஒற்றன் பழுவேட்டரையரிடம் மன்னன் பூதூகனின் செய்தியை அறிவித்தான். பழுவேட்டரையர் அவன் கூறுவதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார். பூதூகன் கங்கநாட்டில் படை திரட்டும் செய்தியை ஒற்றன் கூறும்போது பழுவேட்டரையர் தோள்கள் துடித்தன.

பழுவேட்டரையர் கடகடவென நகைத்தார். அந்தச் சிரிப்பொலி ஒற்றனை நடுங்கச் செய்தது. பழுவேட்டரையர் இடிபோன்ற குரலில் ஒற்றனைப் பார்த்து ''என்னிடம் இவற்றையெல்லாம் கூறுகிறாயே, நான் சோழ நாட்டிற்கு மிக வேண்டியவன் என்பது உனக்குத் தெரியாதா?'' என்றார்.

ஒற்றன் புத்திசாலி. அவன் பழுவேட்டரையரை கீழ்க் கண்களால் பார்த்தவாறு ''அது எனக்குத் தெரியும் ஐயா! தெரிந்துதான் உங்களிடம் கூறவந்தேன். சோழ நாட்டிற்கு நீங்கள் வேண்டியவராயிருந்தால் சோழ அரசகுமாரிக்கு இராட்டிரகூட இளவரசரை ஏன் திருமணம் செய்து கொள்ளப் போகிறார்கள்?'' என்றான்.

பழுவேட்டரையர் திகைத்தார். ''நீ எந்தப் பகுதியில் உன் ஒற்றர் வேலையைச் செய்கிறாய்?'' எனறு கேட்டார்.

''நான் சோழ நாட்டிற்குள் இப்போதுதான் வருகிறேன். ஆனால் சோழநாட்டுத் திருமணம் திக்கெங்கும் பரவி விட்டதே! பராந்தகன் மகள் திருமணம் உங்கள் உயர்தர நட்பைக் குலைத்து விட்டது குறித்து எங்கள் மன்னருக்கும் மிக வருத்தம்...'' என்றான் ஒற்றன்.

பழுவேட்டரையர் இங்கும் அங்கும் உலவிக் கொண்டிருந்தவர் சட்டென நின்று ''உங்கள் மன்னருக்கு என்ன வருத்தம்? அவர் மிகவும் சந்தோஷமல்லவா பட வேண்டும்? பிருதிவீபதியைச் சிறையிலிட்டுள்ள உங்கள் மன்னருக்கு என் நட்பை இழந்த சோழ மன்னன் நிலை குறித்து வருத்தம் ஏற்படக் காரணமில்லையே...'' என்றார்.



''சோழ நாட்டின் மீது எங்கள் மன்னர் படை யெடுக்கப் போவது உறுதி. அப்போது அவரை எதிர்க்கச் சம பலமுள்ள நீங்கள் இல்லாதது அவருக்கு வருத்தத்தை அளிக்காது வேறென்ன செய்யும்?'' என்று அவன் கூறும்போது பழுவேட்டரையர் கடகடவென நகைத்தார். ''ரொம்ப புத்திசாலித்தனமாகப் பேசுகிறாய் தம்பி! சோழ நாட்டின் நிலை இப்படியாகிவிட்டதை எண்ணி எனக்கு வருத்தமாகத்தானிருக்கிறது. அது போகட்டும். நீ என்னிடம் வந்த காரணம் என்ன?'' என்று பழுவேட்டரையர் கேட்டார்.

''நான் தூதுவன் அல்லன்... ஐயா! நான் உங்கள் கருத்தை அறிந்து போகத்தான் வந்தேன். சென்று வருகிறேன்...'' என்று அவன் புறப்பட்டான்.

பழுவேட்டரையர் அவனைத்தடுத்து ''என் கருத்து என்ன என்பதை நீ தெரிந்து கொண்டு விட்டாயா?'' என்று கேட்டார்.

''சோழ நாடடின் மீது உங்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது'' என்றான் ஒற்றன்.

''உன் துணிவைப் பாராட்டுகிறேன். என் எதிரே இதற்கு முன்பு இதுபோல் கூறியவர் எவரும் தப்பிப் பிழைத்ததில்லை. இப்போதுகூட நீ கொண்டுள்ள எண்ணம் தவறென்பதை நான் நிச்சயமாகக் கூற முடியும்...'' என்றார் பழுவேட்டரையர்.

ஒற்றன் நகைத்தான்.

''ஏன் சிரிக்கிறாய்?''

''சிறிது நேரத்திற்கு முன்பு சென்னிப் பேரரையரோடு பேசிக் கொண்டிருந்தீர்களே... அவற்றை நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன்...''

ஒற்றன் இவ்வாறு கூறியவுடன் பழுவேட்டரையர் திடுக்கிட்டார். ஒற்றனின் திறமையை அவர் போற்றினாலும் அவன் இவ்வளவு துணிவுடன் பழுவூருக்கு வந்து, மறைந்திருந்து பேசியவை அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்தது அதிர்ச்சியை அளித்தது. பழுவூரிலுள்ள தம் வீரர்களுக்குத் திறமையே குறைந்து விட்டதோ என எண்ணினார்.

சிறிதுநேரம் இருவரும் பேசாமல் நின்று கொண்டிருந்தனர். பிறகு தலையை அசைத்து ஒற்றனைப் போகுமாறு தலையை அசைத்தார். ஒற்றன் அங்கிருந்து சென்றான். அவன் சென்றவுடனே பழுவேட்டரையர் வீரர்களை அழைத்துச் சற்றுமுன் சென்ற கங்க நாட்டு ஒற்றனைச் சிறையிடுமாறு கூறினார்.

அவருக்கு இப்போது பரமதிருப்தி. பராந்தக சோழருடன் ஏற்பட்ட விரோத மனப்பான்மையை அயல்நாட்டவர் அறிந்து கொள்ளாதிருக்க வேண்டும் எனும் அவரது எண்ணம், அந்த ஒற்றனைச் சிறைபிடித்ததன் மூலம் நிறைவேறி விட்டதாக அவர் எண்ணினார். ஆனால் சற்று நேரத்திற்கெல்லாம் சோர்ந்த முகத்துடன் தம் வீரர்கள் திரும்பி வந்து கூறிய செய்தி அவர் குழப்பத்தை மேலும் அதிகமாகச் செய்தது.

''அவனைப் பிடிக்கச் சென்றோம். அவன் அமைதியாக எங்களை நோக்கி 'தவறான ஆளைச் சிறைசெய்ய வந்திருக்கிறீர்கள்' என்றான். தன்னிடமிருந்த புலி அடையாளம் பதித்த முத்திரைச் சின்னத்தைக் காட்டினான். அவன் கங்க நாட்டு ஒற்றனல்லன் என்று விட்டுவிட்டோம். நீங்கள் கூறிய கங்க நாட்டு ஒற்றன் போன இடம் தெரியவில்லை'' என்றனர் வீரர்கள்.

அவர்கள் மேல் சீறி விழுந்த பழுவேட்டரையர் அவர்களைப் போகச் சொல்லிவிட்டாலும் பழுவூரில் சோழநாட்டு ஒற்றர்கள் நடமாடும் சம்பவம் அவர் ஆத்திரத்தை இன்னும் அதிகப்படுத்தியது. 'பராந்தகர் என்னைச் சந்தேகப்படுவதற்கு அவர் உள்ளத்தில் முன்பே என்னைப்பற்றித் தவறான எண்ணம் உதயமாகி விட்டது போலும் எப்படி இருந்தாலும். அதைப்பற்றி அவர் என்னைக் கேட்டிருக்கலாம். கேட்காததால் அவர் மனத்தில் ஏதோ மறைத்து வைத்திருக்கிறார் என்பது தெரிந்து விட்டது. என்னிடம் அவர் தெளிவாகப் பேசாத போது நானும் அவரிடம் அதுபோல் பழகுவது சரிதானே? என எண்ணினார் பழுவேட்டரையர். தான் பராந்தகர் பால் கொண்டுள்ள சீற்றம் நியாயமானதே எனும் முடிவுக்கு வந்தார். பழுவூர் படைத் தலைவரை உடனே அழைத்தார். பழுவூரில் வரும் எந்தப் பிற நாட்டவரையும் கண்காணிக்குமாறு கட்டளையிட்டார். பழுவூர்



கோட்டையை உடனே வலுப்படுத்தக் கட்டளையிட்டார். கங்கநாட்டிற்குச் சென்றிருக்கும் தன் மகளை உடனே அழைத்து வருமாறு செய்தி சொல்லி அனுப்பினார்.

பழுவேட்டரையரின் இந்த மனமாற்றம் பராந்தகருக்கும் அறிவிக்கப்பட்டபோது அவர் புன்முறுவல் செய்தார். பழுவேட்டரையர் உள்ளம் அவருக்குத் தெரியும். எந்தக் காலத்திலும் சோழ நாட்டிற்கு விரோதமாக மாற மாட்டார் என்பதும் அவருக்குத் தெரியும்.

''என் மகள் திருமணத்தால் மட்டும் அவருக்கு கருத்து வேற்றுமை ஏற்பட்டதென்றால் அது எளிதில் மாறிவிடக் கூடியதே. நாளைக்கே என் மகளுக்குக் குழந்தை பிறந்து விட்டதென்றால் 'பேரன் பேரன்' என்று கொஞ்சிக் குலாவ உடனே ஓடிவரமாட்டாரா அந்தப் பாட்டன்!'' என்று கூறி நகைத்தார்.

''பழுவேட்டரையர் கோபம் ஒரு நொடியில் தீர்வதற்கு ஒரு சந்தர்ப்பம் வரப்போகிறது பாருங்கள். திருச்சிற்றம்பலத்தில் பொன் வேய்ந்த திருப்பணி முடிவடைந்து ஓராண்டு ஆகப் போகிறதல்லவா? சிற்றம்பலம் சென்று பார்த்துப் பல மாதங்கள் ஆகின்றன. அடுத்த மாதம் திருச்சிற்றம்பலத்திற்குப் போக எண்ணியிருந்தேன். பழுவேட்டரையருக்கு அழைப்பு விடுப்போம். அப்போது அவர் அங்கே வராமலா போகப் போகிறார்? கண்ணைப் பறிக்கும் அந்த அற்புத விமானத்தைக் காண அவர் எப்போதும் ஆசைப்படுவார்'' என்றார். பழுவேட்டரையரின் நட்பைப் பெரிதும் விரும்பும் அமைச்சர் மண்டலத்தார் இந்த யோசனையைப் பெரிதும் போற்றினர்.

***

''நீங்கள் திருச்சிற்றம்பலத்துக்குச் சென்றிருக்கிறீர்களா?'' என்று கேட்டாள் அநுபமா.

''உன் தந்தை பொன் வேய்ந்த அந்த அற்புதக் கோயிலுக்குத்தானே? ஹூம்... அந்த வழியே பல முறை போயிருக்கிறேனேயன்றி ஒரு முறைகூட உள்ளே நுழைந்ததில்லை..'' என்று வெள்ளங்குமரன் கூறினான்.

அவர்கள் எப்போதும் சந்திக்கும் அதே நந்தவனத்து மேடை. என்னதான் வைராக்யமாக மறக்க முயன்றாலும் வெள்ளங் குமரனால் இயலவில்லையே! அவன் கால்கள் நந்த வனத்தை நோக்கிச் செல்கின்றன. அவன் விழிகள் அநுபமா வரும் திக்கை நோக்குகின்றன. இந்த இதயம் ஏன் இப்படிப் படபடவென்று துடிக்கிறது? எவ்வளவோ பேச வேண்டும் என்று நினைக்கும் இதயம் அவள் வந்தவுடன் திகைக்கிறதே ஏன்? வெள்ளங் குமரன்- அதைத் தெய்வசங்கல்பம் என்றே எண்ணி அப்படியே ஏற்றுக் கொண்டான். அவள் அரசகுமாரி- தான் சாதாரண வீரன் என்ற ஏற்றத் தாழ்வைப் பலமுறை எண்ணிச் சந்திப்பதை நிறுத்திக் கொள்ள முயன்றாலும் இயலவில்லையே...

'திருச்சிற்றம்பலத்துக்குப் போயிருக்கி றீர்களா?' என்று கேட்டு அநுபமாவே பேச்சைத் தொடங்கினாள். திடீரென எதற்காக அவள் கேட்கிறாள்?

"திருச்சிற்றம்பலத்தைப் பற்றி உனக்கு ஏன் இப்போது நினைவு வந்தது?"

"நாம் எல்லாரும் திருச்சிற்றம்பலத்தைக் காணப் போகிறோம். அங்கே பொன்வேய்ந்த விமானத்தைக் காணுவோம். ஆடும் நடராசரைக் காணுவோம். அறிதுயில் பயிலும் திருமாலைக் காணுவோம்..."

"நீ முன்பே போயிருக்கிறாயா?"

"ஓ! என் தந்தை அங்கே போகும்போதெல்லாம் என்னை அழைத்துச் சென்றிருக்கிறார். ஆனால் ஒரேயொருமுறை தான் அந்தப் பொன் நடராசரை நான் பார்த்திருக்கிறேன்..."

"ஏன் அதைப் பார்க்க முடியாத அளவுக்குக் கண் கூசியதோ?"

"ஆம்; கண் கூசத்தான் செய்யும். ஆனால் நான் அதைப் பார்ப்பதற்குப் பலமுறை செல்லவில்லை. ஆனால் வீரமாதேவி சென்றிருக்கிறாள்....."

"ஹூம்.. உன் சகோதரி இளவரசி வீரமாதேவியிடமிருந்து செய்தி ஏதாவது கிடைத்ததா? நான் இளவரசரை அதுபற்றிக் கேட்க மறந்து விட்டேன்..."



"சௌக்யமாகத்தானிருக்க வேண்டும்... அவளுக்கு எப்போதும் குறைவேயில்லை.."

"ஆம் ... பேரரசருக்குத் துணையானவள் அதிர்ஷ்டசாலி..."

"ஆமாம்..."

"அழகு நிறைந்த கணவன்..."

"ஆமாம்..."

"ஆனால் அக்காவுக்குக் கிடைத்த பாக்யம் தங்கைக்குக் கிடைக்கவில்லை! பார்த்தாயா... உலக விசித்திரத்தை?"

வெள்ளங்குமரன் இப்படிக் கூறியவுடன் அநுபமா முதலில் ஏதும் புரியாமல் மெல்ல நகைத்தாள். பிறகு புரிந்து கொண்டு "என்ன சொல்கிறீர்கள்? வீரமாதேவியின் சகோதரிக்கு எந்தவிதத்தில் அதிர்ஷ்டக் குறைவு என்கிறீர்கள்?" என உதட்டில் குறும்புத்தனம் கூத்தாடக் கேட்டாள்.

"வீரமாதேவியின் கணவர் மாமன்னர். அநுபமாவுக்கோ சாதாரணப் போர் வீரர் ஒருவர் தானே கிடைப்பார்போல் தோன்றுகிறது."

"போர் வீரரால் ஒரு மகத்தான சாம்ராஜ்யத்தை உருவாக்க முடியாதா?"

"முடியும், முடியும். ஆனால் அவன் விரும்ப மாட்டானே! சாம்ராஜ்யம் என்றாலே அவனுக்குப் பிடிக்காதே..."

"பிடிக்காது போனால் போகிறது. அவர் முன்பே பெரும் சாம்ராஜ்யத்தை வென்று விட்டவர். அவர் அந்த நாட்டை வெல்வதற்கு அனுப்பிய படைகள் என்ன தெரியுமா?"

"தெரியாதே..."

"அழகான முகம். அற்புதப் பார்வை. கம்பீரத் தோற்றம். மயக்கும் விழிகள். கனிந்த பேச்சு... இவற்றை அனுப்பி வென்றார்..."

"இளவரசி கவிதையரசியாக மிளிர முடியும் என்பதை இப்பொழுது தெரிந்து கொண்டேன்... என்றாலும் எனக்கு

என்னவோ பெரும் வித்தியாசம் தோன்றுகிறது அநுபமா! உன் சகோதரன் இளவரசர் அரிஞ்சயன் கூறுவது போல் என்னால் அரசகுடும்பத்தில் ஒரு கலக்கம் ஏற்பட்டுவிடுமோ எனும் ஐயம் ஏற்படுகிறது...''

வெள்ளங்குமரன் இப்படிக் கூறவும் அநுபமா திடுக்கிட வில்லை. கலகலவென்று நகைத்து ''அரிஞ்சய அண்ணன் அப்படிக் கூறினார். இராசாதித்த அண்ணன் என்ன கூறினார் தெரியுமா?'' என அருகிருந்த இளம் துளிரைப் பறித்து அதைத் துண்டு துண்டாகக் கிள்ளியவாறு கேட்டாள்.

''இளவரசர் இராசாதித்தன் என் ஆருயிர் நண்பர். இந்த நாட்டின் வருங்கால அரசர். எல்லாவற்றிற்கும் மேலாக என் நல்வாழ்வில் மிகவும் அக்கறையுடைவர். அவர் கூறும் வழிப்படிதான் நடப்பேன். ஆனால் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அவர் பிடிவாதமாக ஏதேதோ கூறுவதை என் மனது ஏற்க மறுக்கிறது...'' என்று வெள்ளங்குமரன் அங்கே பார்த்தவாறு கூறினான்.

''அவர் என்ன கூறுகிறார்? உங்களுக்கு நல்லதைத் தானே சொல்கிறார்? இராசாதித்த அண்ணனின் ஆதரவு மட்டும் இல்லாவிடில் நம் காதல் பாதை பயங்கரமாய்த்தானிருக்கும்... அவர் எனக்கு அபயம் அளித்து ஆதரவு தந்துள்ளார்...''

''அவசரப்பட்டுவிட்டார் என்று சொல்கிறேன்...''

''என்ன சொல்கிறீர்கள்?''

''இளவரசர் இராசாதித்தன் நம் காதலுக்கு ஆதரவு தருவதன் மூலம் சகோதரன் அரிஞ்சயனுடன் மிகுந்த கருத்து வேற்றுமை கொண்டுவிட்டார் என்று சொல்கிறேன்...''

''உங்களுக்கே நம் காதல் மீது நம்பிக்கை இல்லையா? என்னுடன் பேசுவதும், பழகுவதும் பிடிக்கவில்லையா?...'' அநுபமாவின் குரல் தழுதழுத்தது.

''அப்படி இல்லை அநுபமா! என் உள்ளத்தில் தோன்றியதை நான் சொல்கிறேன். நான் உன்னை மறக்க முயன்றாலும் என் உள்ளத்தால் முடியவில்லை. உன்னுடன் பேசுவதும், பழகுவதும் எனக்குப் பிடிக்கவில்லை என்றால் நான் ஏன் நந்தவனத்திற்கு



வரப் போகிறேன்? நம் இருவருக்குமுள்ள தாரதம்யத்தை அறிந்தும் ஏன் பழகப் போகிறேன்...?''

''மற்றொரு முறை அப்படிச் சொல்லாதீர்கள்... அந்தஸ்து-அந்தஸ்து! அந்தஸ்தை இராசாதித்த அண்ணன் உயர்த்தி விடுவார். இல்லாவிடில் நான் உங்கள் நிலைக்கு இறங்கிவிடுகிறேன். அரச குடும்பத்தைத் துறந்து விடுகிறேன். நீங்கள் வாழும் குடிலுக்கு வந்துவிடுகிறேன். பட்டுப் பட்டாடைகளை உதறித் தள்ளி பருத்தி ஆடையை அணிகிறேன். தங்கத் தட்டில் உண்பதை விட்டு தாமரை இலையில் தயிர் சோறு உண்கிறேன். போதுமா? உங்கள் மனக்குழப்பத்தை விட்டுவிடுவீர்களா? போர்க் களத்திலே அஞ்சா நெஞ்சினரான நீங்கள் இப்படி அஞ்சிக் குழம்பலாமா?''

அநுபமாவின் சொற்கள் வெள்ளங்குமரன் இதயத்தை நெகிழச் செய்தன. ''அநுபமா! உன் உள்ளத்தில் ததும்புவதை என்னால் புரிந்து கொள்ள முடியாதா? ஆனால் இளவரசர் அரிஞ்சயனுடைய சொற்கள் என்னைக் குழப்பி விட்டன. அநுபமா! என்னிடம் அவர் பலமுறை கூறிவிட்டார். சோழ நாட்டின் பெருமையைச் சூசகமாகச் சொன்னார். அதன் பழைமையைப் பற்றிக் கூறினார். அதன் குலத்தவர்களின் உயர்ந்த தன்மையைப் பற்றிக் கூறினார். சோழகுலப் பெண்கள் எப்படிப் பெரும் பெரும் அரசகுமாரர்களை மணந்து கொண்டனர் என்பதையெல்லாம் கூறினார். இதற்கு என்ன அர்த்தம்? மறைபொருள் நிறைந்த அரிஞ்சயன் சொற்களை நான் உணர்ந்து கொண்டேன். அதனால்தான் உனக்கும் எனக்கும் உள்ள தாரதம்யத்தைப்பற்றிப் பேசினேன்'' என்றான்.

அநுபமா சற்று அலுப்புடன், ''எப்போதும் இதே பேச்சுத்தானா? இப்போது சொல்கிறேன் அந்தஸ்து-தாரதம்யம் என்பதை மறந்து விடுங்கள். நான் கேட்டேனே அதற்கு மறுமொழி கூற வில்லையே! திருச்சிற்றம்பலத்திற்கு நான் என் தந்தையுடன் போகப் போகிறேன். நீங்களும் வருவீர்களல்லவா? அங்கே வீர நாராயணப் பேரேரி இருக்கிறது. கடல் போன்ற ஏரி, படகிலேறி ஏரியின் நடுவேயுள்ள தீவிற்குச் செல்ல வேண்டும் என்று எனக்கு நீண்ட நாளாக ஆசை. அதை அன்று நிறைவேற்ற வேண்டும்... உங்களுக்கு நீந்தத் தெரியுமா?'' எனற கேட்டாள் அநுபமா.

அநுபமா மிகவும் உற்சாத்துடன் பேசினாள். ஆனால் வெள்ளங்குமரனால் அவளுடைய உற்சாகத்திற்கு ஈடு கொடுக்க முடியவில்லை. திருச்சிற்றம்பலத்திற்குத் தானும் வருவதாக உடனே அவன் எப்படிச் சம்மதிக்க முடியும்? இராசாதித்தனுடன் எக்காலமும் இருக்கும் அவன் தன்னிஷ்டப்படி எதையும் செய்ய முடியாதே. இராசாதித்தன் செல்வதானால் அவனும் உடன் வருவான்.

''என்ன சொல்கிறீர்கள்!''

''இல்லை.. இராசாதித்தன் அங்கே வருவதாயிருந்தால் தான் என்னால் வர முடியும்.''

''ஓகோ! எல்லாம் அவர் யோசனைப்படிதான் நடப்பீர்களோ? என்னை மறந்துவிடு என்று அவர் கட்டளையிட்டால் அப்படியே செய்து விடுவீர்களோ?''

''ஆமாம் அநுபமா! இளவரசர் என் நண்பர் மட்டுமல்லர். என் வழிகாட்டியுங்கூட...''

''அப்படியானால் நான் இராசாதித்தன் அண்ணனிடம் இப்போதே அனுமதி கேட்டு வருகிறேன்'' என்று கூறி அநுபமா ஓடினாள்.

''அநுபமா.. அநுபமா! நான் சொல்வதைக் கேளேன்'' என்று வெள்ளங்குமரன் கூவிப் பின் தொடர்ந்ததை அவள் பொருட்படுத்தவில்லை.





## 19

வெள்ளங்குமரனும், இராசாதித்தனும் குதிரையை மெல்லத் தட்டிவிட்டவாறு சிதம்பரத்துக்குச் செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்தனர். சாலையின் இருபுறமும் மரங்கள் அடர்ந்திருந்தன. சிலவற்றின் கிளைகள் குதிரையின் மீது அமர்ந்திருந்த இராசாதித்தன் தலையின் மீது இடிக்க முயன்றன. இராசாதித்தன் கம்பீரமான தோற்றமுடையவன். உடல் கட்டுக்கேற்ற உயரம். வெள்ளங்குமரன் இராசாதித்தனுக்குச் சமமான உயரமுடையவன். அப்படி என்றாலும் சாலையில் குறுக்கிடும் கிளைகள் அவன் தலையையும் இடிக்கத்தான் செய்தன.

''அழகிய மரம்தான். ஆனால் மனிதருக்கு இடையூறு செய்தால் அவற்றை அகற்றத்தான் வேண்டும்'' என்றான் இளவரசன் இராசாதித்தன்.

''வாழ்க்கையிலும் அப்படித்தான் இளவரசே! மற்றவர் நல்வாழ்வுக்கு என்ன இடையூறு செய்தாலும் அகற்றிவிட வேண்டியதுதான்'' என்றான் வெள்ளங்குமரன்.

''நீ எதைப்பற்றி இவ்வாறு உவமை கூறுகிறாய்?'' என்று இராசாதித்தன் கேட்டான் வியப்புடன். ''எதைப் பற்றியும் யாரைப் பற்றியுமன்று. ஆனால் பொதுவாகப் பிறருக்கு மனம் பிடிக்காத வகையில் குறுக்கிடுவதனின்று விலகிக் கொள்ள வேண்டும்.... அல்லது விலக்கப்பட வேண்டும்....'' என்றான் வெள்ளங்குமரன்.

இராசாதித்தன் குதிரையைச் சற்று நிறுத்தி வெள்ளங்குமரனை நோக்கித் திரும்பிப் பார்த்தான்.

''வெள்ளங்குமரா! இதுபோல் நீ என்றுமே மறை பொருள் வைத்துப் பேசியதில்லையே. எதைப்பற்றிச் சொல்ல வருகிறாய் என்பதைச் சொல். யார் குறுக்கிடுகிறார்கள்? ஏன் குறுக்கிடுகிறார்கள்? தடையை நான் நீக்குகிறேன்'' என்றான் இராசாதித்தன்.

வெள்ளங்குமரன் மெல்லச் சிரித்தான் ''இளவரசே! உங்களால் அந்தத் தடையை நீக்க இயலும். ஆனால் நீங்கள் செய்யமாட்டீர்கள்...'' என்றான்.

''சொல், செய்கிறேன்..''

''அந்தத் தடை நான்தான்...''

இராசாதித்தன் கடகடவென்று சிரித்தான். வயிறு குலுங்கச் சிரித்தான். கண்களில் நீர்மல்கச் சிரித்தான்.

''என்ன வெள்ளங்குமரா! அன்புள்ள தோழா, உன்னையும் ஓர் இளவரசனாக ஆக்குவதற்கு நான் திட்டமிட்டுக் கொண்டிருக்கும்போது நீ என்னவோ சொல்கிறாய்...ஹஹ்ஹா...''

''இல்லை இளவரசே! நான் புரியும்படியாகத் தான் சொல்கிறேன்... நான் உங்கள் சோழ குலத்தின் நன்மைக்குத் தடையாக நிற்கிறேன். உங்கள் சகோதரர் அரிஞ்சயரின் எண்ணத்துக்கு நான் குறுக்கே நிற்கிறேன்...''

''என் சகோதரனுடைய எண்ணத்துக்கா? அதென்ன அத்தகைய எண்ணம் அவனுக்கு? வெள்ளங்குமரா! அரிஞ்சயன் என்ன சொன்னான்? உன் மனம் நோகும்படி ஏதாவது சொல்லிவிட்டானா? சொல் நண்பா! அரிஞ்சயன் அவசரக்காரன். அவனை நான் கேட்கிறேன் பார்...''

''ஐயோ, வேண்டாம், வேண்டாம். உங்கள் இராச குடும்பத்தில் நான் கலவரத்தை உண்டாக்க விரும்பவில்லை. சோழகுலம் மகத்தானது; அதன் பெருமை மகத்தானது. அதன் அழிவுக்கு நான் வழிகோலமாட்டேன்... அதற்காக நான் காதலையும், பதவியையும் கூடத் தியாகம் செய்து விடுவேன்.... அவர் தவறாக ஏதும் சொல்லிவிடவில்லை... .இளவரசியை மறந்து விடுமாறு என்னைக் கேட்டுக் கொண்டார். நாட்டின் நலனுக்காகத்தான் அவர் அப்படிக் கேட்பதாகக் கூறினார்...''

வெள்ளங்குமரன் இப்படிக் கூறியவுடன் இராசாதித்தன் ஏதும் பேசவில்லை. மௌனமாகவே குதிரையைச் செலுத்தினான். அவன் தீவிர சிந்தனையிலாழ்ந்தான்.

முதலிலிருந்தே வெள்ளங்குமரனைக் கண்டால் அரிஞ்சயனுக்குப் பிடிக்கவில்லை. ஏன் இப்படி என்று



சிந்திக்கலானான். தன் இளைய சகோதரி அநுபமாவை வெள்ளங் குமரனுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும் எனும் தன் எண்ணம் நிறைவேறாதா?

''நான் சொன்னதில் உங்களுக்கு ஏதாவது கோபமா?''- வெள்ளங்குமரன் மௌனத்தைக் கலைத்தான்.

''எனக்கென்ன கோபம் நண்பா? நீ மன வருத்தமடையக் கூடாதே என்றுதான் கவலைப் படுகிறேன்... அநுபமா உன் மீது உயிரையே வைத்திருக்கிறாள் என்பதை நானறிவேன். உங்கள் மூவரையும் ஏன் அரிஞ்சயன் பிரிக்க முயல்கிறான்?''

''ராஜீய காரணமாம்!''

''எனக்குத் தெரியாத ராஜீய காரணம் என்ன இருக்க முடியும்? எந்த நாட்டு அரசகுமாரனுக்கு அநுபமாவை மணம் புரிவித்து சமாதானம் செய்து கொள்ளப் போகிறான்? சோழநாடு பெண் கொடுத்து சமாதானத்தை அடையும் நிலைக்கு வந்துவிட வில்லையே! இந்தக் கரத்தில் வாள் இருக்கும்வரை, இந்தத் தோளில் வலு இருக்கும் வரை பிறருடன் சமாதானம் எனும் பேச்சே இல்லையே! ஹூம்; இருக்கட்டும். நாம் சிதம்பரத்துக்குத்தானே போகிறோம்? அங்கே விமானத்திற்குப் பொன் வேய்ந்திருப்பதைக் காண என் தந்தை வருவார். அவரையே நான் கேட்டுவிடுகிறேன். அநுபமா திருமணத்தைப் பற்றிக் கேட்டுவிடுகிறேன். அதுவரையில் நண்பா நீ எனக்கோர் உதவி செய்வாயா?'' என்று கேட்டான் இராசாதித்தன்.

வெள்ளங்குமரன் திடுக்கிட்டான். ''உதவியா?''

''ஆம்...''

''உங்கள் தோள் அருகேயே நிற்கிறேன்; உதவி ஒன்றென்ன ஆயிரம் செய்கிறேன்.''

''உதவி என்ன தெரியுமா- உன் திருமண விஷயமாக நீ ஏதும் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும். எல்லாம் நான்தான் பேசுவேன்? தெரியுமா? அதுதான் உதவி. நீ அவசரப்பட்டு ஏதாவது உறுதி எடுத்துக் கொண்டு விட்டால்...'' இராசாதித்தன் சிறு குழந்தையிடம் பேசுவதுபோல் பேசினான்.

***

தில்லைச் சிற்றம்பலம் வழக்கத்தை விடப் புதுப்பொலிவோடு விளங்கிற்று. தஞ்சையினின்று பரகேசரி பராந்தகசோழ மன்னன் வரப் போகிறார் என்ற செய்தி அங்குள்ளவர்களின் உள்ளத்தில் மகிழ்ச்சியை யூட்டியிருந்தது. பராந்தகசோழனுக்குத் தில்லைச் சிற்றம்பலத்தின் மீது தனிப் பக்தியுண்டு. ஆனந்தத் தாண்டவமிடும் நடராசரின் எதிரே மெய்மறந்து நின்றுவிடுவார். அவர் அருளால் தான் சோழநாடு இழந்த பழம் பெருமையை மீண்டும் பெற்றதாக நினைப்பார். அந்தப் பக்தியால் பழுதுற்றிருந்த விமானத்தைப் புதுப்பித்துப் பொன் அம்பலம் எனும் பெயருக்கு ஏற்பப் பொன்தகடுகளால் விமானத்தை அழகு படுத்தினார். ஈழ நாட்டினின்று திறையாகப் பெற்று வந்த பொருள் அனைத்தையும் தில்லை அம்பலத்து விமானத்தைப் பொன் மயமாக்குவதில் செலவிட்டார். அந்த நிகழ்ச்சியைத் தன் வாழ்நாளிலேயே அற்புதமான ஒன்றாகக் கருதினார்.

வீரமாதேவியின் திருமணம் நடைபெற்ற பிறகு தில்லைக்கு அவர் விஜயம் செய்வது அதுவே முதல் முறை. திருமண வைபவத்தை அங்கேயே நடத்தியிருக்கலாம். அந்தப் பொழுதில் அவருக்கு அந்த நினைவு வரவில்லை என்று கூற முடியாது வீரமாதேவியின் அவசரம் அவரைக் குழப்பி விட்டது. அப்பொழுது அவர் பழுவேட்டரை யரிடமும் இதய பூர்வமாகக் கலந்து ஆலோசனை செய்தார் என்று கூறிவிட முடியாது. தில்லை ஆண்டவனின் நினைவு வந்தவுடன் மறுவாரமே புறப்பட ஆயத்தங்கள் செய்தார். மகன், மகள் பட்டமகிஷிகள் அனைவரையும் அழைத்துக் கொண்டு பரிவாரத்துடனேயே செல்லத் திட்டமிட்டார்.

மன்னர் வரப்போவதையறிந்த ஊர் மக்கள் விழாக்கோலமே பூணுமாறு செய்தனர். வீதியெல்லாம் தோரணம். வீடுகளுக்குப் புதுச் சுண்ணம் அடித்தனர். விதவிதமான கோலம் போட்டனர். பேரரசரின் பவனி காணத் துடித்துக் கொண்டிருந்தனர். அரச குடும்பத்தவர் அனைவரும் வரப் போகிறார்கள் என்பதில் எல்லார்க்கும் குதூகலம்.

அதோ வருகிறது ஊர்வலம், இதோ வருகிறது ஊர்வலம் என்று மக்கள் மன்னரின் ஊர்வலத்தை எதிர்பார்த்தவாறிருந்தனர்.



குதிரை மீதேறி வீரர்கள் விரைந்து வந்தனர். புலிக்கொடி பிடித்திருந்தனர். ஆத்தி மாலை சூடியிருந்தனர்.

யானை அசைந்து வந்தது. அதன் முகபடாம் சூரிய ஒளியில் பிரகாசித்தது.

கொம்பு ஊதி, முரசு எழுப்பிப் படை வீரர்கள் நடந்து வந்தனர். ரதத்திலே சோழ அரச குடும்பத்தவர் அமர்ந்திருந்தனர். குதிரை மீது பராந்தக சோழதேவர் கம்பீரமாக வீற்றிருந்தார். அவர் அருகே சென்னிப் பேரரையர் குதிரை மீதமர்ந்து வந்தார். மற்றொரு பக்கத்தில் பழுவேட்டரையர் இருந்திருக்க வேண்டும். அந்த இடம் வெறிச் சோடியிருந்தது.

பராந்தகருக்கு அந்த நினைவு இருந்ததோ இல்லையோ- சென்னிப் பேரரையர் அதைக் கிளறினார்.

''என்னதான் பழுவேட்டரையருக்கு என்னைக் கண்டால் பிடிக்கவில்லை என்றாலும் அவர் இந்தச் சமயம் இங்கில்லாதது குறையாகத் தானிருக்கிறது'' என்றார்.

பராந்தகர் பெருமூச்சு விட்டார். அவரும் பழுவேட்டரையரும் இன்றைய நேற்றைய நண்பர்களா? திடீரென அவருக்கு என்ன மனக் குறை வந்துவிட்டது, சோழ நாட்டையே பரம விரோதியாகக் கருதுகிறாரே?

''சென்னிப் பேரரையரே! என் மகன் திருமண வைபவம் எவ்வளவோ பேருக்கு மனக் கசப்பை மூட்டியிருக்கிறது. இல்லையா?''

''ஆமாம்....ஆமாம்... அதற்கு என்ன செய்ய முடியும்?'' என்றார் சென்னிப் பேரரையர்.

''பழுவேட்டரையர் கோபப்படவே நியாயமில்லை; அவர் பெண் கேட்டு நான் மறுக்கவில்லையே!''

''பெண் யாருக்குக் கேட்கக்கூடும்? அவர் மகா புத்திசாலியான அவருடைய மகனுக்காக வேண்டுமானால் கேட்கலாம்...''

சென்னிப் பேரரையரின் இந்தப் பேச்சு பராந்தகரிடம் நகைப்பை அளித்தது. அவர் கடகடவென்று சிரித்து ''சென்னிப்

பேரரையரே! எனக்கொரு யோசனை தோன்றுகிறது...'' என்று ஏதோ கூற முற்பட்டார்.

''என்ன மன்னவா?''

'' திடீரென அப்படி என்ன வாழ்வு வந்து விட்டது? சுண்டைக்காய் அளவுள்ள பழுவூரைக் கொண்டு நம்மைப் பயமுறுத்தப் பார்க்கிறாரா? நாளையே நம் படைகளை அனுப்பி அவரையும் சிறைப் பிடித்து பழுவூரையும் வசப்படுத்திக் கொள்ளுமாறு கட்டளையிட்டு விடுவோமே...''

பழுவேட்டரையரின் இந்தச் சொற்கள் சென்னிப் பேரரையரைத் திடுக்கிட வைத்தன. பழுவேட்டரையரும் அவரும் புறத்தில் நண்பர்கள். ஆனால் அகத்தில் கீரியும் பாம்பும்தான். பழுவேட்டரையருடன் தாம் பேசிய உரையாடல்கள் அனைத்தையும் அவர் பராந்தகரிடம் கூறியிருந்தார். அவற்றையெல்லாம் கேட்டபோது கூட பராந்தகர் புன் சிரிப்புடனே இருந்தார். பழுவேட்டரையருக்கும் அவருக்கும் உள்ள நட்பை யாராலும் அசைக்க முடியாது என்றெண்ணிய அவருக்கு மன்னரின் பேச்சு தூக்கிவாரிப் போட்டது. தன்னை ஆழம் பார்க்கிறாரா? தன் உள்ளத்தை உண்மையாகவே அறிய விரும்புகிறாரா?

''நான் இந்த மாபெரும் நாட்டின் மன்னராக ஆனது யாரை நம்பியுமல்ல பேரரையரே! அதோ தெரிகிறதே பொன் விமானம் -அந்த விமானத்தடியில் குடிகொண்டிருக்கும் ஆனந்தத் தாண்டவன் துணையின் முழுப் பலத்தை நம்பித்தான்.... பழுவேட்டரையர் என் தோளுக்குத் துணையிருந்தது உண்மைதான். அதனால் என்னையே விலைக்கு வாங்கிவிட முடியுமா? இன்றைய தினம் தில்லையில் தங்கிவிட்டுத் திரும்பும்போது பழுவூர் முற்றுகையைக் குறித்து ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டியதுதான்-'' பராந்தகர் கூறி முடிப்பதற்குள் சென்னிப் பேரரையர் குறுக்கிட்டு ''கோபப்படாதீர்கள் வேந்தே! பழுவூரைப் பிடித்துக் கொள்வதால் என்ன பலன் கிடைத்துவிடப் போகிறது? அவருக்குள்ள மனக் குறையைத் தான் கேட்டு அறியுங்களேன். உங்கள் வலிமை யாவரும் அறிவர் என்றாலும் அருகிலுள்ள நாட்டின் நட்பும் அவசியம்தானே?'' என்றார்.



பராந்தகன் 'ஹூம்' என்று குரல் எழுப்பினாரேயன்றி ஏதும் பேசவில்லை.

அவர் யாரையோ தேடுவதுபோல் நாற்புறமும் திரும்பிப் பார்த்தார். குறிப்பறிந்த வீரனொருவன் குதிரையினருகே தன் குதிரையைச் செலுத்தி வந்தான்.

''எங்கே இராசாதித்தன்?'' என்று கேட்டார் பராந்தகன்.

''நேரே சிதம்பரத்திலே வந்து சேர்ந்து கொள்வதாகக் கூறினார்'' என்றான் அவ்வீரன். பராந்தகன் தலையசைத்தார்.

நகர ஊர்வலத்தில் தன் மகனும் அருகிருக்க வேண்டும் என்பது அவர் ஆசை. அடுத்து இந்த நாட்டை ஆளப் போகும் தலைமகனின் கம்பீரத்தை அனைவரும் அறிய வேண்டும் எனும் அவா அவருள்ளத்தே நிறைந்திருந்தது.

வீதியின் இருமருங்கிலும் மக்கள் கூடி நின்றனர். பெண்டிரும், ஆடவரும், குழந்தைகளும் வயோதிகர்களும் அடுத்த கிராமங்களிலிருந்து முதல் நாளே வந்து தங்கிக் கூடியிருந்தனர்.

''குஞ்சரமல்லன் வாழ்க!''

''பண்டித வத்சலன் வாழ்க!''

''சங்கிராமராகவன் வாழ்க!''

''வீர சோழன் வாழ்க வாழ்க!''

''பரகேசரி பராந்தக சோழ தேவர் வாழ்க வாழ்க''

''மதுரையும் ஈழமும் கொண்ட வீரசோழன் வாழ்க வாழ்க!'' எனும் வாழ்த்தொலி எங்கும் நிறைந்தது.

தில்லைச் சிற்றம்பலத்துக் கோயில் வாயிலில் தில்லை மூவாயிரவர் சார்பில் தில்லைவாழ் அந்தணர் வரவேற்றனர். நடுநாட்டினின்றும் திருக் கோவலூரினின்றும் திருமுனைப்பாடி நாட்டினின்றும் சிற்றரசர்கள் வரவேற்பதற்காகக் கூடி நின்றனர்.

பராந்தக சோழ தேவரின் இளையமகன் கண்டராதித்த சோழ தேவன் கோயிற் கோபுர வாயிலருகே சிவப்பழம் போல் நின்று

கொண்டிருந்தான். உடலெல்லாம் வெண்ணீறு, கழுத்திலே உருத்திராட்ச மாலை, வெள்ளைஆடை நெற்றியிலே பளிச் சென்று துலங்கும் திருநீறு; நெற்றியின் நடுவே குங்குமப் பொட்டு. அவனைப் பார்க்கும் எவரும் இளவரசன் என்று கூற முடியாது. யாரோ சைவப் பெரியார் நிற்பது போன்ற அவனது தோற்றத்தைக் கண்டு பராந்தக சோழரே திடுக்கிட்டார்.

*

## 20

மான்யகேட நகரின் எல்லையையும் தாண்டிக் காட்டின் தொடக்கத்தில் பல ஆண்டுகளாகக் கவனிக்கப்படாமலிருந்த பாழடைந்த வீடு இப்போது கலகலப்பு மிகுந்திருந்தது. அங்கு வருபவர்கள், போகிறவர்கள் அதிகமாயினர். அங்கு வருபவர்கள் புது உற்சாகத்துடன் வந்தனர். இருளில் இருந்தவர் ஒளியைக் கண்டுவிட்டது போன்ற புதுத் தெம்புடன் வந்தனர்.

அந்தப் பாழடைந்த மாளிகையின் உட்பகுதி செப்பனிடப்பட்டிருந்தது. எங்கிருந்தோ உயர்ந்த பீடம் கொண்டு வரப்பட்டிருந்தது. அதிலே வயது முதிர்ந்த ஒருவர் காணப்பட்டார். வயது அதிகமாயிருந்தாலும் அவர் முகத்தில் ஒளி குன்றவில்லை. தைரியமும் தெம்பும் அதிகமாக இருந்தன. நரை கண்ட தலைமுடி ஒன்றுதான் அவரது முதிர்ச்சியைப் புலப்படுத்தியது. அவர் எதிரே கைகட்டி மிக்க மரியாதையுடன் பலர் நின்றிருந்தனர். அந்த முதியவர் என்ன சொல்லப் போகிறாரோ எனும் ஆவலுடன் யாவரும் எதிர்பார்த்திருந்தனர்.

அவர் இராஷ்டிரகூட நாட்டு மன்னன் கோவிந்தனின் சிறிய தந்தை அமோகவர்ஷன். கோவிந்தனின் தந்தை இந்திரன் இறந்தவுடன் அமோகவர்ஷன் பட்டமேறினார். அப்போது கோவிந்தன் இளம் வயதினன். ஆனால் சிறிது காலத்திற் குள்ளேயே கோவிந்தனுக்கு ஏற்பட்ட பலவித ஆலோசனைகள், நண்பர்களின் திட்டங்கள் ஆகியவற்றால் கோவிந்தன் திடீரென அமோகவர்ஷனைத் தாக்கிச் சிறைப்படுத்தித் தானே அரியணையில் அமர்ந்து விட்டான்.



அப்போது அமோக வர்ஷனின் மகன் கன்னரத் தேவன் சேதிநாட்டுத் தலைநகரான திரபுரத்தில் இருந்தான். தன் தந்தையை விடுவிக்கத் துடித்த கன்னரத் தேவனுக்குப் போதிய படைகள் இல்லை. இளைஞனான கோவிந்தனை மக்கள் ஆதரித்தனர். அவனது பேச்சிலும் வனப்பிலும் மயங்கி யிருந்தனர். சிறையில் வாடும் தன் தந்தையை விடுதலை செய்யுமாறு பலமுறை கன்னரத் தேவன் தூதனுப்பினான். எனினும் கோவிந்தன் செவியில் அவை எட்டவேயில்லை.

தன் சிறிய தந்தையை ஒரு முறை சிறையில் பார்த்து வந்தும் கூட கோவிந்தனின் மனம் கரையவில்லை. குளிரில் நடுங்கி அவர் வேதனை அடைவதைக் கண்டு மகிழ்ந்திருந்தான்.

காலம் அப்படியே செல்லவில்லை. அது மாறியது. இராஷ்டிரகூட நாட்டிலும் கோவிந்தனின் போக்கு கண்டு மக்களிடையே வெறுப்பு ஏற்பட்டது. மாளிகைப் பணியாட்கள் வீரர்கள் அனைவருமே வெறுப்படைந்தனர். பல நல்ல குலப் பெண்களைக் கோவிந்தனின் காமத் தீ அழித்துவிட்டதால் அவர்களது வேதனையும் கண்ணீரும் மிகவும் பலமாகித் தீயாக எரியத் தொடங்கியது.

இவை சேதிநாட்டிற்கும் எட்டியது. கன்னரத் தேவன் தன் வீரர்களை மாறு வேடத்தில் அனுப்பி இராஷ்டிரகூட நாட்டுச் சிறைக் காவலர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு தந்தையை விடுதலை செய்து அழைத்து வந்து விட்டான். அமோகவர்ஷன் சிறையினின்று தப்பிவிட்ட செய்தி கேட்டு கோவிந்தன் திடுக்கிடவில்லை. 'சனியன் விட்டது' என்று கூறி, அருகே இருக்கும் அழகு மல்லிகையை அணைக்கக் கரங்களை நீட்டினான்.

வீரமாதேவி அந்தப்புரத்திற்கு வந்த பிறகும் கூட இந்தநிலை. கோவிந்தனின் இந்தச் சபலத்தை வீரமாதேவி வந்த ஓரிரு நாள்களுக்குள்ளேயே அறிந்து கொண்டாள். கணவரின் குணத்தை எப்படி மாற்றுவது எனும் தீவிர சிந்தனையிலாழ்ந்தாள். கோவிந்தனின் புற அழகிலும் பேச்சிலும் மயங்கி மனத்தைப் பறி கொடுத்தோம் என்று அவள் வேதனையிலாழ்ந்தாலும் அவளது இதய உறுதி கலங்காதிருந்தது. கோவிந்தன் சேர்த்து

வைத்திருந்த ஏராளமான பெண்களை வீரமாதேவி விடுதலை செய்து தத்தமது வீடுகளுக்குச் சென்றுவிடுமாறு அனுப்பி விட்டாள்.

கோவிந்தனால் அதைப்பற்றி ஏதும் வீரமாதேவியிடம் கேட்கமுடியவில்லை. வீரமா தேவியின் கம்பீர அழகு கோவிந்தன் வாயை அடைத்து விட்டது. செய்வதறியாது திகைத்து அவளது விழிகளே சரணம் என்று வீழ்ந்து விட்டான்.

''உங்களைப் பற்றி இதுவரையில் கேள்விப்பட்டதெல்லாம் இனியும் என் செவிகளில் விழக்கூடாது'' என்று வீரமாதேவி கோவிந்தன் மீது விழிக்கணையை வீசினாள். அவள் மஞ்சத்தில் சாய்ந்து கொண்டிருந்த ஒய்யாரமும், அவளது மேனியழகின் பளபளப்பும் தந்தத்தால் செதுக்கப்பட்டது போன்ற கரங்களைத்தன் தலைக்கு மேல் உயர்த்திக் கோவிந்தனைத் தன்னருகே இழுத்துக் கொண்டதால் பாய்ந்த மன்மதக் கணைகள் கோவிந்தன் மீது தாக்கவே அவன் குழறியவாறு ''என்ன கேள்விப்பட்டாய் தேவி?'' என்று திக்குமுக்காடிக் கேட்டான்.

''நான் அவற்றை எல்லாம் கூற வேண்டும் என்று ஆசைப்படு கிறீர்களா? நான் வந்தபிறகு இங்கே பெண் ஒருத்தியின் கண்ணீர் வடிந்தது என்ற செய்தியே கேட்கக் கூடாது, தெரியுமா?'' என்று வீரமாதேவி கட்டளையிட்டாள்.

'அப்படியே தேவி' என்றுதான் கூற வேண்டும்போல் தோன்றியது கோவிந்தனுக்கு. வீரமாதேவியின் பாணங்கள் உண்மையில் கோவிந்தனின் சபலத்தைத் தோற்கடித்தன. அவன் புது மனிதனாக மாறினான். அரசியல் நடவடிக்கைகளில் தீவிரப் பங்கு கொண்டான்.

அப்போதுதான் கீழைச் சாளுக்கிய நாட்டுச் செய்தி கோவிந்தனின் செவிகளில் எட்டியது. பட்டத்துக்கு அங்கே போட்டி. யுத்தமல்லன் என்பவனும் இரண்டாம் வீமனும் தங்கள் உரிமையை நிலைநாட்ட முயன்றனர். யுத்தமல்லன் கோவிந்தனைத் தேடி வந்துவிட்டான் உதவி கேட்க.

அப்போது அமோகவர்ஷன் சேதிநாட்டிலிருந்து தன் மகளுடன் புறப்பட்டு மான்யகேட நகருக்குள் வந்து எங்கோ



ஒளிந்திருக்கிறான் எனச் செய்தி வந்தது. கோவிந்தன் அதை அலட்சியப்படுத்தித் தன் தளபதிகளுள் ஒருவனிடம் அவற்றைக் கவனித்துக் கொள்ளுமாறு உத்தரவிட்டு யுத்த மல்லனுடன் ஆலோசனை நடத்துவதில் ஈடுபட்டான்.

*

## 21

பராந்தக சோழ மன்னர் தில்லைச் சிற்றம்பலக் கோயில் முழுவதையும் சுற்றிப் பார்த்தார். அவர் மனத்தில் பெரும் உற்சாகம் நிறைந்திருந்தது. சூரியனின் கதிர்கள் பொன்னம்பலத்துக் கூரை மீது தவழ்ந்தது அதைச் சிறந்து ஒளிவீசுமாறு செய்யும் அதிசயத்தைப் பலமுறை பார்த்து ரசித்தார்.

தன் செயலைக் கண்டு தானே பெருமைப் பட்டார். பெருமிதம் தலைதூக்க அவர் கம்பீரமாக நடந்து அம்பலவாணர் சபைக்குச் சென்றார்.

அவர் வருகைக்காக அனைவரும் காத்திருந்தனர். கண்டராதித்தன் கண்களை மூடிக் கொண்டு மெய்மறந்து நின்றான். கூத்தரசன் வடிவம் அவன் இதயத்துள் புகுந்து இந்த உலகையே மறக்கச் செய்தது. பராந்தக சோழர் தன் மகனது பரவச நிலையைக் கண்டார். அவர் உடலும் ஒரு கணம் சிலிர்த்தது.

தீப ஆராதனை நடந்தது. கண்டராதித்தன் மெல்லக் கண் திறந்தான். எல்லாரும் அமைதியாக இருந்தனர். கணீரென்ற குரலில் அவன் பாடத் தொடங்கினான்.

''மின்னாருருவ மேல் விளங்க

வெண்கொடி மாளி கைசூழப்

பொன்னார் குன்ற மொன்றுவந்து

நின்றது போலு மென்னாத்

தென்னாவென்று வண்டு பாடுந்

தென்றில்லை யம்பலத்துள்

என்னாரமுதை யெங்கள் கோவை

யென்றுகொ லெய்துவதே''

என்று பாடியதும் அங்கே ஆரவாரம் எழுந்தது.

கண்டராதித்த சோழர் அந்த ஒரு பாடலுடன் நிறுத்தி விடவில்லை.

''ஓவாத முந்நீ யஞ்சு கேள்வி யாறங்க நான் மறையோ

ராவே படுப்பா ரந்தணாள ராகுதி வேட்டுயர்வார்

மூவாயிரவர் தங்களோடு முன்னரங் கேறி நின்ற

கோவேயுன்றன் கூத்துக் காணக் கூடுவ தென்று கொலோ....''

என்று பாடவும் தில்லைவாழ் அந்தணர் மனமுருகினார். பராந்தகருக்குப் பெருமை பிடிபடவில்லை. தன் மகனது தெய்வ பக்தியைத் தான் இவ்வளவு நாள் அறிவார்; இப்போது கடல் மடை திறந்தது போன்று கவி பாடும் அற்புதம் அறிந்தவுடன் அவர் உள்ளத்தில் ஏற்பட்ட பெருமிதத்துக்கு எல்லையில்லை.

இப்படியாக ஒன்றன்பின் ஒன்றாக ஏழு பாடல்களைப் பாடவும் அங்குள்ளவர் கேட்டு மெய்மறந்து நின்றனர்.

எட்டாவது பாடலைக் கண்டராதித்தன் தொடங்கினான்.

''வெங்கோல் வேந்தர் றென்னனாடு

மீழமுங் கொண்டதிறற்

செங்கோற் சோழன் கோழி வேந்தன்

செம்பியன் பொன்னணிந்த

அங்கோல் வளையார் பாடியாடு மணிதில்லை

யம்பலத்துள்

எங்கோனீச னெம்மிறையை

யென்றுகொ லெய்துவதே...''



என்று பாடியதும் அனைவரும் பாட்டின் பொருள் உணர்ந்து மகிழ்ந்தனர்.

தில்லை அம்பலத்துக்குப் பொன் வேய்ந்ததால் பராந்தகர் அடைந்த பெருமையை விட, தெய்வப் பாடலில் அழியாது நிலைத்து நிற்கும் பேறு பெற்றதில் பெரும் பெருமை அடைந்தார்.

அப்போது அவருக்குத் தெரியுமோ தெரியாதோ கண்டராதித்த சோழரின் பத்துப் பாடல்களும் திருவிசைப்பா எனும் பெயருடன் பிற்காலத்தில் திருமுறைகளுள் ஒன்றாகப் போகிறதென்பது...

பராந்தக சோழரின் கண்களிலும் நீர் தளும்பியது பக்திப் பரவசத்தால்.

***

கண்டராதித்த சோழரின் பக்தியையும், கவி பாடும் திறமையைப் பற்றியுமே அனைவரும் போற்றிப் புகழ்ந்தனர். பராந்தகர் பரிவாரங்களுடன் ஆயிரங்கால் மண்டபத்தில் தங்கி யிருக்கும்போது பராந்தகரும் தன் மகனைப் பற்றிய புகழ்ச்சிப் பேச்சில் ஈடுபட்டார்.

''நீங்கள் பெரும் பாக்கியசாலி அரசே! சிற்றம்பலத்துக்குப் பொன் வேய்ந்ததற்கு உடனே கைம்மாறு கிடைத்துவிட்டது. உங்கள் பெயர் காலாகாலம் உள்ள அளவும் அழியாது விளங்கும். பொன் அம்பலம் உள்ளவரை, இளவரசர் கண்டராதித்தரின் பாடல் உள்ளவரை உங்கள் பெயர் அழியாது விளங்கும்'' என்று சென்னிப் பேரரையர் கூறக் கூற, பராந்தகருக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

அப்போது அநுபமா தன் விழிகள் அகன்று விரியத் தந்தையைப் பார்த்து ''அண்ணா சாமியாராகி விடுவார் என்று அடிக்கடி வருத்தத்துடன் கூறுவீர்களே, இப்போது பார்த்தீர்களா?'' என்று கம்பீரமாகக் கேட்டாள்.

அங்கே இராசாதித்தனும் வெள்ளங்குமரனும் இருந்தனர். ஆண்டவன் சந்நிதியில் கண்டராதித்தர் பாடும்போது வெள்ளங்குமரன் உணர்ச்சி மிகுதியால் கண்ணீர் மல்கத்

துதித்தவாறு நின்றான். அவனை இராசாதித்தன் தந்தையிடம் அழைத்து வந்திருந்தான் அப்போது. அநுபமா வெள்ளங் குமரனைக் கண்டு விட்டதால் அவளது உடல் முழுவதும் புத்துணர்ச்சி பொங்கியது. மேலும் தில்லைக்கு அவர் வந்து விடாமல் இருந்து விடுவாரோ என்று பெரும் கவலையுட னிருந்தவள் களிகொண்டாள். வெள்ளங்குமரனைக் கடைக் கண்ணால் ஒருமுறை பார்த்தவாறு தந்தையிடம் பேசினாள்.

இராசாதித்தன் தந்தையை நோக்கி "ஆமாம், ஆமாம். அநுபமா சொல்வதுபோல் நீங்கள் கண்டராதித்தனைப் பற்றி மிகக் கவலை தான் கொண்டீர்கள்..." என்றான். பிறகு திடீரெனத் தொடர்ந்து "கண்டராதித்தன் மீது அநுபமாவுக்குத் தனி வாஞ்சை உண்டு" என்றான்.

பராந்தக சோழ தேவர் கலகலவென நகைத்து "அதென்ன அப்படிச் சொல்லிவிட்டாய் இராசாதித்தா? அவளுக்கு எல்லார் மீதும் தனிப் பிரியம் உண்டு. சற்று முன்வரை நீ எங்கே கோயிலுக்கு வராமல் போய்விடுவாயோ என்று துடித்த துடிப்பு எனக்குத் தெரியும்..." என்றார்.

"ஓகோ..." என்று கூறிய இராசாதித்தன் வெள்ளங்குமரனை நோக்கினான்.

"அநுபமா என்னையா எதிர்பார்த்தாள் ஆவலுடன்? எனக்கு ஆச்சரியமாயிருக்கிறதே... ஹூம்....ஏன் அநுபமா, தந்தை சொல்வது சரிதானா? என்னையா எதிர்பார்த்தாய்?" என்று கேட்டான்.

அநுபமாவின் முகத்தில் நாணம் படர்ந்தது. இராசாதித்தன் அத்துடன் விட்டுவிடாமல் "அநுபமா! திடீரென்று உனக்கு என்மீது கவனம் திரும்பிவிட்டதா? நான் பாக்கியசாலிதான். உண்மையைச் சொல்லி விடட்டுமா?" என்று கேட்டான்.

பராந்தகர் வியப்புடன் "என்னடா அநுபமாவைப் பயமுறுத்துகிறாய்?" என்றார்.

"சொல்லிவிடட்டுமா... அநுபமா என அவளைக் குறும்புக் கண்களால் பார்த்தான். அநுபமா தன் சகோதரனையும்



வெள்ளங்குமரனையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு பொய்க் கோபத்துடன், "என்ன சொல்லிவிடப் போகிறீர்கள்? சொல்லி விடுங்களேன்...நான் உங்கள் வருகையைத்தான் எதிர் பார்த்தேன்...." என்றாள்.

இராசாதித்தன் கடகடவென்று நகைத்து "ஓகோ அநுபமாவுக்கு வந்துவிட்ட தைரியத்தைப் பார்த்தீர்களா? சேரநாட்டு வீரனை எதிர்பார்த்து எதிர்பார்த்துக் காத்திருந்து கண்கள் பூத்துப் போகவில்லையா?... உண்மையைச் சொல்லு அநுபமா!" என்று கூறவும் அநுபமாவின் முகம் முன்பே நாணத்தால் சிவந்திருந்தது மேலும் கோபச் சிவப்பேறியது. அவள் தன் விரல்களால் முகத்தை மூடிக் கொண்டாள்.

இப்படி எல்லார் எதிரிலும் இளவரசன் கூறுவாரென்று வெள்ளங்குமரனும் எதிர்பார்க்கவில்லை. அவன் முகத்தில் அசட்டுக் களை பொங்க வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

பராந்தக சோழ தேவர் நொடியில் புரிந்து கொண்டார். வெள்ளங்குமரனைப்பற்றி அவர் அறிந்திருக்கிறார். சோழப்படை வீரர்களுள் சிறந்த முறையில் வேல் எறிய வல்லவன்; வாளெடுத்துச் சுழற்ற வல்லவன் என்று அவர் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறார். அநுபமாவுக்கு அவன் மீது காதல் என்ற செய்தி அவருக்குப் புதுமையாக இருந்தது.

இராசாதித்தன் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டு "தந்தையே! வெள்ளங்குமரனின் திறமையை இதுவரை நான் உங்களுக்குச் சொல்லவில்லை..." எனறு தொடங்கியபோது பராந்தகர் "நான் அறிவேன்..." என்றார்.

"வெள்ளங்குமரன் கங்க நாட்டிற்கும் சென்று வந்தான்..." என்றான் இராசாதித்தன்.

"ஓகோ..."

"கங்க நாட்டிலிருந்து வரும் செய்திகள் சரியாகவே இல்லை..."

"என்ன?"

''இரண்டாம் பூதுகன் நமக்கு விரோதமான செயல்களில் ஈடுபடுகிறான்... அதனால் வெள்ளங்குமரன் அங்கிருந்து பெரும் தாக்குதலை எதிர்பார்க்கிறான்...''

இராசாதித்தன் இப்படிக் கூறியதும் வெள்ளங் குமரனைப் பராந்தக சோழர் ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தார். வெள்ளங்குமரனது கம்பீரமான தோற்றத்தைக் கண்டார். அவனது முகத்தில் ததும்பும் களங்கமற்ற தன்மையைக் கண்டார். வெள்ளங்குமரன் தலை குனிந்து நின்று கொண்டிருந்தான். அநுபமா அருகேயுள்ள தூணருகே நின்று கொண்டிருந்தாள். தோழி அவள் காதருகே ஏதோ கூறினாள்.

பராந்தகர் வெள்ளங்குமரனை நோக்கி அருகழைத்தார். ''சேரநாட்டு வீரரே!'' என்று அவர் அழைத்தவுடன் வெள்ளங்குமரன் உடல் சிலிர்த்தது. அவர் அருகே வந்து அவன் வணங்கி நின்றான்.

கங்கநாட்டுச் செய்திகளை அவர் கேட்பார் என்று இராசாதித்தன் எண்ணினான்.

''சேரநாட்டு வீரரே! தில்லைப் பொன்னம்பலத்தைக் கண்டீர்களா?'' என்று கணீரென்று கேட்டார்.

வெள்ளங்குமரன் வியப்படைந்தான். இராசாதித்தன் தந்தையின் முகத்தைத் திரும்பிப் பார்த்தான்.

வெள்ளங்குமரன் அவருக்கு உடனே மறுமொழி கூறுவதற்குள், ''இராசாதித்தா! சேரநாட்டு வீரருக்கு தில்லைச் சிற்றம்பலத்தைச் சுற்றிக் காட்டினாயா? நடராசப் பெருமானின் தத்துவத்தை விளக்கினாயா? கடல் போன்ற ஏரியைக் காட்டினாயா?'' என்றார்.

வெள்ளங்குமரன் தொண்டையைக் கனைத்துக் கொண்டு ''மன்னவ! நான் மிகச் சிறியவன்; எளியவன். என்னை நீங்கள் அழைக்கும் மரியாதைச் சொற்கள் இதயத்தைக் குத்துகின்றன...'' என்று கூறவும் பராந்தகன் முகத்தில் தனி ஒளி பரவியது. வெள்ளங்குமரனின் பேச்சு நயம் அவருக்குப் பிடித்து விட்டதுபோலும்.



''அப்படியா? வெள்ளங்குமரா! மிகவும் சாதுர்யமாகப் பேசுகிறாய்... உன்னைப் போன்ற கெட்டிக்காரப்பிள்ளை என் படையில் இன்னும் இரண்டு பேர் இருந்து விட்டால் சோழ நாட்டிற்கு எந்தவித ஆபத்தும் வராது. இப்பொழுது எந்தப்பிரிவுப் படைக்கு நீ தலைமை வகிக்கிறாய்?...'' என்று கேட்டார்.

வெள்ளங்குமரன் மிகவும் பணிவான குரலில் ஆனால் நிமிர்ந்து நின்று, ''முன்னணிப் படைக்குத்தான் தலைமை தாங்குகிறேன்... எல்லாம் இளவரசரின் அன்புதான்'' எனக் கூறினான்.

''படைகளில் பாச உணர்ச்சிக்கு இடமில்லை. ஆனால் இராசாதித்தன் முன்னணிப் படைக்கு உன்னை நியமித்திருக்கிறான் என்றால் நிச்சயம் உன் திறமையை அறிந்துதான் இருப்பான்... ஹூம் கங்க நாட்டிற்குப் போய் வந்தாயாமே...''

''ஆமாம், ஐயா!''

''கங்க நாட்டில் விக்கியண்ணன், பிருதிவீபதி ஆகியோரைச் சந்தித்தாயா?''

''சந்தித்தேன் ஐயா! அவர்களுடைய நிலைமை அப்போதே திருப்திகரமாக இல்லை...''

''எதைக் கண்டு சொல்கிறாய்?...''

''இரண்டாம் பூதுகனுடைய சூழ்ச்சி மிக அதிகமாக இருந்தது. போர் வீரர்களிடையே பூதுகனுடைய பிரசாரம் பரவிவிட்டிருந்தது. அதனால் பூதுகன் எந்தக் கணமும் கங்க நாட்டைக் கவர்ந்து விடக்கூடும்... பூதுகன் பட்டத்தைக் கைப்பற்றினால் சோழ நாட்டிற்கு மேற்கிலிருந்து ஆபத்துண்டு...''

வெள்ளங்குமரன் இப்படிக் கூறுவதைக் கேட்டுப் பராந்தகன் வெள்ளங்குமரனின் திறமையை மனத்திற்குள்ளேயே பாராட்டினார். மேலும் மேலும் அவன் சாமர்த்தியத்தை அறிய விரும்பி ''உனக்கு எப்படி இவ்வளவு செய்திகள் தெரியும்?'' எனக் கேட்டார்.

''மாறு வேடத்தில் அங்கே சென்றேன்''

''என்ன வேடம் தரித்தாய்?''

மன்னர் இப்படிக் கேட்டவுடன் வெள்ளங்குமரன் சற்றுத் தாமதித்தான் விடை பகர. இராசாதித்தன் இப்போது குறுக்கிட்டு "வெள்ளங்குமரா! ஏன் தயங்குகிறாய்? உன் வேடத்தைப் பற்றி மன்னரிடம் கூறு" என்றான்.

வெள்ளங்குமரன் உற்சாத்துடன் "பேரரசே! கங்க நாட்டிற்குள் நான் பாசுபதர் வேடம் பூண்டு சென்றேன். அங்கெல்லாம் இப்போது பாசுபத சமயத்திற்குத்தான் மதிப்பு. லிங்க வடிவில் சிவபெருமானை வணங்குகிறார்கள். பாசுபதர் வேடத்தில் எனக்கு எங்கும் தடை ஏற்படவில்லை..."என்றான்.

"ஓகோ! பூதுகன் கை ஓங்கி வருகிறதா? ஹூம்" என்று பராந்தகன் கூறும்போது சென்னிப் பேரரையர் இடையில் யாருடனோ பேசுவதற்குச் சென்றவர் மன்னரை நோக்கி "பூதுகனைப் பற்றி என்ன பேசுகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே வந்தார். பிறகு அங்கு நடந்த பேச்சையறிந்து கடகடவென்று நகைத்து "நிலைமை எவ்வளவோ மாறிவிட்டது அரசே! பூதுகன் கங்க நாட்டு அரசராகிவிட்டான்..." என்று கூறிய சென்னிப் பேரரையர் சற்று பேச்சை நிறுத்தினார். விக்கியண்ணன் இறந்துவிட்ட செய்தியையும் சொல்லி விடலாமா என்று அவர் எண்ணினார். அரசர் குதூகலமாக இருக்கும் அந்த வேளையில் அதைச் சொல்ல வேண்டாம் என முடிவு செய்தார்.

"என்ன? பூதுகன் நாட்டைக் கைப்பற்றிக் கொண்டானா? சேரநாட்டு வீரன் சொன்னது சரியாகிவிட்டது. இந்தச் செய்தியை நம் ஒற்றர்கள் ஏன் இன்னும் என்னிடம் தெரிவிக்கவில்லை? நீங்கள் எப்படி அறிந்து கொண்டீர்கள்?" என்று பராந்தகர் கேட்டார்.

பராந்தகர் அந்த இடத்தை விட்டு எழுந்துவிட்டார். கோயில் குளத்தைப் பார்வையிடுவது போன்று சென்னிப் பேரரையரை அழைத்துக் கொண்டு சற்று ஒதுக்குப்புறமாகச் சென்றார். சென்னிப் பேரரையர் தான் பழுவேட்டரையரிடம் பேசியறிந் தவற்றைத் தெரிவித்தார். பராந்தகர் முகம் மாறியது. பொதுவாக அம்மாதிரிச் சமயங்களில் சீறி எழுந்து பேசக் கூடியவர் உணர்ச்சியை மனத்திலேயே அடக்கிக் கொண்டார்.



"வீரமாதேவியின் திருமணச் சம்பவத்தால் பழுவேட்டரையர் கோபங் கொண்டிருக்கிறார்!" என்று சென்னிப் பேரரையர் கூறியதுகூட அவர் காதில் விழவில்லை. தன் மனத்தில் எழுந்த பெரும் சலனத்தைப் புலப்படுத்தவும் விரும்பாமல் "சென்னிப் பேரரையரே! இன்றைய தினமே திருக்கோவலூருக்குப் போகலாம் என நினைக்கிறேன். மலையமானைக் காண வேண்டும்" என்றார்.

இரண்டு நாள்கள் சிதம்பரத்திலே இருந்த பராந்தகர் மட்டும் திருக்கோவலூர் புறப்பட்டுச் செல்கிறார் எனும் செய்தி அனைவருக்கும் வியப்பாயிருந்தது.

இராசாதித்தனுக்கோ வெள்ளங்குமரனுக்கும் அநுபமாவுக்கும் ஏற்பட்டுள்ள காதலைத் தந்தையிடம் தெரிவிக்கச் சந்தர்ப்பம் ஏற்படாது போய்விட்டதே என்ற வருத்தம் இருந்தது.

அநுபமா அங்கு வந்தாள். அவள் வெள்ளங் குமரனைக் கடைக்கண்ணால் பார்த்தவாறு "அண்ணா! பொன்வேய்ந்த கூரையைப் பார்த்தீர்களா?" என்று கேட்டாள். இராசாதித்தன் மெல்ல நகைத்து "தங்காய்! நான் பல முறை ஜ்வலிக்கும் பொற்றகடுகளைப் பார்த்து விட்டேன். ஆனால் வெள்ளங் குமரன்தான் இன்னும் பார்க்கவில்லை..." என்றான்.

வெள்ளங்குமரன் திடுக்கிட்டான். "இளவரசே!" என்று ஏதோ கேட்க முற்பட்டவன் இராசாதித்தனின் அடுத்த வார்த்தை கேட்டு வெட்கித் தலை குனிந்தான். "வெள்ளங்குமரன் விமானத்தை எங்கே பார்த்தான்? உன் விழிகளையே நோக்கியவாறிருந்தான். தங்கத்தின் ஒளிபோன்ற உன் முகப் பொலிவைப் பார்த்துக் கொண்டிருந்தான். உன் விழிகளிலே ஜ்வலிக்கும் அழகைப் பார்த்துக் கொண்டி ருந்தான். வா, ஒருமுறை கோயிலைச் சுற்றிப் பார்த்து வரலாம். இன்றே தந்தையிடம் உங்களைப் பற்றி சொல்ல எண்ணினேன். சென்னிப் பேரரையர் கரடிபோல் குறுக்கிட்டு விட்டார்..." என்று உற்சாகம் மிகுதியாய்ப் பேசினான்.

அநுபமாவையும், வெள்ளங்குமரனையும் அழைத்துக் கொண்டு அவன் அகன்ற பிராகாரத்தைச் சுற்றி வரும்போது பராந்தகசோழ தேவர் மலையமானைச் சந்தித்துப் பேச, திருக் கோவலூருக்குப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

*

## 22

அமோக வர்ஷனைப் பார்க்க மாதங்கியின் நான்கு சகோதரர்களும் வந்தனர். கோவிந்தன் தங்கள் சகோதரிக்கு இழைத்த கொடுமையைக் கூறிக் கண்ணீர் விட்டனர். கண்ணீருக்கிடையே ஆக்ரோஷத்தோடு சபதமொன்றும் செய்தனர். ''எங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்தாயினும் மன்னர் கோவிந்தனுக்கு முடிவு கட்டாமலிருப்பதில்லை'' என்று அவர்கள் செய்த சபதம் கேட்டுக் கிழவர் அமோக வர்ஷனுக்கே உடலில் புதுத் தெம்பேறியது.

கோவிந்தனது பொறுப்பற்ற ஆட்சிக்கு முடிவ கட்டுவதற்காக எந்தெந்த வகையில் முடியுமோ அந்தந்த வகையில் பலத்தைத் திரட்ட முடிவு செய்தார். சேதி நாட்டிலிருந்து ரகசியமாகப் படைகளை மான்யகேட நகரத்திற்குள் வருமாறு செய்தி அனுப்பினார். மாதங்கியின் சகோதரர்கள் நாடெங்கிலும் சென்று கலகப் படைகளைத் திரட்டினார்.

அபாயம் இந்த வகையில் நெருங்கிக் கொண்டிருந்தபோது கோவிந்தன் வேங்கிக்குச் சென்றிருந்தான். யுத்த மல்லனது விருந்தினனாகத் தங்கி வீமனுக்கு எதிராகத் திட்டம் தீட்டினான். கோவிந்தனுக்கு உற்சாக மூட்ட மதுவும் மங்கையும் தாராளமாகக் கிடைக்க வழி செய்தான் யுத்தமல்லன்.

''இப்போதே வீமனைத் தாக்கினால் நான் எளிதில் வேங்கி அரியணையில் அமர்ந்து விடுவேன் அரசே!'' என்றான் யுத்தமல்லன், எழில்மங்கை ஒருத்தியைத் தன்னுடன் அழைத்து வந்து.

கோவிந்தன் யுத்தமல்லனை நோக்கிப் பேசாமல் அந்த அழகியின் எழிலின்மீது கண்ணோட்டம் விட்டு ''ஓகோ! இவள் எந்த நாட்டுப் பெண்?'' என்று கேட்டான்.

''காந்தாரத்துக் கட்டழகி... உங்களைக் காணவே வந்தாள். காந்தார நாட்டு நடனத்தை நீங்கள் இதுவரை கண்டுகளித்ததில்லையல்லவா?'' என்று வெறிக்குத் தூபமிட்டான் யுத்தமல்லன்.



''எனக்குக் காந்தாரமும் தெரியாது. காந்தார நாட்டுக் காரிகையும் தெரியாது; அந்த நாட்டு நடனமும் நான் அறியேன்...''

''அதற்காகவே இன்று நிலா முற்றத்தில் நீங்கள் நடனத்தைக் கண்டுகளிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்...''

''அப்படியா? சந்தோஷம்... நீங்கள் சற்று முன்பு என்னவோ கேட்டீர்களே...''

''வீமனைத் தாக்க இதுவே சரியான தருணம். அதைப்பற்றி இன்றிரவு ஆலோசிக்கலாமா?''

''வேண்டாம், வேண்டாம். ஆலோசனை எதற்கு? நீங்கள் தீட்டும் எந்தத்திட்டத்தையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்... இதில் ஆலோசனை எதற்கு?''

''அதற்கில்லை... படைகள் வேண்டுமே... என்றுதான்...''

''மான்யகேடத்திற்குச் சொல்லியனுப் புங்கள்.. கடல் போன்று படைகளை அழைத்து வரலாம்...''

''உங்கள் தளபதி என் வார்த்தைக்குச் சம்மதிப் பாரா?''

''இதோ முத்திரை மோதிரம்...''

கோவிந்தனுக்கு அப்போதிருந்த மோக வெறியில் இன்னது செய்கிறோம் என்றே புரியவில்லை. தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி யுத்த மல்லனிடம் கொடுத்தான். தன் நிலாமுற்றச் சல்லாபத்திற்கு எந்தவித இடையூறும் வராதிருந்தால் சரியே என்று அவன் மோதிரத்தைக் கொடுத்துவிட்டான்.

யுத்த மல்லன் மான்யகேட நகரத்திற்குள் முத்திரை மோதிரத்துடன் நுழைந்தவுடனேயே அமோகவர்ஷனின் ஒற்றர்கள் அவனைப் பின் தொடர்ந்து சென்று அவன் திட்டத்தை அறிந்தனர். யுத்தமல்லனும் தளபதியிடம் முத்திரை மோதிரத்தைக் காட்டி வேங்கிக்குப் படைகளுடன் புறப்படுமாறு கேட்டுக் கொண்டான். மன்னர் வேங்கிக்குப் போயிருப்பதையும் முன்பே யுத்தமல்லனுக்கு உதவி செய்யத் திட்டமிட்டிருந்ததையும் அறிந்திருந்த தளபதியும் வேறு பேச்சுப் பேசாமல் படைகளுடன் யுத்தமல்லனைத் தொடர்ந்தான்.

இராட்டிரகூடப் படைகள் எல்லையைத் தாண்டிய மறுகணமே சேதி நாட்டினின்று வந்து மாற்றுருவில் சேர்ந்திருந்த அமோக வர்ஷனின் படைகள் எளிதில் மான்யகேடக் கோட்டையைக் கைப்பற்றிக் கோவிந்தனின் ஆதரவாளர்களைச் சிறையிலிட்டுச் சிங்காதனத்தில் அமோக வர்ஷனை ஏற்றி மகுடம் சூட்டினர்.

அந்தப்புர அடிமைபோல் கட்டுண்டு கிடந்த ஏராளமான அழகிகளை அமோகவர்ஷன் விடுவித்து அவர்களைத் தத்தம் சொந்த ஊருக்குப் போகுமாறு கட்டளையிட்டான். கூண்டு திறக்கப்பட்டு பறவைகள் பறந்து செல்வது போல் கோவிந்தனின் ஆசைக்குப் பலியான பெண்கள் காற்றெனக் கடிது விரைந்தனர்.

வீரமாதேவிக்குத் தன் கணவர் செய்த மாபெரும் தவறு தெரியவந்தது. ஒரே கணத்தில் நாடிழந்து வேற்று நாட்டில் மதிமயங்கிக் கிடக்கும் அவரது நிலையை எண்ணி வருந்தினாள். பெரும் சாம்ராஜ்யத்துச் சக்கரவர்த்தியான பராந்தகன் மகளுக்கு இந்த நிலையா என வேதனையுற்றவர்களும் உண்டு. ஆனால் வீரமாதேவி சற்றும் கலங்கவில்லை. அமோகவர்ஷன் அந்தப்புரத்திலுள்ளவர்களை விடுதலை செய்தவுடனேயே அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டாள். இனியும் மான்ய கேட நகரில் இருந்தால் ஆபத்து என்று கருதிய வீரமாதேவி சாதாரணப் பணிப்பெண் போல வேடமணிந்து நகரத்திலிருந்து தப்பி வேங்கிக்குப் போகும் பாதை வழியே நடக்கலானாள். தனியே அவள் மட்டும் சென்றால் அமோகவர்ஷனின் ஒற்றர்கள் கண்டு பிடித்திருப்பர். குடியானவப் பெண் போன்ற உடையில் தலையில் விறகுச் சுமையுடன் அவள் நகர எல்லையைத் தாண்டியதே பெரும்பாடாகி விட்டது.

பஞ்சினும் மென்மையான அவள் செஞ்சீரடி கல்லிலும், முள்ளிலும் நடந்து நொந்தன. எங்கே செல்கிறோமென்ற குறிக்கோளில்லாமலேயே நடந்தாள். அவள் உள்ளத்தில் பெரும் வைராக்கியம் இருந்தது. வேங்கி வரையில் நடந்து சென்றாவது தன் கணவரைச் சந்தித்து அவரையும் அழைத்துக் கொண்டு சோழ நாடு சென்று விடுவது எனும் திட சங்கல்பத்துடன் அவள் துன்பமும் துயரமும் பாராது நடந்தாள்.



வேங்கியை இராட்டிரகூடப் படைகள் அணுகும் முன்பே இரண்டாம் வீமன் வழியிலேயே சந்தித்துத் திடீரெனத் தாக்கி அப்படைகளை நிர்மூலமாக்கி விட்டான். கோவிந்தன் இச் செய்தி அறிந்த பிறகே, தான் செய்த பெரும் தவற்றை உணர்ந்து கொண்டான். இராட்டிரக் கூடப் படைகளுக்கு நேர்ந்த பெரும் சேதத்தையும் தான் ஆதரிக்கத் துணிந்த யுத்த மல்லன் போரில் இறந்ததையும் அறிந்த கோவிந்தன் தலைகுனிந்து தான் தப்பினால் போதும் என்று மான்யகேட நகரை நோக்கி விரைந்தான். வழியிலேயே அமோகவர்ஷன் சிங்காதனத்தைக் கைப்பற்றிவிட்ட செய்தி கேட்டுத் திடுக்கிட்டான். நாடுபோனதுகூட அவனுக்கு அச்சமயம் பெரிதாகத் தெரிய வில்லை. சோழ அரசகுமாரி வீரமாதேவிக்கு என்ன ஆபத்து நேர்ந்ததோ எனும் கவலை அவனைச் சூழ்ந்தது. அவன் பெயருக்குத்தான் இப்போது மன்னன்! காவலுக்கு வீரரில்லை. வழித்துணைக்கு ஆளில்லை. வெண் கொற்றக் குடையில்லை. அழகிய மேனி வழிநடையால் அலங்கோலமாகியது. ஆடை புழுதி படிந்தது. செய்த தீய செயல்களுக்குத் தண்டனை போன்று கோவிந்தன் மெய் வருந்தி உளம் வருந்தித் தள்ளாடி 'வீரமாதேவி, வீரமாதேவி' என்று கூவியவனாய்ப் பித்தன்போல் ஓடோடி வந்தான்.

பல பெண்களின் கண்ணீர் அவனுக்குத் தண்டனை அளித்தது. சரி; வீரமாதேவி என்ன பாபம் செய்தாள்? அவளுக்கு ஏன் இவ்வளவு தொல்லையும் வேதனையும்? எத்தனையோ நாட்டு இளவரசர்கள் அவள் காலடியில் வீழ்ந்து கிடந்து அவள் கடைக்கண் பார்வைக்குக் காத்திருக்கும் பெருமை, அழகும், அந்தஸ்து பெற்ற அவள் கால்கள் தள்ளாட கணவனைக் காணுவோமா எனும் துயர் நெஞ்சை வாட்ட வழி நடையாக நடந்து இடர்ப்படுவானேன்?

வீரமாதேவியின் இதயத்தில் கோவிந்தனின் எழிலுருவம் முதன் முதலில் பதிந்தபோதே ஏற்பட்ட சக்தியின் விளைவுதான் காரணம்.

*

## 23

தில்லைச் சிற்றம்பலத்துப் பெரும் திருச்சுற்றில் வெள்ளங்குமரனுடனும், அநுபமாவுடனும் பேசியபடி இராசாதித்தன் வந்து கொண்டே இருக்கும்போது திடீரென அவர்களிடமிருந்து பிரிந்து எங்கோ சென்றான். அவனுக்கு அப்படியொன்றும் அவசர வேலையில்லை. தன் சகோதரியும் வெள்ளங் குமரனும் மனம் விட்டுப் பேசிக் கொண்டிருக்கட்டுமே என்றுதான் அவ்வாறு செய்தான். அநுபமாவும் அந்த வாய்ப்பைத்தான் எதிர்பார்த்தாள்.

மகிழ மரத்தடியில் அவர்கள் இருவரும் அமர்ந்தனர். பராந்தகசோழ தேவனின் பாராட்டுதலுக்கு உள்ளானதால் வெள்ளங்குமரன் உண்மையிலேயே புது உற்சாகத்துடன் விளங்கினான். பேரரசனின் எதிரே நின்று பேசுவதே தான் பெற்ற பெரும் பேறு என்று அவன் எண்ணினான். மன்னன் கம்பீரமான தோற்றத்தை மனத்தில் ஒருமுறை நினைத்துக் கொள்ளும்போதே அவன் உள்ளத்தில் தனிவிதப் பெருமை பொங்கியது. அவரது பேச்சும், உள்ளத்தை ஊடுருவும் பார்வையும் அவனைப் பெரிதும் கவர்ந்தன. அந்த நிலையில் அவன் இருக்கும்போது அநுபமா, "மன்னர் உங்களை மிகவும் பாராட்டுகிறாரே, அந்த மகிழ்ச்சியிலிருந்து இன்னும் மீளவில்லை போலிருக்கிறது" என்று பேச்சைத் தொடங்கினாள்.

வெள்ளங்குமரன் மெல்ல நகைத்தான். "மன்னர் பாராட்டும் அளவுக்கு நான் என்ன மகத்தான செயல் செய்துவிட்டேன்?" என்றான்.

"ஏன் பராந்தகசோழ சக்கரவர்த்தியின் திருமகளாரின் உள்ளத்தைக் கவர்ந்து விடவில்லையா?" என்று அநுபமா கேட்டாள்.

"அது தவறு என்பதை இப்போது உணர்கிறேன். அதற்கேற்ற தண்டனையை மன்னர் அளித்தால் ஏற்கவும் சித்தமாயிருக்கிறேன்..." என்று வெள்ளங்குமரன் கூறவும் அநுபமா திடுக்கிட்டு, "என்ன சொல்கிறீர்கள்?" என்றாள்.



"ஆம். மாபெரும் சோழ சக்கரவர்த்தியின் குடும்பத்து மருமகனாய் வருவதற்கு எனக்கு என்ன தகுதியிருக்கிறது என்பதற்காகத்தான் கூறுகிறேன்..."

"உங்கள் தகுதியை மன்னர் பாராட்டினாரே கங்க நாட்டிற்கு தங்கள் மாறுவேடத்தில் சென்று உளவறிந்து வந்ததற்கு மிகவும் பாராட்டினாரே... அது... என்ன வேடத்தில் சென்றீர்கள்?..."

"பாசுபதர் வேடத்தில். அந்த வேடம் பூண்ட பிறகு எனக்கு அந்தச் சமயத்தின்மீது ஈடுபாடு ஏற்படுகிறது. ஒருமுறை திருவொற்றியூர் சென்று பாசுபதர் மடத்துத் தலைவரைத் தரிசித்து வர வேண்டும்போல் தோன்றுகிறது."

இதைக்கேட்ட அநுபமா கலகலவென நகைத்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"சோழநாட்டில் சாமியாராகவும் முனிவராகவும் எல்லாரும் ஆகிவிட்டால் பிறகு பெண்களின் கதி என்ன ஆவது?" என்று அநுபமா கூறவும் வெள்ளங்குமரன் நகைத்தான்.

"நீங்கள் ஏன் நகைக்கிறீர்கள்?"

"என்னை நீயே முனிவராக ஆக்கிவிடுவாய் போலிருக்கிறதே! பாசுபதர் மடத்திற்குச் செல்ல வேண்டும் என்றுதானே கூறினேன்? அதற்குள்..."

இப்பொழுது இருவரும் சேர்ந்து சிரித்தனர். "அண்ணன் இன்று எப்படியும் தந்தையிடம் நம் திருமணம் சம்பந்தமாகக் கேட்டு விடுவதாகக் கூறினார்... ஆனால் சமயம் வாய்க்கவில்லை போலிருக்கிறது. இன்னும் எவ்வளவு நாள் தள்ள வேண்டுமோ? எவ்வளவு இடையூறுகளைக் கழிக்க வேண்டுமோ!" என்ற கூறிப் பெருமூச்சு விட்டாள்.

வெள்ளங்குமரன் எங்கோ பார்த்தவாறு "இன்று இராசாதித்தர் தன் தந்தையைக் கேட்காத வரையில் நல்லதே. நான் இப்போதுதான் அறிமுகமாகிறேன். உடனேயே நான் அரசகுமாரியைக் காதலிக்கும் செய்தியை இளவரசர் தெரிவித்திருந்தாரானால்.." என்று கூறவும் அநுபமா வெறுப்பு

நிறைந்த குரலில் ''ஏன் எப்போதுமே தோல்வியைப் பற்றிப் பேசுகிறீர்கள்? நீங்கள் பெரும் வீரர்; தோல்வியைக் காணக் கூடாதவர். நடக்காது- அந்தஸ்து - வேற்றுமை என்றெல்லாம் ஏன் தோல்வி மனப்பான்மை கொள்கிறீர்கள்?'' என்றாள். அவளது அந்தப் பேச்சு சற்று முறையை மீறியதுதான்; என்றாலும் வெள்ளங்குமரன் சாந்தமாக, ''தேவி! எனக்கென்னவோ அவ்வாறு தான் மனத்தில் அடிக்கடி தோன்றுகிறது. மனத்தின் சாயலை அப்படியே புலப்படுத்துகிறேன். சேரநாட்டு நந்திக்கரைப் புத்தூரிலிருந்து நான் புறப்பட்டபோது நான் இந்த நிலையை எதிர்பார்க்கவில்லை. சாதாரண வீரனாக வந்த எனக்கு உன் சகோதரர் இளவரசர் இராசாதித்தர் நட்பு கிடைக்குமென்று எதிர்பார்க்கவில்லை. சோழப் படையின் ஒரு பகுதிக்குத் தலைமை தாங்கும் பேறு கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. பராந்தகரின் மகளுடன் இப்படி அமர்ந்து பேசுவோம் என்று நான் எதிர்பார்க்க வில்லை. காலம் எனும் ஒரு சக்தி ஆட்டிப் படைக்கும்போது நம் விருப்பத்தில் எது நடக்க முடியும்? அதனால்தானோ என்னவோ என் மனத்தில் தோல்வி மனப்பான்மை தோன்றுகிறதோ?''

வெள்ளங்குமரனின் இந்தப் பேச்சு அநுபமாவுக்குப் பிடிக்கவில்லை. இனிய பொழுதாகப் பேசிக்கழிக்க எண்ணிய அவளுக்கு குமரனின் சொற்கள் கசந்தன. வெள்ளங்குமரன் எழுந்திருக்கவில்லை. அநுபமாவைச் சமாதானப் படுத்தவும் முடியவில்லை. அவன் இதயத்தில் ஏற்பட்ட ஒருவிதக் கலக்கத்திற்கேற்றாற்போல் இராசாதித்தன் வேகமாக அங்கே வந்தான்.

''வெள்ளங்குமரா! தெரியுமா சேதி? மான்ய கேட நகரத்தைத் தாக்கி மன்னர் கோவிந்தனின் சிறிய தந்தை ஆட்சியைக் கைப்பற்றி விட்டாராம். குமரா! அங்கே என் அருமைத் தங்கைக்கு என்ன நேர்ந்ததோ? என் உடல் துடிக்கிறது. இப்போதே பெரும் படையுடன் மான்ய கேடத்திற்குச் சென்று அமோக வர்ஷனைக் கொன்று கோவிந்தனுக்கு நாட்டை மீட்டுத் தர உள்ளம் துடிக்கிறது. பாவம்! வீரமாதேவி என்ன செய்கிறாளோ? என் அருமைத் தங்கை எங்கே இடர்ப்படுகிறாளோ? வெள்ளங்குமரா! இப்போதே புறப்படுவோமா? என் தங்கைக்கு இடரிழைத்த சேதி



நாட்டவருக்குத் தக்க சேதி சொல்லிவிட்டு வருவோம்'' - இராசாதித்தனின் படபடப்பான பேச்சைக் கேட்டு வெள்ளங்குமரனுக்கும் படபடப்பு மிகுந்தது.

அநுபமா அங்கே ஒய்யாரமாக நடந்து வந்து ''படையெடுத்துச் செல்ல அவரையுமா துணைக்குக் கூப்பிடுகிறீர்கள்? ஐயோ பாவம்! அவர் இதயத்தில் முன்பே தோல்வி குடி கொண்டுவிட்டதே! காலதேவன் வேறு அவரை மிகுந்த வேதனைப்படுத்துகிறான்...'' என்று கூறவும், இராசாதித்தன் கோபக் குரலில் ''அநுபமா! என்ன வேடிக்கைப் பேச்சு வேளை தெரியவில்லையா? வேதனைப் படும்போது...'' என்று சீறவும் வெள்ளங்குமரன் அமைதியாக ''உங்கள் சகோதரி கூறுவது சரிதான். என் உள்ளத்தில் ஏதோ புரிய முடியாச் சங்கடம் திடீரென்று ஏற்பட்டது. அதற்கொப்ப வேதனைச் செய்தியைக் கொண்டு வந்துவிட்டீர்கள். உம்... இப்போதே புறப்படுவோம். தீங்கிழைத்த தீயவர் தலையைப் பந்தாடுவோம்...'' என்று வீரா வேசத்துடன் முழங்கினான்.

இராசாதித்தனும் தலையசைத்து அவன் கரத்தைப் பிடித்துக் கொண்டு வேகமாகச் செல்லுவதைப் பார்த்துத் திகைத்தவாறு நின்றிருந்தாள்.



## 24

பழுவேட்டரையர் மான்யகேட நகரத்துச் செய்தி அறிந்ததும் பேய் பிடித்தவர் போல் நகைத்தார். அவர் தஞ்சைக்குச் செல்வதேயில்லை. பழுவூரிலேயே அமைதியாகத் தங்கி எதிலும் பட்டும் படாதவராக வாழத் தொடங்கியிருந்தார். கங்கநாடு செல்ல முயன்ற தன் மகனையும் அழைத்துப் பழுவூரைத் தவிர வேறெங்கும் செல்லக்கூடாதென்று கட்டளை யிட்டிருந்தார்.

இராட்டிரகூட மன்னர் கோவிந்தன் நாடிழந்து விட்டார் எனும் செய்தி அவருக்கு மகிழ்ச்சியை அளித்தது. அலட்சிய மனப்பான்மையும் கர்வமும் கொண்ட வீரமாதேவிக்குத் தக்க தண்டனை கிடைத்தது என்றெண்ணி மகிழ்ந்தார்.

பராந்தகரிடமிருந்து தூதுவன் ஒருவன் வந்திருப்பதாகக் காவலன் ஒருவன் வந்து கூறினான். அவனை வரச் சொல்லும்படி கட்டளையிட்டார் பழுவேட்டரையர்.

பழுவேட்டரையரைத் தஞ்சைக்கு வருமாறு அழைத்திருந்தார் பராந்தகர். அந்தச் செய்தியைத் தூதுவன் தெரிவித்தான்.

''நான் எதற்கு வரவேண்டும்? நானில்லாமலேயே சோழ நாடு வாழுமே. என்னை இப்போது எதற்காக மன்னர் அழைக்கிறார்? பொன்னம்பல விழாவிற்குச் சிதம்பரம் சென்றாரே, அப்போது கூப்பிட்டாரா? இளவரசியின் திருமண விஷயமாக நான் வெளிப்படையாகக் குறை கூறியதாலன்றோ என்னைக் கண்டால் அவருக்குப் பிடிக்கவில்லை! இப்போது அவருக்கு ஆபத்து நெருங்கி விட்டது. அதனால் அழைக்கிறாரோ? நான் வரமாட்டேன். போய்ச் சொல்லிவிடு...'' என்று பழுவேட்டரையர் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

பழுவூரினின்று திரும்பி வந்த தூதுவன் கூறியதைக் கேட்டுப் பராந்தக சோழ தேவர் திகைக்கவில்லை. இப்படி நேரும் என்று அவர் எதிர்பார்த்திருந்தார்.

கம்பீரமாக, சிங்கம்போல் உலவக் கூடிய பராந்தக சோழதேவர் மஞ்சத்தில் படுத்திருந்தார். அவர் உள்ளத்து வேதனை மிகவும்



அதிகமாகியதால் அவர் உடல் சோர்வுற்றது. மான்யகேட நகரத்தினின்று வந்த செய்தி அவரைக் கலக்கிவிட்டது. கோவிந்தனுக்குத் தன் மகளை மணம் புரிவித்த செயலை, குறுநில மன்னர் ஒருவர்கூட ஒப்புக்கொள்ளவில்லை. தன் மகளின் பிடிவாதத்தால் எத்தகைய பிழையைச் செய்துவிட்டோம் என்று அவர் வேதனைப்பட்டார். ஆனால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ள முடியுமா? ஒப்புக்கொள்ளவும் தேவையில்லை. ஒரு சாம்ராஜ்யத்தில் வெற்றியும் தோல்வியும் சகஜமே. அங்கே ஏதோ உள்நாட்டுக் குழப்பம், அதனால் கோவிந்தன் முறியடிக்கப்பட்டிருக்கலாம் என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொள்ள முயன்றார். இராசாதித்தனின் வார்த்தைகளும் அதற்கு அனுசரணையாக இருந்தன.

''தந்தையே! நாங்கள் புறப்பட்டு விட்டோம் மான்யகேடத்தை நோக்கி. விடை தாருங்கள். அமோகவர்ஷனை முறியடித்து மீண்டும் கோவிந்தனை அரியணை ஏற்றிவிட்டு வருகிறோம்'' என்று உறுதியுடன் பேசியது கேட்டுச் சமாதானம் அடைந்தார். இராசாதித்தனுக்குத் தன் சகோதரியிடம் உள்ள அன்பை அவர் அறிவார்.

இராசாதித்தனுடன் வெள்ளங்குமரனும் செல்கிறான் என்பது அவருக்குச் சற்றே ஆறதலாயிருந்தது. ஈழமும், மதுரையும் கொண்ட பராந்தக சோழ தேவர், தான் ஒருவரே படைகளை நடத்திச் சென்று இராட்டிரகூட நாட்டைக் கைப்பற்றி விடுவார். ஆனால் இப்போது உளமும், உடலும் தளர்ந்த நிலையில் அவர் போர்க்களம் செல்லத் துணியவில்லை.

''வெள்ளங்குமரனும் வருகிறானா?'' என்று கேட்டார் மன்னர்.

இராசாதித்தன் உற்சாகத்துடன் ''ஆமாம், ஆமாம். அமோக வர்ஷனை ஒட்ட வெள்ளங்குமரன் துடிக்கிறான்.வீரமாதேவிக்கு நேர்ந்த வேதனை அவனைத் துடித்தெழச் செய்து விட்டது. ஆனால் அதில் ஓரளவுக்குச் சுயநலமும் கலந்திருக்கிறது என்றுதான் சொல்லுவேன்...'' என்று வெள்ளங்குமரனை நோக்கிக் கண்களைச் சிமிட்டிவிட்டு ''சோழ குடும்பத்துடன் அவனுக்கும் தொடர்பு ஏற்படப் போகிறதே. அந்தக் குலம் சிறந்திருக்க வேண்டும் எனும் எண்ணம் இருப்பது இயற்கைதானே?'' என்றான்.

பராந்தகர் அதைப் புரிந்து கொள்ளாமல் இராசாதித்தனைப் பார்த்தார்.

இராசாதித்தன் தந்தையின் செவியருகே குனிந்து அநுபமாவுக்கு வெள்ளங்குமரன் மேல் ஏற்பட்டுள்ள காதலைப்பற்றித் தெரிவித்தான்.

பராந்தகர் ஆழ்கடல்போல் மௌனமாயிருந்தார். அவர் அதைப்பற்றி ஆதரவாகத் தெரிவிக்கவோ எதிர்க்கவோ யில்லை. இராசாதித்தனுக்கும், வெள்ளங்குமரனுக்கும் விடை கொடுத்தனுப்பிவிட்டு, பலவித யோசனையில் ஆழ்ந்தார்.

***

அநுபமாவிடம் விடை பெற்றுச் செல்ல வெள்ளங்குமரன் சென்றான். அநுபமாவின் இதயத்தில் உற்சாகமேயில்லை.

''உன் சகோதரியின் துயர்தீர்க்கத்தான் படையெடுத்துச் செல்கிறோம் அநுபமா!'' என்று வெள்ளங்குமரன் கூறினான்.

''எதிரே நிற்கும் பெண் ஒருத்தியின் வேதனையைத் தீர்க்கமுடியாத நீங்கள் எங்கோ காத தொலைவுக்குச் செல்கிறீர்களே...'' என்று அநுபமா துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினாள்.

''மான்யகேடத்திலே வெற்றிமாலை சூடிவிட்டு வந்து உனக்கு மணமாலை சூடுவேன் அநுபமா!'' என்று வெள்ளங்குமரன் மிகுந்த உற்சாகத்துடன் கூறினான்.

அநுபமாவுக்குத் தெம்பு பிறந்தது. எனினும் அதை உடனே வெளிக்குப் புலப்படுத்தாமல் ''வெற்றி மாலை கிடைக்காவிடில் மணமாலை கிடையாதோ?'' என்று கேட்டாள். இதற்கு வெள்ளங்குமரன் கூறும் மறுமொழி இன்னும் தைரியத்தை அளிக்கும். 'வெற்றி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் திருமணம் உறுதி' என்று கூறுவான் என எண்ணினாள். ஆனால் வெள்ளங் குமரனோ கம்பீரமாக நகைத்து ''அதில் என்ன சந்தேகம்? சுத்தவீரன் வெற்றித் திருவையும் காதல் திருவையும் ஒருங்கேதான் அணைவான்.... மான்யகேடத்தில் தோல்வி கிடைத்தால் பிறகு வாழ்வு வேறு வேண்டுமா?'' என்று கூறினான்.



அப்போது அங்கே வந்த இராசாதித்தனும் உற்சாகம் நிறைந்த குரலில், ''அநுபமா! உன் சகோதரியின் வேதனையைத் தீர்க்கப் படைகளுடன் புறப்படுகிறோம். வெள்ளங் குமரன் காட்டும் உற்சாகத்தைப் பார்த்தால் நீ பெரும் பாக்யசாலி என்றுதான் தோன்றுகிறது. அநுபமா! பெண்கள் கலங்கக் கூடாது என்ற கொள்கையுடைய குமரன் உன்னைத் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடப் போகிறான். விடை கொடுத்து வழியனுப்பு'' என்று கூறினான்.

அநுபமாவிடமிருந்து பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

*

## 25

வீரமாதேவியின் கால்கள் தள்ளாடின. தக்க உணவின்மையால் அவளால் நடக்கவும் முடியவில்லை. எப்படியும் தன் ஆருயிர்க் கணவரைக் கண்டுவிடுவோம் எனும் நம்பிக்கையில் அவள் நடந்தாள். வேங்கிக்கு வழி கேட்டு நடந்தாள். வழி கூறியவர்கள் வேங்கியா என்று வியந்தனர். தன்னந்தனியாய்ச் செல்லுகிறாளே என்று பரிதாபப்பட்டனர். ''மகாலட்சுமி போலிருக்கே ஏனம்மா இப்படித் தேசம் விட்டு தேசம் போகிறாய்?'' என்று சிலர் வருத்தப்பட்டனர்.

'மகாலட்சுமி'! வீரமாதேவி தன் மனத்திற்குள்ளேயே மெல்ல நகைத்துக் கொண்டாள். அந்த வேதனையிலும் அவளுக்குச் சிரிப்பு வந்தது. 'மகாலட்சுமி போல்தான் வாழ்ந்தேன்; இப்போது துயருற்றுச் செல்கிறேன்' என்று கூறிக் கொண்டாள்.

நடுவே ஒரு சிற்றூர். அழகிய சிற்றோடைக் கரையில் அமைந்திருந்தது அந்த ஊர். சலசலவென்று ஓடும் ஆற்று நீரில் ஒரு மடக்கு எடுத்துக் குடிக்க ஆசைப்பட்டு நீரில் இறங்கினாள் வீரமாதேவி. தான் அணிந்திருந்த ஆபரணங்களைச் சிறு மூட்டையாகக் கட்டி எடுத்து வந்தாள். அதைக் கரையில் வைத்துவிட்டு ஆற்றிலே இறங்க எண்ணினாள்.

குடத்திலே நீர் எடுக்க வந்த பெண் ஒருத்தி ''அம்மா! அந்த மூட்டையைக் கரையில் வைக்காதீர்கள். இங்கே குரங்குகள் அதிகம்'' என எச்சரித்தாள்.

வீரமாதேவி மூட்டையையும் கையிலே அணைத்துக் கொண்டு, ஒரு கையாலேயே தண்ணீரை அள்ளிக் குடித்து அப்பாடா என்று பெருமூச்சு விட்டபோது அந்தப் பெண் ''அம்மா எங்கே செல்கிறீர்கள்?'' என்று விசாரித்தாள்.

''வேங்கிக்கு'' என்று வீரமாதேவி சொன்னாள்.

''வேங்கிக்கா, எங்கிருந்து வருகிறீர்கள்?''

''மான்யகேடத்திலிருந்து''

''மான்யகேட மன்னரே வேங்கியில் வந்து தோல்வியடைந்து விட்டாரே; மான்யகேடத்தவர்கள் என்றாலே சீறி விழுகிறார்கள்'' என்று அவள் கூறும்போது வீரமாதேவிக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது.

மறுபேச்சுப்பேசாமல் தன் விதியை நொந்து நடந்த வீரமாதேவி சற்று நேரத்திற்கெல்லாம் சோர்வுற்று மரத்தடியில் அமர்ந்தாள்.

கோவிந்தன் எளிதில் அடையாளம் புரிந்து கொள்ள முடியாதவனாய் குதிரையை மெல்ல நடத்தியவாறு வந்து கொண்டிருந்ததால் வீரமாதேவியைக் கோவிந்தன் அடையாளம் கண்டு கொண்டுவிட்டான்.

''வீரமாதேவி'' என்று கூவியவாறு கோவிந்தன் குதிரையிலிருந்து குதித்தோடி வந்தான். தன் அன்பரின் குரல்தான்- யாரைத் தேடிச் செல்கிறோமோ அவர் குரல்தான். வீரமாதேவி உணர்ச்சி மிகுதியால் பேச்வும் நாவெழாமல் தள்ளாடி எழுந்து கோவிந்தனை அணைத்துக் கொண்டாள். அவள் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகியது.

''வீரமாதேவி! இதென்ன கோலம்? உன்னையா இந்தத்திசை தெரியா இடத்தில் காண்கிறேன்?'' என்று கோவிந்தன் கேட்டபோது அவனுக்கும் கண்ணீர் பெருகியது.



''அரசே! உங்களை இந்த நிலையில் நான் சந்திக்க வேண்டுமா? ஆனால் எப்படியோ சந்தித்து விட்டேன். இனி உங்களை ஒரு கணமும் பிரிய முடியாது- அன்பே! இதென்ன மேனியெல்லாம் புழுதி? தங்க நிற மேனி கறுத்துவிட்டதே...'' என்று விம்மினாள்.

மான்யகேட நகரில் நடந்தவற்றை வீரமாதேவி எடுத்துக் கூறினாள்.

''தேவி! இன்று இளைப்பாறி விட்டு நாளைக்கே புறப்படுவோம்'' என்றான் கோவிந்தன்.

''எங்கே?''

''மான்யகேடத்திற்குத்தான்''

''சென்று...?''

''விரோதிகளை ஓட்டி மீண்டும் நம் உரிமையை நிலைநாட்ட...''

''நடக்காத செயல். மக்கள் நமக்கு விரோதம். மந்திரிகள் விரோதம். படை விரோதம். நம்மை ஆதரிப்பவர் யார்? வேண்டாம். மான்யகேடத் துக்குச் செல்ல வேண்டாம்..''

''பின் எங்கே செல்வது? இங்கேயே தங்கியிருக்கலாம் என்கிறாயா? இழந்த நாட்டை எப்படி மீட்பது?''

''இங்கேயே தங்கிவிடுமாறு நான் கூறவில்லை. தஞ்சைக்குச் செல்வோம். தந்தையிடம் கூறிப் படைதிரட்டி வருவோம்.. இழந்த நாட்டை அப்போது திரும்பப் பிடிப்போம். பலமின்றிப் பகைவரோடு மோதுதல் கூடாது...'' வீரமாதேவியின் இந்தச் சொல் கேட்டு கோவிந்தனுக்கு ஒன்றுமே சொல்லத் தோன்ற வில்லை. சோழ நாடு செல்வதா? பதவியிழந்து செல்வமிழந்து அவமானத்துடன் செல்வதா? கோவிந்தனால் அவள் வார்த்தையை ரசிக்க முடியவில்லை.

''என்ன யோசிக்கிறீர்கள்? என் தந்தையிடம் செல்வதை கௌரவக் குறைவாக எண்ணுகிறீர்களா? அல்லது என் தந்தை நம்மை ஏற்கமாட்டார் என்று நினைக்கிறீர்களா? உறுதியுடன்

சொல்கிறேன்- செய்தி அறிந்த தந்தை துடிப்பாய்த் துடிப்பார். உடனே பெரும் படையுடன் இராட்டிரகூட நாட்டின் மீது பாய்வார். எதிரிகள் குலைந்து போவர்-'' என்றாள்.

கோவிந்தனுக்கு அந்தப் போதில் வேறேதும் மறுமொழி கூறத் தோன்றவில்லை. இந்தநிலையிலும் வீரமாதேவியின் ஒவ்வொரு சொல்லும் அவனைக் கவர்ந்தது. அவள் பேசும்போது அவள் உதடசையும் அழகு அவனைத் திக்குமுக்காட வைத்தது. அவளது மேனியழகு முன் எப்போதையும் விடப் பூரணமாகப் பரிமளிப்பதாகத் தோன்றியது.

''தேவி!'' என்று கூறி அவள் கரங்களைப் பிடித்துத் தன்னருகில் இழுத்துக் கொண்டான். வீரமாதேவி மெல்லத் தன்னை விடுவித்துக் கொண்டு ''நான் கூறிய யோசனைக்கு நீங்கள் ஏதும் சம்மதம் தெரிவிக்கவில்லையே'' என்றாள்.

கோவிந்தன் அவளது கரத்தை மேலும் பலமாகப் பிடித்திழுத்து அவளை அணைத்தவாறு ''உன் இஷ்டப்படியே நடக்கிறேன் தேவி! உன்னை விட்டால் எனக்கு இனி யார் துணை?'' என்று குழறினான்.

அவர்களது அந்த நிலையைப் பார்த்து மேலே மரக்கிளையிலிருந்த ஜோடிப் பறவைகள் நகைத்து மூக்கால் ஒன்றை ஒன்று கோதிக் கொண்டன.





## 26

இராசாதித்தனும், வெள்ளங்குமரனும் பெரும் படைகளுடன் சென்று கொண்டிருந்தனர். திருநாமநல்லூர் அருகே வந்து பாடியிறங்கி அன்றைய இரவைக் கழிக்க ஏற்பாடு செய்து கொண்டிருந்தபோது பராந்தக சோழரிடமிருந்து வீரனொருவன் செய்தி கொண்டு வந்தான். திருநாம நல்லூரிலேயே படைகளுடன் தங்கி விடவேண்டும் என்றும் தம்பி அரிஞ்சயன் வந்து மற்ற விவரத்தைக் கூறுவானென்றும் தூதுவன் கூறினான். தினவெடுத்த தோளுடைய இராசாதித்தனும் வெள்ளங்குமரனும் திகைத்தனர்.

திருநாமநல்லூர் அருகே சோழப்படைகள் கூடாரமடித்துத் தங்கினர்; இராசாதித்தனுக்கு இருப்பே கொள்ளவில்லை. தந்தையின் திட்டமும் அவனுக்குப் புரியவில்லை.

''எப்பொழுது அரிஞ்சயன் வருவான்? அவன் என்ன சொல்வான்?'' என்று இராசாதித்தன் துடித்தான்.

''இங்கே தங்காமலிருந்தோமானால் நாம் இரு நாள்களுக்குள் பாலாற்றைக் கடந்து விடலாம்... ஹூம்...'' என்று வெள்ளங்குமரன் பெருமூச்சு விட்டான்.

இரவு கழிந்து பொழுது புலர்ந்தது. இராசாதித்தனுக்கு உறக்கமே வரவில்லை. வீரமாதேவி மிகவும் துயரடைந்து துடிப்பது போல் அவனுக்குக் காட்சிகள் தோன்றியவாறிருந்தன.

வெள்ளங்குமரனையும் எழுப்பி ''குமரா! இது என்ன நியாயம்? ஏன் இப்படித் தந்தை நம்மைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்?'' என்று கேட்டான். குமரனும் திடுக்கிட்டுக் கண்விழித்து கண்களைக் கசக்கிக் கொண்டு ''ஆமாம்; ஆமாம்; எனக்கும் புரியவில்லை. நாம் படைகளுடன் செல்வதில் மகிழ்ச்சி கொண்டவர் ஏன் திடீரென திட்டத்தை மாற்றிக் கொண்டார்?'' என்றான்.

''அவர் குணமே எப்போதும் அப்படித்தான். போர்க்களத்தில் வெற்றி மாலை முழுவதையும் தானே அடைந்துவிட வேண்டும்

எனும் சுயநல எண்ணம் அவருக்குண்டு'' என்று இராசாதித்தன் கோபத்துடன் கூறினான். அந்தக் காலை வேளையில் இளவரசனின் கோபமுகத்திலே தாம் விழித்தோமே என்றுகூட எண்ணிய வெள்ளங்குமரன் இராசாதித்தன் அவற்றை மாற்ற விரும்பி, ''இளவரசே! நேற்றுக் கூறினீர்களே திருப்பணியைப் பற்றி. அந்த இடத்தைப் போய்ப் பார்த்து வரலாமா?'' என்று கேட்டான்.

''திருப்பணி இருக்கட்டும் வெள்ளங்குமரா! மன்னனின் மனத்தைக் கவனித்தாயா? நீ வேண்டுமானால் பார். அரிஞ்சயன் வரமாட்டான். மன்னரே வருவார் பார்....'' என்றான்.

இராசாதித்தன் கூறுவதும் சரியாகத் தானிருப்பது போல் வெள்ளங்குமரனுக்குத் தோன்றியது. ''பராந்தக சோழ சக்கரவர்த்தியே வருவார். படைகளுக்குத் தலைமை தாங்கிச் செல்வார். இராட்டிரகூடர்களுடன் பெரும் போர் நடத்துவார். வெற்றித்திரு அவர் பக்கம் சேரும். பேரும் புகழும் அவரை அடையும்... அவருக்குத் துணையாக இருந்த பெருமை ஒன்றுதான் நமக்கு....'' என்று வெள்ளங்குமரன் எண்ணினான்.

இராசாதித்தனும், வெள்ளங்குமரனும் வெவ்வேறு சிந்தனையிலேயே பொழுதைக் கழித்தனர். கூடாரமடித்துத் தங்கிய போர் வீரர்கள் திருநாமநல்லூரில் ஊர் மக்களுடன் பழகிப் பேசச் சென்றுவிட்டனர். அவ்வூர் மக்கள் மிக நல்லவர்கள். அந்த ஊரிலே சிவன் கோயிலொன்றைக் கட்டவேண்டும் என்ற எண்ணத்தைச் சோழ இளவரசரிடம் தெரிவிக்கச் சமயம் எதிர்பார்த்திருந்தார்கள். படை வீரர்களிடையே அதுபற்றி ஆலோசித்தனர். இராசாதித்தனுக்கு அன்று வேறெந்தச் செயலிலும் கருத்துச் செல்லவில்லை.

''குமரா! நான் சொல்வதுபோலவே நடக்கும் பார். மன்னர் வருவார். தாமும் படைகளுடன் வருவதாகத் தெரிவிப்பார். படைத்தலைமைப் பதவியை அவரிடம் தராமல் நாமே நடத்திச் செல்வது முறையாக இருக்குமா?'' என்று இராசாதித்தன் நீண்டநேர மௌனத்திற்குப் பிறகு கூறினான்.

வெள்ளங்குமரனும் அதை ஆமோதித்தான். அவனும் தன் கருத்தை ஒப்புக் கொண்டவுடன் இராசாதித்தன்



''வெள்ளங்குமரா! தந்தை வருவார். படைகளுடன் வருவேன் என்பார். நான் சொல்லப் போகிறேன். 'முழுப் பொறுப்பையும் என்னிடமே கொடுத்துவிடுங்கள். இல்லாவிடில் நீங்கள் ஒரு பகுதிக்குத் தலைமை வகித்துச் செல்லுங்கள். மற்றொரு பகுதியை நான் நடத்திச் செல்கிறேன்' என்று கூறப் போகிறேன். நீ என் கருத்தை ஆதரிப்பாயா அல்லது மன்னருடனே செல்வாயா? மன்னரின் மதிப்பைப் பெற இப்போது உனக்கு ஆர்வம் இருக்கும். அதனால் அவர் பேச்சைக் கேட்பாய். அப்போது தான் அநுபமாவை உனக்கு மணம் புரிவிப்பார். அப்படித்தானே, வெள்ளங்குமரா? நான் உயிரோடிருக்கும்வரை அநுபமாவை உனக்கு மணம் புரிவதை ஒருவரும் தடுக்க முடியாது...'' உணர்ச்சிவயப்பட்டு இராசாதித்தன் பேசிக் கொண்டே போகும்போது வெள்ளங்குமரன் ''இளவரசே!'' என்று கூவி ''என்னைப்பற்றி நீங்கள் அறிந்திருப்பது அவ்வளவுதானா? சோழ அரசகுடும்பத்தில் நானும் ஒருவனாக ஆகிவிட வேண்டும் எனும் ஆசையே எனக்கில்லை. எனவே இளவரசியை மணந்து இளவரசனாகி விட வேண்டும் என்று கனவில் கூட நினைத்த தில்லை. என்றும் உங்கள் அடிமையாய், நண்பனாய், அன்பனாய் வாழவே ஆசைப்படுகிறேன். உத்தரவு கொடுங்கள். அப்படியே நிறைவேற்றுகிறேன். என்றாவது நான் உங்களுக்கு மாறாக நடப்பதாக நீங்கள் எண்ணினால் இந்த வாளால் என்னை இரண்டு துண்டாக வெட்டி எறியுங்கள்'' என்றான். உணர்ச்சி மிகுதியால் உரத்த குரலில் தொடங்கிய அவன் பேச்சு முடியும்போது குரல் தழுதழுத்தது.

இராசாதித்தன் வெள்ளங்குமரனைத் தழுவிக் கொண்டான். அவன் கண்களிலும் நீர் தளும்பியது.

***

இராசாதித்தன் எதிர்பார்த்ததுபோல் நடக்கவில்லை. பராந்தக சோழ தேவர் திருநாம நல்லூருக்கு வரவில்லை; அரிஞ்சயன்தான் வந்தான். அவன் கூறிய செய்தி மேலும் இராசாதித்தனைத் திடுக்கிட வைத்தது.

இராட்டிரகூட நாட்டின்மீது படையெடுத்துச் செல்லும் யோசனையைப் பராந்தகர் வேறு விதமாக முடிவு செய்தார்.

இராசாதித்தனும், அரிஞ்சயனும் திருநாம நல்லூரிலேயே தங்கியிருந்து வடஎல்லையைக் காக்க வேண்டும் என்று பராந்தகர் திட்டமிட்டிருந்தார்.

பழுவேட்டரையரிடமிருந்து உதவிவராது என்பது தெரிந்த பிறகு பராந்தகரின் யோசனை மாறிவிட்டது. அவர் உள்ளத்திலே புரிய முடியாத சோர்வு குடி கொண்டதால் அவரால் நேரிடையே படைக்குத் தலைமை வகித்துச் செல்ல முடியவில்லை. பழுவேட்டரையர் உடன் இருந்திருந்தால் அவர் தைரியமாகத் கிடுக்கித் தாக்குதல் போல் செய்திருப்பார். பழுவூருக்குச் சென்றிருந்த சோழ நாட்டு ஒற்றன் கொண்டு வந்த சேதி வேறு பராந்தகன் மனத்தில் பெரும் கவலையை அளித்தது.

சோழர்ப்படைகள் இராட்டிரகூட நாட்டிற்குச் சென்றிருக்கும்போது கங்கநாட்டுப் படைகள் சோழ நாட்டைத் தாக்கினால்... அல்லது பழுவேட்டரையரே தாக்கிவிட்டால்... அல்லது ... பாண்டியர்கள வீறு கொண்டெழுந்தால்? பராந்தக சோழரால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. இச்சமயம் மழவரையர் தன் மகளை இராசாதித்தனுக்குப் பெண் பேச வருகிறார். கொடும்பாளூர் குறுநில மன்னன் தன் மகனுக்குப் பெண் கேட்க வருகிறான்.

மகளின் துயர் தீர்க்கத் துடித்துக் கொண்டிருக்கும்போது இதெல்லாம் என்ன? அவர்களை அலட்சியப்படுத்தி விடலாம். இப்போது அவ்வாறு இயலாதே... அவர்களது படை உதவி தேவையாயிற்றே. இந்தக் காரணங்களால் தன் மகன் இராட்டிரகூட நாட்டை நோக்கிப் படைகளுடன் செல்வதைத் தடுத்து நிறுத்த முடிவு செய்தார்.

இராசாதித்தன் சிறந்த போர் வீரன். ஆனால் அவசரக்காரன் என்று அவர் அறிவார். அதனால் அரிஞ்சயனையும் அனுப்பி அமைதியுடன் அங்கே காவல் புரியுமாறு செய்யத் திட்டமிட்டார்.

அரிஞ்சயன் இராசாதித்தனிடம் இந்தச் செய்தியைக் கூறியவுடன் அவன் சீறியெழுந்தான்.

தந்தை வராமல் அரிஞ்சயன் மட்டும் வருகிறா னென்றவுடன் சற்றுச் சந்தோஷமாயிருந்த இராசாதித்தன், அரிஞ்சயன் கூறியவற்றைக் கேட்டதும் "இதைக் கூறவா இங்கு வந்தாய்?



யாராவதொரு வீரனிடம் சொல்லி அனுப்பியிருக்கலாமே..." என்றான்.

"உன்னுடன் தங்குமாறு தந்தை எனக்குக் கட்டளையிட்டார்.."

"ஏன் நான் பயப்படுவேன் என்றா?"

"அப்படியில்லை அண்ணா! வட எல்லைப் பிரச்னை இப்போது பெரிதாக இருக்கிறது.."

"எப்போதும்தான் இருக்கிறது..."

"இப்போது கங்க நாட்டினின்று அபாயம் நேரலாம் என மன்னர் கருதுகிறார்."

"இராட்டிரகூட நாட்டினின்று வராதோ?"

'ஆம்; அங்கிருந்தும் வரலாம்..."

"அபாயம் தரக்கூடியவற்றை உடனே நசுக்குவதுதானே நல்லது?"

"ஆமாம்..."

"பிறகு ஏன் படைகளுடன் முன்னேறுவதைத் தடுக்கிறார் தந்தை?"

இராசாதித்தனின் இந்தக் கேள்விக்கு அரிஞ்சயனால் தக்க மறுமொழி கூறமுடியவில்லை.

"தம்பி! உன்னுடைய தீய திட்டம் இதில் ஏதோ இருக்கிறது. நீ ஏன் இங்கு வந்தாய்? தெற்கே பாண்டிய நாட்டில் வேலை இல்லையா? மேற்கே கங்கநாடு- அங்கிருந்து அபாயம் வராதா? அங்கே செல்லேன் தாக்குவதற்கு. என் முன்னேற்றம் கண்டு உனக்குப் பொறாமை" என்று மளமளவென்று பேசிக் கொண்டே சென்றதை அரிஞ்சயனால் தாங்கவே முடியவில்லை. இரு செவிகளையும் பொத்திக் கொண்டு "அண்ணா! திடீரென ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்? என் விருப்பப்படி எதுவும் செய்ய முடியாதென உங்களுக்குத் தெரியாதா? அவர் யோசனையின்றி ஏதும் முடிவு செய்திருக்க மாட்டார் என்று உங்களுக்குத் தெரியாதா?" என்றான்.

இராசாதித்தன் ஒரு கணம் பேசவில்லை. பிறகு வெள்ளங்குமரனை நோக்கி, ''குமரா! சோழ நாட்டிற்குப் பெரும் அவமானம் ஏற்படப் போகிறது. சோழகுமாரியின் கண்ணீரைத் துடைக்க முடியாத இந்த வாள் இருந்தென்ன, அழிந்தென்ன? மான்யகேட நகரிலே மகாராணியாக விளங்கிய வீரமாதேவி எங்கே என்ன தொல்லைப்படுகிறாளோ? அதைத் தீர்க்க நம் படைகள் வீரப் போர் செய்ய வேண்டாமா? குருதியில் குளித்து வெற்றித் திலகம் அணிய வேண்டாமா? திருநாமநல்லூரில் உண்டு உறங்கச் சொல்கிறார் மன்னர். அது நம் வேலையில்லை. குமரா! வா, நாம் முன்னேறுவோம். சோழநாட்டுப் படைகளின் தலைவன் என்ற முறையிலன்று. பராந்தகன் மகளது துயரம் தீர்க்க என் சகோதரியின் கண்ணீரைத் துடைக்கப் போர் முரசு கொட்டுவோம். வா, புறப்படுவோம். கடல் போன்ற படைகள் மான்யகேட நகரை முற்றுகையிடட்டும். உம்; புறப்படு'' என்றான்.

வெள்ளங்குமரனும் கத்தியை உயர்த்திக் கிளம்ப ஆயத்தமடையும் போது அரிஞ்சயன், ''மன்னர் கட்டளையை மீறி நீங்கள் ஓர் அங்குலம் நகர்ந்தால்கூட உங்களைச் சிறை செய்ய உத்தரவிட்டிருக்கிறார். இதோ உத்தரவு பாருங்கள்'' என்று கூறவும் இருவரும் திடுக்கிட்டுத் திகைத்து நின்றனர்.





## 27

வீரமாதேவியும், கோவிந்தனும் கால்நடையாகவே சோழநாடு நோக்கிப் பயணமாயினர். நடக்கும்போது கோவிந்தன் தான் செய்த பிழைக்கெல்லாம் இது தண்டனை என்று வீரமாதேவியிடம் வருத்தப்பட்டுக் கூறி வேதனைப்பட்டு வந்தான்.

''பிழைக்காக இது தண்டனை என்றால் நானும் சேர்ந்து இதோ துயரப்படுகிறேனே இதற்கு என்னவென்று பெயராம்? அப்படியெல்லாம் கூறி வருத்தப்படாதீர்கள். உங்கள் சிறிய தந்தையும் அவர் மகனும் சதி செய்துவிட்டனர். அவரை மீண்டும் ஓட்டாமல் நாம் ஓயக்கூடாது. என் அண்ணன் கேள்விப்பட்டால் அவர்கள் தலையையே கொய்து விடுவான்...'' என்று கூறிச் சமாதானப் படுத்தினாள் வீரமாதேவி.

கோவிந்தன் மெல்ல நகைத்தான். ''தேவி! தஞ்சையில் நமக்கு வரவேற்பு எந்த விதத்தில் இருக்குமோ? நாடிழந்த என்னை எள்ளி நகையாடினால் என் மனம் தாங்காதே...'' என்று அவன் கூறியபோது அவன் குரல் தழுதழுத்தது. வீரமாதேவி மெல்ல அவனை அணைத்தவாறு ''வரவேற்பு மிகப் பிரமாதமாக இருக்கும்; கவலைப்பட வேண்டாம். என் வேண்டுகோளுக்கு என் தந்தை மறு பேச்சுப் பேச மாட்டார். உங்களுக்கெனத் தனிநாடு வேண்டுமா? உம் என்று சொல்லுங்கள். காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட தொண்டை நாட்டின் அரசராக உங்களை ஆக்குமாறு என் தந்தையிடம் கேட்கட்டுமா?'' என்று கெஞ்சவும், கோவிந்தன் அவளுடைய அன்பின் அழுத்தம் தாளாமலும் அவளுக்குத் தந்தையிடம் உள்ள செல்வாக்கை எண்ணி வியந்தும் நடையின் துயரத்தையே மறந்தான்.

வீரமாதேவியின் எண்ணப்படிதான் தஞ்சையிலும் நேர்ந்தது. தன் மகளும், கோவிந்தனும் மான்யகேட நகரினின்று தப்பிக் கால்நடையாக வரும் செய்தி பராந்தகனுக்கு எட்டியது. தன் மருமகன் நாடிழந்ததுகூட அவருக்குப் பெரிதாகத் தோன்ற வில்லை; தன் மகள் ஒரு வித ஆபத்துமின்றித் தப்பியது பெரியோர் செய்த புண்ணியமாகத் தோன்றியது.

உடனே ரதத்தையும், குதிரை வீரர்களையும் அனுப்பி வீரமாதேவியையும் கோவிந்தனையும் அழைத்து வரக் கட்டளையிட்டார். சோழ வீரர்களையும் திருநாம நல்லூரிலேயே தங்கியிருக்கும்படி உத்தரவிட்டார்.

கோவிந்தனுக்குப் பராந்தகன் அடைக்கலம் அளிப்பது சோழநாட்டுக் குறுநில மன்னர்களுக்கு எள்ளளவும் பிடிக்கவில்லை. நாடிழந்த மன்னர் அங்கேயே மறைந்து வாழ்ந்தாவது திரும்பவும் நாட்டைப் பெற முயல வேண்டுமேயன்றி இதுபோல் வேறொரு நாட்டில் அதிலும் மாமனார் வீட்டில் வந்து தங்க வருவது முறையன்று என்று பேசினர். பராந்தகன் அவர்கள் கருத்தை எதிர்த்தார். தன்னிஷ்டத்துக்குக் குறுக்கே வருபவர்களைக் குறை கூறினார். சீறினார். அவர்கள் விரோதம் தனக்கு வந்தாலும் கவலைப்படாத மனப்பாங்கு கொண்டார். பழுவேட்டரையர் செவிகளிலும் இந்தச் செய்தி விழுந்தது. மன்னர் பராந்தகன் தன் மகளுக்காக எல்லாரது விரோதத்தையும் எளிதில் பெற்று விட்டமைக்காக வருந்தினார். அவர் முரட்டுப் பிடிவாதத்தை எண்ணி மேலும் ஆத்திரம் கொண்டார்.

உள்ள நலிவால் படுத்த படுக்கையான பராந்தக சோழ தேவர், மகளும் மருமகனும் வரப் போகும் செய்தி அறிந்தவுடன் புதுத் தெம்பு கொண்டார். அவர்களுக்காகத் தனி மாளிகை ஒதுக்குவதற்கும் ஏற்பாடு செய்யலானார்.

இந்தச் சமயத்தில் இராசாதித்தன் திருநாம நல்லூரிலிருந்து விரைந்து தஞ்சைக்கு வந்து சேர்ந்தான். படையெடுத்துச் செல்வதைத் தடுத்து நிறுத்திய தந்தையிடம் காரணம் கேட்டு வாதிடவே ஆக்ரோஷத்துடன் வந்திருந்தான்.

இராசாதித்தன் வந்துவிட்டான் என்ற செய்தி கேட்டதும் பராந்தகன் முகத்தில் வேதனை படர்ந்தது. மஞ்சத்தில் தலையணையின் மீது சாய்ந்து கொண்டிருந்த தந்தையின் முகத்தைப் பார்த்தவுடனேயே இராசாதித்தன் துணுக்குற்றான். தந்தையின் முகத்தில் ஏனிப்படி வாட்டம்?

மன்னர் தலையசைத்து மகனை வரவேற்றார். அவன் தொடங்கும் முன்பே ''இராசாதித்தா! திடீரென்று ஏன் பாடி வீட்டிலிருந்து வந்து விட்டாய்?'' என்று கேட்டார்.



பாடிவீடு- ஹூம் பாடி வீடா அது? ஏதோ எல்லைக் காவல்போல் நிற்கச் சொல்லி தடை உத்தரவு போட்டுவிட்ட தந்தை இப்படிக் கேட்கிறாரே!

''நான் உங்களைச் சந்தித்துப் பேசவே வந்தேன்''

''அவரச நிலைமையில் அங்கிருந்து வரலாமா?''

''அவசர நிலைமை என்றால் திருநாமநல்லூரில் தங்கியிருக்க வேண்டாமே... இத்தனை நேரம் மான்யகேட நகரத்தை முற்றுகையிட்டிருக்கலாமே...''

''அவசரப்படாதே இராசாதித்தா! சூழ்நிலைக்குத் தக்கவாறு நடப்பதுதான் தந்திரம்''

தன் தந்தையா இப்படிப் பேசுகிறார் என்று திடுக்கிட்டான் இராசாதித்தன்.

''அப்பா!''

''ஆமாம் மகனே! சோழநாட்டின் சூழ்நிலை சரியில்லை. இராட்டிரகூட நாடடின்மீது இப்போது படையெடுத்துச் செல்வது சரியன்று என முடிவு செய்தேன்.''

''வீரமாதேவிக்கு ஏற்பட்ட அவமானத்தைப் போக்க வேண்டாமா?''

இராசாதித்தன் இவ்வாறு கேட்டதற்குப் பராந்தகன் மௌனமாயிருந்தார். பிறகு ''என் மகளுக்கு ஏற்பட்ட அவமானம் எனக்கு ஏற்பட்டதாகவே கருதவேண்டும். ஆனால் அந்த அவமானம் இப்போதுதான் நேர்ந்ததில்லை மகனே! வீரமாதேவியின் திருமணத்தை என்று நான் முடிவு செய்தேனோ அன்றே ஏற்பட்டது. சோழ நாட்டுச் சிற்றரசர்கள் என் போக்கை ஆதரிக்கவில்லை.''

''ஆதரிக்காமல் போனால் போகிறார்கள். அவர்களுக்கென்ன வந்தது? நாம் அல்லவா வேதனைப்படுகிறோம்?''

''அப்படித்தான் நானும் எண்ணிப் பழுவேட்டரையரை அலட்சியப்படுத்தினேன். ஆனால் இப்போது மழவரையரும், சம்புவரையரும், மிலாடுடையாரும், கொடும்பாளூராரும்,

நரசிங்க முனையரையரும் என்னைக் கண்டிக்காமல் கண்டிக்கிறார்கள்.''

''உங்களையா? உங்களைக் கண்டிக்க ஒருவருக்காவது துணிவிருக்கிறதா?''

''துணிவு வந்துவிட்டது மகனே! வந்து விட்டது. எல்லாம் என் அவசரச் செயல்தான். ஒருவரையும் கலந்தாலோசியாமல் வீரமா தேவிக்குத் திருமணம் செய்ததால்தான்...''

''சோழ இளவரசியின் திருமணத்தைப்பற்றி மற்றவரைக் கலப்பதென்ன அவசியம்?''

''இராசாதித்தா! சோழநாட்டு மணவினைத் தொடர்பு சொந்தக் குடும்ப விஷயமன்று. அது பலரது சொந்த விஷயத்தோடு சம்பந்தப்பட்டது. வீரமாதேவியைக் கொடும்பாளூர் இளவரசனுக்கு மணம் புரிவித்திருக்கலாம். அல்லது பாண்டிய குமாரனுக்கு மணம் புரிவித்திருக்கலாம்..''

''நடந்துபோன விஷயத்தைப்பற்றி இப்போது நினைந்து ஏன் வேதனைப்படுகிறீர்கள்?''

''நடந்த விஷயத்தால்தான் இப்போது வேதனை வருகிறது. கோவிந்தனுக்கு ஏற்பட்ட ஆபத்தைப் போக்கப் படை திரட்ட விரும்பினால் சிற்றரசர்கள் எதிர்க்கிறார்கள்.''

''அவர்களை ஒதுக்கிவிடுவோம்...''

''இங்குதான் நீ அவசரப்படுகிறாய். அவர்கள் உதவி நமக்கு வேண்டும் மகனே! அதனால் தீவிரமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தேன். படையெடுப்பை நிறுத்தினேன். சிற்றரசர்களோடு சந்து செய்து கொள்ளத் திட்டம் வகுத்தேன். மழவரையர் மகளை உனக்கும் அநுபமாவைக் கொடும்பாளூரார் மகனுக்கும் திருமணம் செய்விக்கவும் சம்மதித்தேன்...''

பராந்தக சோழ தேவர் இவ்வாறு கூறியவுடனே இராசாதித்தன் திடுக்கிட்டான். அவர் கூறியவற்றுள் அநுபமாவைப்பற்றிய முடிவுதான் தெளிவாக அவன் காதில் விழுந்தது.



''என்ன சொன்னீர்கள் தந்தையே! அநுபமாவைக் கொடும்பாளூர் இளவரசனுக்கா மணம் புரிவிக்கப் போகிறீர்கள்? கூடாது, கூடாது. கூடவே கூடாது'' என்று கூவினான் இராசாதித்தன்.

அவன் ஆத்திரங் கண்டு வியப்படைந்தார் பராந்தகர். இராசாதித்தன் இதுபோன்று தந்தையின் எதிரே பேசியதேயில்லை.

''சோழநாட்டிற்கு இப்போது என்ன ஆபத்து வந்துவிட்டது என்று இப்படியெல்லாம் அவசரப்பட்டு முடிவு செய்துவிட்டீர்கள்? சோழப் படைகள் பலம் குன்றிவிட்டனவா? என் தோள் வலிமை குன்றிவிட்டதா? என்னவென்று எண்ணி இப்படி முடிவு செய்துவிட்டீர்கள் தந்தையே?'' அவன் குரலில் ஆத்திரமும் பரிதாபமும் கலந்திருந்தன.

பராந்தகர் மெல்ல நகைத்தார். ''என் உடம்பு இரும்பால் ஆனது என்று நினைத்து விட்டாயா? என்றைக்கு வேண்டுமானாலும் நான் கண்ணை மூடிவிடுவேன். அடுத்துப் பட்டமேறும் நீ செளக்கியமாக வாழ வேண்டும். அதற்காகத்தான் இந்தத் திட்டமெல்லாம்'' என்றார்.

இராசாதித்தன் 'சூ' கொட்டினான். பிறகு ''அநுபமாவை மட்டும் நான் கொடும்பாளூர் இளவரசனுக்கு மணம் புரிந்து கொடுக்கச் சம்மதிக்க மாட்டேன்... அநுபமாவும் விரும்ப மாட்டாள்...'' என்று கூறியவுடனேயே பராந்தகர் அழுத்தமான குரலில் ''அவள் விருப்பத்தை யார் கேட்கப் போகிறார்கள்? ஒரு மகளின் விருப்பப்படி நடந்து படும் தொல்லை போதும். இவளாலும் அந்த நிலை வரவேண்டாம்'' என்றார்.

''இல்லை இவளாலும் வரத்தான் போகிறது.''

''பயமுறுத்துகிறாயா?''

''பயமுறுத்தவில்லை. உள்ளதைத்தான் சொல்கிறேன்... அநுபமாவின் எண்ணம் வேறாக இருக்கிறது.''

''அவள் சிறியவள்...''

''இருக்கலாம். காதல் அனுபவத்தில் அவள் வயதையும் மீறிவிட்டாள்.''

''அவள் மனத்தை மாற்றுவது நம் பொறுப்பு''

''அதுமுடியாது தந்தையே! அவள் இதயத்தை நானறிவேன்...''

''இதயம்... அவள் மனம் மாறுவதற்கு நீ பெரும் காரணமாய் இருந்தாய் என்பது எனக்குத் தெரியும். அந்தச் சாதாரண வீரனை உன் சகோதரி காதலிக்கிறாள் என்று நீ சொல்வதே நம் மதிப்பிற்குக் குறைவு இராசாதித்தா!''

''மதிப்பு, ஹூம், தந்தையே! காதலுக்கு மதிப்பு வித்தியாசம் ஏதுமில்லை என்பது உங்களுக்குத் தெரியாததா?''

''காதல்-இன்னொரு முறை அந்த வார்த்தையை என்னிடம் பேசாதே. என் விருப்பப்படிதான் நான் நடக்கவிடுவேன்''

''அதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. என்னைப் பொறுத்தருளுங்கள். என் நண்பனுக்கு நான் வாக்களித்திருக்கிறேன். அநுபமாவுக்கும் அவனுக்கும் கலியாணம் செய்விக்காமல் நான் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்.''

''அது நடக்காத செயல் என்று சொல்லவும் வேண்டியதில்லை. கொடும்பாளூருக்கு நான் ஓலை அனுப்பியாகிவிட்டது. திருமண நிச்சயதார்த்தம் ஏற்பாடு செய்துவிட்டேன். இந்தச் சமயத்திலே நீ வீண் விவாதம் செய்து என் மனத்தைக் குழப்பி விடாதே. என் திட்டப்படி நீ நடப்பதாயின் என் முன்னே நில். இல்லாவிடில் இங்கிருந்து உடனே போய்விடு. வட எல்லையைக் காத்து இந்த நாட்டின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் எல்லைக் காவல் பொறுப்பைத் திரும்ப நடத்து. இல்லாவிடில் சொல்லிவிடு. நானே அங்கே போய் அப் பொறுப்பையும் ஏற்கிறேன்..'' என உரத்த குரலில் பேசினார்.

இராசாதித்தன் திகைத்தான். தந்தை இவ்வாறு பேசுவார் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. எக்காலத்திலும் அவர் இவ்வாறு தன் நிலை மறந்து பேசியதே இல்லை என்றெண்ணும் போது அவனுக்கு என்ன பேசுவதென்றே தோன்றவில்லை.



இராசாதித்தன் மௌனமாய் நிற்பதைக் கண்ட பராந்தகன், ''மகனே! என் பேச்சு உனக்கு வருத்தத்தை அளிக்கும்; கோபமும் வரலாம். ஆனால் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் அந்த நாட்டு மக்களுக்காக என்பதை உணர வேண்டும். விஜயாலய சோழர் வளர்த்த இந்த நாட்டை என் காலத்தே சீரழிய விட மாட்டேன். சிற்றரசர்களைப் பகைத்துக் கொண்டு நான் எந்தப் பூமியை ஆளப்போகிறேன்?'' என்று கோபந் தணிந்து பேசினார்.

இராசாதித்தன் தனக்குள் மெல்லச் சிரித்துக் கொண்டான். இவ்வளவு காலமும் ஒருவரையும் மதியாத தன் தந்தையா இப்படிப் பேசுகிறார் என்றெண்ணும் போது அவனுக்கே வியப்பாக இருந்தது. ஆனாலும் நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் இந்த நாட்டு மக்களுக்காக என்று கூறும் தந்தை தன் மகளின் திருமண விஷயத்தில் தலையிடுவதும் மக்களின் நலனுக்காகத்தானா?

இராசாதித்தன் மெல்லச் சிரித்தான். பராந்தகர் அவனை ஏறிட்டுப் பார்த்தார்.

''அநுபமா திருமணத்தில் கூட மக்கள் நலன் சேர்ந்திருக்கிறதா?'' என்று இராசாதித்தன் கேட்டான்.

''ஆமாம், அவள் திருமணத்தில் மட்டுமென்ன? உன் திருமண விஷயத்தில் கூட... மழவரையர் மகளை நீ மணக்க வேண்டும் என்று முன்பே கூறினேனே. மணவினைத் தொடர்பு மூலம் கொடும்பாளூரையும் மழவரையரையும் நாம் உறுதுணையாகக் கொள்கிறோம்...''

இராசாதித்தன் கடும் சினங்கொண்டான். அவன் உடல் படபடத்தது. ''முடியாது. முடியவே முடியாது. அநுபமாவின் திருமணம் நடக்காமல் அவளை வெள்ளங்குமரனுக்கு மணம் முடிக்காமல் நான் மணம்புரிந்து கொள்ள மாட்டேன். இது உறுதி. ஆனால் அதற்காக என் கடமையிலிருந்து மாறவே மாட்டேன். இதோ விரைந்து செல்கிறேன் திருநாமநல்லூருக்கு. அங்கிருந்து கண்ணை இமை காப்பது போல் நாட்டைக் காப்பேன்'' என்றுகூறி மேற்கொண்டு அங்கு நிற்காமல் விரைந்தான்.

பராந்தகர் உள்ளத்தில் வேதனை நிறைந்தது.

தன் கடைசி காலம் இப்படித்தான் சோக மயமாய் மாறிவிடுமோ என வேதனைப்பட்டார். என்றாலும் இரும்பு இதயம் படைத்த அவர் தன் மெய்க்காவலருள் ஒருவனை அழைத்து அவனிடம் ஏதோ கூறினார். இராசாதித்தன் செல்லும் முன்பே அந்த மெய்க்காவலன் திருநாம நல்லூரரை நோக்கி விரைந்தான். தஞ்சை சென்ற இராசாதித்தன் என்ன செய்தி கொண்டு வருவாரோ எனத் திகைத்திருந்த வெள்ளங் குமரனை அந்தக் காவலன் அணுகினான்; பராந்தக சோழதேவர் உடனே தன்னை அழைத்து வருமாறு கட்டளையிட்டிருக்கிறார் என, அவன் கூறவும் வெள்ளங்குமரன் செய்வதறியாது திகைத்தான்.

''இளவரசர் தஞ்சையில்தானே இருக்கிறார்?'' என்று வெள்ளங்குமரன் கேட்டான்.

''அது எனக்குத் தெரியாது. உங்களுடன் அவசரமாக ஏதோ கலந்து பேச வேண்டும் என்பதற்காக உடனே அழைத்து வருமாறு கூறினார்..'' என்றான் மெய்க்காவலன்.

''எல்லையில் இளவரசருமில்லை; நானும் வந்து விட்டால்? அன்றி சிவன் கோயில் ஒன்று கட்ட முடிவு செய்து படைவீரர்கள் அப்பணியை மேற் கொண்டுள்ளோம்...''

''இளவரசர் அரிஞ்சயர் இருக்கிறார். அவர் கவனித்துக் கொள்வார்...''

வெள்ளங்குமரனால் வேறெதுவும் பேச முடியவில்லை. மெய்க்காவலனுடன் தஞ்சையை நோக்கிச் சென்றான்.





## 28

வீரமாதேவியும், கோவிந்தனும் தஞ்சையை வந்தடைந்து விட்டனர். நாடிழந்து வந்திருக்கும் தன் மகளையும் மருமகளையும் கண்ட பராந்தகருக்குத் துக்கம் தாங்கவில்லை. இருவரும் அவரைத் தேற்றும் படியாகிவிட்டது.

''அப்பா! நீங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள்? நம் படை எங்கே போய்விட்டது? நாளையே நாமும் படையுடன் செல்வோம். மான்யகேடத்தை வசப்படுத்திக் கொள்வோம். இதற்காக நீங்கள் கலங்கலாமா? கலங்க வேண்டியவர்கள் நாங்களன்றோ?'' என்று வீரமாதேவி வீரவாசகம் பேசினாள்.

கோவிந்தனும் உற்சாக மிகுதியால் ''என்னிடம் படைகளை ஒப்படையுங்கள். உடனே புறப்பட்டுச் சென்று என் சிற்றப்பனை முறியடித்து மீண்டும் நாட்டை என் வசப்படுத்திக் கொள்கிறேன்'' என்றான்.

பராந்தகர் மெல்லச் சிரித்தார். தன் மகளை அருகே அழைத்து மெல்ல அவள் தலையைக் கோதி ''மகளே! சோழ நாட்டின் நிலை முன்போல் இல்லை. நமக்கு விரோதிகள் பலர் முளைத்து விட்டனர். என் உடலில் வலு குன்றவில்லை என்றாலும் என் உள்ளத்தின் வலிமை குறைந்துவிட்டது. ஆனால் மகளே! உன்னை மீண்டும் இராட்டிரகூட நாட்டின் அரசியாக அமர்த்தும்வரை நான் ஓயமாட்டேன். என்னுடன் உறுதுணையாய் வருவதற்காக எல்லாச் சக்திகளையும் திரட்டுவேன். நீயும் மன்னர் கோவிந்தனும் எந்தவிதக் கலக்கமுமில்லாமல் குறையும் படாமல் இங்கேயே தங்கியிருங்கள். உங்களுக்காகத் தனி மாளிகை கட்டுமாறு நான் ஏற்பாடு செய்துள்ளேன். உன் கணவரின் மனம் நோகாமல் குறை ஏதும் வராமல் பார்த்துக் கொள். சோழப் படைகள் மான்யகேட நகரைப் பிடித்து மேளதாளத்துடன் மீண்டும் உங்களை அரியணையில் அமர வைக்கும்'' என்றார்.

வீரமாதேவியும் கோவிநதனும் இந்த வார்த்தைகளை எதிர்பார்க்கவேயில்லை. நாடிழந்து வரும் தங்களுக்கு எத்தகைய

வரவேற்பு இருக்குமோ எனக் கவலையுடனிருந்த அவர்கள் உள்ளம் மலர்ந்தது.

***

வெள்ளங்குமரன் தஞ்சைக்குச் சென்றிருக்கிறான் என்றறிந்த இராசாதித்தன் திடுக்கிட்டான். எதற்காகத் தந்தை அழைத்திருக்கிறாரென அவனுக்குப்புரியவில்லை. உடனே அவன் மீண்டும் தஞ்சை நோக்கி விரைந்தான்.

வெள்ளங்குமரன் பராந்தகர் முன் போய் வணங்கி நின்றான். பராந்தகர் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு அவனை வரவேற்று எதிரேயுள்ள ஆசனத்தில் அமருமாறு கூறினார்.

''வேண்டாம் வேண்டாம் அரசே! இப்படி நிற்கிறேன்...'' என்று அடக்கமாகக் கூறினான் வெள்ளங்குமரன்.

''உட்காருங்கள், சேர நாட்டு வீரரே; என் எதிரே அமர்வதற்கேற்ற அந்தஸ்து உங்களுக்கில்லையா?'' என்று பராந்தகர் கூறியது விளையாட்டாகவா அல்லது வினையும் கலந்திருந்ததா என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''கைம்மாறு கருதாமல் சோழ நாட்டின் பெருமைக்கு உழைக்கும் உங்களுக்கு என் எதிரே அமர்வதற்கேற்ற முழுத் தகுதி உண்டு'' பராந்தகர் கூறுவதில் இப்போது இருபொருள் இருப்பதாகத் தெரியவில்லை.

''அது என் கடமை அரசே! ஆனால் ஒரு வேண்டுகோள். என்னை முன்போலவே உங்கள் மகனைப் போலப் பாவித்து நீ என்றே அழைக்க வேண்டுகிறேன்...''.

''மகனைப் போலவா?'' என்று கூறி நகைத்தார் பராந்தகர். பிறகு அவர் குரலை மாற்றிக் கொண்டு குழைவுடன் ''குமரா! உன்னை நான் முதலிலிருந்தே மகனைப் போலவேதான் எண்ணி வருகிறேன். மன்னர்க்கு நாட்டு மக்கள் அனைவரும் மகன்தானே என்றாலும் உன் மீது எனக்கு விசேஷ அன்புண்டு.''

''நான் பாக்கியசாலி அரசே!''



''அத்தகைய அன்பைப் பெறத் தகுதியுடையவன் தான்.''

''நான் ஒன்றும் செய்துவிடவில்லையே...''

''செய்திருக்கிறாய்... செய்வாய்... செய்ய வேண்டும்...''

''காத்திருக்கிறேன்... கட்டளையிடுங்கள்...''

''என் மகள் இழந்த நாட்டை மீட்டுத்தர நீயும் இராசாதித்தனும் புறப்பட்டீர்கள்...'

''ஆனால் எங்கள் திறமையைப் புலப்படுத்த முடியாமற் போய்விட்டதே...''

''அதனால் என்ன? அவசியம் நேரும்போது உன் தோள்வலிமை குறைந்துவிடுமா?''

''என்றும் தோள் துடித்துக் கொண்டே இருக்கிறது.''

''சந்தர்ப்பம் வரும்...''

''பொறுத்தருள வேண்டும் அரசே! சந்தர்ப்பம் சில வேளைகளில் வரும். பல வேளைகளில் நாம் தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும்...''

''நன்றாகப் பேசுகிறாய்... உன் திறமையைக் காட்ட நீ சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டாம். நானே உருவாக்குவேன்... அதற்காக நான் வணங்காதவர்களையெல்லாம் வணங்குகிறேன். உன்னை மட்டும் கேட்டுக் கொள்ளக் கூடாதா?''

''அபசாரம், அபசாரம்! நான் அதைச் சொல்லவில்லை அரசே! கங்கநாட்டவர்கள் நம்மைத் தாக்கச் சந்தர்ப்பத்தை உருவாக்கி விட்டார்கள். எந்த நொடியிலும் நாம் தாக்கப்படலாம்..''

''ஓகோ! அப்படியிருக்கும்போது வட எல்லையில் அபாயம் இருக்கும்போது மான்யகேடத்துக்குச் செல்லத் துடித்தானே இராசாதித்தன்?''

''அதுவும் அவசரம்தானே அரசே! ஒரு பகுதியை மான்யகேடத்திலும் ஒரு பகுதியை திருநாமநல்லூரிலும் வைத்துக் கொள்ள லாமே....''

வெள்ளங்குமரன் இவ்வாறு கூறியது கேட்டு பராந்தகர் மெல்ல நகைத்தார்.

''வெள்ளங்குமரா! சோழ நாட்டின் படைகளின் எண்ணிக்கை உனக்குத் தெரியுமா?''

''எவ்வளவென்று எனக்குத் தெரியாது. மதுரையை வெல்ல, ஈழத்தை வெல்லப் பதினாயிரக் கணக்கான படைகளைக் கொண்டு சென்றீர்கள் என்பதை நானறிவேன். அவை இன்னும் நம்மிடம் இருக்கின்றன என்று நினைக்கிறேன்...''

''ஒரு நாட்டின் மீது படையெடுக்கும்போது தேவைப்படும் அவ்வளவு படையினரையும் சாதாரண நாள்களிலும் வைத்திருக்க முடியுமா? பொக்கிஷம் இருக்கிற இடம் தெரியாது. யுத்த சமயத்தில் படைகளைத் திரட்டுவோம். சிற்றரசர்கள் உதவிக்கு வருவார்கள். அவர்கள் ஏராளமான வீரர்களைத் தம்முடன் அழைத்து வருவார்கள்...''

''இப்போது சிற்றரசர்களிடம் படை இல்லையா?''

''நல்ல கேள்விதான் வெள்ளங்குமரா! அதை நீ கேட்பாய் என்று நான் இவ்வளவு நேரம் எதிர்பார்த்தேன்; மதுரையும் ஈழமும் நான் கொண்டபோது பழுவேட்டரையர் உதவிக்கு வந்தார். அவர் என் வலக்கரமாகவே விளங்கினார். அவரை நான் விரோதித்துக் கொண்டேன். என் மகளின் திருமணம் எவ்வளவோ இடையூறுகளை வரவழைத்தது. இப்போது படையெடுப்புக்கு நான் சிற்றரசர்களின் உதவியை நாடும்போது ஒவ்வொரு வரும் ஒவ்வொரு நிபந்தனை விதிக்கிறார்கள்''

''நிபந்தனையா?''

''ஆம், கொள்வினை கொடுப்பினை வேண்டும் என்று நிபந்தனை.''

''சோழ குலத்துடன் கொள்வினை கொடுப்பினை வைத்துக் கொள்வது அவர்களுக்குப் பெருமையன்றோ? அதனால்... அவர்கள் நிபந்தனை விதிப்பதில் தவறில்லை என நினைக்கிறேன்...''



''அவர்கள் ஆசைப்படலாம்; ஆனால் நான் சம்மதிக்க வேண்டுமே...''

''ஆமாம்....ஆமாம் தகுதியுடைய இடமா என்று கவனிக்க வேண்டும்...''

''கொடும்பாளூர் வேளிரும், மழவரையரும், வைதும்பரும் சோழகுலத்தோடு தொடர்பு கொள்ளத் துடிக்கிறார்கள்.''

''ஆகா! கொடும்பாளூராரும், மழவரையரும் சாதாரண மானவர்களா?''

''ஆனால் உன் நண்பன் அதை எதிர்க்கிறானே...''

மன்னர் இப்படிக் கேட்டவுடன் வெள்ளங்குமரன் மறுபேச்சுப் பேச முடியாமல் திகைத்தான்.

''கொடும்பாளூர் தொடர்பும், மழவரையர் தொடர்பும் வேண்டாம் என்கிறான்...'' என்று பராந்தகர் கூறியவுடன், ''ஏன் அவ்வாறு கூறுகிறாரென எனக்குத் தெரியாது அரசே! சோழ நாடடின் நலனுக்காக நீங்கள் அவர்களுடன் மணவினைத் தொடர்பு கொள்ள விரும்பினால் இளவரசருக்கு அதை எடுத்துச் சொல்லி அவரைச் சம்மதிக்க வைக்கும் பொறுப்பை நான் ஏற்கிறேன்...'' என்று வெள்ளங்குமரன் கூறினான்.

பராந்தகர் தலையை அசைத்து ''மழவரையர் தன் மகளைத் திருமணம் செய்து வைக்கச் சித்தமாயிருக்கிறார். அவன் தனக்குத் திருமணமே வேண்டாம் என்கிறான்'' என்று கூறியது கேட்டு வெள்ளங்குமரன் திடுக்கிட்டு ''அப்படியா சொல்லிவிட்டார்? தனக்குத் திருமணம் வேண்டாம் என்கிறவர் மற்றவர் திருமணத்தை மட்டும் நடத்திவிட்டு மறுவேலை பார்க்கிறேன் என்கிறாரே'' என்று வியப்புடன் கேட்டான்.

''அதிலும் அவனுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை... சகோதரியின் திருமணத்தைக் கூட அவன் நடக்கவிடமாட்டான் போலிருக்கிறது...'' என்று பராந்தகர் கூறி வெள்ளங்குமரனைக் கீழ்க் கண்ணால் நோக்கினார். வெள்ளங்குமரன் தலையைக் குனிந்து கொண்டு நின்றிருந்தான்.

''வெள்ளங்குமரா! சோழ நாட்டின் பெருமைக்கும் உயர்வுக்கும் பாடுபடும் உனக்குத் தெரியும் என் மகளுக்கு நேர்ந்த அவமானம். அந்த அவமானம் எனக்கு நேர்ந்ததல்லவா? அதைப் போக்க வேண்டாமா? என்னை அறிந்தவர்கள் எவரிடமும் நான் எளிதில் உதவி கேட்க மாட்டேன் என்பதை ஒப்புக் கொள்வார்கள். நானே சிற்றரசர்களின் உதவியை இப்போது நாடுகிறேன். பழுவேட்டரையருக்கும் ஓலை அனுப்பி யிருக்கிறேன். கோபம் நீங்கி நட்புக் கொள்ளுமாறு கேட்டிருக்கிறேன்... எல்லாரையும் சேர்த்துப் பெரும் படையுடன் மான்யகேடத்தின் மீது படையெடுப்போம். ஒரு படைக்கு நீ தலைமை தாங்க வேண்டும். மற்றொரு படையை இராசாதித்தன் விரும்பினால் நடத்திச் செல்லட்டும்...'' என்றார்.

''விரும்பினால் என்ன? நான் கூறுகிறேன். இளவரசர் மான்யகேடத்தை நோக்கி நிச்சயம் செல்லுவார். தன் சகோதரிக்கு நேர்ந்த அவமானத்தை அவர் அழிப்பார்...''

''உன் பேச்சைக் கேட்டு அவன் என் கோரிக்கையை நிறைவேற்றினால் என் மனத்துயர் தீர்ந்துவிடும்..''

''கட்டாயம் செய்வேன் அரசே! உடனே மழவரையர் மகளை மணக்குமாறு அவரை வற்புறுத்துவேன்...''

''அத்துடன் மற்றொன்று... கொடும்பாளூருக்கு நீயே சென்று சிற்றரசரைச் சந்தித்துத் திருமண தினத்தைக் குறித்துச் செய்தி அனுப்புமாறு சொல்ல வேண்டும். அப்படியே அவர்கள் உதவக் கூடிய படையின் எண்ணிக்கையையும் அறிந்து வர வேண்டும்.''

''அப்படியே செய்வேன் அரசே! எனக்குக் கிடைத்த பாக்கியமாக இதைக் கருதுவேன்'' என்று கூறும்போது வெள்ளங்குமரன் கண்களில் பெருமை ஒளி பொங்கியது.

ஆனால், கொடும்பாளூருக்குத் தான் தூது செல்வது அநுபமாவின் திருமணத்திற்காக என்பதை அறியும்போது அவனுக்கேற்பட்ட வேதனையைச் சொல்லி முடியாது.

*



## 29

இராசாதித்தன் கேட்ட கேள்விகளுக்கு வெள்ளங்குமரன் தக்க மறுமொழி கூறாமல் தான் உற்சாகமாக இருப்பதுபோல் பாவனை செய்தான்.

''உன்னை எதற்காக அரசர் அழைத்தார்? என்னிடம் கூறாமலேயே வந்துவிட்டாயே'' என இராசாதித்தன் கேட்டான்

''நீங்களும் தஞ்சையிலேதான் இருப்பீர்கள் என்றெண்ணினேன்...''

''தந்தை என்ன சொன்னார்? அநுபமாவை மறந்துவிடு என்று சொன்னாரா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை, இளவரசே! பொதுவாக சோழ நாட்டின் மானங் காப்பது குறித்துப் பேசினார்.''

''அது அவர் எடுத்துச் சொல்லித்தான் நமக்குத் தெரிய வேண்டுமா? நமக்கே கடமை உணர்ச்சியிருக்கிறதே...''

''அதைத்தான் வற்புறுத்தினார். என்னை மற்றொரு பிள்ளையாகக் கொள்வதாகக் கூறினார்.''

''மற்றொரு பிள்ளையாகவா? மாப்பிள்ளையாகவா?''

''பிள்ளையாகத்தான் இளவரசே! நான்தான் அப்படிக் கருதுமாறு அவரைக் கேட்டுக் கொண்டேன். என் சகோதரிக்குத் திருமணம் நிச்சயம் செய்ய இதோ கொடும்பாளூர் போய்க் கொண்டிருக்கிறன். போய் வந்து மழவரையரிடம் செல்வேன்; உங்களுக்கு நிச்சயிக்கப் பட்டிருக்கும் இளவரசியை நானும் காண வேண்டாமா?''

''வெள்ளங்குமரா'' என்று இராசாதித்தன் கூவினான். ''நீ சொல்வது எனக்குப் புரிகிறது. அரசர் உன்னை வற்புறுத்தி உறுதி வாங்கியிருக்கிறார்...நீயும் சம்மதித்து விட்டாய். என்னிடம் உன் இதய வேதனையை மறைக்க முயல்கிறாய்... அப்படித்தானே?''

''இல்லை இளவரசே! என் நெடுநாளைய விருப்பப்படியே தான் செய்தேன். நான் பிறக்கும்போதே அரசகுமாரனாகப் பிறந்தேனா? என்னிடம் படைபலம் இருக்கிறதா? போர் என்றவுடன் பலநூறு வீரர்களை என்னால் திரட்டிக் கொண்டு வரமுடியுமா? நந்திக்கரையினின்று அநாதையாக வந்தேன். உங்களைச் சந்தித்தேன். உங்கள் ஆதரவால் வளர்ந்தேன். உங்கள் நாட்டிற்குச் சேவை செய்வதைவிட வேறு எனக்கென்ன பேறு வேண்டும்? உங்கள் சகோதரியை நான் மனத்தில் ஒரு சமயம் எண்ணினேன் என்பது உண்மையே. ஆனால் அது அரைமனத்துடன்தான். அப்போதே என் மனத்தில் இரண்டு விதக் கருத்துகள்- போராட்டங்கள். அதை வெளிப்படுத்த முடியாமலும் அதேபோதில் நெஞ்சில் பருவத்தால் துளிர்ந்த காதலைத் தள்ள முடியாமலும் தவித்தேன். இப்போது இதயச் சலனம் தெளிந்தது. என்னால் இருவர் உள்ளத்திலே வீண் சலனங்கள். மன்னரின் வேதனையும் உங்களுடைய கவலையும் ஒரு திருப்பத்திற்கு வந்து விடும். கொடும்பாளூர் இளவரசனை அநுபமா மணந்து கொள்வதாலும் நீங்கள் மழவரையர் மகளை மணந்து கொள்வதாலும் சோழநாட்டிற்குப் பெரு நன்மை ஏற்படப் போகிறது. அதை நானே முன் நின்று நடத்தி வைக்கிறேன். இளவரசே! தஞ்சைக்கு ஏன் வந்தீர்கள்? வட எல்லையில் எந்தக் கணமும் தாக்குதல் ஏற்படலாம். அங்கு நீங்கள் இருக்க வேண்டாமா? என் ஒருவனுக்காக சோழ நாட்டைத் தாக்க வருபவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா? அதனல்அவப் பெயர் எனக்குத்தான் வரும் இளவரசே! நான் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். போய்விடுங்கள். உடனே போய்விடுங்கள். நானும் விரைவிலே வந்து சேர்ந்து கொள்கிறேன்'' என்றான்.

அவன் கண்களிலும் நீர் தளும்பியது. இராசாதித்தன் கண்கலங்க ''வெள்ளங்குமரா! உயர் நண்பா! இதோ போகிறேன். வட எல்லைக்குப் போகிறேன்- இந்தத் துக்கம், தோல்வி ஆகியவற்றால் எழுந்த திடமான உள்ளத்தோடு எதிரிகளை முறியடிக்கப் போகிறேன். ஆனால் ஒன்று மட்டும் முடிவு செய்துவிட்டேன். அந்த உறுதியை யாராலும் மாற்ற முடியாது. நான் உன்னுடன் உயர் நண்பன் என்ற முறையில் பழகியவன். நீ திருமணம் செய்து கொள்ளாமல் நான் செய்து கொள்ளவே



மாட்டேன். இது சத்தியம். வருகிறேன்'' என்று கூறி வெள்ளங் குமரனின் மறுமொழிக்குத் காத்திராமல் திருநாமநல்லூரை நோக்கி விரைந்தான்.

திகைத்து நின்ற வெள்ளங்குமரனை நோக்கி அநுபமா வந்து கொண்டிருந்தாள். அநுபமாவைச் சமாதானப்படுத்தித் தன்னை மறந்துவிடுமாறு செய்யும் பெரும் பொறுப்பு அந்தக் கணத்தில் வெள்ளங்குமரன் உள்ளத்தில் உதயமாகிக் கொண்டிருந்தது.

***

''நீங்கள் இவ்வளவு விரைவில் இங்கே வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை'' என்று அநுபமாதான் பேச்சைத் தொடங்கினாள். அவளுக்கு எல்லாச் செய்திகளும் தெரியுமா என்பதை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

''ஆமாம் நானும் எதிர்பார்க்கவில்லைதான். திடீரென என்னைக் கூப்பிட்டு அனுப்பினார் அரசர்.''

''அவசர வேலையாய் இருக்கும். வந்த அலுவல் முடிந்து உடனே திரும்புகிறீர்களா?''

''அவசர வேலைதான். இந்த நாட்டை எதிர் நோக்கியிருக்கும் மிக முக்கிய வேலைதான்...''

''உங்களிடம் அதுபோன்ற முக்கியமான பணியை ஒப்படைக்கும் அளவுக்கு என் தந்தைக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டதல்லவா? எனக்குத் தெரியும். அன்றைய தினம் அவர் உங்கள்மீது மிகுந்த மதிப்புக் கொண்டு விட்டாரென்று....''

''ஆமாம், ஆமாம். என்னை அவர் மிகவும் நம்புகிறார். என்னால்தான் இந்தச் சோழ நாட்டின் மானமே காப்பாற்றப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.''

''நான் பாக்கியசாலிதான்; என் தந்தை மிகவும் மதிக்கும் ஒருவரை நான் மணக்கப் போவதில் மிகவும் பெருமையடைகிறேன்...''

''ஆமாம் இளவரசியாரே! பராந்தகர் மிகவும் மதிக்கும் ஒருவரைத்தான் நீங்கள் மணக்கப் போகிறீர்கள். அந்த நல்ல

விருப்பத்தை நிறைவேற்றத்தான் நான் புறப்படுகிறேன் கொடும்பாளூருக்கு....''

''என்ன நீங்கள் சொல்கிறீர்கள்? கொடும்பாளூருக்கா?''

''ஆமாம் இளவரசியாரே! நீங்கள் மணக்கப் போகும் மதிப்புமிக்க இளவரசர் கொடும்பாளூரில்தான் இருக்கிறார்... மணநாளை முடிவு செய்வதற்காகத்தான் நான் போகிறேன்..'' என்று கூறும்போது வெள்ளங்குமரன் வார்த்தைகூடத் தடுமாறியது. பராந்தகசோழன் தன்னிடம் வேண்டிக் கொண்டு பெற்ற உறுதியை விளக்கி ''இளவரசியாரே! நீங்கள் என்னை மறந்துவிடுங்கள். பழைய சம்பவங்களைக் கனவுபோல் நினைத்துக் கொள்ளுங்கள். ஆண்டவனுக்கே சம்பந்தமில்லாத ஒன்றை நான் எப்படி நிறைவேற்ற முடியும்? நான் போய் வருகிறேன். நீங்கள் எந்தக் காலத்திலும் இந்த நந்திக்கரைப் புத்தூரினனான வெள்ளங்குமரனைச் சந்திக்கவே முடியாது... நீங்கள் நல்வாழ்வு வாழ இப்போதே வாழ்த்துகிறேன்'' என்று கூறிய வெள்ளங்குமரன் அங்கே நிற்காமல் உடனே சென்றுவிட்டான்.

அநுபமா ஒன்றும் புரியமால் கற்சிலை போல் நின்று கொண்டிருந்தாள். வீரமாதேவி வந்து அவள் தோளைத் தொட்டு அவளது திருமணத்தைக் குறித்துப் பேசத்தொடங்கும் வரை அவள் எதிரே பெரும் இருள் பரவிக் கிடந்ததுபோல் தோன்றியது.

''புதுமணப் பெண் ஏனிப்படி சோகமே வடிவாயிருக்கிறாய்? பட்டுப்புடைவை வியாபாரி மாளிகைக்கு வந்திருக்கிறார். உனக்கு வேண்டியதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டாமா?'' என்று வாஞ்சையுடன் கேட்டாள்.

வீரமாதேவி விரும்பியதுபோல் தன் தந்தை மணம் புரிவித்துத் தன் விஷயத்தில் மட்டும் வேறுவிதமாக நடப்பது அநுபமாவுக்கு ஆத்திரத்தை அளித்தது. அதை வீரமாதேவியிடம் காட்டினாள்.

''புடைவை வியாபாரியைத் தந்தையிடமே அழைத்துச் செல்வதுதானே? அவரே பார்த்துத் தேர்ந்தெடுக்கட்டும்...'' என்று அலட்சியமாகக் கூறினாள் அநுபமா.



''உன் தந்தையா கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார்? அநுபமா ஏன் இப்படிப் பேசுகிறாய்? உனக்கென்ன கோபம்?''

''ஆமாம். என் தந்தைதான் மணவறையில் உட்காருவார். அவர் விரும்பிய மணமகளைத் தேர்ந்தெடுத்து அவரே மணந்து கொண்டாலும் கொள்ளலாம்.''

''அவமரியாதையாகப் பேசுகிறாய் அநுபமா! தந்தை நமக்கு நல்லதைத்தான் செய்வார்.''

''நமக்கு என்று சொல்லாதே. உனக்குத்தான் உடனே மறுபேச்சு பேசாமல் செய்வார். மற்றவரைத் தியாகம் செய்யச் சொல்வார். நீதான் சோழநாட்டு மாபெரும் சக்கரவர்த்தி பரகேசரி பராந்தக சோழதேவரின் மகள்... நான் இந்த நாட்டின் சாதாரணப் பிரஜைதானே...''

அநுபமாவின் இந்தச் சொல் வீரமாதேவியின் உள்ளத்தில் முள்போல் தைத்தது. தான் இப்படி நாடு விட்டு வந்ததை மனத்தில் வைத்துத்தான் இப்படித் தவறாக அநுபமா கூறுகிறாள் என்பதை எண்ணிய வீரமாதேவி அவளை விழித்து ஒரு முறை பார்த்துவிட்டு நேரே தந்தையிடம் விரைந்தாள்.

கண்ணீரும் கம்பலையுமாக வீரமாதேவி தன் எதிரே வந்து ''நான் சோழநாட்டில் அடைக்கலம் புகுந்தது குறித்து எல்லாரும் குறைவாகப் பேசுகிறார்கள்; இப்போதே மீண்டும் இராட்டிரகூட நாட்டு ராணியாக நான் திகழ்வதற்கு வழி செய்யுங்கள்'' என்று வற்புறுத்தியதால் பராந்தகர் உள்ளத்தில் பெரும் சலனம் ஏற்பட்டது.

பராந்தக சோழ தேவரின் உள்ளம் மகளின் கண்ணீரைக் கண்டு கலங்கியது. உடனே தக்க முடிவு செய்யவேண்டுமென்று துடித்தார்.

*

## 30

அமோகவர்ஷன் மான்யகேட அரியணையில் அமர்ந்தானேயன்றி அவன் மகன் கன்னரத் தேவன்தான் ஆட்சிப் பொறுப்பு முழுமையும் ஏற்று நடத்தி வந்தான். கோவிந்தன் மீது அவனுக்கிருந்த ஆத்திரம் அவன் சோழநாட்டில் அடைக்கலம் புகுந்துவிட்டான் என்றவுடன் மேலும் அதிகமாகியது. சோழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்று கோவிந்தனை உயிரோடு சிறை பிடித்து வர வேண்டும் என்று துடித்தான். அதேசமயம், பராந்தகசோழன் கடல் போன்ற படைகளுடன் திரண்டு தாக்க வருவார் என்றும் எதிர்பார்த்தான். அப்படித் தாக்கினால் தான் தோற்றுவிடுவது உறுதி என்பதையும் தெரிந்து வைத்திருந்தான். சோழ நாட்டினின்று வந்த ஒற்றர்கள் அங்குள்ள நிலையைத் தெரிவித்தனர். உடனே கிடுக்கித் தாக்குதல் ஒன்று நடத்தினால் சோழப்படைகளை நிர்மூலமாக்கி விடலாம் என்றுணர்ந்த கன்னரத் தேவன் கங்கநாட்டுப் பூதுகனுக்கு அவசரச் செய்தி அனுப்பினான். உடனே சோழ நாட்டின் மீது படையெடுக்குமாறு நெடுநாள்களாகப் படைகளைத் திரட்டிக் கொண்டு சோழ நாட்டைத் தாக்கச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பூதுகன் போர் வெறி கொண்டான்.

திருநாமநல்லூரில் தங்கியிருந்த சோழர் படைகளுக்குத் திடுக்கிடும்படியான செய்தி ஒன்று வந்தது. பூதுகன் கங்கநாட்டினின்று பெரும் படைகளுடன் புறப்பட்டு விட்டான் என்ற செய்திதான் அது. சோழவீரர்கள் இதுவரை சும்மாயிராமல் கோயில் திருப்பணியில் ஈடுபட்டிருந்தனர். கோயில் உருவாகியது. பூதுகன் படை வருகிறது என்ற செய்தி கேட்டவுடன் இராசாதித்தன் வீறு கொண்டெழுந்தான். இன்னும் வெள்ளங்குமரன் வந்து சேரவில்லை என்ற கவலை அவனை வாட்டியது. பூதுகன் படைகள் சோழ நாட்டு எல்லையை அடையும் முன்பே முன்னேறிச் சென்று தாக்க வேண்டும் என்று துடித்த இளவரசனுக்கு வெள்ளங்குமரன் வராதது வேதனையாகத்தானிருந்தது. 'வெள்ளங்குமரன் ஒரு



வேளை பாடிவீட்டிற்கு வராமலேயே போய்விடுவானா? காதலில் தோல்வியுற்ற மனத்தினனாய் அவன் சோழ நாட்டை விட்டே போய்விட்டால்?' இராசாதித்தனால் அதற்கு மேல் எண்ண முடியவில்லை.

ஆனால் அப்படி நேரவில்லை. வெள்ளங்குமரன் தக்க சமயத்தில் வந்து சேர்ந்தான். பூதுகன் படைகள் வரும் செய்தி அறிந்தவுடன் வெள்ளங்குமரனும் போர்க் கோலம் பூண்டான். அரிஞ்சயன் ஒரு பக்கமும் இராசாதித்தன் ஒரு பக்கமுமாய் படைகளை அணிவகுத்து நடத்திச் சென்றனர்.

காஞ்சிமா நகரில் படைகள் தண்டிறங்கியிருந்தன. இராசாதித்தனும், வெள்ளங்குமரனும் தனியே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். கொடும்பாளூர் சென்று வந்ததையும் மழவரையரைச் சந்தித்ததையும் வெள்ளங்குமரன் விவரித்தான்.

''எனக்காக நீ மழவயரைச் சந்தித்திருக்கக்கூடாது வெள்ளங்குமரா!'' என்றான் இராசாதித்தன்.

''சோழநாட்டு அரசியாக ஆக மழவரையர் மகளுக்குத் தகுதியிருக்கிறதா எனப் பார்க்கச் சென்றேன்...''

''அந்தப் பாக்கியவதிக்கு அந்தத் தகுதி யிருக்கலாம். ஆனால் அவளை மணக்கப் போகிறவனுக்கு அந்தத் தகுதி வேண்டுமே...''

''நீங்கள்தானே மணக்கப் போகிறீர்கள்? உங்களுக்கில்லாத தகுதி இந்த உலகில் யாருக்கு இருக்கிறது?''

''நான் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை என்று எப்போதோ முடிவு செய்து விட்டேனே!''

''அந்த உறுதியை நீங்கள் மாற்றிக் கொள்ள முடியாதா? போரில் வெற்றிகண்டு தஞ்சை திரும்பியவுடன் திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுதானே?...''

''உன் திருமணம் நடைபெறாமல் நான் மணப்பதில்லை. இது உறுதி.''

''அரியணையில் உங்களுடன் சரிசமமாக அமர்வதற்கு அரசியர் வேண்டுமே...''

''பட்டத்தையே துறந்து விடுகிறேன்...''

இராசாதித்தன் இவ்வாறு கூறியவுடன் வெள்ளங்குமரன் திடுக்கிட்டான். இளவரசரை எப்படியாவது திருமணத்திற்குச் சம்மதிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ''நான் மணந்தால் தான் நீங்கள் மணப்பீர்கள் என்றால் நானும் மணம் புரிந்து கொள்ளத் தயார்...''

வெள்ளங்குமரன் இவ்வாறு கூறியதும் இராசாதித்தன் துள்ளி எழுந்தான். வெள்ளங்குமரனைத் தழுவிக் கொண்டு உற்சாகம் நிறைந்த குரலில் ''அப்படிச் சொல் குமரா! நான் தகுந்த பெண்ணை மணம் பேசுவேன். அநுபமா போனால் வேறோர் அழகி இருக்கிறாள். நல்ல சேதி சொன்னாய். இந்தத் தெம்பு என்னை நூறு பேரை ஒரே போதில் தாக்கும் பலத்தைக் கொடுத்துவிட்டது'' என்றான்.

பூதுகன் படைகள் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றன என்ற செய்தி வந்ததால் காஞ்சியிலிருந்து நள்ளிரவிலே சோழப் படைகள் திடீரெனப் புறப்படும்படி நேரிட்டது.

பொழுது புலரா நேரத்தில் தக்கோலத்துக் கருகே பூதுகன் படைகளைச் சோழப் படைகள் சந்தித்தன. கொடும்பாளூர்ப் படைகளும், மழவரையர் படைகளும் வந்து சேர்ந்திருந்தன. கடைசி நேரத்தில் பழுவேட்டரையரும் வந்துவிட்டார். இராசாதித்தன் குதிரையொன்றிலிருந்து யானைமீது தாவி ஏறினான். திருமாலின் சக்கரம் போல் அவன் வாள் சுழன்றது. இந்திரன் வஜ்ராயுதம் போல் அவன் வாளை வீசினான். வீராவேசமாக இளவரசர் புரியும் போர் கண்டு சோழப் படைகள் உற்சாகமாகத் தாக்கின. கங்கப் படையைக் கண்ட துண்டமாக்கின. எங்கும் பிணங்கள். தோய்ந்த ரத்தம் படுகாயமுற்றவர் முனகும் குரல். பிணங்களின் மீது குதிரைகள் தடுக்கிவிழுந்தன. ரத்தச் சேற்றிலே யானையின் கால் அடி சிக்கவே அவை தடுமாறின''.

பூதுகன் நெருங்கிவிட்டான். அவன் எதிர்பார்த்தது போல் மான்ய கேடத்தினின்று கன்னரத்தேவன் படைகள் வந்து சேரவில்லை. மேலும் இராசாதித்தன் வீராவேசத் தாக்குதலை



அவனால் தாளமுடியவில்லை. சற்றுப் பின் வாங்கி நகர்வது போல் போக்குக் காட்டி ஓய்வு பெற விரும்பினான்.

வெள்ளங்குமரனின் நெடுநாளைய போர்த் தினவு தீர்ந்தது. அவனது வாள் வீச்சுத்திறமை கண்டு பழுவேட்டரையரே அதிசயித்தார். அன்றைய போர் ஓய்வுக்குப் பின் அனைவரும் ஒன்று கூடிப் பேசிக் கொண்டிருக்கும்போது அரிஞ்சயனைக் காணவில்லையே என அப்போதுதான் உணர்ந்தான் இராசாதித்தன்.

''அரிஞ்சயன் எங்கே?'' என்று அலறினான். 'அரிஞ்சயன், அரிஞ்சயன் என்று எல்லாரும் அப்போதுதான் பேசத் தொடங்கினர். இராசாதித்தனுக்குச் சகோதர பாசத்தை விட முடியாது. அவன் குணம் சுத்தமானது. வெற்றி வாகை சூடும் சோழர்ப் படையின் ஒப்பற்ற இளவரசனை இழப்பதா? கூடாது கூடாது என்று கூவினான்.

'இப்போதே போய் நான் தேடி வருகிறேன்' என்று போர்ப் பூமியிலே போய்த் தேடத் தொடங்கினான். 'அரிஞ்சயா அரிஞ்சயா' என்று அவன் அலறிய குரல் ஆந்தைகளையும் கழுகையும் நரியையும்கூட அஞ்சி ஓடச் செய்தது.

வெள்ளங்குமரனும் மற்றொருபுறம் தேடினான். இராசாதித்தன் யானை மெல்ல அசைந்தது. ஒவ்வோர் உடலாகத் தூக்கி அப்புறப்படுத்தியது. அரிஞ்சயனைக் காணோம். சோர்வுற்றுத் திகைத்த இராசாதித்தனை நோக்கி அப்போது எங்கிருந்தோ பாய்ந்து வந்தது விஷந் தோய்ந்த அம்பு ஒன்று. யானை மீது சாய்ந்தான் இராசாதித்தன்.

***

அவனைத் தூக்கி வந்து கூடாரத்தில் கிடத்தி வேண்டிய சிகிச்சைகள் செய்தும் பயனில்லாது போய்விட்டன. அரிஞ்சயனைத் தேடி இராசாதித்தன் சென்றபோதில் அரிஞ்சயன் போர் செய்த களைப்பால் நிம்மதியாக வேறோரிடத்தில் உறங்கிக் கொண்டிருந்திருக்கிறான். இராசாதித்தனுக்கு நேர்ந்த கதி கேட்டு அலறி ஓடிவந்தான் அரிஞ்சயன்.

யார் அழுது என்ன பயன்? இராசாதித்தன் இந்த உலகை நீத்தான். தான் செய்த உறுதிப்படியே மணக்கோலம் பூணாமல் அரியணை ஏறாமல் சோழ மண்ணை விட்டே ஏகினான் இராசாதித்தன். பராந்தகனது மகளால் ஏற்பட்ட விளைவு அவன் உயிரைப் பலி கொண்டது.

***

இராசாதித்தன் உயிர் நீத்த பிறகு சோழப் படைகள் கலகலத்தன. பூதுகனின் தாக்குதலுடன் கன்னரத் தேவன் தாக்குதலும் ஒன்று சேரவே சோழப்படைகள் பின்னடைந்தன. மாபெரும் வெற்றியையே இதுவரை கண்டு வந்த சோழ நாட்டிலும் தோல்வித் தேவி காலடி எடுத்து வைத்து விட்டாள்.

பராந்தக சோழ தேவர் இதே ஏக்கத்தால் மனமுடைந்தார்.

## 31

இந்த வரலாற்றுப் புதினத்தை முடிப்பது என்றால் எல்லாம் நிகழ்ச்சிகளாகவே கூற வேண்டியிருக்கிறது. வரலாறு காட்டும் உண்மையை நம்மால் மாற்ற முடியுமா? பராந்தக சோழதேவர் தன் மகளால் ஏற்பட்ட தொல்லைகளைத் தீர்க்க வெகுகாலம் பிடித்தது. அநுபமா கொடும்பாளூர் இளவரசனை மணந்தாள். இராசாதித்தனுக்குப் பிறகு அடுத்து இருந்த சகோதரன் கண்டராதித்தனே இளவரசர் பட்டம் சூட்டப் பெற்றான். மழவரையர் மகளைக் கண்டராதித்தன் மணந்தான்.

சோழ நாட்டிற்கு அரும் பெரும் தியாகம் செய்த வெள்ளங்குமரனை அனைவரும் மறந்து விட்டாலும் கண்டராதித்தனும் அநுபமாவும் மட்டும் மறக்கவில்லை. போர்க்களத்தில் இறந்து விட்டான் என்றே எண்ணிக் கண்ணீர் விட்டனர்.

ஆனால் வெள்ளங்குமரன் போரில் இறக்கவில்லை. குற்றுயிரும் குலையுயிருமாக இருந்த அவனைச் சிலர் காஞ்சிபுரத்திற்குத் தூக்கி வந்து அங்கேயுள்ள ஒரு மடத்தில்



சிகிச்சை செய்து குணப்படுத்தினர். பூரண குணமடைந்த வெள்ளங்குமரன் தன் அருமைத் தோழரும் இளவரசருமான இராசாதித்தன் இறந்த பிறகு சோழ நாட்டிற்குச் செல்ல விரும்பவில்லை. நெடுநாள்களாக தன் மனத்தில் நினைத்துக் கொண்டிருந்ததுபோல் திருவொற்றியூருக்குச் சென்று நிரஞ்சன குருவின் மடத்தில் சேர்ந்து துறவியாக மாறினான்.

சிறிதுகாலம் கழிந்தது. திருநாமநல்லூர் இராசாதித்தன் பெயரால் இராசாதித்தபுரமாகியது. அவன் முன்நின்று கட்டிய கோயிலும் இராசாதித்த ஈச்சுரம் என அழைக்கப்பட்டது. அந்தக் கோயிலின் மண்டபத்தில் இளந் துறவி ஒருவர் அமர்ந்து ஆலயமணியின் ஓசையைக் கேட்டுக் கண் கலங்கினார்.

முற்றும் துறந்த முனிவரான சதுரானன பண்டிதர் என்று பெயர் பூண்ட அவரது கண்கள் கலங்குவானேன்?

கலங்காமல் அவரால் எப்படியிருக்க முடியும்? அந்த மண்டபம் கட்டும்போது பூர்வாச்சிரமத்தில் வெள்ளங்குமரன் எனப் பெயர் பூண்டிருந்த அவருக்கு இளவரசர் இராசாதித்தன் அங்கே அமர்ந்து பேசிக் கொண்டிருந்த பழைய நினைவு அவர் கண்களில் நீர்த் திரையிடாமல் என்ன செய்யும்?

